


உ

இராமாநந்தம் குருநாதா சரணம்
குருப்பிரம்மா குருவிஷ்னு குருதேவோ மகேஸ்வரா;
குருசாட்சாத் பரப்பிரம்மம் தஸ்மைம் குரவேநமஹ.




அவரவர் தமக்கும் உள்ள
ஆயுசும் தொழிலும் பொன்னும்
இவர்களின் வித்தை செல்வம்
எழில்மர ணங்கள் ஏழும்
தவமுடைய பிரம தேவன்
தனதுகைத் தொடங்கி முன்னஞ்
சிவனுடைய அருளி னாலே
கர்ப்பத்தில் நிச்ச யிப்பான்

(நீதிசாரம்)




ஓம் நம : சூர்யாய சோமாய
மங்களாய புதாய ச
குரு சுக்ர சனிப்யச்ச
இராஹுவே கேதவே நம தத



# ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் யோக கிரகநிலைகள்

ஜாதகம் என்பது மனித வாழ்க்கையின் வரைபடம். வாழ்க்கைப் பாதையைப் பற்றி அறிந்துக் கொள்ள அச்சாரம் அளித்திடும் ஜாதகம் உணர்த்திடும் முத்தாரம். அதுவே வாழ்க்கையை வரையறுத்திடும் மூலாதாரம். கிரகங்களின் கோலோச்சிடும் அமைப்பைக் கொண்டு இது யோக ஜாதகம், இது அவயோக ஜாதகம் என்று ஜோதிடர்களால் கூறமுடிகிறது. கோளைப் பார்த்து பலன் கூறாமல் ஆளைப் பார்த்து பலன் கூறும்முறை அனுபவத்தில் பரந்து விரிந்து உள்ளது. இதற்கு என்று சில கணிதமுறையும் வகுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டு உள்ளது. இது ஜோதிடப் பலன் கூறுவதற்கு என்று ஜோதிடர்களால் உருவாக்கப்பட்ட ஒரு தந்திர முறையாகும். ஜாதகர் கடுமையான கஷ்டநிலையில் காலம் தள்ளிக் கொண்டிருப்பார். அவருக்கு இராஜயோகப் பலன்களைக் கூறினால் எப்படிப் பொருத்தமாக இருக்கும். ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள யோகங்கள் ஒவ்வொரு ஜாதகத்திலும் இரண்டோ, மூன்றோ நிச்சயம் இருக்கும். சில யோகங்கள் கிரகங்கள் நின்ற நிலையைப் பொருத்து அமைந்திருக்கும். சில யோகங்கள் கிரகங்கள் கூடிச் சேர்ந்து உள்ள அமைப்பைப் பொருத்து அமுலில் இருக்கும். சில யோகங்கள் நடைமுறைக்கு ஒத்து வராமல் பொய்த்துப் போவதும் உண்டு.

உதாரணமாக ‘நீச்ச பங்க இராஜயோகம்’ எப்போது எப்படி பலன் கொடுக்கும் என்பதை உறுதிபட உரைக்க முடியாது. இதே போன்று "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்" என்பதும் எப்போது எப்படி பலன் கொடுக்கும் என்று சொல்ல இயலாது. இதற்கு எல்லாம் ஜாதகங்களில் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெற்று இருக்க வேண்டும். பூர்வ புண்ணிய பலம் இல்லாவிட்டால் யோகப்பலன்களை பூரணமாக அனுபவிக்க முடியாது. இதற்கு கொடுப்பினை வேண்டும். வறுமையில் கஷ்ட ஜீவனம் செய்து வலம் வரும் ஒருவர் எதிர்பாராத விதமாக திடீரென்று செல்வ நிலை பெற்று மேன்மையான வாழ்க்கைக்கு வந்திருப்பார். இப்படிப்பட்டவர்களுக்கு "விபரீத இராஜ யோகம்" அமைந்து இருக்கும். இந்த யோகம் மேலோட்டமாகப் பார்த்தால் அது தெரியாது. சற்று நிதானமாக நிலைநிறுத்திப் பார்த்தால் நிலைமை நிதர்சனமாகும்.

ஒரு கிரகம் நீச்சம் பெற்று இருந்தால், அந்தக்கிரகம் பலவீனப்பட்டு பலம் குறைந்த நிலையை அடைகிறது. அந்த கிரகத்திற்கு நீச்ச பங்கம் ஏற்பட்டால் அந்த கிரகத்திற்கு பலவீனம் மாறி பலம் பெறுகிறது. சூரியன் துலாம் இராசியில் நீச்சம் பெறுகிறது. சந்திரன் விருச்சிக இராசியில் நீச்சம் பெறுகிறது. செவ்வாய் கடக இராசியில் நீச்சம் பெறுகிறது. புதன் மீன இராசியில் நீச்சம் பெறுகிறது. குரு மகர இராசியில் நீச்சம் பெறுகிறது. சுக்கிரன் கன்னி இராசியில் நீச்சம் பெறுகிறது. சனி மேஷ இராசியில் நீச்சம் பெறுகிறது. இராகு—கேது ரிஷப இராசியில் நீச்சம் பெறுகிறது என்பது ஜோதிட சாஸ்திர அடிப்படைத் தத்துவத்தின் அரிச்சுவடி. ஜோதிட சாஸ்திர அடிப்படையில் அளித்த முன்னோர்கள் இன்னொரு கருத்தையும் இயம்பியுள்ளனர். சனி இராகு—கேது ஆகிய மூவரையும் பொதுவாகவே நீச்சர்கள் என்றும் வர்ணித்து வழங்கி உள்ளனர். இதன் அடிப்படையில் பார்ப்போமானால்



# குருவருள் ஜோதிடம்

ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்

**ஆகஸ்டு 2015**

**ஸ்ரீ குரு: 7 அருள்: 3**



**ஆசிரியர் குழுமம்**

ஆசிரியர், வெளியிடுபவர்
சித்தர் அடிமை **ஸ்ரீ சி. இராஜு**

கௌரவ ஆசிரியர்
"ஜோதிட கலைமாமணி"
டாக்டர் **முருகடிமை துரைராஜ்**

சிறப்பு ஆசிரியர்கள்
பண்டிட். **காழியூர் நாராயணன்**
டாக்டர் **ஏ. சரவணன்**

கௌரவ ஆலோசகர்
ஆத்தூர். **மு. மாதேஸ்வரன்**

★ ★ ★

**துணை ஆசிரியர்கள்**
ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
**P.D. ஜெகதீஸ்வரன்**
கும்பகோணம் **எஸ். அன்பழகன்**
கொடிக்கம்பம் **எஸ்.பி. சோமசுந்தரம்**
ஐய்யம்பாளையம் **இரா. அருள்வேல்**
சற்குருதாசன் **கே. இராமமூர்த்தி**

★ ★ ★ ★

ஒருங்கிணைப்பாளர்
திருவருள் **பா. சுசீந்திரநாத்**
தலைமை நிர்வாகி
**எம்.எஸ். கிருஷ்ணா**

ஜோதிடக் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்து களாகும். கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.



அனைத்துத் தொடர்புகளுக்கும்
**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**
நெ.18–67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.

**Ph. : 044-2811 6770**
**E-mail : apsarapublications@gmail.com**



இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு **குருவருள் ஜோதிடம்** நிர்வாகம் பொறுப்பல்ல.



Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-600 014. a nd Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-14. Editor : Sidhar Adimai Sri C. Raaju

அட்டையில்

**ஸ்ரீ வரலக்ஷ்மி**


இந்த மூவரும் எங்கு இருந்தாலும் நீச்சர்கள் என்றே கூறும் விதிப்படி, இவர்கள் எங்கு இருந்தாலும் எப்படி இருந்தாலும், அப்படியே பொருந்தும் என்பதும் பொதுவிதி.

நீச்ச பங்கத்திற்கு ஜோதிட சாஸ்திரம் கூறும் அடிப்படை விதிமுறைகள் எப்படி என்பதைச் சற்று பார்க்கலாம்.

1. ஒரு கிரகம் நீச்சம் பெற்று இருக்கும் இராசியின் அதிபதியான கிரகம் தனது சொந்த இராசியில் ஆட்சி பெற்று இருந்தாலும் அல்லது அதன் உச்ச இராசியில் உச்சம் பெற்று இருந்தாலும் அந்த நீச்சம் பெற்ற கிரகத்திற்கு நீச்ச பங்கம் உண்டாகிறது.

2. நீச்சம் பெற்ற கிரகம் அந்த இராசியின் அதிபதியின் பார்வையைப் பெற்றாலும் நீச்ச பங்கம் ஏற்படுகிறது.

3. நவக்கிரகங்களில் ஒரு கிரகம் நீச்சம் பெற்று எந்த இராசியில் இருக்கிறதோ அந்த இராசியின் அதிபதியான கிரகம் ஜென்ம இலக்கினத்திற்கோ அல்லது ஜென்ம இராசியாகிய சந்திரன் இருக்கும் வீட்டிற்கு 1,4,7,10 ஆகிய கேந்திர ஸ்தானங்களில் இருந்தால் அந்த நீச்சம் பெற்றுள்ள கிரகம் நீச்ச பங்கம் பெற்று பலம் பெறுகிறது.

4. எந்த இராசியில் கிரகம் நீச்சம் பெற்று இருக்கிறதோ அந்த இராசியின் அதிபதி எந்த இராசியில் உச்சம் பெறுகிறதோ அந்த இராசியின் அதிபதி கேந்திர ஸ்தானங்களில் அமர்ந்து இருந்தாலும் நீச்ச பங்கம் ஏற்படுகிறது.

5. நீச்சம் பெற்ற கிரகம் இருக்கும் இராசியில் உச்சம் பெறக்கூடிய கிரகம் ஜென்ம இலக்கினம் அல்லது ஜென்ம இராசிக்கு கேந்திர ஸ்தானங்களில் அமர்ந்து இருந்தாலும் நீச்ச பங்கமாகும்.

6. நீச்சம் பெற்றுள்ள கிரகத்துடன் அதே இராசியில் உச்சம் பெறும் கிரகம், உச்சம் பெற்று இருந்தாலும் (நீச்ச கிரகமும், உச்ச கிரகமும் சேர்ந்து இருக்கும் நிலை) இதுவும் நீச்ச பங்கம் என்று கூறப்படுகிறது.

இந்த நீச்ச பங்க இராஜயோகமானது சில சமயங்களில் விபரீத இராஜயோகமாக மாறி வாழ்க்கையின் பிற்பகுதியில் சுமார் 42 வயதுக்கு மேல் பிரபல இராஜயோகத்தையும் கொடுத்து உன்னத நிலைக்கு உயர்த்தி விடுகிறது.

பஞ்ச பூத கிரகங்களான செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ஆகிய கிரகங்களால் ஏற்படக்கூடிய யோகங்களையும் அதன் பலன்களையுமு சற்று பார்ப்போம். ஜோதிட ரீதியாக ஏற்பட்டுள்ள பலன்களை அனுபவிப்பதற்கும் கொடுப்பினை வேண்டும் என கூறப்படுவதற்கு கொடுப்பினை என்பதே பூர்வ புண்ணிய பலமாகும்.

1. ஜென்ம இலக்கினம் அல்லது ஜென்ம இராசிக்கு 1,4,7,10இல் செவ்வாய் இருந்தால் "ருசக யோகம்" என்று கூறப்படுகிறது. இந்த செவ்வாய் இருக்கும் இராசி செவ்வாயின் வீடுகளான மேஷம், விருச்சிகமாகவோ அல்லது உச்ச இராசியான மகரமாகவோ இருந்தால் இந்த யோகம் மேலும் சிறப்பான பலன் கொடுக்கும் யோகமாக அமைகிறது. இதன் பலன் உத்யோகத்தில் தலைமைப்பதவி, அரசாங்க சின்னம் அணிந்து அதிகாரம் செலுத்துதல், போலீஸ், இராணுவம் போன்ற பாதுகாப்புத் துறையில் தலைமைப் பதவி பெறுதல், செவ்வாய்க்கு பூமிகாரகன்

என்ற பெயரும் உண்டு. ஜாதகருக்கு வீடு நிலம்,தோட்டம், துறவு என்று பூமி யோகமும் ஏற்படும்.

செவ்வாய் இரத்தத்திற்கு அதிபதி, எனவே மருத்துவத் துறையில் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர். ஆவார் மேலும் இந்த யோகத்தின் சிறப்பு பலனாக அமைவது செவ்வாய் இலக்கினம், இராசிக்கு 10இல் ஆட்சியாகவோ, உச்சமாகவோ இருந்து குருவால் பார்க்கப்பட்டு இருந்தால், ஆட்சி அதிகாரம், பெயர், புகழ் இவைகளுடன் நிறைந்த செல்வமும், செல்வாக்கும் பெற்று பூமண்டல அதிபதி என்று பெயர் சொல்லும் அளவிற்கு இராஜயோகம், இராஜநடை போட வைத்திடும்.

2. ஜென்ம இலக்கினம் அல்லது ஜென்ம இராசிக்கு 1,4,7,10இல் புதன் இருந்தால் "பத்ர யோகம்" எனக்கூறப்படுகிறது. இந்த புதன் இருக்கும் இராசி, புதனின் வீடுகளான மிதுனம், கன்னியாகவோ அமைந்து புதன் ஆட்சி உச்சம் பெற்று இருப்பது இந்த யோகம் மேலும் சிறப்பு பலன் கொடுக்கும் யோகமாக அமைந்து பலம் பெற்று பிரமிக்க வைக்கிறது. இதன் பலன் புதனின் காரகங்களான கல்வியில் மேன்மை, பல மொழிபாண்டித்யம், கவி, கலை, புராணம் இதிகாசம் இவைகளில் மிகுந்த ஆராய்ச்சியில் ஈடுபட வைத்திடும். இலக்கினம் இராசிக்கு 1,4,7,10இல் இருக்கும் புதன் ஆட்சி உச்ச பலத்துடன் சுபகிரக பார்வையும் பெற்று இருந்தால் கல்வி சம்பந்தமான துறைகளிலும் தலைமைப் பதவி பெறும் யோகம் ஏற்படுகிறது. 1,4,8இல் புதனுடன் சூரியன் சம்மந்தப்பட்டு இருவரில் யாராவது ஒருவர் பலம் பெற்று இருந்தால் இவர் ஈடுபடும் தொழில்துறை மூலமாக பேரும் புகழும், செல்வம் செல்வாக்கு என ஏற்பட்டு பூ மண்டல பூபதி என போற்றப்படுவார்.

3. சுப கிரகங்களில் முதன்மை ஸ்தானத்தில் இருக்கும் கிரகம் "குரு" இந்த குரு ஜாதகத்தில் தனித்து இருப்பது சரியல்ல என்பது ஜோதிடம் கூறும் கூற்று. குரு தனித்து இருப்பது,. "அந்தணன் தனித்து நின்றால் அபகீர்த்தி மெத்த உண்டு" என்பது ஜோதிடத்தின் சுருதி. இந்த வகையில் பார்க்கும்போது குரு ஏதாவது ஒரு கிரகத்துடன் சேர்ந்து இருப்பது தான் சாலச்சிறந்தது. குருவுடன் சூரியன் சேர்ந்து இருப்பது "சிவராஜயோகம்"


உ
மகா குரு சரணம்

மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ்,
லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில்,
4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா அபார்ட்மெண்ட்,
6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.



Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, S. ராஜகுமார்

என்ன வேண்டும் உங்களுக்கு...
பொருளாதாரம்
கடன் தொல்லை
மாந்ரீக தொல்லை
வஸ்யம்
திருமண தடை
எதிரிகள் தொல்லை
குடும்ப பிரச்சனை
தொழில் முன்னேற்றம்
வாஸ்து பிரச்சனை
அனைத்திற்கும் ஒரே தீர்வு

Remedy for Life Problem
Finance
Debit Problem
Black Magic
Vashyam
Marriage Delay
Enemies Control
Family Problems
Business Problems
Vasthu Problems
Solution at one Platform

அவசியம் முன் அனுமதி தேவை / For Appointment
Cell : 98427-10545, 93677-10545
நம்பிக்கையுடன் வாருங்கள், நல்லது நடக்கும்.

Card Accepted
MasterCard
VISA

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள்.
தனிப்பட்ட முறையில் VIP களுக்கு ஆலோசனை அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று சந்திக்கலாம்.
தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.
பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16
பிரதி மாதம் கோவை : 10, 20. மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)

என்று சொல்லப்படுகிது. இதேபோல் குருவுடன் சந்திரன் சேர்ந்து இருந்தால் "குரு சந்திரயோகம்" என சொல்லப்படுகிறது. குரு செவ்வாயுடன் சேர்ந்து இருந்தால் "குரு மங்கள யோகம்" என்றும் சொல்லப்படுகிறது. இந்த யோகங்கள் செயல்படுவதற்கு ஒருவிதி விலக்கும் விளக்கப்படுகிறது. இந்த கிரக சேர்க்கை அதிபதி 6,8,12இல் மறையக் கூடாது என்றும் அந்த இராசி அதிபதி ஏதாவது ஒரு வகையில் பலம் பெற்று இருக்க வேண்டும் என்பதும் சாஸ்திர சம்பிரதாயம் ஆகும்.

4. ஜென்ம இலக்கினம், ஜென்ம இராசிக்கு 1,4,7,10இல் அமையப் பெற்று இருந்தால் இதற்கு "மாளவிய யோகம்" என ஜோதிடம் கூறுகிறது. இந்த அமைப்பு ரிஷபம், துலாம், மீனம் ஆகிய இராசிகளில் அமைந்தால் இந்த யோகம் மேலும் சிறப்பு பெறுகிறது. ரிஷபம, துலாம் ஆட்சி வீடு, மீனம் உச்ச வீடு. எனவே சுக்கிரன் பலம்பெற்ற இந்த யோகம் "இலட்சுமி கடாட்ச யோகம்" என்றும் கூறப்படுகிறது. இதன் பலன் சிறப்பான மென்மையான மேன்மையான மனை யோகம், வாகன யோகம், மென்மையான மனைவி பெறும் யோகம், மனைவியால் உயர்வு பெறும் யோகம், கலைத்துறையில் ஈடுபாடு, இயல், இசை, நாடகம் மற்றும் சினிமாத் துறையில் பேரும், புகழும் உண்டாகும் நிலை. இலட்சுமி கடாட்சத்தில் பணம், ஆடை, ஆபரணம் பெருமளவில் சேர்க்கை. இதன்மூலமாக கௌவரம், அந்தஸ்த்து, மக்கள், மத்தியில் கவர்ச்சி ஏற்படுகிறது. கலைத்துறையில் திடீர் யோகம் ஏற்பட்டும் விடுகிறது.

5. ஜென்ம இலக்கினம், அல்லது ஜென்ம இராசிக்கு 1,4,7,10இல் சனி இருந்ததல் இதற்கு "சச யோகம்" என்று கூறுவர். 1,4,7,10ஆம் ஸ்தானங்கள் மகரம், கும்பம், துலாம் ஆகிய இராசிகளாக இருந்தால் சனியால் ஏற்படும் இந்த யோகம் பெருமளவில் பலன் கொடுக்கிறது. இந்த சனியை குரு பார்த்து இருந்தாலோ உச்சம் பெற்று இருந்தாலோ அல்லது சனி இருந்த வீட்டு அதிபதி ஆட்சி உச்சம் பெற்று இருந்தாலோ இது ஒரு வகையான யோகமாகும். "நீச்ச பங்க விபரீத இராஜயோகம்" என்று கூட நாம் எடுத்துக் கொள்ளலாம். இந்த யோகத்தால் ஏற்படும் பலன்கள், அரசியலில் நல்ல அந்தஸ்து, செல்வாக்கு ஏற்படும். இலட்சுமி கடாட்சம் ஏற்படுவதால், வண்டி வாகன யோகம் சிறப்பாக அமைந்து விடுகிறது. அடிமட்ட மக்களின் ஆதரவும் பெருமளவில் உண்டாகிறது. இதனால் வளர்ச்சி பாதைக்கு வழி வகுக்கிறது.

6. சுப கிரகங்களில் முதன்மை கிரகமான குருவுடன் இராகு அல்லது கேது சேர்ந்து இருந்தால், இதற்கு "குரு சண்டாள யோகம்" என்று ஜோதிடம் கூறுகிறது. இதன் பலன் இவர்கள் இருக்கும் இராசி அதிபதியின் நிலையைப் பொருத்து அமைகிறது. இராசி அதிபதி பலம் பெற்றால் சுப பலன்கள் கூடுதலாக ஏற்படுகிறது. இந்த அமைப்பு பெற்ற ஜாதகர் கடவுள் நம்பிக்கை மற்றும் சாஸ்திர சம்பிராதய நம்பிக்கை இல்லாமல் நாத்திகவாதம் பேசக்கூடியவர் என்றாலும் இந்த ஜாதகர் ஒரு காலக்கட்டத்தில் சிரமமான வாழ்க்கை ஏற்பட்டு இருந்தாலும் பிற்கால வாழ்க்கை பிரமாதமாக அமையும்.

7. பிதுர்காரகன் என்றும், உயிர்காரகன் என்றும் கூறப்படும் சூரியன் ஸ்திர இராசிகளான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், ஆகிய இராசிகளில் இருந்தால் இந்த ஜாதகருக்கு பிற்காலத்தில் சுமார் 45 வயதுக்கு மேல் திடீர் தன யோகம் ஏற்பட்டு உழைப்பே இல்லாமல் உருவாகிவிடும். இந்த யோகம் பல வழிகளில் தன இலாபத்தை கொடுக்கக்கூடிய குருட்டு அதிர்ஷ்டம் கொடுத்து விடுகிறது.

இது போன்ற எண்ணற்ற யோக நிலைகள் ஜாதகத்தில் அமைந்து இருந்தாலும் அவற்றை பூரணமாக அனுபவிக்க பூர்வ புண்ணியம் பலம் பெற்று இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் ஒரே இராசியில் பலர் பிறந்து இருந்தாலும் ஒரே மாதிரியான யோகநிலைகள் ஒவ்வொருவருக்கும் அமைந்து விடுவதில்லை. அதற்கும் பூர்வ புண்ணியம் பலம் பெற்று இருக்க வேண்டும். இல்லையெனில் யோகப்பலனை அனுபவிக்க இயலாமல் போய்விடுகிறது என்பதற்கு ஏராளமான ஜோதிட விதிகள் தாராளமாகக் குவிந்துக் கிடக்கின்றன. அவைகள் பூரணமாகப் புலப்படுவதற்கு ஜோதிடத் திறனாய்வு மூலம் தோண்டித் துருவி ஆராய்ந்துப் பார்த்தால் பல அரிய சூட்சுமங்களை அறுதியிட்டு உணர்ந்து உறுதிப்பட உரைக்க முடியும். சுபயோக ஜாதகமோ, அவயோக ஜாதகமோ அவைகளை ஒருநிலைப்படுத்தி ஒழுங்குடன் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள தெய்வ பலம் மிக அவசியம். அதற்கு நேர்மையான நடத்தை எண்ணத்தில் தூய்மை, பேச்சில் உண்மை, அடுத்தவரிடம் அன்பான அணுகுமுறை, பண்பான பழக்கத்துடன் பால் மனம் கொண்டு நேர்மையை நிலை நிறுத்த வேண்டும். தெய்வ பலமே கிரகங்களைச் சாந்திபடுத்தும் சாதனம். அதுவே வளமான வாழ்க்கைக்கு நிதர்சனம். இவையே நமக்கு உணர்த்திடம் அன்றாட தெய்வ தரிசனம்.

சித்தர் அடிமை **ஸ்ரீ சி.இராஜு**
**Cell : 97104 21880**

மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ், லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில், 4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம், P. 54 விஷாகா அபார்ட்மெண்ட், 6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.



**Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545**

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது – அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?

பல ஜோதிடர்களை மாந்த்ரீகர்களை உருவாக்கிய பயிற்சி

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 22.08.2015 சனிக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 7700/- |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

வாருங்கள்...
இன்னும் நிறைய கற்பதற்கு

ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 5700/- |

Card Accepted MasterCard VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

சென்னையில் பயிற்சி : நாள் : 12.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
கோவையில் பயிற்சி : நாள் : 19.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
பெங்களூரில் பயிற்சி : நாள் : 26.08.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16. மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)

வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...
நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்
தோல்விக்கு சவால் விடு, முடிந்தால் என்னை தோற்கடி...! - குருஜி ஐயா.



# தாமத திருமணம் தந்திடும் ஜோதிட நிலை


ஜாதகம் பார்க்க வரும் பெற்றோர்கள் தனது பிள்ளைகளுக்கு ஜாதக ரீதியாக திருமணம் தாமதமாகத்தான் முடிக்க வேண்டும் என்று கூறும் போது ஒரு சிலர் ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு சிலர் ஜோதிடரின் அறிவுரையை ஏற்காமல் அவசரப்பட்டு திருமணம் செய்தபின் கணவன் மனைவிக்குள் பிரிவு ஏற்பட்டால் ஜோதிடரிடம் தீர்வு கேட்டு வருபவர்கள் தான் அதிகம். ஒருசில ஜாதக அமைப்பின்படி பெண்ணாக இருந்தால் 20 வயதிற்குள்ளாகவும் ஆணாக இருந்தால் 25 வயதிற்குள்ளாகவும் திருமணம் முடிந்து, சுபமான வாழ்வு அமையும் என்ற கிரக நிலைகள் உள்ளவர்கள், திருமணம் முடிந்தபின் சிறப்பாக வாழ்வதை நாம் காண முடிகின்றது. இளமையில் திருமணம் நடைபெற்று வாழ வேண்டுமானால், 7ஆம் வீட்டிற்குரிய கிரகம், கேந்திர ஸ்தானம் மற்றும் திரிகோணங்களில் அமர்ந்து சுபர் பார்வை பெற்று, தீய கிரகங்களின் பார்வையில்லாமல் சேர்க்கை பெறாமல் இருந்தால் ஒருவரது வாழ்வு சிறப்பாக அமைந்துவிடும். அதேபோல் 7ஆம் வீட்டிற்குரிய கிரகம் ஆட்சி, உச்சம் பெற்று யோகமான கிரகங்களின் நட்சத்திர சாரத்தில் நின்று, சாரம் தந்த கிரகங்கள் இலக்கினத்திற்கு 6,8,12இல் மறையாமல், தீய கிரகங்களின் சேர்க்கையின்றி இருந்தால் இளமையில் திருமணம் முடிந்து திருமணம் வாழ்வு சிறந்து விளங்கும். பெண்கள் ஜாதகமாயின் 7ஆம் வீட்டில் தீய கிரகங்கள் இருக்கக்கூடாது. மேலும் பெண்கள் ஜாதகத்தில் 8ஆம் வீட்டில், இராகு, கேது, போன்ற கிரகங்கள் இருந்தால் மாங்கல்ய பலம் பாதிக்கப்படும் திருமணத்திற்குப்பின் பிரிவு உண்டாகும்.

ஜாதகத்தில் 7ஆம் வீட்டிற்குரிய கிரகம் 2ஆம் வீட்டில் இருப்பின், மனைவி வந்தபின், நல்ல யோகம் அமைந்து வாழ்வு சிறப்பாக அமையும் அதே போல் 7ஆம் வீட்டிற்குரிய கிரகம் 9ஆம் வீட்டில் அமர்ந்து, வீடு கொடுத்த கிரகம் 6,8,12இல் மறையாமல் இருப்பின் இளமையில் திருமணம் நடைபெற்றது. மனைவியால் இருப்பின், இளமையில் திருமணம் நடைபெற்று, மனைவியால் அல்லது கணவரால், சகல சௌபாக்யங்களையும் அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

7ஆம் வீட்டிற்குரிய கிரகம் 11ஆம் வீட்டில் அமர்ந்து இருந்தால் அந்த வீட்டிற்குரிய கிரகம், 11ஆம் வீட்டில் அமர்ந்து இருந்தால் அந்த வீட்டிற்குரிய கிரகம் இலக்கினத்தில் அமர்ந்தாலும் அல்லது கேந்திரங்களில் அமர்ந்தாலும், இளமையில், திருமணம் நடைபெற்று மனைவி அல்லது, கணவன் வந்தபின் ஜாதகர் பெரும் பணக்காரராக மாறி விடுவார். மேலும் திருமணத்தை நடத்தி வளம் பெறச் செய்யும், கிரகமான கள்ததிர காரகன் சுக்கிரன் ஆட்சி உச்சம் பெற்று தீய கிரகங்களான சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது, போன்ற கிரகங்களுடன் சேர்க்கை பெறாமல் இருந்தாலும் திருமண வாழ்வு, சிறப்பாக இருக்கும்.

இதுபோன்று ஜாதகத்தில் நாம் மேலோட்டமாக பார்க்கும்போது ஜாதகர் திருமணம் இளவயதில் நடந்து முடிந்து மனைவி வந்தபின் நல்ல யோகமான ஜாதகம் போன்ற அமைப்பு காணப்படும். ஆனால் ஜாதகர் நல்ல தொழில் மூலம் வருமானம் பெற்று சிறப்பாக வாழ்ந்துக் கொண்டிருப்பார். ஆனால் திருமணம் செய்ய வேண்டும். என பல தடவை முயற்சி செய்தும் திருமணம் தள்ளிப் போய்கொண்டிருக்கும். திருமண தாமதத்திற்கான


ஜோதிடச் சுடர்
**N.வீரமாதவன், D.Astro**
**Cell: 90954 05009**

காரணங்களை, அனுபவ ஜாதகத்தின் மூலம் நாம் ஆராய்ந்துப் பார்ப்போம்.

பிறந்த தேதி : 08.11.1983

பிறந்த நேரம் : 6.15 காலை

சூர்ய உதயம் : 6.12

ஊர் : திண்டுக்கல்

நட்சத்திரம் : கேட்டை

திசை இருப்பு : புதன் திசை 2 வருடம், 00 மாதம், 16 நாள்

| நட்சத்திர பாத சாரம்: | | இராசி | அம்சம் |
|---|---|---|---|
| இலக்கினம் | சித்திரை 3இல் | துலாம் | துலாம் |
| சூரியன் | விசாகம் 1இல் | துலாம் | மேஷம் |
| சந்திரன் | கேட்டை 4இல் | விருச்சிகம் | மீனம் |
| செவ்வாய் | உத்திரம் 1இல் | சிம்மம் | தனுசு |
| புதன்(அஸ்) | அனுசம் 1இல் | விருச்சிகம் | சிம்மம் |
| குரு | கேட்டை 3இல் | விருச்சிகம் | கும்பம் |
| சுக்கிரன் | உத்திரம் 3இல் | கன்னி | கும்பம் |
| சனி | சுவாதி 2இல் | துலாம் | மகரம் |
| இராகு | ரோகிணி 4இல் | ரிஷபம் | கடகம் |
| கேது | கேட்டை 2இல் | விருச்சிகம் | மகரம் |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| | இராசி ஆண் 8.11.1983 | | |
| | | | செவ் |
| | குரு சந் புத(அஸ்) கேது | ல / சூரி சனி | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சந் | சூரி | | |
| குரு சுக் | அம்சம் | | ராகு |
| சனி கேது | | | புத |
| செவ் | | ல | |

இந்த ஜாதகர் பட்டப்படிப்பு வரை படித்து முடித்து விட்டு, தனியார் வாகன விற்பனையகத்தில், கம்யூட்டர் பிரிவில் வேலை பார்க்கின்றார். மாத வருமானம், அதிகம் கிடைக்கின்றது. மேலும், பணம் இவரிடத்தில் அதிகம் உள்ளது. ஆனால் வயது 31 ஆகியும் இன்னும் திருமணம் ஆகவில்லை. இவருக்கு 27 வயதிற்கு மேல் திருமணம் முடியும் என எதிர்பாரக்கப்பட்டது. இப்போது 31 வயதாகின்றது. இன்றும், பல முயற்சி செய்தும், திருமணம் நடக்கவில்லை. பல பரிகாரங்கள் செய்தும் பலனில்லை. இதற்கான காரணத்தை ஜாதக ரீதியாகப் பார்ப்போம். இந்த ஜாதகத்தில் இலக்கினாதிபதி சுக்கிரன் களத்திரகாரனாக ஆக அமைந்து, இலக்கினத்திற்கு 12இல் நீசம் மேலும் களத்திர காரகன் சுக்கிரன், பாதகாதிபதியான சூரியன் சாரம் பெற்று 12இல் மறைவு, புதன் சனி சாரத்தில் அமர்ந்து புதன் அஸ்தமனம் பெற்று, 2ஆம் வீட்டில் அமர்ந்துள்ளார். பாக்கியங்களை அள்ளித் தரக்கூடிய புதன், அஸ்தமனம் ஆகிவிட்டது. மேலும், புதனுக்கு வீடு கொடுத்த செவ்வாய், வாக்கு தனம், குடும்பம், ஸ்தானம்



7ஆம் வீட்டிற்குரிய செவ்வாய், பாதாகாதிபதியான சூரியன சாரம் பெற்று, பாதகா ஸ்தானத்தில் அமர்ந்துள்ளது. எனவே ஜாதகர்க்கு இளம் வயதில் திருமணம் நடைபெறவில்லை. அப்படி இதற்கு முன் திருமணம் செய்திருந்தாலும், வாழ்வில் பிரச்சினை ஏற்பட்டிருக்கும். மேலும் குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்தி தரக்கூடிய 2ஆம் வீட்டில் கேது அமர்ந்து அஸ்தமனம் பெற்ற, புதன் சாரத்தில் உள்ளது. மேலும் 2ஆம் வீட்டில், 3,6க்குடைய குரு அமர்ந்துள்ளது. சந்திரன் புதன் சாரம் பெற்று, நீசமாகி அமர்ந்துள்ளது. 4/5 க்குடைய சனியானவர், இராசியில் இலக்கினத்தில் உச்சம் பெற்று, இராகு சாரத்தில் இடம் பெற்று, இராகு 8இல் மறைவு பெற்றுள்ளது. சனியுடன் சூரியன் இணைந்து, 7ஆம் வீட்டைப் பார்க்கின்றன. பாதகாதிபதியான சூரியன் அம்சத்தில் உச்சம் பலம் பெற்றதனால் இந்த ஜாதகருக்கு, தகப்பன் இருந்தும், தகப்பனால், பிரயோஜனம் இல்லை. 7ஆம் வீட்டிற்கு, சூரியன், சனி பார்வை உள்ளது. இவருக்கு வருமானம் வந்தாலும் குடும்பத்திற்கு பணம் செலவாகி விடுகின்றது. மேலும், ஜாதகர் மிகவும் அமைதியானவர். ஒழுக்கம் நிறைந்தவர். தீய பழக்க வழக்கங்கள் ஏதும் இல்லாதவர் அப்படி இருந்தும், இவருக்கு சிறந்த வாழ்க்கை துணை அமைந்து வாழ்வில் வளம் பெற முடியாமல் உள்ளது. ஆக ஒரு ஜாதகத்தில் நாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது, இளம் வயதில் திருமணம் நடைபெறுவது போல் அமைப்பு காணப்பட்டாலும், நட்சத்திர சாரநாதன் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் போது நமக்கு உண்மை தெரிய வரும் என்பது, அனுபவ உண்மையாகும் ஜாதகத்தில் கிரகங்கள் அமர்ந்த ஸ்தானங்களில் பலன்களை செய்வதை விட, கிரகங்கள் தான் நின்ற சார நாதன் அடிப்படையில் தான் பலன்களை வழங்குகின்றன.

நூல் மதிப்புரை

# ஞானம் அருளும் காலக்கண்ணாடி


T.G.பாலசந்திரன்,
வேத ஜோதிடர்
செல்: 94445 41239.




மனிதர்கள் வாழும் சூழ்நிலைகளும், சூழும் சந்தர்ப்பங்களும் நாளும் பாவ புண்ணியம் பறை சாற்றும் கர்மாவிற்கு காரண காரியம் கற்பிக்கும் விதியாகி விட அவ்விதியின் சூட்சுமத்தை விரிவாய் உதாரண ஜாதகங்களுடன் விளக்கும் அற்புத அனுபவக் கற்பகக் களஞ்சிய நூல்தான் "ஞானம் அருளும் காலக் கண்ணாடி" ஆகும். நவக்கிரகங்கள் ஆளும் பன்னிரு இராசிகளும் 27 நட்சத்திரங்களும் கூறும் விஞ்ஞானமும் பல கோடி மனிதர்களை வேறுபடுத்தி ஆளுக்கொரு கணக்கை கூறுபடுத்தி வைத்தாலும், தன் உபாசனை சித்தியாலும், பலகால தவ சக்தியாலும், தீவிர பக்தியாலும், தேர்ந்த அனுபவ யுக்தியாலும் குருமார்களின் அனுகிரகத்தாலும், ஸ்ரீஞான ஸ்கந்தப் பெருமானின் அருளாசியினாலும் தன் இறை ஞானத்தால் விதியான காலக்கண்ணாடியை ஒவ்வொரு ஜோதிடரும் அறிய, கற்றுத் தெரிய, உலகோர்க்கென "ஸ்ரீஸ்கந்த உபாசகர்" "ஜீவ நாடி கலையரசு" திரு.P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் படைத்த பொக்கிஷம் தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி".




ஜோதிடம் பயில்வோர் பல அரிய, புதிய, நூல்களை வாங்கி கற்றுத் தெளிந்து, பல பயிற்சி வகுப்புகளில் பயின்று பார்த்து, புரிந்து, புலனாய்ந்தும் கூட பலன் கூறுவது மட்டும் வருவதில்லை என விழிப்போர் குறை தீர்க்க வாங்கி படிக்க வேண்டிய நூல்தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" இந்நூலில் "திறமையான ஜோதிடரை உருவாக்கும் சூட்சும கிரக நிலைகள்" எனும் தலைப்பில் "ஜீவநாடி கலையரசு" அவர்கள் தெள்ளத் தெளிவாய் பலக்கோணத்தில் ஆய்ந்து, ஆராய்ந்து, உதாரண ஜாதகங்கள் மூலம் உறுதிபட விளக்கி, ஒருவர் ஜோதிடராகும் அமைப்பு எதுயென விவரிக்கிறார். ஜோதிடராக வரவேண்டி பலகாலம் முயற்சி மேற்கொள்வோர்கள் முதலில் தங்கள் ஜாதகத்தில் மேற்கூறிய அமைப்பு உள்ளதா என உறுதி செய்துக் கொள்ள உதவுவது தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி"

அறிமுகத்தின் திருமுகமாய் "கிரகங்கள் பேசுகின்றன" என்ற தலைப்பின் கீழ் அணிவகுத்து வரும் நவக்கிரகங்கள் கொங்கு தமிழ் எழில் கொஞ்சி தங்களை பற்றி தாங்களே பேசுவது போல கூறும் தகவல்கள் மிக எளிமையாக அருமையாக நவகிரகங்களை பற்றித் தெரியாத பல புதிய விஷயங்களை அறிய பெரிதும் உதவுகிறது.

பொதுவாக ஜாதகத்தில் மறைந்து இருக்கும் புலப்படாத மிக நுண்ணிய சூட்சுமமான விஷயங்களை சில ஜோதிடர்கள் ஆராயாமல் அஜாக்கிரதையால் கவனிக்காமல் தவற விடுவதின் விளைவு, நம்பி நாடி வரும் மக்கள் பல வேளைகளில் துன்பச் சகதியில் சிக்கி, எதிர்பாராத துயரச் சம்பவங்கள் நிகழ்ந்த பின்னே புலம்பும் துரதிஷ்டம் காண முடிகிறது. இக்குறையை நீக்கவே பல்லாயிரம் ஜாதகங்களில் உள்ள வேற்றுமையில் உள்ள ஒற்றுமையை கண்டு ஆராய்ந்து துள்ளிய பலன்களை சொல்லிட, மூல நூல்களில் கூறும் நெறிமுறைகளை வகுத்து வகைப்படுததியுள்ளார். திரு.P.D.ஜெகதீஸ்வரன்.

இன்றைய காலக்கட்டத்தில், கலி ஓட்டவேகத்தில் பொருளாதார மேன்மை ஒன்றே பொருட்டென கண்மூடித்தனமாய் ஓடும் மனிதர்கள் காணும் மனநெருக்கடி மற்றும் சிறு விஷயத்தை கூட சீரிய முறையில் நோக்காது அவசர கோலத்தில் அள்ளித் தெளிந்து எடுக்கும் முடிவுகளின் தவறுகளால் தத்தளிப்பவர்கள், உறுதியில்லா மனநிலையின் தேடும் இறுதியான முட்டாள்தனமான முடிவு

# வாழ்த்துரை வழங்கிய வள்ளல்கள்

எனது சீடன் ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் P.D.ஜகதீஸ்வரன் MCA,M.Phil., அவர்கள் ஞானம் அருளும் காலக்கண்ணாடி எனும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தனது 18வது வயதில் ஜோதிடம் சொல்லத் தொடங்கி அந்த அனுபவங்களை அவ்வப்போது பல மாத இதழ்களில் எழுதி வெளியிட்டதைத் தொகுத்து இந்த புத்தகத்தில் தந்திருக்கிறார். இவரது 32ஆம் வயதில் மூன்று நூல்களை எழுதியிருக்கிறார் ஆனால் அதில் உள்ள கருத்துக்களைப் பார்க்கும்போது ஒரு 80 வயது உடைய முதிர்ந்த அனுபவம் அதில் இருக்கிறது எனில் நிச்சயம் அந்த முருகப் பெருமானின் ஆசிர்வாதம் தான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆலயப்பணி, கல்லூரிப்பணி, பத்திரிகைப் பணி, ஆன்மிகப் பணி என பல்வேறு சேவைகள் செய்து வரும் இவர் இது போல் இன்னும் பல நல்ல நூல்களை எழுதி நாட்டு மக்களுக்கு இன்னும் பல சேவைகளைச் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



Dr. W. ஜோதி அக்பர் சாமி

உலகைக் காத்தருளும் பிரபஞ்ச சக்தியையும், நவக்கிரகங்களையும் போற்றி இவ்வாழ்த்துரையை துவக்குகிறேன். இதனால்தான் எத்தனையோ மகான்களையும் சித்தர்களையும் ஆன்மிக சக்திசாலிகளையும் கடவுள் தினமும் தன்னை நினைத்து, தன்னைப் போற்றி தன்னை வணங்க வைத்து, தன் பெயரைச் சொல்ல வைத்துள்ளார் போலும்! பலர் இந்த வரிசையில் இருந்தாலும், குறிப்பிட்ட சிலரை மட்டும் இறைவனே ஒரு குறிப்பிட்ட பணியில் ஈடுபடுத்துவதை, பிரத்யேகமாகக் காணலாம். இந்தக் காலக்கட்டத்தில் திருமிகு. P.D.ஜெகதீஸ்வரன் என்ற இளைஞரை, நாமாகிய ஆன்மிகப் பெரியோரும், ஜோதிடப் போராளிகளும், ஒரு முற்றிலும் மாறுபட்ட ஆன்மிக நாட்டமும், வாக்கு வன்மையும், இறை சக்தியும் நிறைந்த, பெரியோர் ஆசிதனைப் பெரிதெனக் கருதும் குணமும் நிறைந்த மாண்பு நிறை தெய்வப்பிறவியாய்க் காண்கிறோம். நெருங்கிச் சென்றவர்கள் இது முருகப் பெருமானின் அருள் அவர் மீது ஆசையுடன் அமர்ந்ததால் தான் என்பதை அறிவர். ''ஞானம் அருளும் காலக் கண்ணாடி'' இந்தப் புத்தகத்தில் சூட்சும பலன்கள், மிக வித்தியாசமான முறையில் காட்டப்பட்டுள்ளது.



குருவருள் நடராஜன்

ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் ஜீவ நாடி கலையரசு P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் எழுதிய இராகு கேது பெயர்ச்சி பலன்கள், சனி பெயர்ச்சிப் பலன்கள், ஆங்கில புத்தாண்டு பலன்கள், தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் ஆகிய புத்தகங்களை திருவருள் சக்தி குருவருள் ஜோதிடம் ஆசிரியர் சித்தர் அடிமை ஸ்ரீ சி.இராஜீ என்னிடம் கொடுத்து அதை எழுதிய P.D.ஜெகதீஸ்வரன் அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். அவரது புகைப் படத்தைப் பார்த்த உடனேயே மிகச் சிறிய வயது உடையவராகத் தெரிந்தாலும் நல்ல தேஜஸ் பொருந்திய முகமாக எனக்குப் பட்டதால் உடனே நான் சொன்ன வார்த்தை நல்ல சாமுத்ரிகா லட்சணம் பொருந்தியவர் இவர் என்பதுதான். ஸ்ரீ சி.இராஜீ அவர்கள் நானும் அடிக்கடி இந்த வார்த்தையை அவரிடம் சொல்லி இருக்கிறேன் இப்போது நீங்களும் அப்படியே சொல்கிறீர்கள் என்று அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். அதன் பின்பு P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் எழுதி வருகின்ற கட்டுரைகளை வாசித்தேன், மிகச் சிறப்பான விஷய ஞானமும், ஆழமான ஆய்வுகளும் அதில் இருப்பது கண்டு உளம் மகிழ்ந்து வரும் வேளையில் ஞானம் அருளும் காலக் கண்ணாடி எனும் புத்தகத்தை அவர் எழுதியது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த புத்தகத்தை எனது கரங்களால் வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறேன்.



பண்டித காழியூர் நாராயணன்

உங்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் ''ஞானம் அருளும் காலக்கண்ணாடி'' இப்புத்தகத்தை உருவாக்கி கொடுத்து உள்ளவர் ''ஸ்ரீஸ்கந்த உபாசகர்'' ''ஜீவநாடி கலையரசு'' P.D. ஜெகதீஸ்வரன் அவர்கள் பழகுவதற்கு இனியவர். பண்பில் சிறந்தவர். தன்னடக்கத்துடன் ''திருவருள் சக்தி''''குருவருள் ஜோதிடம்'' வாசகர்களின் தேவையை தன்னலம் இன்றி பொது நலன் ஒன்றே புனிதத்தைக் கொடுக்கும் என்ற கோட்பாட்டையே கொள்கையாகக் கடைபிடித்து வருபவர். பொருளுக்கு ஆசைப்படாமல் இறைவன் அருளுக்கு அடிபணிபவர். ஆசை வார்த்தைக்கு ஆட்படாமல் அன்புக்கு தன்னை அர்ப்பணிப்பவர். வயது குறைந்தவர் ஆனாலும் கீர்த்தியில் உயர்ந்து ஓங்குபவர்.



படித்து பயன் பெறுங்கள் வாழ்வில் நன்மைகள் அனைத்தும் பெற்று நீங்கள் நலமுடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம். துன்பங்கள் யாவும் நீங்கி இன்முகம் காட்டிடும் அன்புடன் ஆண்டவனை ஆராதிக்கின்றோம்.

சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜு

தான் தற்கொலையாகும். வரும் துன்பம் நூறாயிரம் கோடியானாலும் பரவாயில்லை "சும்மா இரு" என அருணகிரியாருக்கு, அழகு வேலன், பாலமுருகன் தந்த தத்துவ மந்திர உபதேச மொழியின் சூட்சுமம் பல பிரச்சனைகள் ஏற்படும்போது நாம் அமைதி காத்து பொறுமையுற்றாலே, அது காலப்போக்கில் தானே காணாமல் மாயமாய் போகும். இது புரியாது வீணே உயிரை விடக் கூடிய அமைப்பு எதுவென தெளிவாய் "தன்னுயிரை தானே மாய்த்துக் கொள்ளும் ஜாதகங்கள்" என்ற தலைப்பில் தற்கொலை செய்துக் கொள்ளும் அமைப்பினை உதாரண ஜாதகங்கள் மூலம் உவகையுடன் விவரிக்கிறார் குடி குடியை கெடுக்கும் என ஊருக்கு கொடி பிடித்து பேருக்கு போராடி சாடுவோர் கூட திரைமறைவில் தினம் போதையில் பாதை மாறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. ஆணுக்கு பெண் சமமென முழங்கிய, புரட்சிகவி பாரதியின் ஒற்றை வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு சில பெண்களும் வழிதவறுவதால் ஏற்படும் விபரீதம் தான் கொடுமை. போதை பழக்கத்திற்கு அடிமையாகும் அமைப்புகளை அழகாய் "போதை பழக்கம் பாதை மாறும் ஜாதகங்கள்" எனும் தலைப்பில் பலரும் பார்த்ததும் பலனறிய, பயனுற பாரோர்க்கு பறைசாற்றுகிறார். "திரு.P.D.ஜெகதீஸ்வரன்" அவர்கள்.

பெற்றோர்கள் தாங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் தங்கள் பிள்ளைகள் படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் சகல விதமான வசதிகளும் செய்து தந்து ஆசைப்பட்ட செல்போன், லேப்டாப், பைக் என கேட்டது யாவும் கடனை உடனை வாங்கியாவது விரும்பிய கல்லூரியில் வேண்டிய படிப்பை கோரியபடி படிக்க அரும்பாடுபட்டு வைத்தாலும் உலகம் உணராத பிஞ்சுகள் கலகம் காணாத நெஞ்சில், நஞ்சாய் புகும் காதல், கத்தரிக்காயால் ஏற்படும் துன்பங்களால் சீரழியும் குடும்பங்கள் பல ஆயிரம். வளரும் வயதில் சுக்கிரன் ஆதிக்கத்தின் கீழ் வரும் செல்போன், லேப்டாப், பைக் மற்றும் இன்னும் பல ஆடம்பர விஷயங்கள் யாவும் எதிர்பாலரை ஈர்க்கும் சுக்கிரனின் காரகத்துவங்கள் என உணராத பெற்றோர்களின் அறியாமையால் பிள்ளைகளின் காதலால் ஏற்படும் அநியாய இழப்புகளை தடுக்க "விரும்பியனுடன் ஓடிபோகும் விபரித ஜாதக அமைப்பு" என்ற தலைப்பில் உதாரண ஜாதகங்கள் மூலம் தெளிவாய் ஜோதிடர்கள் உணர விரிவாய் விளக்கியுள்ளார்.

"மனதை ஆளும் மானசீக கிரகங்கள்" என்ற தலைப்பில் குணம் கெட்டு நாளும் திரிவோர் விதியாவும் மதியான மனதை ஆளும் சந்திரன் மற்றும் புத்தியை குறிக்கும் புதனின் பாதிப்பால் என்று 5ஆம் இட ஆராய்ச்சி மூலம் தசாபுத்தி தரும் அரிதான தெரியாத பல விஞ்ஞான விபரங்களை, கோச்சார சனிபகவானின் கோரங்களை மெய்ஞான முறையில் வரிசைப்படுத்துகிறார். பரிகாரங்கள் பலனளிக்காத காரணம் திரிகோண ஸ்தானமான 1,5,9ஆம் இடம் பாதிக்கப்பட்டு கெடுவதின் காரணமே என அரியத் தகவலை அற்புதமாக தந்துதவுகிறார். "ஆட்டி படைப்பது 6ஆம் இடமோ, 8ஆம் இடமோ" என்ற தலைப்பில் சஷ்ட அஷ்டஸ்தானங்களின் துஷ்ட பரிமாணங்களால் வரும் கஷ்டநஷ்டங்களை விவரிக்கிறார். திருமணம் யோகமாக நல்லதொரு குடும்பம் அமைய உறுதுணையாகும் 2ஆம் பாவப்பலன்களை "இல்லற பாவம் இயங்க வைத்திடும் சுபாவம்" என்ற தலைப்பில் "திருமண வாழ்வு திருப்புமுனையாகும் நிகழ்வு" யாருக்கு? என யாதார்த்தத்தை இயல்பாய் அடுக்குகிறார் திரு.ஜீவநாடி கலையரசு.

"ஸ்தானமும் கிரக காரக யோக நிலைகள்" என்ற தலைப்பின் கீழ் பல உபதலைப்புகள் கொண்ட ஆராய்ச்சி கட்டுரைகள் நவக்கிரகங்களின் இராஜயோக அமைப்புகளை விளக்குகிறது. புகழைத் தரும் 10ஆம் இட புதையல் தொழில்கள் என்ற தலைப்பின் மூலம் தொழில்கள் மூலம் பேரும் புகழும் பெற்றுத் தரும் அமைப்புகளை எடுத்துரைக்கிறார். இறுதியாய் மந்திரசித்திகள் அருளும் தந்திரயோக பிரயோகங்கள் தலைப்பில் சித்தர்களை பற்றியும் ஜீவ சமாதி மற்றும் அருட்சாதனங்களின் அருமை பெருமையை கூறும் கிரக நிலைகளை போற்றுகிறார்.

இப்படி தான் பெற்ற சகல விதமான ஞானத்தையும் காலக்கண்ணாடியான ஜாதகத்தை யாவரும் சரியாக பார்த்து பலன் கூறவேண்டும் என்ற நல்லதொரு எண்ணத்தில் தூய்மை உள்ளத்தில் படைக்கப்பட்ட நூல் தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" இந்நூலின் சிறப்பு இதில் வெளியிடப்பட்ட ஏராளமான உதாரண ஜாதகங்களும் பளிங்காய் துலங்கும் விளக்கங்களும் தான். திரு. P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் தன் அனுபவத்தில் பார்த்த ஜாதகங்களின் தொகுப்பை பெயர்களை வெளியிடாது விதியின் சாராம்சத்தை மட்டும் தந்துள்ளார். "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" ஜோதிடர்களின் அருட்பெரும் சொத்து கிடைக்கரிதான ஞானவித்து ஜோதிட அன்பர்கள் வாங்கி பயனுற்று வாக்குபலிதம் பெற வாழ்த்துக்கள்

**விலை ரூ.350/–**

மேலும் தொடர்புக்கு:

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

**நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.**
**போன்: 044– 2811 6770, செல்: செல்: 72999 21880** | Email: apsarapublications@gmail.com

# திருமணப் பொருத்தத்தில் புதியதோர் அணுகுமுறை மற்றும் வாஸ்து பயிற்சி

திருமணப் பொருத்தமா? நமக்குத் தெரிந்ததுதானே என்று நினைப்பவர்களை வியப்பில் ஆழ்த்தும் விந்தையான முறை பத்துப் பொருத்தங்கள் தராத பலனை இப்புதிய முறை தந்துவிடும். இனி இல்லறம் காண வைக்கும் வாழ்க்கைத்திறவுகோல்! இதுவே நிறைவைத் தரும் திருமணப் பொருத்தம் என்று தீர்மானிக்க வைக்கும். வந்து பார்த்தால் வலிமையும் வளமையும் தெரிய வைக்கும் பயிற்சி என்பது புலப்படும்.

**பயிற்சி: 1 திருமணப் பொருத்தம் - காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை**

1. பத்துப் பொருத்தங்களின் உண்மைநிலை
2. கோள்களின் பொருத்தம்
3. ஆயுள் பொருத்தம்
4. தோஷப் பொருத்தம்
5. அந்நியோன்ய பொருத்தம்
6. திருமணம் உறவிலா? புதிய உறவா?
7. உள்ளூரா? வெளியூரா?
8. திருமணம் நடைபெறும் காலம் எது?
9. காதல் திருமணங்கள்
10. இணைக்கக்கூடாத நட்சத்திரங்கள்
11. பாதிப்புகளைத் தரும் நட்சத்திரங்கள்
12. திருமணம் ஆகாதநிலை
13. திருமணப் பொருத்தம் காணும் நல்லதொரு புதிய முறை

| கரூர் | சேலம் | விழுப்புரம் |
|---|---|---|
| **1.8.2015 சனி**<br>**PL.Aபிளாசா**<br>மீட்டிங் ஹால் பேருந்து நிலையம் அருகில், கரூர்<br>**தொடர்புக்கு: 94433 10477** | **8.8.2015 சனி**<br>**ஸ்ரீவாசவி சுபிட்சா ஹால்**<br>சுகனேஸ்வரன் கோவில் எதிரில்<br>சேலம் - 636001<br>**தொடர்புக்கு: 94433 10477** | **16.8.2015 ஞாயிறு**<br>**AGS திருமண மகால் , கெஸ்ட் ஹவுஸ்** புதிய பேருந்து நிலையம் எதிரில், சுதாகர் நகர், மெயின் ரோடு, விழுப்புரம்<br>**தொடர்புக்கு: 94433 10477** |

**பயிற்சி: 2 வாஸ்து பயிற்சி: காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை**

1. மனையின் தன்மை, 2. மனை பொருத்தம், 3. அடிக்கணக்கு, குழிக்கணக்கு, 4. வாஸ்துபடி வீட்டின் அமைப்பு, 5. வாஸ்து பரிகாரங்கள், 6. சீன வாஸ்து

| அரியலூர் | தஞ்சாவூர் | விருத்தாசலம் |
|---|---|---|
| **2.8.2015 ஞாயிறு**<br>19 மூன்றாம் தெரு, இராசாசி நகர், அரியலூர் - 621 713<br>**தொடர்புக்கு: 94433 10477** | **9-8-2015 ஞாயிறு**<br>**ஸ்ரீ பெசண்ட் லாட்ஜ்,**<br>ஜுபிடர் தியேட்டர் எதிரில், தஞ்சாவூர்<br>**தொடர்புக்கு: 94433 10477** | **15.8.2015 சனி**<br>**ஸ்ரீ சாரதா வித்யாலயா மெட்ரிக் பள்ளி**<br>சேலம் ரோடு, மேம்பாலம் அருகில், மணலூர், விருத்தாசலம்.<br>ஒருங்கிணைப்பாளர்:<br>**திரு.சிவகுமார்– 99654 67859** |

**முன்பதிவு செய்ய மறக்காதீர்கள்**

**ஒவ்வொரு பயிற்சிக்கும் நபர் ஒன்றுக்குக் கட்டணம் ரூ.1300/- மட்டும்**

**காலை மாலை தேநீர், மதிய உணவு, குறிப்புச்சுவடி, எழுதுகோல், பயிற்சிப்பாடம், மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்**

கண்டு கேட்டவர்களின் பாராட்டுகளைப் பெற்ற, சோதிட ஆய்வாளர், வாஸ்து பயிற்சியாளர், திருமணப் பொருத்த வல்லுநர்

**புலவர் இளங்கோவன்.வி. எம்.ஏ.எம்.எட்(தமிழ்) எம்.ஏ. (சோதிடம்)**

புதுமையான முறையில் அஞ்சல் மூலம் திருமணப் பொருத்தம் காண கட்டணம் ரூ.300/–
கூரியர் மூலம், பொருத்த விளக்கத்தை தெளிவாக எழுதி அனுப்பப்படும்

# பாவங்கள் போய்ச் சேரும் பரிதாப நிலை...



**Dr. E. சரவணன்**
**Cell : 91769 26027 | 94441 59680.**

அச்சடித்த மஞ்சள் தாளில் ஆணுக்கு ஒரு பாதியும் பெண்ணுக்கு ஒரு பாதியும் ஒதுக்கி இரண்டு ஜாதக கட்டங்களை போட்டு பெயர், நட்சத்திரம், எல்லாம் எழுதி 10 பொருத்தங்களில் 8 பொருத்தங்கள் இருப்பதாக பதிவு செய்து திருமணம் செய்யலாம் என்று எழுதி கொடுத்திருக்கும் தாளில் ஜோதிடரின் பெயர், விலாசம், மற்றும் ஜோதிடரைப் பற்றிய தேவையான விவரங்கள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு இருந்தது.

பையனின் பிறந்த தேதி 22.10.1988 எனவும் பெண்ணுக்கு பிறந்த தேதி என்ற இடத்தில் 21.05.2002 என்று இருந்ததை பார்த்த எனக்கு தூக்கி வாரிப் போட்டது நிஜம். என்னது. 13 வயது பெண்ணுக்காக திருமணம் முடித்து இருக்கிறீர்கள் என்று அலறிய என்னை பையனின் தாயார் அமைதிப்படுத்தி அது பெண்ணின் ருதுவான தேதி. பெண்ணுக்கு பிறந்த தேதி தெரியாது. அதனால் ருதுவான தேதியை போட்டு இருக்கிறார் எனறார்.

பிறந்த தேதி மற்றும் நேரம் பெண்ணுக்கு இல்லை என்றதால் ஒரு ஜோதிடரிடம் போக, அவரும் ருதுவான தேதியை பெண்ணின் ஜாதகமாக போட்டு, பையனின் பிறந்த ஜாதகத்தோடு ஒப்பிட்டு 10 பொருத்தங்கள் பார்த்து 8 பொருத்தங்கள் இருப்பதாக எழுதிக் கொடுத்து இருக்கிறார். பையனின் தாயார் இந்த பொருத்தத்தை நம்பி, தனது பையனுக்கு திருமணம் முடித்து வைத்து விட்டார்.

பிறகு என்ன? சுபமாக கதையை முடிக்க வேண்டியது தானே?. இப்படிப்பட்ட இடைத்தரகு பார்க்கும் ஜோதிடர்களால் மக்கள் படும் துன்பத்தை பற்றிய உண்மை நிகழ்வு தான் இது. ஜோதிடம் பயிலும் எனது நண்பர்களே, பலன் சொல்லுவது வேறு. ஒரு பெண்ணின் தலையெழுத்தை நிர்ணயம் செய்யும் திருமணத்திற்கு பொருத்தம் பார்ப்பது வேறு. வெறும் 10 பொருத்தங்கள் மட்டும் போதாது. ஜாதகத்திலுள்ள குறை நிறைகள் ஒப்பிட்டு பார்க்கப்பட வேண்டும், அந்த பையனும் அந்த பெண்ணும் சேர்ந்து வாழ்வார்களா என்று பார்க்க வேண்டாமா?

இந்த கதைக்கு முன் ஒரு சிறு இடைவேளை விடலாம். வேறு ஒரு பெண்ணின் ஜாதகத்தை காட்டிய ஒரு தம்பதியர், வேறு ஒரு ஜோதிடரைப் பார்த்து பிரமாதமாக இருக்கிறது என்று சொன்ன ஜாதகத்தை நான் பார்த்துவிட்டு வேண்டாம் என்று சொன்னதும் முகம் வாடிப் போயினர். நான் பார்த்த ஜாதகத்தில் 10 பொருத்தங்களில் - ஸ்திரி தீர்க்கமும், ரஜ்ஜு பொருத்தமும் இருக்கிறது என்று பார்த்து கொடுத்த ஜாதகத்தில் - சூரியனும், செவ்வாயும் ஒரே வீட்டில் இருப்பதை பார்த்ததும் திருப்பி கொடுத்து விட்டேன்.

1956ஆம் ஆண்டுவாக்கில் வெளியிட்ட ஒரு புத்தகத்தில் மறைந்த ஜோதிட மேதை திரு. C.G.ராஜன் அவர்கள், அழுத்தம் திருத்தமாக சொல்லி இருப்பது - சூரியனும், செவ்வாயும் ஒரே வீட்டில் இணைந்திருப்பது அமங்கலி யோகம் என்பதாகும். தற்காலத்திற்கு இதை அப்படியே எடுத்துக் கொள்ள முடியாது என்பவர்களுக்கு, இப்படிபட்ட ஜாதகத்தினர் விவாகரத்து வரை போய்விடுவது கண்கூடாக நடைபெறுகிறது என்பது தான். வந்த தம்பதியருக்கு இதை விளக்கமாக சொல்லி அவர்களுக்கு புரிய வைப்பதற்குள் நான் கஷ்டப்பட்டது எனக்குத்தான் தெரியும். 10 பொருத்தங்கள் மட்டும் போதாது என்பதற்கு என்னால் 100 உதாரணங்கள் சொல்ல முடியும். மற்றொரு ஜாதகத்தில் பையனுக்கும் பெண்ணுக்கும் 10-க்கு 7 பொருத்தங்கள் இருப்பதாக வந்தார்கள். பையனின் ஜாதகத்தில் குரு, செவ்வாய், மற்றும் சுக்கிரன் ஆகிய மூவரும் பார்த்துக் கொள்வதாக அமைந்து இருந்தது. ஓர் உதாரண ஜாதகம் மூலம் விளக்குகிறேன்:-

| | | | |
|---|---|---|---|
| | குரு | | |
| | | | |
| | | | சுக் |
| செவ் | | | |

மேற்படி ஜாதகத்தில் குரு 5ஆம் பார்வையாக சுக்கிரனையும் 9ஆம் பார்வையாக செவ்வாயையும் பார்ப்பது காண்க. இந்த பார்வையின் பலன் பிரிவு ஏற்பட்டு விவாகரத்து வரை கொண்டு போகக்கூடும் என்பது தான் உண்மை. நட்சத்திர பொருத்தங்கள் இருப்பது என்பதற்காக திருமணம் செய்தால் வேறு வினையே வேண்டாம்.

நமது நிகழ்வான ஜாதக விஷயத்திற்கு வருவோம். வந்தது பையனின் தாயார். பையனின் பெயர் தினகரன். எதற்கு பெயரைக் கூட எழுதுகிறேன்

என்று யோசிப்பவர்களுக்கு, படித்து முடித்து விட்டு பிறகு சொல்லுங்கள். தயவு செய்து இப்படிபட்ட தவறுகளை நீங்களும் செய்யாதீர்கள் என்பதற்காகத் தான் இந்த கட்டுரையை எழுதுகிறேன். 22.10.1988இல் பிறந்த இந்த ஜாதகர் ஒரு தனுசு இலக்கினக்காரர். உடனே நமது இனி ஒரு விதி செய்வோம் - தனுசு இலக்கினக்காரருக்குண்டான குணாதிசியங்களை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். தேவைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| செவ் (வ) | | குரு (வ) | |
| சந் ராகு | | | |
| | | | சுக் கேது |
| ல / சனி | | சூரி | புத |

விதி 1:- தனுசு இலக்கினக்காரர்கள் அம்மா கொண்டுகள். அம்மா, அம்மா தான். எதற்கெடுத்தாலும் அம்மா தான். திருமணம் பார்த்து வைத்த அம்மா, பையனுடன் இருப்பது தானே நியாயம்?. அம்மாவின் ஆதிக்கம் அதிகமாக இல்லாவிட்டாலும் இந்த பையனின் செய்கைகள், வந்த மாட்டுபெண்ணுக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது.

விதி 2:- 9ஆம் அதிபதி சூரியன் நீச்சம். ஆக, ஜாதகருக்கு தந்தையார் இருக்கும் வரை தந்தையாரின் கை ஓங்கி இருக்கும். நீச்சமான 9ஆம் அதிபதி தந்தையாரை சிறு வயதிலேயே இல்லாமல் செய்து விட்டது. தாயாரின் வளர்ப்பில் வளர்ந்த பையன் - ஒரே பையனை தன்னுடைய வசதிக்கு ஏற்ப வளர்த்து திருமணமும் செய்து வைத்த ஒரு சராசரி தாயாரின் உணர்வுகளை புரிந்துக் கொள்ளுங்கள்.

விதி 3:- சனி தனுசுவில் இருந்தாலும் 12ஆம் பாவத்தில் (இலக்கின பாகை அளவை விட குறைவாக இருப்பதால்) இருப்பதால், அது 3ஆம் பாவத்திற்குரியவர் என்பதாலும், 3ஆம் பாவாதிபதி 12ஆம் பாவத்திற்கு போனதாலும், ஜாதகருக்கு பிறகு தம்பி / தங்கை யாருமில்லை என்றும் சொல்லலாம்.

விதி 4:- 7ஆம் அதிபதியான புதன் கன்னியா இராசியிலிருப்பது காண்க. ஆக, இந்த ஜாதகருக்கு வரும் பெண் யாராக இருந்தாலும், அந்த மாட்டுப் பெண் கன்னியா இலக்கினக்காரர் (அ) இராசிக்காரர் போல நடந்துக் கொள்ள எல்லா சாத்தியகூறுகளும் உண்டு. வந்த மகராசியும் தனியாக போய் குடித்தனம் பண்ண வேண்டும் என்று நமது ஜாதகரை நச்சரிக்க, தாயாரை பிரிய முடியாத சூழ்நிலையில் உள்ள ஒருவன் செய்யும் காரியத்தை தான் பையனும் செய்தான். பார்க்கலாம், பார்க்கலாம் என்று வாய்தா வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்.

தனுசு இலக்கினக்காரர்களுக்கு அறிவுரையாக கூட எடுத்துக் கொள்ளலாம். திருமணமான பிறகு தாயாரை எதற்கு எடுத்தாலும் நாடுவதும், தாயார் புகழைப் பாடுவதும், தாயார் புராணம் பேசுவதும் நிறுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் மணவாழ்க்கை இந்த பையனைப் போல சீரழிய வேண்டியது தான். இவனுடைய தாயாருக்கு மாட்டுப் பெண் இருந்தாலும் திருமணமான நாளிலிருந்து சற்று ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்க்காமல், ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் பையனுக்காக வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்ய, அது மாட்டு பெண்ணை கடுப்பேற்ற, விளைவு குழந்தை பிறந்த பிறகு தனிக் குடித்தனம் வந்தால் மட்டுமே இந்த பையனுடன் வாழ முடியும் என்று சொல்ல, வேறு வழியில்லாமல் இவர்களும் தனிக்குடித்தனம் வைக்க, அது பையனுக்கு வருத்தத்தை கொடுக்க, இருந்தாலும் தனது குழந்தைக்காக அதையும் செய்து இருக்கிறான். இதில் கொடுமை என்னவென்றால், இந்த பையனையும், பேரக் குழந்தையையும் இந்த பையனின் தாயார் வந்து பார்க்கக்கூடாது என்ற நிபந்தனை தான்.

விதி 5:- இப்படியே சில காலம் போக, அது பையனுக்கு மன உளச்சலைத் தந்து விட்டது. சந்திரன் 3ஆம் வீட்டிலிருக்க, ஜாதகருக்கு நினைத்தது நடக்கவில்லையென்றால் மனஉளச்சலுக்கு ஆளாக்கக்கூடும்.

விதி 6:- புதனுக்கு 7இல் செவ்வாய் இருக்க, இருவரும் பகை தானே. பெண்ணுக்கு கணவனை பார்க்கும் பொழுதெல்லாம் எரிச்சலும் கோபமும் ஏற்பட்டுள்ளது. செவ்வாயின் வக்ரம், பையனை திட்டவட்டமாக பேச வைத்துள்ளது. தாயாரை விட்டுக் கொடுக்க முடியாத நிலையில், பையனும் ஒரு கட்டத்திற்கு மேல் முடியாமல், மனைவியை திட்ட, முறைக்க, விஷயம் காவல் நிலையம் வரை வந்து விட்டது.

என்னிடம் வந்த பையனின் தாயாரிடம் மேலே சொல்லப்பட்ட கருத்துக்களை சொல்லிக் கொண்டே வந்த போது மிகவும் உடைந்து போய் அழத் தொடங்கிவிட்டார். சாமி, அது எப்படி சாமி அப்படியே நடந்ததை பார்த்தது போல சொல்லுகிறீர்கள். இது தான் நடந்தது. அப்படியே நடந்தது என்றார்.


விதி 7:- களத்திரகாரகன் சுக்கிரனுக்கு செவ்வாய் 8இல் இருப்பது காண்க. இந்த 6 / 8 நிலைபாடு ஜாதகரை திருமணத்திலிருந்து ஒதுக்கி வைக்கக் கூடும். திருமண பந்தம் இவருக்கு ஏற்புடையது அல்ல.

விதி 8:- இலக்கினாதிபதி குரு வக்ரமாகி ரிஷபத்தில் இருப்பதும், புதன் கன்னியிலிருப்பதும் 5 / 9 என்ற நிலைப்பாட்டிலிருந்தாலும், குருவின் வக்ர நிலை காரணமாக (அது இருக்கும் வீட்டிற்கு முன் வீட்டை கணக்கில் கொள்ள) 6 / 8 நிலைபாடாக மாறி ஜாதகரை திருமணத்திலிருந்து ஒதுக்கி வைக்கக் கூடும். திருமண பந்தம் இவருக்கு ஏற்புடையது அல்ல. குரு 7ஆம் அதிபதியான புதனைப் பார்ப்பதால் ஜாதகருக்கு மனைவியுடன் சேர்ந்து வாழத்தான் ஆசை இருக்கிறது. ஆனால் அதே இலக்கினாதிபதி குரு தாயாருக்கும் அதிபதியாவதால் வக்ரத்தின் காரணமாக வாழ முடிவெடுக்க முடியவில்லை.

விதி 9:- சுக்கிரனும் சந்திரனும் எதிர் எதிராக பார்த்துக் கொண்டால் மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒருவருக்கொருவர் ஆகாது போகும்.

விதி 10:- சுக்கிரனும் சந்திரனும் பார்த்துக் கொண்டால்

ஜாதகருக்கு இரண்டாம் திருமண யோகத்தை தரவல்லதாக அமைகிறது. இந்த ஜாதகருக்கு இப்படி அமைந்து இருப்பதால் இந்த திருமணம் முறிவிற்கு வரக்கூடும்.



காவல் நிலையத்தில் காவலர்கள் பையன் தன்னுடைய தாயாரை (தந்தை இல்லையென்பதால்) காபாற்றியே ஆக வேண்டும் என்று சொல்லி விட, இப்போது மாட்டுபெண் தான் தன்னுடைய நகையை (அடமானம் வைத்து வாங்கிய தொலைகாட்சி பெட்டி வீட்டிலிருக்கிறது) மீட்டு தந்தால் விடுதலை பத்திரத்தில் கையெழுத்து போட்டு தருவதாக காவல் நிலையத்தில் சொல்லி இருக்கிறார். சமாதானப் பேச்சுகள் பலிக்காத நிலையில் இப்போது இந்த பையனின் தாயார் என்னிடம் வந்து உட்கார்ந்து இருந்தார்.

இதில் பெரிய சோகம் என்னவென்றால், இந்த பொருத்தம் பிரமாதம் என்று எழுதிக் கொடுத்த ஜோதிடரைப் போய் இந்த பெண்மணி சண்டைப் போட்டுவிட்டு வந்திருக்கிறார். திருமணப் பொருத்தம் பார்த்து வக்கனையாக எழுதிக் கொடுத்து விட்டு இப்போதும் தான் எழுதியது தவறல்ல என்று வாதிட்டுக் கொண்டு இருக்கும் அந்த ஜோதிடனுக்குத் தான் இந்த துக்கத்திற்குண்டான பாவங்கள் அனைத்தும் போய் சேரும் என்பதில் எள்ளவும் சந்தேகம் வேண்டாம். ஜோதிடம் படித்து வருவது வேறு. அனுபவம் வேறு. 10 பொருத்தங்கள் சந்திரனுக்கும் சந்திரனுக்கும் ஒப்பிட்டு பார்ப்பது என்பது முடிவாகக் கொண்டு திருமணம் முடிப்பது சரியல்ல. ஜாதக ரீதியாக பொருத்தங்கள் பார்க்கப்பட வேண்டும். இல்லையென்றால் இது போன்ற பிரிவினைகளைத் தவிர்க்க இயலாமல் போய்விடும் என்பது உறுதி.

ஜோதிடம் தெரியாமல் அரைகுறையாக பொருத்தங்கள் பார்த்து அதையும் சரியாக செய்யாமல் பெண்ணின் ருதுவான நேரத்தை எடுத்துக் கொண்டு மற்றொருவரின் பிறந்த ஜாதகத்தை ஒப்பிட்டு பலனை சொல்லும் முறை சரியற்றது என்பது எனது கருத்து. பெண்ணின் பிறந்த தேதி இப்பொதெல்லாம் எல்லா மாநகராட்சியில் கிடைக்கிறது. அல்லது பள்ளியில் படிக்கும் போது பிறந்த தேதி கொடுக்கப்பட்டிருக்கும். பெண்ணின் பிறந்த நட்சத்திரத்தை கூட தேடிப் பார்க்காமல் ருதுவான தேதி மற்றும் நேரத்தை கொண்டு பார்க்கும் இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு ஜாதகம் எழுதாமல் வேண்டுமென்றே ருதுவான நாளின் நட்சத்திரத்தை கொண்டு பார்க்கும் கற்கால முறை உடனடியாக ஒழிக்கபட வேண்டியது நமது கடமையாகும்.

இன்னும் கதையின் கிளைமேக்ஸ் காட்சிக்கு வரவில்லை.

விதி 11:- உபய இலக்கினக்காரர்கள் யாருக்கும் மண வாழ்க்கை சரியாக அமையாது. காரணம் குருவிற்கு புதன் எதிரியாகும். 4 வீடுகளுக்கும் இது பொருந்தும்.

விதி 12:- உபய இலக்கினக் காரர்களுக்கு இரண்டு பெயர்கள் இருப்பதும் சகஜம். சரியாக இருக்கும். சோதித்து பாருங்கள். அல்லது பெயரில் இரண்டு பெயர் அமைந்து விடும் - ராமகிருஷ்ணன், ராதாகிருஷணன், எனக்கு சரவணன் மற்றும் பழனி மற்றும் சிக்கல் சிங்காரவேலன், இத்தியாதி. இந்த ஜாதகனுக்கும் மற்றொரு பெயர் இருக்கிறதாம். அது பெரிய விஷயமில்லை.

நான் சொன்ன ஆலோசனை, தாயாரான நீங்கள் பையனை பார்ப்பதும், பேரக் குழந்தையை பார்ப்பதும் வேண்டாம். உங்கள் பையனை போய் தனிக்குடித்தனம் இருக்கச் சொல்லுங்கள். அதற்கும் ஒத்து வராத நிலையில் சட்டப்படி பிரிவிற்கு ஏற்பாடு செய்து விட்டு பிறகு திருமணத்தை பற்றி பேசலாம் என்றேன்.

அதற்கு அந்த தாயார் சொன்னது பையன் சேர்ந்து வாழ ஒப்புக் கொள்கிறான். ஆனால் அம்மா வேண்டும் என்கிறான். அந்த பெண்ணுக்கு நான் வரக்கூடாது. என் மூஞ்சியிலே மூழிக்கக் கூடாது. அதற்காகத் தான் வந்து இருக்கிறேன். என் மருமகளுடைய நகையை அடகு கடையிலிருந்து மீட்டு தந்து விடப் போகிறேன். விடுதலை பத்திரத்தில் காவல் நிலையத்தில் வைத்து வாங்கி விடுகிறேன்.

என் பையனுக்கு இன்னொரு பெயர் - சரவணன், உங்க பெயர் தான். (சொல்லி விட்டு அந்த தாயார் வெட்கப்பட்டது எனக்கு ஆச்சிரியமாக இருந்தது) எங்க தெருவில் குடியிருக்கும் ஒரு பெண் என் பையனிடம் வந்து உன் பெயர் சரவணன் என்று இருப்பதால் உன்னை கட்டிக்க ஆசை படுகிறேன். இரண்டாம் தாரமானாலும் பரவாயில்லை. என்று சொல்லி இருக்கிறாள். சாமி, நீங்கத்தான் இதுக்கு வழி சொல்லனும்.

எனக்கு இத்தனைக்கும் காரணமான ஜோதிடனை நொந்துக் கொள்ளுவதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. முறையாக ஜோதிடம் சொல்லாமல், இப்படி ஒரு பெண்ணின் வாழ்க்கை சீரழிய காரணமாக இருந்தால் அத்துனை பாவமும் அந்த தவறான பொருத்தங்கள் எழுதிக் கொடுத்த ஜோதிடரையேச் சாரும். கணவனைப் பிரிந்து கைக் குழந்தையுடன் தவறான உபதேசங்கள் காரணமாக (அது அந்த பெண்ணின் தாயார், தந்தை, சகோதரம் - யாராக இருந்தாலும்) பிரிந்தாலும், இந்த சமுதாயத்தில் மீதி இருக்கும் நாட்களை தள்ள வேண்டியது பற்றி யோசிக்காத நிலையிலிருக்கும் அந்த பெண்ணை நினைத்து உண்மையிலேயே வருத்தம் அதிகமாயிற்று. ஆனால் விதி..



உ
ஓம் ஆதி சத்குரு துணை
நர்பவி

# ஆதிசக்தி வராஹி ஆன்மீக மையம் வழங்கும்



## மக்கள் நலவாழ்வு பயிற்சி

1. சகல செளபாக்கியம் உண்டாக ஆதி நாராயணி பூஜை
2. கையில் பண புழக்கம் அதிகரிக்க (மேலே நாடுகளில் கடைபிடித்து வரும் தாந்ரீக முறை).
3. அதிர்ஷ்ட லெட்சுமி வீட்டில் வர, வாசம் செய்ய.
4. வீட்டில் வருமானம் குறைந்தால் விருட்சத்தின் மூலம் சரி செய்யும் முறை.
5. சர்வ மங்களம் உண்டாக எளிய மகாலக்ஷ்மி சுலோகம்.
6. பணப்பெட்டியில் பணம் பெருக வழிமுறை. 7. வற்றாத செல்வம் சேர வழிமுறை
8. கடன், சத்ரு நோய், பீடை, ஆயுள் பங்கம் தீர.
9. விவாகத்தடை, கோர்ட்டு, கடன் தொல்லை, சர்வ பீடை அகல.
10. வீடு கடை, வியாபார ஸ்தலத்தில் தன–மன–ஜன ஆகர்ஸனம் உண்டாக.
11. வீட்டில் தொழில் ஸ்தாபனத்தில் கண்திருஷ்டி போக,
12. பதவி உயர்வுத்தடை, புத்திரதடை, கணவன் மனைவி சண்டை, எப்பவும் தூக்கம் தீர எளிய பரிகார முறை.
13. தேங்காய் மூலம் துஷ்ட பந்தனம் செய்யும் முறை.
14. வீட்டில் வருமானம் குறைந்தால் விருட்சத்தின் மூலம் சரி செய்யும் முறை.
15. மூலிகை மூலம் நம் துன்பத்தை தீர்க்கும் முறை. 16. கடன் தீர. 17. தரித்திரம் நீங்க வழி முறை.
18. சகல வாய்வு ரோகத்திற்கு மந்திரம். 19. ஆண்மை வீரியம் உண்டாக.
20. திக்கு வாய் சரியாக. 21. பெண்களின் மார்பகம் பெரிதாக.
22. சகல தடைகள் நீங்க விநாயகர் தடை வெட்டு மந்திரம்.
23. துஷ்ட சக்தி, மாந்ரீக பாதிப்பு தீர பூசனிக்காய் தீர்வு.
24. ஏவல் தோஷம் தீர எலுமிச்சம் பழ தீர்வு.
25. தீராத இருமலுக்கு 26. ஆண்மை பிரச்சனைக்கு தீர்வு
27. வசிய மருந்து முறிவுக்கு எளிய சிகிச்சை 28. சத்துரு சினேகமாக மந்திரம் யந்திரம்.
29. தாது விருத்தியும், ஆரோக்கிய உடலுரவுக்கு வழி முறை. 30. தொடர்ச்சியான தும்மல் சளி ரோகம் தீர
31. முல்லைப்பூ மூலம் நோய்கள் தீர்க்கும் முறை. 32. பெண்கள் முகத்திலுள்ள முடிகளை அகற்ற.
33. கட்டிகள், சிரங்குகளுக்கு மந்திரிக்க.
34. வயிற்று வலி உடன் தீர. 35. பேய் பில்லி சூனியம் நீங்க.
36. ராஜ வசியம் உண்டாக எளிய மந்திரம். 37. சகல வியாதிகளும் தீர எளிய மந்திரம்.
38. தாய்ப்பால் பெருக. 39. ஒற்றைத் தலைவலி நீங்க 40. உடல் வலி தீர.
41. கணவன் மனைவி ஒற்றுமைக்கு மந்திரம். 42. கடன் தோஷம் நீங்க பரிகாரம்.
43. வர வேண்டிய பொருள், கொடுத்த கடன் வர. 44. கொடுக்கல் வாங்கள் செய்யக் கூடாத நாள் விவரம்.
45. அரசமரத்தினால் ஏற்படும் நன்மைகள். 46. செவ்வாய் தோஷத்தினால் ஏற்படும் உடல் பிரச்சனை தீர.
47. நம் கர்மாவை குறைக்கும் வழிமுறை.
48. வீடு, வியாபார ஸ்தலம் போன்றவற்றில் மற்றவர்கள் விட்ட பெரு மூச்சு நீங்க.
50. ஆண்கள் வாலிபத்தில் செய்ததாது நஷ்டம் சரியாக.

**மற்றும் பல அனுபவ விசயம் பயிற்ச்சியில் கூறப்படும்.**

**பயிற்சி கட்டணம் ₹1300/-**

**(பயிற்சியில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்)**

### இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுபவை 8

1. சர்ப்ப தோஷம், தாரதோஷம், திருமணத்தடை, கோர்ட்டு வழக்கு, கல்வித்தடை, அரசுதொல்லை, கெட்டகனவு, படபடப்பு, நடுக்கம், பயம், சகலதோஷ நிவர்த்தி செய்யும் மகா நவசக்தி அஞ்சனம் 1 இலவசம்.
2. பனப்பெட்டியில் பணம் பெருகச் செய்யும். அபூர்வ பரன் கோடக வேர் 1 இலவசம்.
3. வீட்டில் மங்களம் உண்டாக்கும் அபூர்வ கல்பிரம்மம் கிழங்கு 1 இலவசம்
4. வற்றாத செல்வத்தையும், அதிர்ஸ்டத்தையும் யோகத்தையும் தரும், சூரிய புஷ்பாங்கமூலிகை தாயத்து 1 இலவசம்
5. பயிற்ச்சி கையேடு, மதிய உணவு, தேனீர் இலவசம்.

**பயிற்சி நடைபெறும் இடங்கள்**

| | |
|---|---|
| **கோபால் திருமண மண்டபம்** | **M.P.C. லாசாலே மீட்டிங் ஹால்** |
| வடக்கு வீதி, வடபழனி முருகன் கோவில், சென்னை. | 2-வது தளம், 52 TB ரோடு, ESI ஆஸ்பத்திரி எதிரில் மாபாளையம், மதுரை - 625 016 |
| **பயிற்சி நாள் : 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை** | **பயிற்சி நாள் : 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை** |
| **பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை** | **பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை** |

பயிற்சி ஆசிரியர் : வராஹி உபாசகர், மாந்ரீக, தாந்ரீக ரத்தின சிந்தாமணி, ஆன்மீக ஆசான், ரசவாத வைத்தியர்
வாசியோகி, தவத்திரு. **முருகன் அண்ணாச்சி சுவாமி ஜி**

(3 தலைமுறை ஆன்மீகம், மருத்துவம், மாந்ரீகம், தாந்ரீகம், ரசவாதம் அனுபவம்) 7/632, குமாரசாமி ராஜா தெரு, நாகமலை புதுக்கோட்டை, மதுரை - 19

**முன்பதிவிற்கு : 8489140765, 9842686840, 9842686940**



# தவறான பாதைக்கு தடம் மாறிடும் பெண்கள்

## தரம் கெட்ட நிலைகளை குறி காட்டிடும் கிரகங்கள்



ஜோதிட ஆராய்ச்சியாளர்
வேப்பலோடை
K. விஸ்வநாத்
செல்: 97158 55358

பெண்கள் நாட்டின் கண்கள். ஒரு பெண் உயர்வு பெற்றால் அந்த நாடே உயர்வு பெறும். என்று பெண்களை நம் நாடு போற்றி பாராட்டிக் கொண்டுதான் வருகிறது. அதனால்தான் நமது நாட்டை தாய்நாடு என்றும், இந்திய தேசத்தை ஒரு பெண்ணாகவே பாவித்தும் மகிழ்கிறோம். மேலும் நாம் வணங்கும் கடவுள்களிலும் பெண் தெய்வங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இத்தனை பெண் உயர்வு எண்ணம் கொண்ட நம் நாட்டில் இப்பொழுது கலாச்சார மாற்றம் நடந்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டு கலாச்சாரத்துக்கு அனைத்து நாடுகளும் மாறிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதுவும் இந்திய கலாச்சாரத்தை உலகமே பாராட்டி போற்றிக் கொண்டிருக்கும், இந்த காலத்தில் இந்திய நாட்டில் கலாச்சார மாற்றம் நடந்துக் கொண்டிருக்கிறது.

இந்த கலாச்சார மாற்றத்தால், பெண்களில் பலபேர், கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகி தன்னையும் தான் சார்ந்த குடும்பத்தையும் சீரழித்து சின்னா பின்னப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குடும்ப கவுரவத்தை குழி தோண்டி புதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் பவித்ரா என்ற பெண் தன் கணவனை விட்டு விலகி வேறொரு ஆணுடன் சென்றதால், ஆம்பூரில் ஊர்கலவரம் ஏற்பட்டு அந்த ஆணின் உயிர் போன கதை நாம் அறிந்ததுதான் அந்த பெண்ணை நீதிபதிகள், வன்மையாக கண்டித்திருப்பதும் நாம் அனைவரும் அறிந்ததுதான்..

கோவை மாவட்டத்தின் தனியார் பள்ளி மாணவி, போதையில் இருந்ததும், தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறோம். சேலம் மாவட்டத்தில், பள்ளி மாணவிகள் செல்போனில் ஆபாச படம் பார்த்துக் கொண்டிருந்ததை, தினசரி பத்திரிக்கைகள், படம் போட்டு காட்டி இருக்கிறது. இதுபோல் இன்னும் எத்தனையோ, செய்திகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நாம் பார்க்கும் நிகழ்வுகள் தற்போதைய செய்திகள் ஆகும்.

பொதுவாக ஓர் ஆண் தவறு செய்தால் அதை அவன் வெளிப்படையாக செய்து விடுவதால் அந்த தவறை குடும்பத்தார் அல்லது உறவினர்கள் அல்லது இந்த சமூகம் கண்டித்துவிடுவதால் அல்லது தண்டித்துவிடுவதால், ஆண் திருந்திவிட அதிக வாய்ப்பிருக்கிறது. ஆனால் பெண் தான் செய்யும் தவறை மறைத்து மறைத்து செய்வதினால், ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய், அந்த பொய்யை மறைக்க இன்னொரு பொய் என்பதைப் போல, ஒரு தவறை மறைக்க இன்னொரு தவறு, அந்த தவறை மறைக்க இன்னொரு தவறு என்று தான் செய்யும் தவறுகளிலிருந்து மீளமுடியாத நிலை, தவறு செய்யும் பெண்ணுக்கு ஏற்பட்டு விடுகிறது. கடைசியில் அனைத்து தவறுகளும்,



வெளியில் தெரியும்பொழுது, குடும்ப கௌரவம் மரியாதை அனைத்தும் கெட்டு அந்த குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தலைக் குனிவை ஏற்படுத்திவிடுகிறது. ஆணின் தவறு, கண்டிக்க, அல்லது தண்டிக்கப்பட்டுவிடுவதால் அந்த தவறு அவனை மட்டுமே பாதிக்கிறது. ஆனால் பெண் செய்யும் தவறு குடும்பத்தையே பாதிக்கிறது.

இது தவிர கிராமங்களில் ஒரு சொல்லடை உண்டு, ஆணின் இன்பம் அவனளவு. பெண்ணின் இன்பம் பேரளவு என்று. ஓர் அண் எத்தனை பெண்களுடன் உறவு கொண்டாலும் அவனால் ஒரே அளவிலான இன்பத்தை மட்டுமே அனுபவிக்க முடியும். ஆனால் அதுவே ஒரு பெண் பல ஆண்களுடன் உறவு கொண்டால், அந்த பெண்ணானவள் பலவிதமான இன்பங்களை கண்டுவிடுகிறாள். ஒவ்வொரு ஆணிடமும் அவள் அனுபவிக்கும் இன்பத்தில் மாற்றங்கள் இருப்பதை அவள் உணரவே செய்வாள். இது போன்ற பலவித இன்பங்களை அனுபவித்த பெண்ணால் அதை விட்டு மீண்டு வருவது மிகவும் கடினமானதாகும். அதனால்தான் ருசிகண்ட பூனை சும்மா இருக்காது என்ற பழமொழி உருவானது. ருசி தெரியாத வரை யாரும் எதையும் விரும்புவதில்லை.

பவித்ரா என்ற பெண்ணும் வேறொரு ஆணுடன் தொடர்பு ஏற்பட்டதால், இன்னும் வேறு ஆண்களின் தொடர்பை எதிர்பார்த்து கணவனை விட்டு பிரிய நினைக்கிறாள்.

இந்த காரணத்தினால்தான் கணவனைத் தவிர வேறு ஆண்களை, பெண்கள் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டார்கள். ஆனால் பெண்கள் அதைத்தான் அடக்குமுறை என்கிறார்கள். பண்பாடு புரியாமல் படுகுழியில் வீழ்கிறார்கள். சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் தங்கள் இஷ்டம் போல் சிறகடித்து பறக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்றைய ஆண், பெண் இருவரும் இணைந்து செயல்படும் சூழ்நிலையில் சலன மனம் படைத்த பெண்கள் பலவித கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகிவிடும் சூழல் ஏற்பட்டுவிட்டது. இதிலும் ஆண்கள் தவறு செய்ய பணம் தேவைப்படுகிறது. ஆனால் பெண்கள் தவறு செய்ய பணமே தேவை இல்லை என்ற நிலை இருக்கிறது. அதனால் பள்ளியில் படிக்கும் பெண்கள் கூட பலவித கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகி விடுகிறார்கள். அதனால்தான், 7ஆம் வகுப்பு மாணவிகளே கூட ஆபாச படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். போதை பொருளையும், பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரியில் படிக்கும் பெண்களை பற்றி கேட்கவே வேண்டாம். அவர்கள் என்ன செய்ய நினைக்கிறார்களோ அதை நிச்சயமாக செய்து விடுகிறார்கள். இதிலும் வேலைக்கு சென்று சுயவருமானம் பெறும் பெண்களில் அதிகம் பேர், நிச்சயமாக தங்கள் வாழ்க்கையை தாங்கள் நினைத்த வண்ணமே அமைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். தங்கள் நினைத்த வண்ணம், பெண்கள் நடந்துக் கொள்ள முடிகிற சூழ்நிலைகள் உள்ளதால் கண்டிப்புடன் நடந்து கொள்ளாத பெற்றோர்களை உடைய பெண்களில் சலன மனம் படைத்த பெண்களில் சிலர் தவறான பழக்கங்களில் ஈடுபட வாய்ப்புகள் மிகவும் அதிகமாகவே இருக்கிறது என்பதை பெற்றோர்கள் நிச்சயம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால் குடும்பத்தின் கௌரவம் பெண்ணின் நடவடிக்கையில் தான் உள்ளது.

நாட்டு நடப்புகள் இதுபோல் இருந்தாலும், தீய செயல்களில் ஈடுபடும் பெண்களை, ஜாதக ரீதியாக எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பதை நாம் பார்ப்போம்.

பெண்கள் ஜாதகத்தில் நாம் சந்திரனையே மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டும் மனதுகாரகன்என்று சந்திரனை நாம் பொதுவாக அழைத்தாலும் அந்த மனதுகாரகன் சந்திரனே பெண் கிரகமாகவும் இருக்கிறார்.

மனதுகாரகனே பெண் கிரகமாக இருப்பதால்தான் பெண்களில் அதிகம்பேர் மிகவும் இளகிய மனதுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பெண்கள் ஜாதகத்தில் மனதுகாரகன் சந்திரனை 8ஆம் அதிபதி இணைந்து விடுவது அல்லது சந்திரனை 8ஆம் அதிபதிகள் இருவர் பார்த்துவிடுவது, அல்லது 8ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தான அதிபதி சந்திரனை இணைய ஒரு 8ஆம் அதிபதி சந்திரனை பார்த்து விடுவது, அந்த பெண்ணை சலன மனம் கொண்டவராக மாற்றிவிடுகிறது. இந்த அமைப்பில் இருக்கும் ச்திதிரனை 8ஆம் அதிபதிகளால் சம்மந்தப்பட்ட இராகு கேது இணைந்து விடுவது அல்லது பார்த்து விடுவதுதான் அந்த பெண்ணை தீய செயல்களில் ஈடுபடவைக்கிறது.

இராகு கேது சம்மந்தப்படுவதால் சந்திரனை எந்த வகையில் பாதிக்கும் என்பதை பார்ப்போம்.

இராகு கேதுக்கள் நிழல் கிரகங்கள். அவர்கள் நிழல் கிரகமாக இருப்பதால் மனிதரிடம் உள் மன ரீதியான அல்லது ஆழ் மன ரீதியான தாக்கங்களை ஏற்படுத்துகிறார்கள்.

நல்ல கிரகங்கள் சம்மந்தம் பெறும் கேது பகவான், ஆன்மிக ரீதியாக உள்மன அல்லது ஆழ் மன நுணுக்கங்களை ஜாதகருக்கு ஏற்படுத்தி அதன் மூலம் மிகப்பெரிய ஞானிகளை கேது பகவான்

உருவாக்குகிறார். நல்ல கிரகங்கள் சம்மந்தம் பெற்ற இராகு பகவான் ஆழ்மன, அல்லது உள்மன நுண்ணிய நுணுக்கங்களை தொழில் ரீதியாக வெளிபடுத்தி அந்த ஜாதகரை தொழில் துறையில் ஜொலிக்கச் செய்து, மிகப்பெரிய மேதாவியாக்கி பணம் கொழிக்கச் செய்வார். அதனால்தான் தங்கள் துறையில் மிகப்பெரிய அளவில் இருக்கும் ஜாதகர்களிடம் ஒரு வித்தியாசமான தனித்திறமை இருப்பதை அனைவரும் உணர முடியும். இது எப்படி சாத்தியம் என்று அந்த தனித்திறமை அனைவரையும் பிரமிக்க வைக்கும். அந்த நுண்ணிய நுணுக்கமான அதுவரை யாருமே அறிந்திராத விஷயத்தை இராகு தான் ஜாதகருக்கு கொடுக்கிறார்.

அதனால் தான், மற்ற கிரகங்களை நன்மை செய்யும் என்று பொதுவாக ஜோதிட நூல்கள் குறிப்பிடுகிறது. ஆனால் இராகுவைப் பற்றி சொல்லும் போது மட்டும் மிகப்பெரிய அளவில் சிறப்பாக செயல்படவைப்பார் என்று அனைத்து ஜோதிட நூல்களும் கூறுகிறது.

இதுதவிர நல்ல கிரகங்களுடன் பாவிகளும் இராகு கேதுவுடன் இணைந்தால் அந்த ஜாதகர்கள் தங்கள் துறையில் அதுவரை யாருமே செய்திராத கிரிமினல் வேலைகளை செய்து பண மழையில் நனைகிறார்கள். பணம் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. தண்டனையும் பெறுகிறார்கள்.

இதுபோல் ஆழ்மன அல்லது உள்மன நிகழ்வுகளை குறிப்பிடும் இராகு கேதுக்களை 8ஆம் அதிபதிகள் சம்மந்தப்படுவது இராகு கேதுக்களை தீய வழியில் செயல்பட வைத்துவிடுகிறது.

இதிலும் இராகு கேதுவை 8ஆம் அதிபதி இணைந்து விடுவது அல்லது 8ஆம் அதிபதிகள் இருவரும் இராகு கேதுவை பார்த்துவிடுவது இராகு கேதுவை முழுவதுமாக கெட்ட வழியில் செயல்பட வைத்துவிடுகிறது.

அதனால்தான் பெண்கள் ஜாதகத்தில் நாம் ஏற்கனவே பார்த்திருக்கும் அமைப்பில் சந்திரனை 8ஆம் அதிபதி சம்மந்தப்பட்டு ஜாதகிக்கு சலன மனதை ஏற்படுத்திவிட, அந்த சந்திரனை 8ஆம் அதிபதியால் சம்மந்தப்பட்ட இராகு கேது சம்மந்தப்பட்டுவிடுவது அந்த பெண்களை மறைமுகமாக தவறு செய்ய வைத்துவிடுகிறது.

ஜாதகியின் மறைமுகமான செயல்பாடுகளைத்தான் இந்த அமைப்புகள் குறிப்பிடும். அவர்களின் வெளிப்படையான பழக்கங்களை இலக்கினம் மற்றும் இலக்கின அதிபதியன் நிலைகளை வைத்து கணக்கிட வேண்டும்

இந்த ஜாதகங்கள் இரண்டையும் கவனியுங்கள் இரண்டு ஜாதகத்திலும் இராசிக்கு 8ஆம் அதிபதியாக சந்திரனே இருக்கிறார். அதன்படி இராசிக்கும் 8ஆம் அதிபதி இராசியில் அமர்ந்துவிட்டார் என்ற அமைப்பு வந்துவிடுகிறது. மேலும் இராகு கேதுவும்

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | கேது சனி |
| | | | |
| குரு | | | |
| சுக் ராகு சந் | புத | சூரி | ல |

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | ராகு |
| செவ் குரு | | | ல |
| | | | |
| சந் கேது | | சனி | |

இராசியில் அமர்ந்துவிட்டார்கள். அதன்படி இந்த பெண் ஜாதகத்தில், 8ஆம் அதிபதி இராசியில் அமர்ந்துவிட்டார். மேலும் 8ஆம் அதிபதி இராகு கேதுவை இணைய 8ஆம் அதிபதியை இணைந்த இராகு கேது இராசியில் அமர்ந்துவிட்டார். இந்த அமைப்புகள் தான் ஜாதகிக்கு தீய பழக்கங்களை ஏற்படுத்தியது.

இந்த ஜாதகத்தை கவனியுங்கள் இலக்கின 8ஆம் அதிபதி குரு இராசியில் அமர்ந்திருக்கிறார். கூடவே இராகு கேதுவும் இணைந்துவிட்டார். இராசி தவிர இலக்கினத்தையும் சேர்த்து, 8 ஆம் அதிபதியும் இராகு கேதுவும் சம்மந்தப்பட்டு விட்டதால் இந்த ஜாதகி சிறை செல்லவும் வேண்டியதாகிவிட்டது.


| | | | |
|---|---|---|---|
| | | ல கேது | சனி |
| | | | |
| | | | |
| செவ் | சூரி சந் குரு ராகு | புத | சுக் |

இந்த ஜாதகத்தைப் பாருங்கள். இலக்கினத்திற்கு 7இல் குரு ஆட்சி. இராசிக்கு 7இல் சுக்கிரன் ஆட்சி. என்று சுபத்தன்மையுடன் ஜாதகம் தெரிந்தாலும், இந்த ஜாதகம் சிறை சென்ற பெண்ணின் ஜாதகம் தான் இராசிக்கு 8ஆம் அதிபதி புதன் சந்திரனை நேர் எதிராக பார்க்க இலக்கின 8ஆம் அதிபதி செவ்வாய் தன்னுடன் இணைந்த இராகு மூலம் சந்திரனை பார்த்துவிட்டார். 8ஆம் அதிபதிகள் இருவர் இராசியை பார்த்து விட்டார்கள். மேலும் இராகு கேது 8ஆம் அதிபதி செவ்வாயுடன் இணைந்து இராசியை பார்த்துவிட்டார்கள். இந்த அமைப்புகள் ஜாதகியை கெட்ட செயல்களில் ஈடுபட வைத்தது தண்டனையும் பெற்று தந்தது.


| | | | |
|---|---|---|---|
| குரு கேது | | சூரி புத சுக் | |
| | | | |
| | | | |
| | சந் | சனி | ல ராகு செவ் |

8ஆம் அதிபதி இராசியில் அமராமல் இருக்கும் ஜாதகங்களில் இராசியில் சுபகிரகம் அமர்ந்திருந்தும் 8ஆம் அதிபதி இராசியை பார்ப்பதும் அந்த பெண்களை கெட்ட செயல்களில் ஈடுபட வைப்பதில்லை. இதையும் நுணுக்கமாக கவனிக்க வேண்டும்.

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை



# அற்புத வசிய மூலிகைகள்



## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட்காலம் வரையில் பலன் பயன் அளிக்கக்கூடியது.**

**1. தெய்வீக மூலிகை ரூ.15,000/-** உங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வம் எது வேண்டுமோ இந்த மூலிகையை சிவப்பு பட்டுத்துணியில் சுற்றி மரப்பலகை மேல் வைத்து தினமும் தெய்வத்தின் யந்திரம் வைத்து அதற்குண்டான மந்திரங்கள் தினமும் காலை, மாலை முழு நம்பிக்கையுடன் ஊதுவத்தி காண்பித்து வந்தால் அந்த தெய்வம் உங்களுக்கு காட்சி தந்து உங்களுடனே இருந்து உங்களது எல்லாக் காரியத்தையும் வெற்றி அடையச் செய்யும்.

**2. வெள்ளை விஷ்ணுகிராந்தி மூலிகை தாயத்து ரூ.10,000/-** சகல ஐஸ்வர்யமும், சகல வசியம், எடுத்த காரியம் அனைத்து ஜெபம் உண்டாக்கி கடைசி காலம் வரையில் சகல செல்வாக்கு, செல்வம் உண்டாக்கும். தொழில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை.

**3. சகலரும் வசியமாகும் தொட்டாற்வாடி மூலிகை தாயத்து ரூ.5000/-** ஆண், பெண் வசியமாக்கும் மிகச்சிறந்த மூலிகை

**4. பகைவரையும் நண்பனாக்கும் சங்கிலிக்கொடி மூலிகை தாயத்து ரூ.5000/-** உங்களது பகைவர்கள, எதிரிகள், உங்கள் மேல் பாசம் உண்டாக்கி நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள்.

**5. அதிர்ஷ்ட ரக்ஷிணி மூலிகை தாயத்து ரூ.5000/-** திடீர் காரியசித்தி உண்டாக்கும் புத்ரதோஷம், அனைத்து துன்பங்களையும் விரட்டி அடிக்கும் வல்லமை உள்ளது.

**6. செய்வினை, தீயசக்தி குடும்பத்தில் ஒற்றுமை குடும்பத்தில் சந்தோஷம் உண்டாக்கும் மூலிகை பவுடர் ரூ.10,000/-** இந்த மூலிகை பவுடரை பூஜையில் சாம்பிராணி போல் தினமும் 2 வேளை மனமுறுக போடவும்.

**7. கணவன் - மனைவி ஒற்றுமை மூலிகைப் பவுடர் ரூ.10,000/-** கணவன் - மனைவி ஒற்றுமை இல்லாமை, கணவன் - மனைவி பிரிந்து கோர்ட், கேஸ் விவகாரம் முற்றிலும் நீங்கும். இருவரும் சேர்ந்து சந்தோஷமாக இருப்பீர்கள்.

**8. ஏறு சிங்கி ரூ.10,000/-** 21 இன்ச் அளவுள்ளதில் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணி சுற்றி உங்களது பூஜையில் மரப்பலகையின் மேல் வைத்து ஊதுவத்தி காண்பித்து மனதார வேண்டினால் நலிவடைந்த தொழில், வியாபாரம் மீண்டும் செழிக்கும். கடன் பிரச்சனை நீங்கி சகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

**9. நினைத்ததை நடத்தும் ஸ்ரீபைரவர் யந்திரம் ரூ.7,500/-** தீயசக்தி, செய்வினைகள், காரியத்தடை, அப குணங்கள், பங்காளிகள் பிரச்சனை, வழக்கு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம், எதிர்பார்த்த உத்யோகம், உத்யோக உயர்வு, வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் லாபம் தரும் மகாசக்தி பைரவர் யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டினால் கையினால் எழுதி உங்களது பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். இத்துடன் பைரவர் வழிபாட்டு முறை வழங்கப்படும்.

**10. தொழில் வியாபாரம், பணவரவு சிறக்கும் ஸ்ரீகாமதேனு யந்திரம் ரூ.7,500/-** தொழில் மந்தம், வியாபாரத் தடை, ஊழியர் பிரச்சனை, கடன் தொல்லை அனைத்தும் விலகி எதிர்பார்த்தபடியே தொழில் சிறப்பாக நடக்கும். வியாபாரம் செழிப்பாக மாறும். எதிர்ப்பார்த்தபடியே தொழிலாளர் பிரச்சனை விலகும். கடன் தொல்லைகள் விலகி எதிர்பார்த்த பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் மகாசக்தி ஸ்ரீ காமதேனு யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டில் கையினால் எழுதி உங்கள் பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். ஸ்ரீகாமதேனு வழிபாட்டுமுறை கட்டுரை வழங்கப்படும்.

**11. வசிய அஞ்சனம் ரூ.5,000/-** உங்களது இருபுருவத்திலும் வைத்து தினமும் 21 தடவை "ஓம் ரீம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வலோக வசியமாக ஸ்வாஹா" சொல்லவும். இதனால் ஆண்/பெண் வியாபாரம் வசியம் ஆகும்.

**12. வசிய மருந்து ரூ.2000/-** இந்த மூலிகை பவுடருடன் உங்களது 5 இடத்து அழுக்கு எடுத்து 4 வேளை சாப்பாடு குழம்பு, வருவலில் கலந்து உங்களது பேச்சை கேட்க வேண்டும் என்பவருக்கு கொடுக்கவும். இதனால் கணவன், மனைவி, பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்பார்கள்.

**13. வசிய எண்ணெய் ரூ.5000/** இந்த எண்ணெயுடன் உங்களது ரத்தம் 2 சொட்டு கலந்து ஒரு வாரம் வைத்து இருந்து விரும்பியவருக்கு உச்சந்தலையில் சிறிது 3 தடவை தடவும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் கலந்து விடவும். இந்த எண்ணெய் உபயோகிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமியார், நாத்தனார், எதிரிகள், காலம் முழுவதும்ட உங்களுக்கு வசியமாவார்கள்.

**14. மூலிகைக் கட்டு ரூ.3000/-** இதன் மேல் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணியால் பூஜையில் பலகைமேல் வைப்பதால் தீயசக்திகள, வெளியேறி, செல்வச்செழிப்பு, சுபநிகழ்ச்சிகள், சந்தோஷம், பணவரவு, ஐஸ்வர்யம் பெருகும்.

**15. ஞாபக சக்தி படிப்பில் முன்னேற்றம் மூலிகைப் பவுடர் பாக்கெட் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும். இதனால் படிப்பில் பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**16. செய்வினை, கிரகதோஷம், தீயசக்தி, கண்திருஷ்டி, சூன்யம் நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும்.

17. மூட்டுவலி, மூலிகை தைலம் பாட்டில் ரூ.300/- கை, கால், இடுப்பு, மூட்டுவலி, இரத்தக்கட்டு சுளுக்கு, தொடைவலி, எலும்புமுறிவுக்கு இரவு படுக்கும்போது நன்றாக தேய்த்து உறங்கவும். ஒரே நாளில் பலன் தெரியும்.

**18. ஜன்னி, தலைவலி, சைனஸ், அலர்ஜி நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.1000/-** பவுடரை நல்லெண்ணையுடன் சிறிது கலந்து சூடுபடுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கவும். தேய்த்து மூழ்கியவுடன் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் தூங்கவும்.

**19. வாகன விபத்து ஆபத்து நீக்கும் வெள்ளி மோதிரம் ரூ.3500/-** எதிர்பாராதவிதமாக ஏற்படும் வாகன விபத்து, ஆபத்து மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கும் அபூர்வ வெள்ளி மோதிரம்.

**20. வியாதி, தீயசக்தி விலக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நெய் கலந்து தினமும் பூஜையில் குறைந்தது 48 நாட்கள் தீபமேற்றவும். வியாதிகள் குணமாகி தீய சக்திகள் வெளியேறும்.

**21. அபூர்வ மூலிகைகள் DVD ரூ.1500/-** இதுவரையில் மூலிகைப் புத்தகத்தில் மூலிகையின் பெயர், புகைப்படம் மட்டும் பார்த்து இருப்பீர்கள். அனைத்து அபூர்வ மூலிகைகள், அற்புத மூலிகைகள், சஞ்சீவி மூலிகைகள் மற்றும் புல்லுருவிகள் அனைத்தும் DVD மூலம் காணும் வாய்ப்பு மூலிகைகளின் பயன் மற்றும் பலன், உபயோகிக்கும் முறை தெளிவாகச் சொல்லப்படும். DVD வீட்டில் இருந்தால் மூலிகையின் நல்ல அதிர்வுகள் மூலம் வீடே சுபிட்ஷமாக இருக்கும்.

**22. குபேர கண்ணாடி ரூ.600/-** தினம் காலையிலும், வெளியே செல்லும்போதும் குபேர கண்ணாடியை பார்த்துச் சென்றால் மேலும் குபேர மந்திரத்தை 21 முறைச் சொல்லவும். காரிய ஜெயம், அதிர்ஷ்டம், செல்வம், செல்வாக்கு, பணவரவு உண்டாகும்.

- வசிய மூலிகைகளின் மேல் நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே போன் செய்து விட்டு நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேவையான பொருட்களின் விவரம் தெளிவான விலாசத்துடன் செல் நம்பருடன் "ஞான குரு" என்ற பெயருக்கு மணிஆர்டர் அனுப்பவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டி.டி. அனுப்பவும். பொருட்கள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.
- நம்பிக்கை, இல்லாமல், தேவையில்லாத கேள்வி கேட்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.
- எப்படிப்பட்ட செய்வினை, ஏவல், தொழில் வியாபாரம், கல்வி, உத்யோகம் கணவன், மனைவி பிரச்சனை, விரும்பியவரை மணக்க மற்றும் அனைத்துப்பிரச்சனைக்கும் சித்தர், முறையில் பரிகாரங்கள் உத்திரவாதத்துடன் செய்யப்படும்.




முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

**ஜெயா TV புகழ்' பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு**

**பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்**

**புரசைவாக்கம், சென்னை - 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )**


ஜெயா டி.வி.யில் காலை மலரில் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியைக் காண எனது WEBSITE பார்க்கவும் www.sidharmiracleherbals.com

# முத்தான மூன்றாம் வீட்டு சத்தான முத்துக்கள்



கிருஷ்ணன் இராஜகோபாலன்,
B.A., M.F.M.
பாரம்பரிய ஜோதிடர்
ஆன்மீக ஜோதிட ஆய்வாளர்
செல்: 98404 53792

மூன்று என்ற எண்ணிற்கு அனைத்து எண்களிலேயே முதற்கண் அந்தஸ்த்து பிரபஞ்ச இயக்கத்தை செழுமையாக நடத்துவதற்கு பரந்தாமன் அளித்துள்ளான். இதன் அடிப்படையிலேயே படைத்தல் காத்தல் அழித்தல் என்ற தத்துவத்தை வைத்து திருமணம் புரிந்து இனிய இல்லறத்தை மேற்கொள்ள மணமகன் மூன்று முடிச்சாக மங்கள நாணை அணிவித்து மகிழ்கிறான். முதல் முடிச்சை மனைவியாக மணமகன் அங்கீகாரம் அளிப்பதும் இரண்டாவது முடிச்சை மணமகன் சகோதரி போடுவதன் வாயிலாய் கணவன் வீட்டாரை தன் குடும்பமாக கருதி ஆதரிப்பதற்கும் மூன்றாம் முடிச்சை தன்னை ஈன்ற பிறந்த வீட்டாருக்காக மணமகள் மங்கல நாணை ஏற்றுக் கொள்கிறாள் என்பது வழி வழியாய் வந்த பாரம்பரிய பெருமைக்குரிய தருமமாக அமைந்துள்ளதை அனைவரும் அறிவர். தரும தேவதையான சனீஸ்வரரும் இதனை ஆமோதித்து வாழ்க்கையில் தடம் புரண்டவர்களை மூன்று முறை சந்தர்ப்பம் அளித்து கரையேற்ற முயல்வார். இதனை செம்மையாக வழிப்படுத்தவே கோட்சார இயக்கத்தில் சனீஸ்வரர் 7½ வருட சனியாக 12—1—2 என்ற நிலையில் மூன்று முறை கடந்து சென்று நிலையற்ற வாழ்க்கையின் இரகசியத்தை உணர்ந்திட செய்திடுவார். இந்த மூன்றை அடிப்படையாகக் கொண்டு அதிசூட்சுமமாக நாடி முதற்கொண்டு அனைத்து ஜோதிட மறைகளும் பின்னப்பட்டு தொடர்பை ஏற்படுத்தி வாழ்க்கையில் பிறப்பெடுத்தல் வளர்ந்து ஆளாகுதல் பின்னர் மோட்க்ஷத்திற்கு கரையேறுதல் என்ற வகையில் அனைத்து கிரகங்களின் இயக்கத்தை கட்டுப்படுத்தி பிரபஞ்சம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இனி ஜோதிடத்தில் இந்த மூன்று எவ்விதம் தொடர்பை ஏற்படுத்துகிறது என்பதை விரிவாக காண்போம். எந்த இலக்கினம் என்றாலும் இலக்கினத்தை தொடர்ந்த 3ஆம் வீட்டின் அமைப்பு நன்றாக இயங்கினாலன்றி வாழ்க்கை பாதையில் திறம்பட கடப்பதற்கு எந்த ஜீவன்களாலும் இயலாது. மூன்றுக்கு மூன்றாக பூர்வ புண்ணியம் என்கிற 5ஆம் ஐந்திற்கு மூன்றாக களத்திரம் என்கிற மனைவி பங்குதாரர்கள் என்கிற களத்திர சப்தம் வீடும்.. இதனைத் தொடர்ந்து கள்ததிரத்திற்கு மூன்றான பாக்கியம் என்கிற தருமஸ்தானமான 9ஆம் வீடும் மேலும் மூன்றின் தொடர்பால் வளர்ந்து விருட்க்ஷமாகி புஷ்பம் காய் கனி என பலவகைப் பட்ட பலன்களை வம்சாவளியினர் தொடர்ந்து அனுபவித்திட மேன்மேலும் விருத்தியை பெற்று, 9க்கு 3ஆக வருகிற இலாபம் என்கிற ஆதாயத்தான வீடும் பாதிப்பேதுமின்றி நன்கு செயல்பட. இதுகாறும் ஈட்டிய புண்ணியத்தின் பலனை ஒட்டி தொடர்ந்து வளர்ச்சி நிலையை காணவும் அல்லது அதீத பாபத்தின் வழியில் துணிந்து ஈடுபடும் குடும்பத்தின் சரிவை சந்திக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையை தோற்றுவிக்க ஆதாயத்திற்கு சப்தமமாகவே (Balance - தராசு) பூர்வ புண்ணிய வீடாகி அனைவருக்கும் தெளிவுபடுத்த பின்தொடர்ந்தே வருகின்றது. அதாவது இலாபத்தானத்திற்கு நேர் 7ஆம் வீடு பூர்வ புண்ணியம் என்கிற 5ஆம் வீடு அமைந்து இயக்கத்தை சமப்படுத்துகிறது. புண்ணியம் என்கிற வங்கிக் கணக்கில் பணம் மேலும் மேலும் சேர்க்கையில் இருக்குமேனில் குடும்பம் வளர்ச்சி காணும். இந்நிலையில் மேலும் வளர்ச்சி காணவோ அல்லது தலைமுறை முடிவு பெறவோ அவரவர் மூன்றுக்கு மூன்றான பூர்வ புண்ணியம் சூட்சுமமாக செயல்படுகிறது. இந்நிலையில் பாபங்களை தலைமுறை வம்சாவளியினர் இதயமின்றி சுயநலமே கருத்தில் கொண்டு இயங்கிடின் 3ஆம் வீட்டு நாயகரான செவ்வாயின் துணை கொண்டு சனி மோட்க்ஷத்திற்கு வழி கோலுவார் எனலாம்.

இதனை மையமாகக் கொண்டே நாடியில் 3ஆம் வீட்டிற்குரிய நாயகர் 1—5—9க்குரிய முக்கிய அங்கங்களை தொடர்பு ஏற்படுத்த சூட்சுமமுறையில் அமைப்பினை பெற்று வாழ்க்கை பாதையில் பிறவியை இனிதே கடக்க செயல்படுத்துவார். இந்நிலையில் பாதிப்பேதுமின்றி 1—5—9 ஒருவர் ஜாதகத்தில் அமைப்பினைப் பெற்றிருக்க. 3ஆம் நாயகர் ஒத்துழைப்பை பெற்று வாழ்க்கையில் தடம் புரளாமல் இனிமை காண உயிர்களை பேணுகின்றார் எனலாம்.

இனி சில உதாரண ஜாதகங்களின் வாயிலாய் விரிவாக காண்போம். சுருங்கக் கூறின் கஷ்டமோ நஷ்டமோ துன்பமோ இன்பமோ அமைதியோ போராட்டமோ பிணியோ ஆரோக்கியமோ மாறி மாறி வந்து ஒருவர் வாழ்க்கையில் சூழலையும் அலைகளையும் பேரிரச்சலையும் தோற்றுவித்துக் கொண்டுதான் இருக்கும். இதனை கடந்திட 3ஆம் வீட்டு நாயகன் படும்பாடு சொல்லிமாளாது. சுவாதந்திரியம் பெற்ற ஜீவன் இதனை உணராது தானாகவே எவருடைய தயவுமின்றி செயல்பட்டு வெற்றி சாதனைகளை தன்னுடைய சுய முயற்சியாலேயே பெற்றுள்ளான் என்று இருமாப்புடன் மார்தட்டிக் கொள்வதை நினைத்து என்னவென்று நினைப்பது. காலை வருடும் கடல் அலைகள் போன்ற நிலையில் 3ஆம் வீட்டு நாயகர் செயல்படுவார் என்பதை உணராது இந்த 3ஆம் வீட்டு நாயகர் விதியான சனிக்குட்பட்டு அடுத்த கணமே உண்ணும் உணவே விஷமாக ஆகி சரீரத்தினின்று மார்தட்டும் வீர நாயகரை வெளியேற்றி விட்டது.

### எடுத்துக்காட்டு உலகப்புகழ் டென்னீஸ் வீரர்

*கன்னி இலக்கின 3ஆம் வீட்டு நாயகர் செவ்வாய். இவர் பொதுவாகவே அனைத்து இராசிகளுக்கும் மூன்றிற்குரிய காரகத்தை பெற்றுள்ளவர். இவருடைய ஜாதகத்தில் செவ்வாய் நின்ற வீடு நட்பு வீடான மீனத்தில் அதாவது மூன்றிற்கு 5ஆம் வீடான மீனத்தில் பலத்துடன் விளங்குகிறார். அங்கு நின்ற செவ்வாய் 4ஆம் பார்வையால் சூரியன் சுக்கிரன் மற்றும் புதன் இவர்களை பார்வையிடுகிறார். இத்தன்மையால் பிரபல யோக பலன்கள் சித்திக்கிறது. இந்நிலையில் மூன்றிற்கு மூன்றில் குரு நீச்சமடைந்தாலும் அவரது பார்வை மூன்றிற்கு 7இல் நிற்கும் சனியின் மேல் விழுவதாலும் கன்னி இலக்கினத்திற்கு சனி பூர்வ புண்ணியாதிபதியாகி மூன்றுக்கு மூன்றான பூர்வ புண்ணிய காரகத்தை வகிப்பதாலும் ஜாதகர் டென்னீஸ் விளையாட்டில் உலகப் புகழ் வீரரானார். ஈட்டிய செல்வத்தை பல தரும காரியங்களுக்காகவும் செலவிட புண்ணியத்தையும் அடையப் பெறுகிறார்.*

| | | | |
|---|---|---|---|
| செவ் | | சனி | சூரி சுக் புத கேது |
| | லியாண்டர் ஃபயஸ் 17.6.1963 | | |
| குரு | | | |
| ராகு சந் | | | ல |

### எடுத்துக்காட்டு : 2 இந்தி திரைப்பட முண்ணனி கதாநாயக நடிகர்:

*கன்னி இலக்கினத்தை பின்பற்றி மூன்றில் 3ஆம் வீட்டு நாயகர் செவ்வாயுடன் கன்னி இலக்கின ஜீவன கருமத்தானாதிபதி புதனும் சர்பங்களின் அணைப்பில் நிற்பினும் பாக்கியத்தானாதிபதியான மூன்றிற்கு ஏழுக்குரிய சுக்கிரனை மூன்றுக்கு ஐந்திற்குரிய குரு நேர்பார்வையால் ஒருவரையொருவர் தழுவிட இந்நிலையில் பூர்வ புண்ணிய நாதனான மூன்றிற்கு மூன்றான மகரத்திற்குரிய சனி குருவின் பார்வையை பெற்றுத் துலங்கிட வேறு என்ன வேண்டும் இவருக்கு. புகழ் பெருமை கீர்த்தி தனம். வித்தை அறிவு கலை விளையாட்டு ஆர்வம் போட்டிகள் ஜன வசியம் அரசு ஆதரவு என அனைத்தும் கிடைக்கப்பெற்று செல்வச் சீமானாகவும் கலையுலகில் அரசனாகவும் திகழ்கிறார்.*

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | குரு |
| சனி | ஷாருக்கான் இந்தி திரைப்பட முண்ணனி நடிகர் (மட்டை பந்து போட்டியாளர் ) 02.11.1965 | | |
| சந் | | | |
| சுக் | செவ் புத கேது | சூரி | ல |

### எடுத்துக்காட்டு :3 கல்லூரி விரிவுரையாளர் (ஃப்ரொபஸர்)

*கன்னி இலக்கினாதிபதி புதன் மூன்றிற்கு 5இல் களத்திரத்தில் ஐந்திற்கு மூன்றான பாக்கியத்திற்குரிய சுக்கிரனோடு இணைந்து நின்றிடினும் குரு சுக்கிர பரிவர்த்தனை யோகத்தின் பயனாலும் கள்ததிர பாவத்தை பாதிக்கும் கிரகமான இராஜோகுண சூரியன் நின்று பாதிப்பை தோற்றுவிக்க இயலாத நிலை உருவாகி இராஜயோகத்தை ஏற்படுத்தி சகல சௌபாக்கிய இனங்களைப் பெற்று தந்தை காரகத்திற்கும் எவ்வித பாதிப்பும் நேரிடாமல் வாழ்க்கையில் செவ்வாயின் பார்வை சந்திரன் மேல் விழுவதும் சனியும் செவ்வாயும் சர்பத்தில் இணைந்தாலும் குருவின் பார்வை சர்பத்தில் விழுவதும் அனைத்து கெடுபலன்கள் நீங்கி யோக பலன்களை சித்தியடையச் செய்தது. ஜாதகருக்கு கல்வியில் மேன்மை புகழும் பெருமையும் கீர்த்தியும் நிம்மதியான வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏதுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.*

| | | | |
|---|---|---|---|
| புத சூரி சுக் | | | ராகு செவ் சனி |
| | கல்லூரி விரிவுரையாளர் | | |
| சந் | | | |
| கேது | | குரு | ல |

### எடுத்துக்காட்டு: முந்நிலை ஆடிட்டர்

*விருச்சிக இலக்கினத்தின் 3ஆம் வீட்டு நாயகர் மகர சனீஸ்வரராகி இலக்கினத்திற்கு அட்டமத்தில் நின்றாலும் சந்திரனுக்கு சதுர்த்த கேந்திரத்தில் நின்று சசி யோகத்தை செய்கிறார். கணக்கர் என்றாலே சனீஸ்வரர்தான். இதில் சனீஸ்வரருக்கு நிகரானவர் உலகில் இதுவரை எவருமேயில்லை. இதனால்தான் நல்லது கெட்டதை குறிக்கும் வினைகளை பகுத்தறிந்து அனைத்து ஜீவன்களின் ஆயுட்காலத்தையும் தயவு தாட்க்ஷயமின்றி தண்டனையளிக்கிறார். எவர் கணக்கும் தப்பலாம். அவர் கணக்கு தப்பாது என்பதை சிவனாரும் அறிவர். மூன்றிற்கு ஏழின் களத்திர நாயகரும் ஏழிற்கு மூன்றான கடக சந்திரன் 5இல் நின்றும் 5ஆம் வீட்டு அதிபதி குரு கடகத்தில் உச்சம் பெற்று இராசி பரிவர்த்தனை செய்தும் குருவும் சந்திரனை பார்வை செய்தும் நீச்ச பங்க செவ்வாயுடன் சர்பராஜன் கரி இராகு உடன்இருந்தும் அறிதற்கரிய தன யோகங்களையும் எவ்வித மறைமுக பகையினங்களின் குறுக்கீடு இன்றி தடங்கலில்லா காரிய சித்தியையும் பெற்று திகழ்கிறார். மேலும் இலக்கின சப்தமத்தில் கரும ஜீவனத்தானாதிபதி நின்றிடினும் இராகுவின் பார்வையால் களத்திர தோஷபாதிப்பை ஐந்திற்கு மூன்றில் நின்ற சூரியனால் ஏதும் செய்யவியவில்லை. சகல சௌபாக்கிய இனங்களைப் பெற்று செல்வத்தில் புரளுகிறார். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு ஒன்றும் குறைவில்லை. தந்தை காரகத்திற்குரிய சூரியனால் தந்தையின் ஆயுசுக்கும் ஏதும் குந்தகம் விளைவிக்க முடியவில்லை.*

| | | | |
|---|---|---|---|
| சந் | சுக் புத | சூரி | சனி |
| | கணக்கு தணிக்கையாளர் (ஆடிட்டர்) | | குரு ராகு செவ் |
| கேது | | | |
| | ல | | |

### எடுத்துக்காட்டு: 5 சுதந்திர இந்தியாவின் முதல் குடிமகன் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

விருச்சிக இலக்கினத்தில் பிறப்பெடுத்த இந்த

ஜாதகருக்கு 3ஆம் வீட்டு நாயகர் சனீஸ்வரர் இவர் வக்கர நிலையில் நீச்ச பங்கமடைந்தும் யோகாதிபதி குருவுடன் இராசி பரிவர்த்தனை செய்கிறார். சண்டாள யோகமே எனினும் தேவையற்ற மூட நம்பிக்கைக்கு ஆளாகாமல் பகுத்தறிவு ஜீவனாக இவர் செயல்பட்டார் என்பதை இவரது வாழ்க்கை வரலாறு நன்கு உணர்த்தும். உயர் குலத்தில் பிறப்பெடுத்தாலும் பாரதியின் கருத்துக்களுக்கு உட்பட்டு இவர் வாழ்ந்து காட்டினார். தன் மகளை தேசப் பிதா காந்தியின் மகனுக்கு திருமணம் செய்து வைத்தார். புரட்சிகரமான முற்போக்கு சிந்தனைவாதி இருப்பினும் மிகுந்த தெய்வ பக்தி உள்ளவர். குழந்தைகளுக்கு நல்ல பல கதைகளை எழுதியுள்ளார். நூல் பிரியர். இதிகாச புராணங்களில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். கண்ணுக்கும் கருத்திற்கும் பழகவும் மிகவும் எளிமையானவர். குழந்தைகளிடத்தில் மிகவும் நேசமுள்ளவர். ஒழுக்கக் கட்டுப்பாடு மிக்கவர். சட்ட நிபுணர். நல்ல திறமைமிக்க ஆட்சியாளர். தீவிர நாட்டு பற்று கொண்டவர். சுதந்திர இந்தியாவின் விடுதலைக்கு பாடுபட்டவர். பலமுறை சிறைவாசம் புகுந்தவர். கஷ்ட நஷ்டங்களை துச்சமாகக் கருதி செயல்வீரனாய் இறுதிவரைக்கும் வைராக்கியத்துடன் எளிமையாய் வாழ்ந்து பாமர மக்களின் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்பவர். இவரது ஜாதகத்தில் 3ஆம் இடத்திற்குரிய சனி வக்கிர நிலையில் பலம் பெற்று குருவுடன் இணைந்த இராகுவின் பார்வையை பெற்றதாலும் குருவும் சனியும் பரிவர்த்தனை செய்ததாலும் சுக்கிரனும் செவ்வாயும் பரிவர்த்தனை செய்ததாலும் இவரின் வாழ்க்கையில் பலவித முற்போக்கு சிந்தனைகளை செயல்படுத்தி வாழ்ந்தும் காட்டினார். மூன்றுக்கு பலவித முற்போக்கு சிந்தனைகளை செயல்படுத்தி வாழ்ந்தும் காட்டினார். மூன்றுக்கு ஐந்தில் விருச்சிக பாக்கியத்தானும் ஏழுக்கு மூன்றான கடக சந்திரன் இலக்கின சப்தமத்தில் உச்சம் பெற்றும் இதனை நேருக்கு நேர் கருமத்தான ஜீவன காரகர் சூரியன் சந்திப்பதும் சுக்கிரனும் சூரியனோடு இணைந்து சந்திரனை பார்வையிடுவதும். துணிச்சல் வீரம் மற்றும் வீரியம் பகையினங்களை ஓட ஓட விரட்டும் ஆற்றலையும் பெற்றும் சமூக விரோத சக்திகளை துச்சமாக கருதி அதனை புறக்கணிக்க செயல்படுவதும் இப்படி பலவித பேறுகளை பெற்றுள்ளதை நீங்களே இவரது ஜாதகத்தில் நன்கு அறியலாம். சகிப்புத் தன்மை அயறாத உழைப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்களின் நலனுக்காக பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டார்.

| | | | |
|---|---|---|---|
| சனி (வ) | | சந் | |
| குரு ராகு | இராஜ கோபாலாச் சாரியார் 02.11.1965 | | கேது |
| | | | |
| புத | ல சுக் சூரி | செவ் | |

**எடுத்துக்காட்டு: 6 வடலூர் வள்ளலார் ஜோதி இராமலிங்க அடிகளார்**

மீனத்தை இலக்கினமாகக் கொண்டு பிறப்பெடுத்து வள்ளல் பெருமகனாரின் ஜாதகத்தில் 3ஆம் வீட்டு நாயகர் சுபரான சுக்கிரன் சாதுவானவர்.எதையும் அடைய நேர்வழியில் இயங்குபவர். இதனால் ஆக்ரமிப்பு சக்திகளால் அரிய பெரிய பேறுகளை அடையப் பெறாமல் தவற விடுபவர்கள். எதையும் விட்டுக் கொடுக்கும் தன்மையில் ஜாதகரை செயல்படுத்தவார். சுயநலத்தை கருதாமல் பிறர் நலத்தையே கருத்தில் கொண்டு சாத்வீக குணவியல்புகளையே கொண்டு செயல்படும் தன்மைக்கு ஆளாவதால் சூது வாது தந்திரம் மிக்க இதயமில்லா துஷ்டர்கள் சமுதாயத்தில் சுக்கிரனை 3ஆம் வீட்டு நாயகனாய் கொண்டு செயல்படும் ஜாதகர்களுக்கு பயஉணர்ச்சியும் மன வேதனையும் ஆட்கொண்டு இருப்பதையும் தொலைத்து சுய மரியாதையையும் இழக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். 3ஆம் வீடு முயற்சியும் பகையை முறியடித்து அறிவின் துணைகொண்டு எதனையும் கட்டிக்காக்கும் ஸ்தானமாக கருதப்படுகிறது. இல்லாவிடில் அனைத்து உடமைகளையும் சொத்துக்களையும் இழக்கும் நிலைக்கு ஆளாகக்கூடும். இதில் பாபிகள் நின்றதால்தான் எதனையும் சாதிக்க முடியும். இல்லாவிடில் துர்சக்திகளின் தாக்குதலுக்கு அளாகி முடிவில் ஜீவனைத் தாங்கிய சரீரம் கொடூரமான பாதிப்புக்குள்ளாகி ஜீவனும் வெளியேறிவிடும்.

| | | | |
|---|---|---|---|
| ல | | சனி | குரு |
| | இராசி ஜோதி இராமலிங்க அடிகளார் | | செவ் கேது |
| ராகு | | | |
| | | சந் புத | சுக் சூரி |

அன்னாரது ஜாதகத்தில் 3க்கு சப்தமாதிபதியான விருச்சிக பாக்கிய செவ்வாய் 3க்கு மூன்றான பஞ்சமத்தானத்தில் நின்று சர்ப ஞானியான கேதுவுடன் கூடியும் இந்த ஞானியார் கேதுவும் 3இல் நின்ற பாக்கியத்திற்கு (விருசசிகத்திற்கு) மூன்றான மகர நாயகன் பாபி சனியை பார்வையிடவும் சனியின் அனுகிரஹத்தால் சித்த ஞானியாராகி வெறும் நீரில் எண்ணெய் இல்லாத தீபம் (நீச்ச செவ்வாய்) சுடர்விட்டு எரிகின்றதை இன்றும் வடலூரில் சத்திய ஞான சபையில் புறக்கண்களாலேயே ஆஸ்தீக அன்பர்கள் காணலாம். இதனை உறுதிபடுத்த காற்று நாயகனான இராகுவும் மெய்படுத்த ஒன்பதிற்கு மூன்றான இலாபத்தானத்தில் மகரத்தில் நின்று தீபத்திற்குரிய செவ்வாயும் ஞானத்தை அளிக்கும் கேதுவும் இணைந்து ஒரே நேர்கோட்டில் நின்று செயல்படுவதும். அங்கே சுடர்விடும் தீபமும் ஆடி அசைந்துக் கொண்டே அணையாமல் எரிந்துக் கொண்டிருப்பதன் வாயிலாக இதனை மெய்ப்படுத்தப்படுகிறது. முருகனின் ஹம்சமாக திகழும் செவ்வாய் அடிகளாருக்கு முருகனின் அருளுக்கு பாத்திரமாக ஆக்கினார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆக 3ஆம் வீடும் அதன் நாயகனும் எந்தளவிற்கு ஒருவர் ஜாதகத்தில் பங்காற்றுகிறார்கள் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

# எனக்கு ஒரு வீடு கிடைக்குமா?

## (K.P முறையில் ஓர் ஆய்வு)




ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"

**கடகம் இராமசாமி**

செல் : 94431 67046


ஒரு ஜாதகத்தில் 4ஆம் வீடு தாய், வாகனம் வீடு, நிலபுலன்கள், படிப்பு (வித்தை) புதையல், தோட்டம் இவைகளைக் குறிக்கும். புதன் (வித்தை), சந்திரன் (தாய்) வீடு, நிலம் முறையே சுக்கிரன், செவ்வாய் ஆகியன குறிகாட்டிகளாகும். இக்கிரகங்களின் வலுவைப் பொறுத்து, காரக பலன்கள் சிறப்பதும் உண்டு. இடர்பாடுகள் ஏற்படுவதும் உண்டு. சுக்கிரன் வலுவாக அமைகின்றபோது வாகனம் வாங்குதலும், செவ்வாய் வலுவாக அமைகிறபோது நிலங்கள் கட்டிடங்களில் முதலீடு செய்வதும் உண்டு.

செவ்வாய் வலுகுன்றியும், சுக்கிரன் வலுகுன்றியும் அமைகிறபோது இழப்புகள் உண்டாகும்.

ஒருவர் வீடு (கட்டியது) வாங்குவதற்கு ஆராய வேண்டிய வீடுகள் 2,4,6,11,12 ஆகியனவாகும். ஏன்?

2ஆம் இடம் வீடு ஒருவர் சொத்தை அடைதலைக் குறிக்கும்



4ஆம் வீடு சொத்தை குறிகாட்டு. (அதாவது சொத்தை அடைதலைக் குறிக்கும்.)

6ஆம் வீடு எதிரிக்கு (7க்கு) விரையம். இலக்கினத்திற்கு வெற்றி தானமாகும்.

11ஆம் இடம் அடையும் இலாபத்தைக் குறிக்கும்.

12ஆம் இடம் ஒருவர் செய்யும் முதலீட்டைக் குறிக்கும்.

இம்மாதிரியே ஒருவர் தோட்டம் வாங்கி விவசாயம் செய்வதாக இருந்தால் செவ்வாய், சந்திரன், சுக்கிரன், குரு ஆகிய 4 கிரகங்களும் வலுவாக இருக்க வேண்டும்.

ஏன்? செவ்வாய் நிலத்தையும், சந்திரன் நீர் வசதியையும், சுக்கிரன் பயிர் சாகுபடி செய்தலையும், குரு பயிர் நன்கு வளர்தலையும் குறிக்கும். அதோடு அல்லாமல் 2,6,10,11 ஆகிய வீடுகளுக்கு இக்கிரகங்களை தொடர்பு கொண்டு இருந்தால் தான் மகசூலைப் பார்க்க முடியும். இல்லையேல் உழுதவன் கணக்குப் பார்த்தால் உலக்கு மிஞ் சாது என்ற பழமொழிக்கு ஏற்பதான் இருக்கும். பெயருக்கு விவசாயம் என்ற நிலைபாடு உருவாகி பொருளாதார சிக்கலில் மாட்டி விடும். 12ஆம் அதிபதியின் வலுவைப் பொறுத்து முதலீடுகளால் பலன் கிட்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | | செவ் 22°30' சந் 25°51' சுக் 26°24' |
| ராகு 24°44' | ராசி உதாரணம் | | புத 26°31' |
| சனி 6°17' | | | குரு 10°51' சூரி 11°49' கேது 24°44' |
| | | ல 5°21' | |

இந்த உதாரண ஜாதகத்தில் சனி 4ஆம் அதிபதியாகும். 4ஆம் பாவத்தில் அமர்ந்துள்ளார். முதலீட்டைக் குறிக்கும். 12ஆம் வீட்டு அதிபதி புதன் (சுபர்) பார்வை சனிக்கு விழுகிறது. விற்பனையாளர் (7ஆம் இடம்) தனக்கு 4ஆம் இடம் அதிபதி சந்திரன். பார்வை செய்கிறது. சனி ஒரு வலுவான குறிகாட்டி.

சனியின் உபநட்சத்திரத்தில் குரு நிற்கிறார். குரு இலாபத்தில் நிற்கும் கேது சாரம் ஏறியுள்ளார். 6ஆம் அதிபதி குரு, இலாபத்தில் நிற்பது இலாபகரமானதாகும்.

குரு சனியின் உபநட்சத்திரத்தில் நிற்பது வீடு, கார் (வாகனம்) முதலியவற்றைக் குறிக்கும்.

ஆகவே இச்சாதகர் சனிதெசை, குருபுக்தி, புதன் அந்தரத்தில் குடியிருக்கும் வீடு ஒன்றை வாங்கினார்.

புதன் கிரகம் இன்னொரு இரகசியத்தையும் சொல்கிறது (புதன் இரட்டைக் கிரகம்) இச்சாதகர் புதன் தெசை, குரு புக்தி, சனி அந்தரத்தில் மற்றொரு வீட்டையும் வாங்குவார் என்று இக்காலம் சூரியன் மீன இராசியில் புதன் (ரேவதி) நட்சத்திரத்தில் சூரியன் பிரவேசித்த காலம். அவ்வாறே நடந்தேறியது காண்.

தெசா, புக்தி, அந்திரம் என்பதைத்தான் ஸ்டார் லார்டு, சப்லார்டு, சப் சப் லார்டு என்று கே.பி முறை கூறுகிறது. பழகப் பழகச் சுலபமாகிவிடும் இம்முறை. உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

சுபமஸ்து.



# ஆகஸ்டு 2015 மாத

1.8.2015 பகல்மணி 1.57க்கு ஸ்ரீபுதன் பகவான் சிம்மம் இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.
17.8.2015 இரவு மணி 9.59க்கு ஸ்ரீ சூரிய பகவான் சிம்மம் இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.

Astro தெய்வீகன் மாரிமுத்து செல் : 98425 21669 / 92446 21669

## மேஷம்

நட்சத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்



உங்கள் இராசியாதிபதி ஸ்ரீ செவ்வாய் பகவான் நீச்ச பலத்துடன் ஸ்ரீ சூரியன்பகவானுடன் சுகஸ்தானத்தில் கூடி இருக்கிறார்கள். எதிலும் எல்லா காரியத்திலும் மிகுந்த வேகம் காட்டுவீர்கள். உங்கள் வேகத்தை குறையுங்கள். கொஞ்சம் சிந்தியுங்கள். பல பிரச்சனைகளை தவிர்க்கலாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து செயல்படுங்கள். ஒருவருக்கொருவர் தவறாக புரிந்துக் கொண்டு பேசுவீர்கள். தேவையற்ற வாக்குவாதம் உருவாகும். எனினும் பஞ்சமத்தில் தேவகுரு குரு பகவான் அசுரக்குரு சுக்ரன் பகவானுடன் புதன் பகவானும் இணைகிறார்கள். பஞ்சமம் என்னும் தெய்வஸ்தான பலத்தால் உங்களுக்கு இருந்த பல பிரச்சனைகள் தீர்வுக்கு வரும். இறைஞானம் மிகுதியாக அமையும். அமைதி, ஆத்மபலம், தியானம், யோகம் என பல தெய்வ கலைகளை கற்றுக்கொள்ள சிறந்த குரு அமைவார்கள். ஜோதிடம் நிறை கற்றுக் கொண்டேன் பலன் சொல்ல தைரியமில்லை என்பவர்கள். அனுபவம் நிறைந்த ஜோதிட பிரம்மாக்களை குருவாக அமைத்து பல அறிய சாதனையும், வாக்கு பலமும் முழுமையாக அமையும் நேரம். பெண்கள் தொழிற்கல்வி கற்று தொழில் செய்து குடும்பத்தற்கு தேவையான பணத்தை ஈட்டுவார்கள். இளைஞர்களுக்கு பெண்களுக்கு மனதிற்கு ஏற்ற வரன் அமைந்து திருமணம் கெட்டி மேளம் கொட்டும். புதிய இனியதோர் வாழ்க்கை பயணத்தை தொடங்குவீர்கள். கோர்ட்மூலம் விவாகரத்து பெற்றவர்களும் மீண்டும் இருமனமும் இணைந்து பழைய பிரச்சனைகளை மறந்து சென்று சேரும் காலம். 17ஆம் தேதிக்கு பிறகு சூரியயின் பகவானும் பஞ்சமத்தில் ஆட்சிபலம் பெறுவதால் தந்தை பரிபூரண அன்பு கிடைக்கும். அரசு துறை வேலைவாய்ப்பு அமையும். பூர்விக சொத்துக்கள் வந்துசேரும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 22ஆம் தேதி பகல் மணி 12.07 முதல் 24ஆம் தேதி இரவு மணி 8.09 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் திடீர் உறவு வருகையால் சிறு சிறு பிரச்சனை ஏற்படும்.

**வழிபடக்கூடிய தெய்வம்:** ஸ்ரீசூரியன் காயத்ரி

"ஓம் ஆதித்யாய வித்மஹே மார்தாண்டாய திமஹி

தன்னஹ் சூரியஹ் ப்ரசோதயாத்" சூரியமந்திரத்தை தினமும் 10 முறை உச்சரித்து சூரிய நமஸ்காரம் செய்யுங்கள். பிதுர் தோஷம் விலகும்.

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியரை தரிசியுங்கள் குடும்ப பிரச்சனைகள் அகலும்.

## ரிஷபம்

நட்சத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதம்



தைரிய ஸ்தானத்தில் செவ்வாய் நீச பலத்துடன் செவ்வாய் பகவான் சேர்க்கை மஹா தைரியமும் துணிச்சலும் நிறைந்தவர்களாக செயல்படுவீர்கள். ஈடுபட்ட காரியத்தை முடிக்காமல் தூங்க மாட்டீர்கள். ஒரு தொழில் செய்துக் கொண்டே மற்றொரு தொழில் செய்ய முயற்சி செய்வீர்கள். புதிய தொழில் முதலீடு செய்வீர்கள். கடல் கடந்த பயணங்கள் மூலம், தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பீர்கள். ஐடி துறையில் பணிபுரிவோருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கும். சுகஸ்தானம் என்னும் ஆரம்ப கல்வி ஸ்தானத்தில் தேவகுரு குருபகவான், அசுர குரு சுக்கிர பகவான் வித்தைக்கு அதிபதி புதன் பகவான் இணைவு. கல்வி கற்பதில் பேரானந்தம் அடைவீர்கள். கற்ற வித்தையை சோதித்து பலன் அறிவீர்கள். புதிய கலையை கற்க கூடிய ஆசைகள் உருவாகும். திரைப்படத்துறையில் பல பிரிவுகளில் உங்கள் சாதனைகள் வெளிப்படும். பதக்கம், பரிசுகள், வாங்கி மகிழ்வீர்கள். திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். திறமையான மனிதர்களை தேடி ஊக்குவிப்பீர்கள். வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கு, சொந்த வீடு அமைந்து கிரஹபிரவேசம் செய்யும் யோகம் கிட்டும். ரியல் எஸ்டேட் வாகனம் தொடர்பான தொழில்கள் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். சூரியபகவான் 17ஆம் தேதியிலிருந்து சுகஸ்தானத்தில் ஆட்சிபலம். உங்கள் உடலை முழுமையாக பரிசோதனை செய்யலாம். தாய், தகப்பாருக்குகு தனியாக வீடு கட்டிக் கொடுப்பீர்கள். 24ஆம் தேதி சுக்கிரன் வக்ரபலத்துடன் கடகத்திற்கு பெயர்ச்சியாவதால் பெண்கள் உடல்நிலையில் கவனம் தேவை. காதல் கசக்கும். பெற்றோருக்கு மரியாதை கொடுக்க மாட்டீர்கள். பெண்கள் எல்லா விஷயங்களிலும் கவனமாக இருப்பதுநலம்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 24ஆம் தேதி இரவு 8.10 மணிமுதல் 26ஆம் தேதி இரவு மணி 1.44 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் நட்புகளால் பகை உருவாகும். பலநாள் நட்புக்கள் பகையாக மாறும்.

**வழிபட வேண்டிய தெய்வம்:**

1. ஸ்ரீசூரிய பகவான் காயத்ரி

"ஓம் பார்கவாய வித்மஹே தைத்யாசார்யாய தீமஹி

தன்னச் சுக்ரஹ் ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 60 முறை பாராயணம் செய்யுங்கள். பெண்களின் கஷ்டங்கள் விலகும்.

2. இருக்கன்குடி மாரியம்மனை வெள்ளிக்கிழமை தரிசியுங்கள். திருமணம் புத்திரபாக்கியம் கிட்டும்.

# இராசிப் பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | ஆகஸ்ட் மாத கிரஹ நிலைகள் | | சூரி செவ் புத |
| சந் | | | குரு சுக் (வ) |
| | சனி | | ராகு |

**22.8.2015 அதிகாலை மணி 3.44க்கு ஸ்ரீபுதன் பகவான் கன்னிஇராசிக்கு பெயர்ச்சியாகிறார்.**
**24.08.2015 இரவுமணி 7.32க்கு ஸ்ரீசுக்கிரன் பகவான் கடகம் இராசிக்கு வக்ரமாக பயணமாகிறார்.**

## மிதுனம்

நடசத்திரம் : மிருகசிரீஷம் 3,4 பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதம்



வாக்கினிலே செவ்வாய் பகவான் நீச பலத்துடன் ஸ்ரீ சூரியன் பகவானுடன் இணைவு வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நீங்கள் கூறிய கருத்துதான் சரியானது என வாதம் செய்வீர்கள். தவறான கருத்தாக இருந்தாலும் சரியானதாக மாற்ற முயற்சி செய்வீர்கள். சில பிரச்சனைகளில் ஒதுங்கி இருப்பது நலம். குடும்ப விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது உத்தமம். தைரிய வீரிய ஸ்தானத்தில் தேவகுரு குரு பகவான் அசுரக்குரு சுக்கிரன் பகவான் வித்தைகாரகன் புதன் பகவான் இணைவு பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தடைகளைக் கண்டு அஞ் சமாட்டீர்கள். தகுதிக்கு மேல் கடன் வாங்கவேண்டாம். யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம். பெண்களுக்கு புதிய அனுபவம் கிடைக்கும். வரன் தேடுவீர்கள். திருமண தகவல்நிலையத்தில் பதிவீர்கள். காதலில் ஈடுபட்டவர்கள் பெற்றோரின் சம்மதத்தை வாங்க முயற்சி செய்வீர்கள். மாணவர்கள் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டுவீர்கள். விளையாட்டு வீரர்கள், நல்ல வாய்ப்பு, வெற்றி பதக்கம் என மகிழ்ச்சியடையும் தருணம். பாஸ்போர்ட் எடுக்கலாம், விசா வாங்கலாம். வெளிநாடு பயணம் செய்து பல தொழில்கள் வியாபார முயற்சியில் ஈடுபடலாம். ஜோதிடர்கள் வெளிநாடு செல்லும் காலம். வெளிநாட்டில் வேலை செய்பவர்கள். ஒருநாடு விட்டு மற்றொரு நாடு மாறி வேலையை அமைத்துக் கொள்ளலாம். ஆன்மிகவாதிகள் பல திருத்தலங்களுக்கு ஆன்மிக சுற்றுப்பயணம் செய்யலாம். 17ஆம் தேதி முதல் சூரிய பகவானும் தைரியஸ்தானத்தில் ஆட்சிபலம் அரசாங்க அதிகாரிகள் தொடர்பால் அனுகூலமும், வேலைவாய்ப்பும் அமையும். அமைச்சர்கள், அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புக்களும் தொண்டர்களின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 26ஆம் தேதி, இரவு மணி 1.48 முதல் 29ஆம் தேதி அதிகாலை மணி 5.30 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் வெளிநாடு விசா, பாஸ்போர்ட் கிடைப்பதில் தாமதமாகும். இதனால் பயணம் காலம் மாறும்.

### வழிபட வேண்டிய தெய்வம்:


துர்கா மந்திரம் "ஓம் ஜ்வாலா மாலினி வித்மஹே மஹாசூலினி தீமஹி

தன்னோ துர்கா ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை 90 தடசை பாராயணம் செய்யுங்கள்.

2. செவ்வாய்க்கிழமை இராகுகாலத்தில் ஸ்ரீ துர்க்கை தரிசியுங்கள். திருமண யோகம் கூடிவரும் வீடு, வாகனம் வாங்கலாம்.

## கடகம்

நட்சத்திரம் : புனர்பூசம் 4 பாதம், பூசம், ஆயில்யம்



ஜென்ம ஸ்தானத்தில் செவ்வாய் பகவான் நீச பலத்துடன் ஸ்ரீசூரியன் பகவானுடன் இணைவு யோக தியானம் செய்வீர்கள். கராத்தே போன்ற தற்காப்பு கலைகள் கற்றுக் கொள்வீர்கள். குழந்தைகளுக்கு விளையாட்டுகளை கற்றுக் கொடுத்து திறமைகளை மிளிரச்செய்வீர்கள். இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் ஐடி துறை வேலைவாய்ப்புக்கள் அமையும். திறமைக்கேற்ப ஊதியம் கிடைக்கும். சுறுசுறுப்பாக இயங்குவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். நட்பால் தொழில் பலம் கிடைக்கும். முருகப் பெருமானின் அறுபடை ஸ்தலங்களுக்கு சென்று தரிசிப்பீர்கள். வங்கி லோன் வாங்கலாம், வீடு கட்டலாம், வாகனம் வாங்கலாம், வாக்கு ஸ்தானத்தை பலப்படுத்த வித்தை காரகன், தன்பகவான், பலருக்கு ஆசிர்வாதம் அருளுவதற்கு போதனைகளை போதிப்பதற்கும் உதவுவார். கல்வியில் வல்லவராக திகழ்வீர்கள். பலகலைகளும், சித்துக்களும் கற்றுக் கொள்வீர்கள். எந்த கலையை கற்க விரும்பினாலும் அக்கலையின் திறமையான குரு அமைவார். அதேபோல் கற்றக் கலையையும் நீங்கள் திறயையாக கற்றுக் கொடுக்கலாம். ஆசிரிய பெருமக்களுக்கு பணி நிரந்தரம், தேவையான இடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கும் காலம். மாற்று மொழி கற்பீர்கள். பணவரவுகள் அதிகரிக்கும். வங்கி சேமிப்பு கூடும். திருமணம் கைகூடி வரும். திருமண பந்தத்தால் குடும்பம் ஒற்றுமையுடன் ஒன்றுகூடும். கணவன், மனைவி அன்பு சிறப்பாக அமையும். புத்திரபாக்கியம் கிட்டும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 1ஆம் தேதி இரவு மணி 9.25 முதல் 3ஆம தேதி இரவு மணி 11.55 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் அரசாங்க காரியங்களை முடிக்க காலதாமதமும், அதனால் மனவருத்தம் உண்டாகும். மேலும் 29ஆம் தேதி அதிகாலை மணி 5.31 முதல் 31ஆம் தேதி காலை மணி 8.03 வரையும் சந்திராஷ்டமம்.

### வழிபட வேண்டிய தெய்வம்:

வாஸ்து மந்திரம்

"ஓம் தத்புருஷாய வித்மஹே யோகமூர்த்தியாய திமஹி

தன்னோ வாஸ்துமூர்த்தி ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை 108 முறை செவ்வாய்க்கிழமை தோறும் பாராயணம் செய்யுங்கள். நிலம் வாங்கி வீடு கட்டுவீர்கள்.

## சிம்மம்

நடசத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்.

ஜென்ம இராசியில் தேவகுரு குரு பகவானும், அசுர குரு சுக்கிர பகவானும இணைவு தேவ ரகசியங்களையும் அசுர இரகசியங்களை அறிந்தவர். அதனால் உங்களை யாரும் ஏமாற்ற முடியாது. ஏமாற்ற வேண்டும் என செயல்பட்டவர்கள் ஏமாந்து விடுவார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அங்கேயே குடியுரிமை கிடைக்கும். பல ஊர் பயணம் அங்கே புதிய நண்பர்கள் சிறப்புகள்ளல எல்லாம் நிறைவாக கிடைக்கும். புதிய விலையுயர்ந்த வாகனம் வாங்குவீர்கள். குருசுக்கிரன் இணைந்து 7ஆம் பார்வையாக மனைவி ஸ்தானத்தை பார்ப்பதால் மனதை கவர்ந்த பெண்ணை பெற்றோர் சம்மத்துடன் திருமணம் முடித்து புதிய வாழ்க்கையை இனிதாக ஆரம்பிப்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமையுடன் எதிர்கால வாழ்க்கையை சீராக அமைப்பீர்கள். அன்பு, பாசம், நேசம் நிறைந்திருக்கும். புத்திரபாக்கியம் கிட்டும். 24ஆம் தேதி சுக்கிரன் பகவான் 12 ஆம் இடத்திற்கு வக்ரமாக செல்கிறார். 12இல் சூரியன்பகவான் செவ்வாய் பகவானுடன் இணைகிறார். எதிர்பாராத செலவுகள் தோன்றும். உறவினர்கள், நண்பர்கள் வருகை, விருந்து, உபச்சாரம் என குடும்பம் களைகட்டும் எதிர்பாராத பிரயாணம் உருவாகும். சில நேரங்களில் குடும்பத்தில் எல்லா செலவுகளும் நீங்களே எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இதனால் மனம் வருத்தப்படுவீர்கள். பெண்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தை ஆடம்பரமாக செலவிடுவார்கள். எனினும் அர்த்த அஷ்டமத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் அமர்ந்திருப்பதால் உடல்நிலையில் அதிக அக்கறை தேவை. வில்லங்கம் சரிபார்த்து வாங்குவது உத்தமம்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 3ஆம் தேதி இரவு மணி 11.56 முதல் 5ஆம் தேதி இரவு மணி 2.19 வரை சந்திரரிஷ்டமம். மேலும் 31ஆம் தேதி முழுவதும் சந்திராஷ்டமம். வேலை பணியின் காரணமாக உடல்நிலை கோளாறுகள் ஏற்படும்.

**வழிபட வேண்டிய தெய்வம்:** அஸ்வருடா தேவி மந்திரம்

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் ஏஹ்யேஹி

பரமேச்வர் ஸ்வாஹா தினமும் 1008 முறை ஜெபித்தால் அரசியலில் வெற்றி பெறலாம்.

சென்னை அருகே ஞாயிறு நகரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீசூரிய பகவானை தரிசியுங்கள். பிதுர் தோஷங்கள் விலகும்.



## கன்னி



நடசத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்

ஜென்மத்தில் இராகு பகவான் கன்னி இராகுவாக அமர்ந்து எல்லா காரியங்களிலும் வெற்றிதான். எதையும் துணிந்து செய்வார். மேலும் தைரிய வீரிய பராத்ராம சக்திகளை அருளா 3 ஆம் இடத்தில் சனீஸ்வரா் பலமுடன் அமா்ந்துள்ளாா். 7ஆம் இடத்தில் அமா்ந்தால் கேதுபகவான் மனைவியின் உடல்நிலையில் அக்கறை தேவை. காதல் தோல்வியடையும். லாபஸ்தானத்தில் சூரிய பகவான் செவ்வாய் பகவான் இணைவு அரசு, அதிகார கிரகங்கள் லாபத்தில் சேர்க்கையடைவதால் அரசாங்க வழியில் உங்களுக்கு வரவேண்டி பணம் வீடு தேடி வரும் கோர்ட் வழக்குகள் மூலம் நிலுவையில் இருக்கின்ற கோர்ட்டு வழக்குகள் உங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்து நிலுவையில் இருந்த பணங்கள் முழுமையாக வந்து சேரும். இதனால் வாங்கிய கடனை அடைத்து மிச்சம் பணத்தில் இடம், வீடு, வாகனம் வாங்குவீர்கள். உங்கள் குழந்தைகளின் கல்வி, திருமண செலவுகளை சிறப்பாக செய்வீர்கள். வங்கி சேமிப்பு கூடும். வங்கி லோன் கிடைக்கும். இளைஞர், இளைஞர்களுக்கு வேலையில் புரமோஷன் கிடைத்து அலுவலக மூலமாக வெளிநாடு சென்று


## துலாம்



நடசத்திரம் : சித்திரை 3,4 பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

தொழில் ஸ்தானத்தில் சூரியன் பகவானும் செவ்வாய் பகவானும் இணைந்து திக் பலம் பெறுகிறார். இதுவரை சரியான வேலையில்லை எப்படி எதிர்காலத்தை கொண்டு செல்வது என சிரமப் பட்டவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய அற்புதமான வேலை அமையும். எதிர்காலம் பசுமையாக தெரிய ஆரம்பிக்கும். வாழ்நாளில் பலகாலம் அடுத்தவர்க்கு அடிமையாக வேலையிலே கழித்து விட்டோம். யாரிடமும் அடிமையாக இல்லாமல் சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என எண்ணம் கொண்டவர்களுக்கு சொந்தமாக தொழில் செய்ய முதலீடு தொழில் உபகரணங்களும் கிடைக்கும. வியாபாரம் வளம் பெற ஏற்ற மாதம். புதிய முதலீடுகள் செய்யலாம். தொழில் விஷயமாக வெளிநாடு சென்று எக்ஸ்போர்ட் செய்யலாம். இதற்கு ஏற்றார் போல் இலாபஸ்தானத்தில் தேவகுரு குருபகவான். அசுரகுரு சுக்கிர பகவான், வித்தைகாரகன் புதன் பகவான் இணைவதால் எங்கும் இலாபம் எதிலும் லாபம் என இலாபநோக்கோடு செயல்படுவீர்கள். வருமானம் பலவழிகளில்

## விருச்சிகம்



நடசத்திரம் : விசாகம் 4 பாதம், அனுஷம், கேட்டை

ஜென்ம சனீஸ்வர பகவானால் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள் பல தடைகளை கடந்து செல்வீர்கள். உங்களுக்காக வாழுங்கள். அடுத்தவர்களுக்காக வாழ்க்கை நிலையை மாற்றிக் கொள்ளாதீர்கள். பாக்கியஸ்தானத்தில் சூரியன் பகவான் செவ்வாய் பகவான் இணைவு. வேகம் வேகம் என எல்லாக் காரியத்திலும் வேகம் இருந்துக் கொண்டே இருக்கும். ஓய்வு எடுக்க முடியாமல் பணிகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருப்பதால் உடல்நிலையில் பாதிப்புகள் உருவாகும். வாகனம் ஓட்டும்போது மிகுந்த கவனம் தேவை. ஹெல்மெட் பயன்படுத்துங்கள். ஓட்டுனர் உரிமங்கள் சரியாக வைத்துக் கொள்ளுங்கள். இரவு நேர பயணங்களைத் தவிர்க்கவும். மது அருந்துபவர் மதுவை முழுவதுமாக விட்டுவிடுவது நலம் 10இல் குரு பகவான் பதவிக்கு கேடு என்பார்கள். வேலைப்பார்ப்பவர்கள் ஈகோ பார்க்காமல் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வது உத்தமம். கிடைத்த பணியை நிறைவாக செய்யுங்கள். உங்களுக்கு உதவியாக 10ஆம் இடத்தில் சுகங்களை அருளும் சுக்கிரன் பகவான் வித்தைக்குரிய புதன் பகவான் இணைவால் உங்கள் வேலையில்

சம்பாதிக்கும் நிலை அமையும். இதன் மூலம் குடும்ப பொருளாதாரம் கூடும் எனினும், தேவகுரு குருபகவான் அசுரகுரு சுக்ரபகவான். வித்தைகாரகன் ஸ்ரீபுதன் பகவான் இணைந்து 12ஆம் இடம் என்னும் அயன சயனத்தில் அமர்கிறார். புதிய புதிய வேலைகளை இழுத்து போட்டு செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வீர்கள். பங்கு சந்தை உங்களுக்கு ஆதாயத்தை கொடுக்கும். பல வழிகளில் ஆதாயத்தை தேடும் மாதம்.

**சந்திராரிஷ்டமம்:** இம்மாதம் 5ஆம் தேதி இரவு 2.20 முதல் 8ஆம் தேதி அதிகாலை மணி 5,27 வரை சந்திராரிஷ்டமம். இந்நாட்களில் சில சோதனைகளால் கடவுள் மேல் இருந்த நம்பிக்கை குறையும்.

**வழிபட வேண்டிய தெய்வம்:** ஸ்ரீ செவ்வாய் பகவான் மந்திரம்

"வீரத்வாஜய வித்மஹே விக்நஹஸ்தாய தீமஹி

தந்நோ பௌம ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 90 முறை பாராயணம் செய்யுங்கள். வீடு, வாகனம், வாங்கலாம்.

சமயபுரம் ஸ்ரீமாரியம்மனை வெள்ளிக்கிழமை, தரிசியுங்கள். திருமண யோகம் கிட்டும்.

வந்து சேரும். வாரக்கடன்களும் வந்து சேரக்கூடியகாலம். திருமண யோகம் கைகூடும். மணமகள் உங்கள் வீட்டில் வலது காலை எடு த்து வைக்கும்போது எல்லா செல்வங்களும் சேரும் நண்பர்களின் அன்பும், உதவியும் கிடைக்கும். விவாகாரத்தானவர்களுக்கு மறுதிருமண யோகம் கிடைக்கும். காதல் கைக்கூடும். இன்ப சுற்றுலா செல்வீர்கள். எனினும் வாக்கினிலே சனீஸ்வரர். பேச்சில் கவனம் தேவை. குடும்ப பிரச்சனைகளில் தலையிடாதீர்கள்.

**சந்திரார்ஷ்டமம்:** இம்மாதம் 8ஆம் தேதி அதிகாலை 5.285 முதல் 10ஆம் தேதி காலை மணி 10.26 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் மனைவியின் கட்டளைக்கு பணிய வேண்டிய நிலை ஏற்படும்.

**வழிபட வேண்டி தெய்வம்:** 1. ஸ்ரீசனீஸ்வரர் மந்திரம்

"நீலாஞ்சன மைபசம் ரவிபுத்ரம் யமக்ரஜம் சாயாமார்த்தாண்ட

ஸம்புதம் தம்மாகி சனைச்சாரம்" இந்த மந்திரத்தை தினமும் 80 தடவை பாராயணம் செய்யுங்கள். வாக்கு சனீஸ்வரர் தோஷம் விலகும்.

2. மயிலாப்பூர் கபாலீஸ்வரரை வியாழக்கிழமை தரிசியுங்கள் எல்லா வளமும் கிடைக்கும்.

எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும் அதை வெல்லக்கூடிய சக்தி உண்டு. இளைஞர்களுக்கு நல்ல கம்பெனியில் வேலை கிடைக்கும். கம்பெனி நிர்வாகம் பல வசதிகளை செய்துக் கொடுக்கும். ஆடிட்டர், வழக்கறிஞர்கள் திறமைகளை வெளிகொணர்வார்கள். பத்திரிக்கை துறையினருக்கு உயரிய வாய்ப்புகள் கிடைக்கும். சினிமா துறையினருக்கு புதிய வாய்ப்புகள், புதிய கருத்துக்களை வெளிக்கொணர்வார்கள். பணம் வரும். பணத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 10ஆம் தேதி காலை மணி 10.17 முதல் 12ஆம் தேதி மாலை மணி 5.19 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் பக்கத்து வீட்டினரால் சில பிரச்சனைகள் உருவாகும்.

**வழிபட வேண்டிய தெய்வம்:** 1. கணபதி மந்திரம்

"ஓம் கீம் கூம் கணபதயே நம; ஸ்வாஹா" மந்திரத்தை 80 முறை உச்சரியுங்கள். ஜென்ம சனீஸ்வரர் தடை விலகும்.

2. தினமும் அருகில் உள்ள விநாயகரை 3 முறை வலம் வந்து சனிக்கிழமை தேங்காய் விடலை செய்து வழிபடுங்கள். காரிய தடைகள் விலகும்.

## தனுசு

நட்சத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1 பாதம்

அஷ்டமத்திடில் சூரியன் பகவான், செவ்வாய் பகவான் இணைவு. எல்லா காரியத்திலம் அபரித வேகம் காட்டுவீர்கள். கொஞ்சம் விவேகத்தைக் காட்டினால் கஷ்டங்கள் குறையும். ஒரு வேலையில் நேரம் தவறிவிட்டால் அதிகமாக கோபப்படுவீர்கள். கோபத்தால் தொடர்ந்து நடைபெறவேண்டிய வேலைகள் தடைபடும். அரசு வகை அதிகாரிகளின் உதவிகளை நாடுவீர்கள். கோர்ட் வழக்குகள், நீங்கள் நினைத்த மாற்றத்தைக் கொடுக்கும். உங்கள் இராசியாதிபதி குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் வியாழ நோக்கத்துடன் திருமண காரகன், சுக்கிரன் பகவான், வித்தைக்காரகன் புதன் பகவான் இணைகிறார். பாக்கியத்தில் இவர்கள் இணைவு உங்களுக்கு பொன்னான இராஜயோகந்தான். பெண்ணை பாருங்கள் கல்யாணத்திற்கு தேதி குறித்து விடலாம். மாப்பிள்ளை பாருங்கள் முகூர்த்தத்திற்கு தாலி வாங்கி விடலாம். இனிமேல் இனிமையான வாழ்க்கையை ஆரம்பித்து இந்த வருடமே புத்திர பாக்கியத்தையும் உருவாக்கிவிடலாம். தாம்பத்தியம் இனிமையாக அமையும். தேனிலவு சுற்றுலா செல்லலாம். கணவன், மனைவி எல்லா விதத்திலும் ஒருவருக்கொருவர் உதவுவார்கள். பெற்றோர்களின் பரிபூரண அன்பு கிடைக்கும்.

தந்தை வழி சொத்துக்கள் தனயன் பெயருக்கு மாறும். அந்த சொத்தில் நாம் கனவுகண்ட இல்லத்தைக் கட்டி கிரஹபிரவேசம் செய்யலாம். பல ஆலயங்களுக்கு சென்று வழிபடலாம். எதிர்காலத்தை அறிய ஜோதிடர்களை நாடி சிறந்த வழிகாட்டுதல்களை அமைத்துக் கொள்வீர்கள். பல வெளிநாடுகளுக்கு சென்று பல அற்புதமான இடங்களை பார்த்து புதிய பொருட்களை வாங்கி வருவீர்கள். பெண்களுக்கு ஆடை, விலையுயர்ந்த ஆபரணங்கள் சேரும். வந்த பணத்தை எதிர்கால தேவைக்கு முதலீடு செய்வீர்கள். குழந்தைகள் கல்வியில் சிறப்பாக தேர்ச்சி பெறுவார்கள். விளையாட்டில் மின்னுவார்கள். கலை, மொழி பண்பாடு கற்றுக் கொள்வார்கள். ஆசிரியர்களுக்கு உயர்வு உண்டு.


**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 12 ஆம் தேதி மாலை மணி 5.20 முதல் 14ஆம் தேதி இரவு மணி 2.48 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் அரசியல்வாதிகளுக்கு புதிய பிரச்சனைகள் உருவாகும்.

**வழிபட வேண்டிய தெய்வம்:** 1. குபேரன் மந்திரம்

"ஓம் ய க்ஷ ராஜாய வித்மஹே வைச்ரணாய தீமஹி

தந்நவர் குபேர ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 30 முறை பாராயணம் செய்யுங்கள். பணம் வரும்.

2. சனிக்கிழமை தோறும் சனீ ஸ்வரருக்கு எள் தீபம் ஏற்றுங்கள். விரைய சனீஸ்வரர் கஷ்டம் குறையும்.



## மகரம்



நட்சத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்

நட்புஸ்தானத்தில் சூரியன் பகவான், செவ்வாய் பகவான் சேர்க்கை அரசியல் வாதிகள். அரசாங்க அதிகாரிகள், காவல்துறையினர் உங்களுடன் நட்பாக பழகுவார்கள். எக்காரியத்தை எளிதாக சாதித்து விடுவார்கள். சமூக சமுதாய ஆன்மிக அமைப்புகளுக்கு தலைமை தாங்கி செயல்படுவீர்கள். தலைமை பொறுப்புகள் தேடி வரும். குழந்தைகள் கல்வியில் நம்பர் ஒன் மதிப்பெண்கள் எடுக்கும். பல போட்டிகளில் கலந்துக் கொண்டு வெற்றி பெறுவார்கள். அரசு முறை பயணமாக வெளிநாடு செல்லலாம். நண்பர்கள் துணையால் அரசியல் பணியில் ஈடுபட்டு பதவிகள் பெறுவீர்கள். இளைஞர்களுககு பெண்களுக்கு காவல்துறையில் வேலை வாய்ப்பு கிடைக்கும். காவல்துறையினருக்கு பதவி உயர்வு, பணி இடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கும். அஷ்டமத்தில் குருபகவான் சுக்கிரன் பகவான் ஸ்ரீபுதன் பகவான் இணைவு சுபகிரகங்கள் இணைவால் சில சுபகாரியங்கள் தடைபடலாம். எல்லா விஷயங்களிலும் கவனமாக செயல்படுவது உத்தமம். அஷ்டமத்தில் அமர்ந்த புதன் பகவான் ஆராய்ச்சி செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்துவார். அதனால் ஆராய்ச்சிகரமான படிப்புகள் படிக்கலாம். பல விஷயங்களில் நம்மை தெளிவடையச்செய்வார். வியாபார கணக்கு வழக்குகளில் கவனமாக இருப்பீர்கள். அஷ்டமத்தில் அமர்ந்த சுக்கிரன் பகவான் தவறான நட்பு தவறான சேர்க்க தவறான பழக்கவழக்கங்களில் ஈடுபட வைப்பார். வெள்ளிக்கிழமை துர்க்கை வழிபடுங்கள். அஷ்டமத்தில் அமர்ந்த குரு பகவான் ஆழமான விஷயங்களை கற்றுத் தருவார். வரப்போகும் பிரச்சனைகளை முன்பே உணர்த்துவார்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 14ஆம் தேதி இரவு மணி 2.49 முதல் 17ஆம் தேதி பகல் மணி 2.06 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் சுபகாரியங்கள் தடை ஏற்படும்.

"ஓம் நமோ மஹா யக்ஷிணீ பதிம்மே வசியம்

குரு குரு ஸ்வாஹா" என்ற மந்திரத்தை 60 முறை பாராணம் செய்யுங்கள் அஷ்டமத்து குரு சுக்கிரன் தோஷம் விலகும்.

2. ஞாயிற்றுக்கிழமை நவக்கிரக குருபகவான் சுக்கிரன் பகவான், புதன் பகவானுக்கு விளக்கேற்றி தரிசிக்கவும். கஷ்டம் விலகும்.

## கும்பம்



நட்சத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்

இரண ரோக பித்ரு ஸ்தானத்தில் சூரியன் பகவான், செவ்வாய் பகவான் என வேகமிக்க பாபகிரகங்கள் சேர்க்கை எதிர்ப்புகள் அடக்கும். தீராத நோய்களும் தீரும். மருத்தவ சோதனைக்குப்பின் உடல்நலம் ஆரோக்கியமாக அமையும். தேவையான ஆப்ரேஷன் செய்துக் கொள்ளலாம். கோர்ட் வழக்குகள் அனுகூலமான தீர்ப்பால் பல ஆண்டுகளாக இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். உறவுக்குள் இருந்த பகைகள் விலகி பந்தம் ஏற்பட்டு திருமண பந்தத்தை உருவாக்கும். தேகத்தில் புதிய தெம்பும், தைரியமும் உருவாகும். மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள், செவிலியர்களுக்கு வருமான உயர்வு உண்டாகும். யோகா கற்கலாம். யோகா மாஸ்டருக்கு அரசு வகை வேலைவாய்ப்பு கிடைக்கும். வியாழ நோக்கம் மிகுந்த மாதமாக குரு பகவான் 7இல் அமர்ந்து இதுவரை திருமணம் நடக்காமல் இருந்தவர்கள் அனைவருக்கும் திருமண யோகத்தை வழங்குகிறாா. மனைவி வந்த யோகம் 18 வகை செல்வங்களும் நிறைவாக வரும். எல்லோருடைய அன்பும் முழுமையாக கிடைக்கும். 7இல் புதன் பகவானும் இணைகிறார். மனைவி படித்தவர்களாக அமைவார்கள். பாதி படிப்பில் முடித்திருந்தால் நீங்கள் படிக்க வைத்து வேலைவாய்ப்பை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் இல்லத்தரசிக்கு கைநிறைய சம்பளம் கிடைக்கும். மேலும் 7இல் சுக்கிரன் பகவான் இணைந்து களத்திர தோஷத்தை உருவாக்குகிறார். ஆடம்பர ஆசைகள் உருவாகும். தகுதிக்கு மீறிய செலவுகள் உருவாகும். தகுதியறிந்து வாழ்ந்தால் வாழ்க்கை இனிமையானதாக அமையும். கூட்டுத் தொழிலை விரிவடைய செய்து நல்ல சம்பாதியுங்கள். ஷேர் மார்க்கெட் நல்ல ஆதாயத்தை தரும். பெண்களின் புதிய தொழிலைத் தொடங்குவார்கள்.


சந்திராஷ்டமம்: இம்மாதம் 17ஆம் தேதி பகல்மணி 2.07 முதல் 19 தேதி இரவு மணி 1.46 சந்திராஷ்டமம். இந்நாட்களில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தரும்.

"ஓம் பூர் புவஸ்ஸிவ ஓம் தத் ஸவிதுர்ரேண்யம்

பர்கோ தேவஸ்ய தீமஹி நியோ யோஹம் ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை 108 முறை கும்பம் வைத்து பாராயணம் செய்யுங்கள் காயத்ரி தேவி அருள் கிட்டும். வாக்கு பலிக்கும்.

2. திருத்தணி ஸ்ரீசுப்பிரமணியரை வெள்ளிக்கிழமை பள்ளியறை பூஜை தரிசனம் செய்யுங்கள். திருமண யோகம் கூடும்.

## மீனம்



நட்சத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி

பஞ்சமத்தில் இப்பிரபஞ்ச நாயகன் சூரியன் பகவானும் அதிகார பலம் வாய்ந்த செவ்வாய் பகவானும் தெய்வ ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். இறை பலம் கிட்டும் மாதம். பிரபஞ்சத்தின் முதன் முதல் கடவுள். நாம் நித்தம் நேரடியாக தரிசிக்கும்ட கடவுள் ஸ்ரீசூரியன் பகவானின் அருள் கிடைப்பதால் எல்லா வகையான பிதுர் தோஷங்களும் விலகும். இம்மாதம் பிதுர் சாந்தி செய்துக் கொள்ளலாம். பல ஆலயங்களுக்கு சுற்றுலா மூலம் சென்று விசேஷ தரிசனம் செய்வீர்கள். பூர்வீக சொத்துக்களை பிளாட் போட்டு நல்ல விலைக்கு விற்கலாம். ஆலய நிர்வாக பதவிகளில் உங்களை இணைத்து ஆலய புனரமைப்பு பணிகள் கோபுர பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வார்கள். இதன் மூலம் சமூக அந்தஸ்து கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு தொண்டர் பலம் உயரிய பதவிகள் கிடைக்கும். எனினும் ரண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் பகவான் அஷ்டமாதிபதி அதில் இருப்பதால் கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பார்கள். அதாவது கல்யாண வீட்டிற்கு விருந்தாளியாக போய், அந்த மாப்பிள்ளை நல்லவர் இல்லை என்பதை தெரிந்து திருமண பந்தம் முறியும் வேளையில் நீங்கள் மாப்பிள்ளையாக அமர்ந்து இராஜயோகமான வாழ்க்கை அமைவது போல், எனினும் குரு பகவான் (உங்கள் இராசியதிபதி 6இல் இருப்பதால் உங்களுக்கு பல எதிர்ப்புகள் பிரச்சனைகள் தோன்றும். அவற்றில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்வது உத்தமம். பாதகதிபதி புதன் பகவான் அதில் இருப்பதும் உத்தமம். நண்பர்களால் வந்த பிரச்சனைகளை எளிமையாக சமாளிக்க உதவும். புத்திசாலியை புத்திசாலித் தனத்தால் எதிர்ப்பீர்கள். வெற்றிக் கொள்வீர்கள்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 19 ஆம் தேதி இரவு மணி 1.47 க்கு மேல் 22 ஆம் தேதி பகல் மணி 12.06 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் மன கஷ்டம். கடன் பிரச்சனைகள் உருவாகும்.

வழிபட வேண்டி தெய்வம்:1. புத்தி மந்திரம்

"புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வ மரோகதா

அஜர்டயம் வாக் பருத்வம் சஹ நூமத் ஸமரணாந் பவதே" என்ற மந்திரத்தை 50 முறை பாராயணம் செய்யுங்கள். மாணவர்கள் தேர்வில் முதல் மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறுவார்கள்.

2. வியாழக்கிழமை சிவனை தரிசிக்க வியாபாரம் சிறக்கும்

ஸ்ரீ வரசித்தி விநாயகர் துணை ஸ்ரீ லட்சுமி வெங்கடேசபிரசன்ன

# முன்னோர்கள் கூறிய ஜோதிடத்தில் திருமணப்பொருத்தங்கள் சூட்சுமங்கள் பயிற்சி வகுப்பு

இறைவனிடம் அவர்கள் கேட்டுவந்த வரத்தைப் பொருத்து. தசப் பொருத்தம், ஜாதகப் பொருத்தும் மூலம் நல்ல தம்பதிகளை உருவாக்கும் சிறப்பான பயிற்சி வகுப்பு.

**பயிற்சி: 1** ஒவ்வொரு நட்சத்திரமும் கூறும் 360 பொருத்தங்களை காணும் முறைகள். 9 கிரகங்கள், 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள் கூறும் 12960 பொருத்தங்களை காணும் முறைகள்

**பயிற்சி: 2** தசப்பொருத்தங்கள் என்னும் பத்து பொருத்தங்களை பார்கும் போது கவனிக்கப்பட வேண்டியவைகள்

1. தினப் பொருத்த சூட்சுமங்கள்
2. கண சூட்சுமங்கள்
3. மகேந்திர சூட்சுமங்கள்
4. ஸ்ரீதீர்க்க சூட்சுமங்கள்
5. யோனி சூட்சுமங்கள்
6. இராசி சூட்சுமங்கள்
7. இராசி அதிபதி சூட்சுமங்கள்
8. வசிய சூட்சுமங்கள்
9. ரச்சு சூட்சுமங்கள்
10 வேதை சூட்சுமங்கள்
11. மத்திம துவித் ராசிகள்
12. அதம துவித் ராசிகள்
13. சுப பஞ்சக ராசிகள்
14. மத்திம பஞ்சக ராசிகள்
15. சுப சஷ்டக ராசிகள்
16. அசுப சஷ்டக ராசிகள்
17. சுப அஷ்டக ராசிகள்
18. அசுப அஷ்டக ராசிகள்
19. சுப நவ ராசிகள்
20. மத்திம நவ ராசிகள்
21. சுப துவாதச ராசிகள்
22. மத்திம துவாதச ராசிகள்


**பயிற்சி: 3** ஜாதகப் பொருத்தம் பார்க்கும்போது கவனிக்கக்கபட வேண்டியவைகள்

1. தோஷமில்லாத செவ்வாயும்
2. தோஷமுள்ள செவ்வாயும்
3. தோஷமில்லாத மூலா நட்சத்திரமும்
4. தோஷமுள்ள மூலா நட்சத்திரமும்
5. தோஷமில்லாத ஆயில்ய நட்சத்திரமும்
6. தோஷமுள்ள ஆயில்ய நட்சத்திரமும்
7. தோஷமில்லாத விசாக நட்சத்திரமும்
8. தோஷமுள்ள விசாக நட்சத்திரமும்
9. தோஷமில்லாத கேட்டை நட்சத்திரமும்
10. தோஷமுள்ள கேட்டை நட்சத்திரமும்
11. தோஷமில்லாத ராகுவும்
12. தோஷமுள்ள ராகுவும்
13. தோஷமில்லாத கேதுவும்
14. தோஷமுள்ள கேதுவும்
15. களத்திர தோஷ அமைப்பும்
16. புத்திர தோஷ அமைப்பும்
17. தசா சந்தி விபரமும்
18. ஏக தசை விபரமும்
19. லக்கின அமைப்புகளும்
20. ஆயுள் அமைப்புகளும்
21. வதை நட்சத்தர தோஷங்களும்
22. வைநாசிக நட்சத்திர தோஷங்களும்

## காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

| திருச்சியில் | பொள்ளாச்சியில் | சேலத்தில் | சென்னையில் |
|---|---|---|---|
| (93வது வகுப்பு)<br>**நாள்: 08.08.2015**<br>சனிக்கிழமை<br>**ரவி மினிஹால்**, கலைஞர் அறிவாலயம் அருகில், சத்திரம் பஸ் நிலையம், திருச்சி - 620 002.<br>**செல்: 96297 17671** | (94வது வகுப்பு)<br>**நாள்: 09.08.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஸ்ரீ பாலமுருகன் ஹால்,** 47-ஏ, கோவை ரோடு, பொள்ளாச்சி-2<br>**செல்: 96297 17671** | (95வது வகுப்பு)<br>**நாள்: 15.08.2015**<br>சனிக்கிழமை<br>**ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்** சுகவனேஸ்வரன் கோவில் அருகில், சேலம் - 636 001<br>**செல்: 96297 17671** | (96வது வகுப்பு)<br>**நாள்: 16.08.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஆஷா நிவாஷ் ரூட்லேண்டு கேட்,** 5வது வீதி, தாஜ்ஹோட்டல் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை 600 006,<br>**செல்: 96297 17671** |

**சேவை கட்டணம் ரூ. 1500/- மட்டுமே**
குறிப்பேடு, காலை, மாலை, தேனீர், மதிய உணவு உள்பட



நடைமுறை "சூட்சும" ஜோதிடர்

**Dr.G.பட்டாபிராமன்.Ph.d.,**

**தொடர்புக்கு: 96297 17671**

**கண்டிப்பாக தொலைபேசியில் முன்பதிவு அவசியம்**

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் 'திருமண தசப் பொருத்த சூட்சுமங்கள்' பாடபுத்தகம் இலவசமாக வழங்கப்படும்

# நவக்கிரகங்களின் நர்த்தனம்

# நலம் நல்கிடும் பரிவர்த்தனம் 2

### செவ்வாய் எனைய கிரகங்களின் பரிவர்த்தனையால் தரும் பலன்கள்

**செவ்வாய்+சூரியன்:** செவ்வாய் வீட்டில் சூரியனும், சூரியன் வீட்டில் செவ்வாயோ இடம் பெற்று பரிவர்த்தனை ஏற்பட்டால் அரசு வகையில் இராணுவம், காவல்துறை, மருத்துவத்துறை, நூதனமான கருவிகளை இயக்கும் துறைகளில் புகழ் பெறுவார்கள். அவ்வகை தொழில் தொடர்புகளில் ஜீவனம் நடைபெறும். கல், மண், பூமி கிரக விக்கிரய துறைகளில் பணி அமையும். விவசாய தொடர்பு, தந்தை வகை இரத்த பந்த உறவு உடலில் நல்ல திடகாத்திரமான தைரிய வீரிய பராக்கிரமமான பலம் ஏற்படும். இவர்களுக்கு நுண்ணறிவு உண்டு. எதையும் விரைவில் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு. ஆன்ம பலமிக்க பெற்ற இவர்கள் எதையும் துணிந்து செயல்படுத்துவார்கள் இந்த பரிவர்த்தனையானது மேஷம், மிதுனம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மீனம் போன்ற இலக்கினக்காரர்களுக்கு நல்ல பலனைத் தரும். இதில் மிதுனம், தனுசு, விருச்சிகம், மீனம் மற்ற கிரகநிலை பெறும் கடுமையான உழைப்பு, பலவகையான எதிர்ப்பு போட்டிகளிடையே நற்பலன் தரும்.

**செவ்வாய் + சந்திரன்:** செவ்வாய் இல்லத்தில் சந்திரனும், சந்திர இல்லத்தில் செவ்வாயும் உள்ள நிலையில் ஏற்படும் பரிவர்த்தனை உடலை பாதிக்கிறது. செயல்திறனைக் கெடுக்கின்றது. தாய் வகை தொடர்புகளில் விரோதத்தை ஏற்படுத்தும் உடன் பிறப்புகளின் ஒற்றுமையில் பிளவு உண்டாகும். தொழில் ரீதியாக அடிக்கடி இடமாற்றத்தைத் தரும். கடின உழைப்பின் மூலம் உயர்வை உண்டாக்குகிறது. அரசாங்க விரோத செயல்களில் ஈடுபடுத்தி செல்வம், செல்வாக்கை தருகிறது. தாய்க்கு நோய்கள் தரும் தாய் வழியில் வரும் சொத்துக்கு பங்கம் ஏற்படும். விருச்சிகம், மீனம், மேஷம், கடகம் போன்ற இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு அவர்கள் சிறப்புமிக்கவர்கள், செல்வாக்கு உடையவர்கள்.

**செவ்வாய்+புதன்:** செவ்வாய் வீடான மேஷம், விருச்சிகம் இல்லத்தில் புதன் இருக்க, புதன் இல்லமான கன்னி, மிதுனத்தில் செவ்வாய் இருககு புத்தி சாதுர்யம், தைரியம், மனோ பலத்துடன் வேகமாக செயல்படும் திறனையும், தொழில் வகையில் ஏற்படும் சின்ன, சின்ன பிரச்சனைகளுக்கும் கூட மற்றவர்களை கோபப்பட்டு தன்னிடையே அடக்கி ஆளும் திறனை காட்டுபவர்களாக இருப்பார்கள். இவர்கள் செய்யும்




நாடி ஜோதிடர்

**கே. சற்குருதாசன் ராமமூர்த்தி**

செல் : 94441 13777


தொழிலில் தனித்திறமை இருக்கும். இவர்களுக்கு இரும்பு, மின்சாரம், நெருப்பு, வீடுமனை நிலம், சம்பந்தமான வியாபார தொடர்புகள் சிறப்பைத் தரும். இவர்களில் பலர் அரசு வகையில், காவல் துறை, புலன் ஆய்வுத்துறை, ஆய்வக பரிசோதனை சிறப்பு காவல் துறை பிரிவில் நுண்ணறிவுடன் செயல்பட வைக்கும், அலைபேசி கொண்டு துப்பறியும் துறை, போன்றவற்றில் சிறப்பான வேகத்துடன், விவேகமாக செயல்படுவார்கள். நரம்பு, தோல், மார்பு, சம்மந்தப்பட்ட வகையில் இரத்தத்தோடு தொடர்புடைய பிரச்சனைகள் தொல்லை தரும். உடன் பிறப்புகளின் ஒற்றுமை குறையும். தாய் வழி பாதிப்பு ஏற்படுத்தும்.

**செவ்வாய் + குரு:** செவ்வாய் இல்லங்களில் குருவும், குருவினுடைய வீட்டில் செவ்வாய் குடிகொண்டால் புத்திர தோஷத்தைத் தரும். கர்ப்ப சேதங்களை ஏற்படுத்தும். இந்த பரிவர்த்தனை பெண்கள் ஜாதகங்களில் ஏற்படும்போது பெரும் பிரச்சனைகளைத் தரும். இவர்களோடு சனி, இராகு, கேது, சூரியன் சேர்ந்து விட்டால் குழந்தைகள் பிறப்பு அவர்களின் ஆதரவு எல்லாம் ஏமாற்றமாக இருக்கும். இந்த பரிவர்த்தனை அரசு வகை நிர்வாகங்களுக்கு, உயர்ந்த பதவிகளுக்கு, தைரிய வீரியத்துடன் செயல்படும். காரியங்களுக்கு துணைபுரியும், பல மொழிகளில் தேர்ச்சி இவைகளுக்கு இந்த பரிவர்த்தனை சிறந்தது. பொருளாதார வளர்ச்சி என்பது அவ்வளவு எளிதல்ல. இவர்கள் பணப்புழக்கம் அதிகம் உள்ள தொழிலில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு எந்திர தொழில் வகைகளும், இரசாயனம், கெமிக்கல், மெடிக்கல், பொறியியல், கல், மண் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புகள் சிறப்பை தரும்.

**செவ்வாய்+சுக்கிரன்:** செவ்வாய் இல்லங்களில் சுக்கிரனும், சுக்கிரன் இல்லங்களில் செவ்வாயும் இருக்கும் நிலையில் ஏற்படும் பரிவர்த்தனை, நெருப்பும் பஞ்சும் இருப்பதைப் போல் ஆகும். இவர்களுக்கு பெண்களை பார்த்த மாத்திரத்திலேயே கரைந்து

விடுவார்கள். தன்னை மறந்து செயல்படும் நிலையைத் தரும். பெண்கள் ஜாதகத்தில் இருக்கும் போது கணவனுடன் எப்போதும் சேர்ந்து இருப்பதையே விரும்புவார்கள். காமத்திற்கு காரணமான சுக்கிரன், இரத்தத்தின் அதிபதி செவ்வாயுடன் பரிவர்த்தனை அடையும் போது எப்படி எல்லாம் காமத்தை தூண்டுவது, தூண்டி அதன் மூலம், எப்படி இன்பம் பெறுவது என்பதில் அதிக நாட்டத்தைத் தரும். இந்த பரிவர்த்தனையில் சனி, இராகு, புதன், தொடர்பு ஏற்பட்டால் காதலில் சிக்குண்டு தாடி வளர்த்து தன் வாழ்க்கை நிலையை மாற்றிவிடும். இவர்கள் கலை, ஆடம்பரம், மக்களை ஈர்க்கும் கவர்ச்சியான தொழிலில் தொடர்புகள், மதி, மயக்கம், பானங்கள், கீழ்த்தரமான தொழிலில் ஈடுபட வைக்கும். இவர்கள் கிருமிகளால் இரத்த அணுக்கள் பாதிப்பில் பால்வினை நோய்க்கும் ஆளாக நேரிடும். பெண்கள் ஜாதகத்தில் கணவன், மனைவி ஒற்றுமையைத் தரும். ஏனென்றால் நாடி ஜோதிடத்தில் சுக்கிரன் மனைவியை குறிக்கும், செவ்வாய் கணவனை குறிக்கும். எனவே வெறும் செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை நல்ல பலன்களையே தரும். பெண்கள் ஜாதகத்தில் இந்த பரிவர்த்தனை ஏற்பட்டால் வீட்டோடு மாப்பிள்ளை அடையும் வாய்ப்பு ஏற்படும். ஆண்கள் ஜாதகத்தில் 7ஆம் அதிபதி சுக்கிரன் அல்லது செவ்வாயாக இருந்தாலும் அதாவது மேஷ இலக்கினம், ரிஷப இலக்கினம், துலா இலக்கினம் அல்லது விருச்சிக இலக்கின ஜாதகர்கள். வீட்டோடு மாப்பிள்ளை ஆகி விடுவார்கள். எந்த ஒரு இலக்கின ஜாதகர்களாக இருந்தாலும் வாழ்க்கையில் ஒரு கவலை, பிரச்சனை, துன்பம் கடல் அலையாக அரித்துக் கொண்டு தான் இருக்கும்.

**செவ்வாய்+சனி:** அடாவடி செயலுக்கு முக்கிய பங்கு வகிக்கும். சனி, செவ்வாயின் பகை தன்மை இங்கு அதிகமாக வேலை செய்யும். அதற்மமும், தர்மமும் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்யும். இவர்களது குடும்ப நிலை, உடன்பிறப்புகள், தொழில் சரியாக அமையாது. பிரச்சனைகள் இருந்துக் கொண்டே இருக்கும். ஆனால் பூர்விக சொத்துக்கள் இவர்களுக்கு ஏராளமாக இருப்பதை பார்க்கலாம். விஷ சம்பந்தப்பட்ட ஆயுதம், இரும்பு, உருக்கு சம்பந்தப்பட்ட தொழில்கள், கழிவு சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புகள் பிறரை அடக்கி பயமுறுத்தி வேதனைகளுக்கு உள்ளாக்கி சொத்து சேர்க்கும். பணம் தேடும் நிலைகளை தோற்றுவிக்கிறது. இவர்கள் குஸ்தி போடும் பயில்வான்களாகவும், கராத்தே, குங்பூ, களறி போன்ற சண்டை பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவராகவும், முரட்டுத்தனமான வேலைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் இருப்பதை பார்க்கலாம். இவர்களுக்கு போலீஸ் துறை, இராணுவத்துறை, ஆகாய மார்க்கமாக செயல்படும் விமான துறை, நூதன கருவி, உபகரணங்களை இயக்கும். நுட்பமான துறைகள் சிறப்பைத் தரும். இவர்களுக்கு விபத்து அடிக்கடி, அடிதடி, கலவரம், மறைமுக எதிரிகளால் ஆபத்து அணு ஆயுதங்களால் பயம் போன்றவைகளை ஏற்படுத்தும்.

சனியும், செவ்வாயும் பரிவர்த்தனை பெறும்போது இவர்களோடு எந்த வகையிலும் இராகு, கேது, சூரியன், சுக்கிரன் இணைவு ஏற்படும் போது ஆபத்து வர வாய்ப்பு உள்ளது. அரசியல் பிரவேசம் ஆபத்தைத் தரும். மிதுன இலக்கினத்திற்கு 9, 11 பரிவர்த்தனையும், கடக இலக்கினத்திற்கு 10,7 பரிவர்த்தனையும், விருச்சிகத்திற்கு 1,3 பரிவர்த்தனையும், தனுசு இலக்கினத்திற்கு 5,3 பரிவர்த்தனையும் சிறப்பைத் தரும். உயர்ந்த பதவிகளைத் தரும். மறைமுக எதிரிகளால் வீழ்ச்சியைத் தருகிறது. மற்ற இலக்கினங்களுக்கு சிறப்பை தருவதில்லை. இப்படி பரிவர்த்தனை பலன்கள் தரும் செவ்வாய்க்கு ஜோதிடத்தில் உறவு முறைகள் என்னவென்று பார்த்தால் கணவன், மைத்துனன், மருமகன், சித்தப்பன், சகோதர, சகோதரிகள், பன்னிரு பாவங்களில் உறவுமுறை என்று பார்க்கும் போது கால புருஷ இலக்கினமாகக் கருதப்படும். மேஷம், என எடுத்துக் கொண்டால் ஜாதகரை குறிக்கும் காலபுருஷ இலக்கினமான மேஷத்திற்கு 8ஆம் வீடான விருச்சிககத்திற்கு மாமியாரின் அக்காள், மாமியாரின் தங்கை மகள், சித்தி, என இலக்கினத்திற்கும், 8ஆம் வீடுக்கும் சொந்தமானது இந்த உறவுகள். பெண் ஜாதகத்தில் அதே 10ஆம் வீடு ஜாதகியையும், 8ஆம் வீடு மாமியாரின் அண்ணன், மாமியாரின் தங்கை மகனைக் குறிக்கும்.

### செவ்வாயின் அடிப்படை குணாதிசயங்கள், செயல்பாடுகள் அது தரும் பண பலன்கள்.

அவற்றிற்கு சொந்தமான உறவுகள், தொழில்கள் என எல்லாவற்றையும் கடந்த மாதம் நாம் பார்த்தோம் இனி அவற்றை சில உதாரண ஜாதகங்கள் கொண்டு அவை தந்த உயர்வு தாழ்வுகளை பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | 6.9.59 ஆண் | | |
| | | | சூரி புத சுக் |
| ல / சனி | குரு | சந் | செவ் ராகு |

**உதாரணம் 1:** விருச்சிகத்தில் குரு தனித்து இருந்தால் அவர்கள் வாழ்க்கையில் அயராது உழைத்து போராடி வாழ்க்கையில் முன்னேறுவார்கள் அதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஜாதகர். தனது 17வது வயதில் அரசு துறையான B.S.N.L.இல் தற்காலிக பணியில் சேர்ந்து S.S.L.C.யை முடித்தவுடன் பிறகு பணிக்கு சென்று கொண்டே P.U.C.மற்றும் B.Sc., என்று தனது படிப்பை மாலை நேர கல்லூரியில் பயின்றார். பின்பு பத்து வருட போராட்டத்திற்கு பின் 1985இல் பணியில் நிரந்தரம் செய்யப்பட்டார். பின் பணியில் பதவி உயர்வுக்காக படித்து படித்து இன்று அதிகாரியாக பணிபுரிந்துக் கொண்டு இருக்கிறார் சொந்த வீடு, வாகனம், இரண்டு மூன்று இடங்களில் வீட்டு மனைகள், இரண்டு பெண் குழந்தைகளில் மூத்த பெண்ணுக்கு ஊர் போற்றும் வகையில் சீறும் சிறப்பாக திருமணம் செய்து தந்து பேரன், பேத்தி எடுத்து மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார். மேலும் தனது

அயராது உழைப்பால் இன்று ஜோதிடம் அக்குபஞ்சர், தொடுவர் மருதுவம், மலர் மருத்துவம், சுஜேக், இயற்கை அவஸ்தைகள் மருத்துவம், பிராணிக் ஹிலிங், மனோவசியம் என்று இவை அனைத்தும் சித்தர் வழிபாட்டால் சித்தன ஆகியோடு செய்துக் கொண்டு இருக்கிறான்.

**உதாரணம் 2:** இந்த ஜாதகிக்கு திருமணம் 2008ஆம் ஆண்டு ஜனவரியில் நடந்தது இதுவரை குழந்தை பாக்கியம் இல்லை. மேஷ செவ்வாய் களத்திரஸ்தானாதிபதி ஆகி 7க்குடையவர் விருச்சிகம் அதன் அதிபதி செவ்வாய், தாம்பத்திய உறவுக்கு அதிபதி அவர் சயன ஸ்தானாதிபதியும், 12ஆம் இடமான கட்டில் உறவை குறிக்கும் மேஷத்துக்கும் அதிபதியும் ஆட்சியாக தன் வீட்டில் அமர்ந்து கணவனின் விந்துவில் உயிரணுக்களை சாகடித்து அங்கு அமர்ந்த இராகு. மேலும், பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் என்று பார்க்கும்போது சிம்ம இராசிக்கு 9ஆம் இடம் என்ற மேஷம் ஆகும். அந்த அதிபதி இராகுவுடன் இணைவு அதனால் குழந்தை பேற்றை தரவில்லை. இலக்கினத்திற்கு 9ஆம் இடம் மகரம் அங்கு புத்திர காரகன் ரிஷப, இலக்கினத்திற்கு 5க்குடையவன் புதன் அதனினும் வக்கிரம் பெற்று இராகுவின் பிடியில் உள்ளது என எல்லா வகையிலும் குழந்தை பேற்றை தடுத்து விட்டது. ஆனால் இந்த கிரக அமைப்புகளை எல்லாம் மாற்றி குழந்தை பேற்றை தரவல்லது சித்தர் வழிபாடு, ஜீவ சமாதி வழிபாடு என எடுத்துரைத்து உள்ளேன். இனி அவர்கள் முயற்சி அவர்களுக்கு பலன் தரும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி புத சுக் | செவ் ராகு | ல | |
| | 3.4.85 பெண் | | |
| குரு | | | சந் |
| | | சனி கேது | |

**உதாரண ஜாதகம் 3**: இந்த சிம்ம இலக்கின ஜாதகிக்கு 4க்கும் 9க்குரிய செவ்வாய் உச்சம் பெற்று 6இல் அமர்ந்ததால் இவர் வாழ்க்கையில் இன்று பெரும் போராட்டத்திற்கிடையே வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார். கணவனை இழந்து, உடன் பிறந்த சகோதர, சகோதரிகளாலேயே இவருக்குரிய சொத்தை அபகரிக்கும். நோக்கத்தால் இவர் மீது வழக்கு தொடர்ந்து உள்ளார்கள். இதற்கு காரணம் சகோதர ஸ்தானாதிபதியும், சகோதர காரகனும் சேர்ந்து எதிரி ஸ்தானமான 6இல் நின்றது. நாடி ஜோதிடத்தில் ஜாதகியை குறிக்கும் கிரகம் சுக்கிரன் கணவனை குறிக்கும் கிரகம் செவ்வாய் இவர்கள் இருவரும் இலக்கினத்திற்கு 6இல் இராசிக்கு 12இல் அமர்ந்து இந்த ஜாதகியின் கணவனை மரணத்திற்கு ஆளாக்கி இவரை விதவை ஆக்கிவிட்டது. இராகு அது இலக்கினத்திற்கு 2இல் அமர்ந்து குடும்பத்தை சிக்கல் ஆக்கிவிட்டது. இந்த விளைவுகளுக்கு காரணம் சுக்+செவ்+இராகு ஆகும். நாடியில் எல்லா கிரகங்களுக்கும் 1,5,9 பார்வை உண்டு.

| | | | |
|---|---|---|---|
| புத கேது | | | |
| சூரி சந் | 26.2.60 பெண் | | |
| சுக் செவ் | | | ல |
| குரு சனி | | | ராகு |

1) சுக்+இராகு = விதவை
2) செ+இராகு = கணவனின் மரணம்

4க்குரியவன் செவ்வாய், 10க்குரியவன் சுக்கிரன் என இலக்கினத்திற்கு பொறுப்பேற்று அதே சுக்கிரன் இராசிக்கு 4க்குரியவராகவும், செவ்வாய், 10க்குரியவராக வந்து இருப்பது வியப்பு ஆதல் உண்மை. இது தான் நவகிரகங்களின் நர்த்தனும், பரிவர்தனும் ஆகும். அடுத்து சுக்+செவ்+இராகு (உச்ச செவ்வாய் ) என்ன செய்தது என்று ஓர் உதாரண ஜாதகம் மூலம் பார்ப்போம்.

**உதாரண ஜாதகம் 4:** இந்த ஜாதகரின் இலக்கினம் இராகு, என இரண்டும் விருச்சிகம் அதன் அதிபதி செவ்வாய் உச்சம் பெற்று மகரத்தில் அது 3ஆம் இடம் ஆகும் இந்த 3ஆம் இடம் கைகளை குறிக்கும் இது கைதிறமையையும் மற்றவரிடம் கையேந்துவதையும் குறிக்கும். இவர் இன்றுவரை அடுத்தவர் உழைப்பில், திருமணத்திற்கு பின்பு தாய் பின் மனைவியின் தயவில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| சனி | ராகு | | |
| | 1.12.67 ஆண் | | |
| செவ் | | | குரு |
| | ல சூரி சந் | புத கேது | சுக் |

செவ்வாய் இராகுவை பார்த்ததால் குடி பழக்கத்திற்கு அடிமை ஆகி அதன் மூலம் பல சிக்கல்கள். 7ஆம் அதிபதி சுக்கிரன் ஆகும் அது பாவத்திற்கும் அதிபதி. மனைவியை குறிக்கும் கிரகமும், சுக்கிரன் அது அமர்ந்த இவர் இலாப ஸ்தானமான 11இல் எனவே திருமணத்திற்கு பின் சொந்த வீட்டுடன், வேலைக்கு செல்லும் பெண் மனைவியாக அமைந்து சந்தோஷமாக வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார். இவருக்கு திருமணம் 40 வயதில் நடந்தது. அதற்கு காரணம் 7ஆம் அதிபதியும் அதுவும் இரண்டு பாவஅதிபதி, இலக்கினத்திற்கும், இராசிக்கும், மனைவியை குறிக்கும் கிரகம் என மூன்று வழிகளில் சனி சுக்கிரனை பார்த்ததால் கால தாமத திருமணம் ஆனால் இதுவரை இரண்டு குழந்தைகளைப் பெற்று பலவித சிக்கல் இருந்தாலும் பிரியாமல் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு காரணம் இலக்கினாதிபதியான செவ்வாய், 7ஆம் அதிபதி சுக்கிரன் இருவரும் திரிகோண பார்வையில் இருப்பதால், சுக்கிரன் நீச்சம் அதன்பின் இந்த ஜாதகரின் மனைவிக்கு துன்பம் தாயின் பென்ஷன் பணத்தில் வாழ்ந்தார். இலக்கினத்தில் சந்திரன். இது தாயை குறிக்கும். 4ஆம் இட அதிபதி சனி அவர் 5இல் எனவே இவர் சுகமாக வாழ்ந்தார். சனி + சந் பார்வை தாய்க்கு துன்பத்தை தந்தது. அடுத்ததாக உச்ச செவ்வாய் மேஷம், விருச்சிகத்தின் சொந்தமாகி அது விளையாடிய விளையாட்டைபார்ப்போமா?

தொடரும்...

# குளிகன் (மாந்தி) கிரக உதயம் - பலன் விளக்கம்

ஜாதகத்தில் சூட்சுமப் பலன்களை அறிவதற்கு "குளிகன்" எனும் மாந்தி கிரகம் தான் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் "தூமாதி பஞ்ச கிரகங்களும்" முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஒரு ஜாதகத்தில் இலக்கினபலம் அறிவதற்கும், ஆயுள் பலம் அறிவதற்கும் "குளிகன்" (மாந்தி) மிகவும் இன்றியமையாதக் கிரகமாக விளங்குகிறது. ஜாதகத்தில் இக்கிரகத்தினை எவ்வாறு அடைப்பது என்பதையும், அக்கிரகம் அளிக்கும் பலன்களையும் இக்கட்டுரையின் மூலம் அறிவோமாக.

பகலில், இரவில் ஜனித்த ஜாதகருக்கு "மாந்தி" கிரக உதயம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஞாயிறு | இரவி உதையாதி தொடங்கி | 26 நாழிகை |
| திங்கள் | இரவி உதையாதி தொடங்கி | 22 நாழிகை |
| செவ்வாய் | இரவி உதையாதி தொடங்கி | 18 நாழிகை |
| புதன் | இரவி உதையாதி தொடங்கி | 14 நாழிகை |
| வியாழன் | இரவி உதையாதி தொடங்கி | 10 நாழிகை |
| வெள்ளி | இரவி உதையாதி தொடங்கி | 6 நாழிகை |
| சனி | இரவி உதையாதி தொடங்கி | 2 நாழிகை |
| ஞாயிறு | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 10 நாழிகை |
| திங்கள் | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 6 நாழிகை |
| சனி | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 6 நாழிகை |
| செவ்வாய் | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 2 நாழிகை |
| புதன் | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 26 நாழிகை |
| வியாழன் | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 22 நாழிகை |
| வெள்ளி | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 18 நாழிகை |
| சனி | இரவி அஸ்தமானத்திற்கு பின் | 14 நாழிகை |

உதாரணமாக 1957ஆம் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் புரட்டாசி 4ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி அளவில் பிறந்த ஒரு ஜாதகருக்கு 'மாந்தி' அமர்ந்த நிலையைக் காண்போம்.

வெள்ளிக்கிழமை இரவு 18 நாழிகைக்கு மாந்தி உதயமாகிறது. அதனை 6ஆல் பெருக்க (18 X 6) 108 ஆகும். இந்த டிகிரியோடு சூரியன் நின்ற டிகிரி 154 எண்ணைக் கூட்ட 262 டிகிரி வரும்.



பிறப்பு இரவு என்பதால் 180 பாகையைக் கழிக்க (262—180=82) 82 டிகிரி வரும். இதனை மேஷம் முதல் எண்ண மேஷம், ரிஷபம் நீங்கி



ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
செல் : 94431 67046

மிதுனஇராசியில் 22 பாகையில் மாந்தி அமர்கிறது. மாந்தி நின்ற இடத்தின் அதிபதி இலக்கினத் திரிகோணத்தில் (1,5,9 ஆகிய இடங்களில்) நின்றால் ஜாதகர் சிறப்பான வாழ்வை அடைவார் என்பது விதி.

மேலும் ஸ்புட கணிதத்தில் "குளிகன்" ஸ்புடம் மிகவும் முக்கியமானதாகும்.

பிராணஸ்புடம் ஜன்ம இலக்கின ஸ்புடத்தை 5ஆல் பெருக்கி வருகின்ற இராசி, பாகை, கலையுடன் குளிகன் ஸ்புடத்தை கூட்ட வருவது பிராண ஸ்புடமாகும்.

இந்த பிராண ஸ்புடத்தில் கோச்சார சனி வரும் போது ஜீவாரிஷ்டம், அம்மை, வைசூரி இடர் கண்டம், மாரக வேதை, கருமபயம் இவை உண்டாகும்.

தேகஸ்புடம் — ஜனனகால சந்திர ஸ்புடத்தை 8ஆல் பெருக்கி அவ்வாறுப் பொருக்க வரும். இராசி பாகை, கலையுடன் "குளிகன்" ஸ்புடத்தைக் கூட்ட வருவது தேக ஸ்புடம் ஆகும்.

இந்த தேகஸ்புட இராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் போது தேக மெலிவு, அழகுக் குறைவு, அங்கஹீனம் போன்றக் கெடுதல்களைச் செய்வான்.

மிருத்யு ஸ்புடம் — குளிகன் ஸ்புடத்தை 7ஆல் பெருக்க வரும் இராசி, பாகை, கலையுடன் சூரிய ஸ்புடத்தைக் கூட்ட வருவது மிருத்யு ஸ்புடமாகும். இந்த மிருத்யு ஸ்புடஇராசி, பாகை கலைகளில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரம் செய்யும் போது அபமிருத்து, கண்டாதி தோஷங்களைக் காட்டும்.

ஆயுள் ஸ்புடம் — பிராண ஸ்புடம், தேக ஸ்புடம், மிருத்யு ஸ்புடம் ஆகிய மூன்று ஸ்புடங்களையும் கூட்டி வரும் மொத்தம் ஆயுள் ஸ்புடமாகும். இந்த இராசி, பாகை கலைகளில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரம்

செய்யும் போது "மாரகம்" ஏற்பட இடமுண்டு கண்டாதி தோஷங்களைக் காட்டும்.

மேலும் பகலில் ஜனித்த ஜாதகனுக்கு குளிகன் நின்ற இராசி திரிகோணங்களில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரம் செய்யும் காலம் மாரக தோஷம் உண்டு. இரவில் ஜனித்த ஜாதகனுக்கு குளிகன் நின்ற இராசிக்கு சப்தம இராசித் திரிகோணங்களில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரம் செய்யும் காலம் மாரக தோஷம் உண்டு.

அடுத்து குளிகன் நிற்கும் பாவ பலன்களையும் அறிந்து கொள்வோம்.

| | |
|---|---|
| இலக்கினம் | : ரோகி, தழும்புள்ளோன், ஞானி, சாஸ்திரம் அறிவான். |
| 2ஆம் இடம் | : தனநஷ்டம், வாக்கு சாதுர்யம் இல்லாத வன்கலகப்பிரியன், எல்லாரிடமும் விவாவதம் செய்வான், தோஷ வாக்கு பலிதம். |
| 3ஆம் இடம் | : விரகம், கர்வம், மதம் முதலிய குணங்கள் உள்ளவன், கோபி, சகோதர அரிஷ்டன், தனார்சித சமர்த்தன். |
| 4ஆம் இடம் | : பந்துஜன விரோதி, தன வாகன ஹீனம், மாதுரு வம்ச க்ஷயகரன் |
| 5ஆம் இடம் | : பாப புத்தி, புத்திர தோஷி |
| 6ஆம் இடம் | : விநோத வித்தையுடையவன் சூரன், புத்திரவான் |
| 7ஆம் இடம் | : கலகம், வெகு ஸ்திரீபோகம் |
| 8ஆம் இடம் | : 32 வயதுக்கு மேல் ஆயுள் இருப்பின் நோய் உடையவன் (ரோகவான்) ஜனத்து வேஷி, மிருத்யு தோஷம் உடையவன். |
| 9ஆம் இடம் | : குருஹீனன், புத்திரக்கிலேசன் |
| 10ஆம் இடம் | : அனாசாரன், மானஹீனன் |
| 11ஆம் இடம் | : தேஜஸ்வி, புத்திரவான். |
| 12ஆம் இடம் | : தீனன், விரையம், அவனிருந்த இராசி கிரக திசாபுத்தி காலங்களில் இரச வாதம், கள்ள நோட்டு, பணம் இரட்டிப்பு போன்ற மோசடிக்காரர்களால் பொருள் விரையம் உண்டாகும். |

குளிகனுக்கு குருபகவான் சம்பந்தமோ, பார்வையோ ஏற்படின் தோஷ பரிகாரம் உண்டு. மாந்தியுடன் 7ஆம் அதிபதி சேர்ந்தால் களத்திர தோஷமாகும். மணவாழ்க்கையில் குழப்பங்களும், போரட்டங்களும் நிகழும். இருதார அமைப்பும் உண்டாகும்.

மாத்ரு காரகனான சந்திரன், சகோதர காரகனான செவ்வாயுடன் மாந்தி சேர்ந்திருப்பது நோய், நொடிகளையும், பணக்கஷ்டங்களையும், உறவு முறிவையும் ஏற்படுத்தும்.

மாந்தியுடன் சேர்ந்த கிரக தெசை புத்தி காலங்களில் திருஷ்டி, கண்ணேறு, அலர்ஜி (உடலில்) மருந்து மாத்திரைகளால் எதிரிகளால் தொல்லைகள் உண்டாகும். மாந்தி கிரக வழிபாடு செய்தால் மட்டுமே தோஷங்கள் கட்டுக்கு அடங்கி இருக்கும்.

ஓம் தத் ஸத்

# திருமணப் பொருத்தம் கணிப்பில் முரண்பாடுகள்

**மு.மதேஸேவரன்** MICAS, **செல்: 99423 45724**

திருக்கணித பஞ்சாங்க முறைப்படி, உரோகிணி — திருவாதிரை — பூசம் — மகம் — அஸ்தம் — திருஓணம் — இவை 6ஆம் ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே நட்சத்திர மானால் உத்தமம் — அஸ்வினி — கிருத்திகை — மிருக சீரிஷம் — புனர் பூசம் — உத்திரம் — சித்திரை — அனுஷம் — உத்திராடம் இவை 8ஆம் மத்திபம், மற்றவை பொருந்தாது.

ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே இராசியானால் புருஷன் நட்சத்திரம் முந்தியதும், ஒரே நட்சத்திரமானால் பாதம் முந்தினதும் சுபம், மற்றவைகள் பொருந்தா என்பதுடன், கூடுதல் விதியாக மிருகசீரிஷம், மகம், சுவாதி, அனுஷம் இந்நான்கும் பெண் அல்லது பிள்ளை நட்சத்திரமாக இருந்தால் பொருத்தம் பாராமல் விவாகம் செய்யலாம் என்றும் உள்ளது.

வாக்கிய பஞ்சாங்கங்கள் இரண்டிலேயே தினப் பொருத்தம் விளக்கம் மாறுபட்டு முரண்படுகின்றது. பாம்பு பஞ்சாங்கத்தில் உள்ள கூடுதல் விளக்கம் ஆற்காடு வாக்கிய பஞ்சாங்கத்தில் இல்லை.

ஏன் இந்த முரண்பாடு? இரண்டு வாக்கிய பஞ்

சாங்க விளக்கங்களில் எதை எடுத்துக் கொள்வது. எது சரியானது என்று எவர்கூறுவது. திருக்கணிதம் தான் சரியானதல்ல என்பது வாக்கியக்காரர்களின் வாதம் எனும் போது, வாக்கியத்திலேயே ஏன் இந்த முரண்பாடு, இரண்டும் இரண்டு விதமாகக் கூறி குழப்புகின்றதே.

வாக்கிய பஞ்சாங்க அடிப்படையில் ஆற்காடு உபயோகப்படுத்துவர்களுக்குப் பாம்பு பஞ் சாங்க கூடுதல் விளக்கம் தெரியவராது எனும் நிலையில் இவர்களின் தினப்பொருத்த தேர்வு குறைபாடு உடையதாகத் தானே இருக்கும்.



திருக்கணித பஞ் சாங்கங்களில் ஏறத்தாழ தினப் பொருத்த விளக்கம் ஒரே விதமாகவே குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த முரண்பாடுகளில் எது சரி? என்று நாம் கடைப்பிடிப்பது.

யோசித்துப் பாருங்கள் வாசகரே. ஆக மொத்தத்தில் தினப்பொருத்தம் பற்றிய சரியான முடிவுக்கு வரமுடியாதபடி பஞ் சாங்கங்கள் முரண்பட்டு நம்மை குழப்பி, நம்பி வரும் வாடிக்கையாளர்களுக்கும், சரியான வழிமுறையைக் காட்ட முடியாத நிலை ஏற்படுகின்றன.

**கணப்பொருத்தம்:** இதிலும் முரண்பாடுகளுக்கு குறைவில்லை. ஆற்காடு வாக்கியம் குறிப்பிடுவது, ஸ்திரி புருஷர்களுக்கு நட்சத்திரம் ஒரே கணமாக வந்தால் உத்தமம்.

பெண் தேவகணம் புருஷன் மனுஷ கணம் என்றாலும் விவாகம் செய்யலாம். ஸ்திரி இராக்ஷஸம்— புருஷன் தேவகணமும், மானுஷகணமும் என்றால் கூடாது. ஸ்திரி மனுஷகணம் — புருஷன் இராக்ஷஸகம் எனில் விவாகத்துக்கு பொருந்தும்.

28ஆம் நெம்பர் பாம்பு பஞ்சாங்கம் இப்படி குறிப்பிடுகின்றது. தம்பதிகள் இருவருக்கும் ஒரே கணமானாலும், தேவகணமும் மனுஷ கணமானாலும் உத்தமம். ஆண் இராக்ஷஸமும் — பெண் தேவகணமானாலும் மத்திமம். ஸ்திரி இராக்ஷஸ கணமும் — புருஷன் மனுஷ கணமானாலும் விவாகம் செய்யக் கூடாது.

பெண் நட்சத்திரத்திலிருந்து 14க்கு மேல் புருஷ நட்சத்திரம் இருந்தால் பெண் இராக்ஷஸ கணமானாலும் தோஷம் இல்லை. விவாகம் செய்யலாம் என்பது சிலர் கருத்து (இந்த சிலர் யார்? என்ற குறிப்பு இல்லை பொதுவாக சிலர் அவ்வளவு தான். இது சப்பைக் கட்டான குறிப்பாகவே உள்ளது)

திருக்கணித பஞ்சாங்க விளக்கம் — ஸ்திரி — புருஷர்களுக்கு ஒரே கணமானாலும், ஸ்திரி மனுஷ கணமும் — புருஷன் தேவகணமானாலும் உத்தமம். ஸ்திரி தேவகணமும், புருஷன் மனுஷகணமும் என்றால் மத்திமம், ஸ்திரி இராக்ஷஸ கணமும் — புருஷன் தேவ கணமும், ஸ்திரி மனுஷ கணமும் — புருஷன் இராக்ஷம கணமும் — ஸ்திரி இராக்ஷம கணமும் — புருஷன் மனுஷ கணமும் எனில் பொருந்தா.

இதன் பலன் கிரிடானுகூலும், சோபனகரம் என்று உள்ளது. கணப்பொருத்த விஷயத்தில் உள்ள முரண்பாடுகளைக் கவனியுங்கள். இவற்றில் எது சரியானது. எதை நாம் பின்பற்றுவது ஆக கணப்பொருத்த விஷயத்திலும் முரண்பாடு காணப்படுகின்றது. கணப் பொருத்தமோ தினப்பொருத்தமோ இல்லையெனில் தள்ளுபடி தான்.

மாற்று யோசனையே இல்லை என்பதையும் மறுக்காமல் கூறி முரண்பட்ட கருத்துகளில் எது சரியானதென்று எடுத்துக் கொண்டு உண்டு — இல்லை என்று நிர்ணயம் செய்து முடிவெடுப்பது.

**யோனிப் பொருத்தம்** — இதிலும் குழப்பங்களுக்கு பஞ்சமில்லை வாசகரே. ஆற்காடு வாக்கியம் குறிப்படுவது ஆண் — பெண் யோனிகள் பகையாக வரக்கூடாது. இரண்டு புருஷயோனிகள் கூடாது. பெண் ஸ்திரி யோனியும், புருஷன் ஆண் யோனியும் உத்தமம், மாறி இருந்தாலும் கூடாது. இதன் பலன் அந்நியோன்னிய சிநேகம் என்பதாக உள்ளது.

பாம்பு பஞ்சாங்கத்தில் ஆண்—பெண் நட்சத்திரங்கள் யோனிப்பகை இல்லாவிடில் யோனிப்பொருத்தம் உண்டு. முன் நட்சத்திரம் ஆண் மிருகமாகவும்—பின் நட்சத்திரம் பெண் மிருகமாகவும் அறியவும் (அவ்வளவு தான் விளக்கம் புரியவில்லை என்று கூறக்கூடாது. புரியவில்லை என்றாலும் புரிந்து விட்டது போல எண்ணி வருபவரை நன்றாக குழப்பலாம் முடிந்தவரை) தம்பதிகளுக்கு ஏகஜோதி யோனியானால் உத்தமம். சுபம்.

வெவ்வேறு யோனியானால் மத்திமம் (வெவ்வேறு யோனி எனில் கூட சேர்க்கலாம் என்று கூறப்படுகின்றது) பகை (வைர ஜாதி)

யோனியானால் அதமம் நீக்கத் தக்கது. என்ன வாசகரே முரண்பாடுகளைக் கண்டீர்களா? தலையை பிய்த்துக் கொள்ளலாம் என்று தோன்றுகின்றதா? இன்னமும் முரண்பாடுகள் தொடர்கிறது.

**இராசிப்பொருத்தம்** — இதிலும் முரண்பாடுகள் சூப்பர் தான். ஆற்காடு வாக்கியத்தில் குறிப்பிடுவது பெண் இராசி முதல் புருஷன் இராசி வரை எண்ணினால் 9 இராசிக்கும் மேலாயின உத்தமம். 8ஆம் இராசி கூடாது. பலன் வம்சாவளி ஆண் விருத்தி உண்டாகும் பின்வருமாறு உள்ளது.

குடும்ப விருத்தி தம்பதிகள் ஒரே இராசியாயினும், ஒருவருக்கொருவர் சம சப்தமமாயினும், பெண் இராசிக்கு புருஷ இராசிக்கு 6க்கு மேற்படினும் உத்தமம், 3—4 மத்திமம், 2—5—6—8 பொருந்தாது.

6க்கு மேற்படி உத்தமம் என்று கூறிவிட்டு, 6க்கு மேல் உள்ள 8வது பொருந்தாது என்றால் எங்கேயோ இடிக்கின்றதே. ஆனால் என்ன செய்ய இதன்படி கூறுபவர்களை எதிர்த்துக் கேள்விகள் கேட்க முடியாது.

திருக்கணித பஞ்சாங்களில் கூட ஒன்றுக்கொன்று இந்த இராசிப் பொருத்த விஷயங்களில் முரண்படுகின்ற நிலை உள்ளது. வாசன் பஞ் சாங்க விளக்கம் பின்வருமாறு உள்ளது.

பெண்ணும் — பிள்ளையும் ஒரே இராசியாயினும், பெண் இராசிக்கு புருஷன் இராசி 6க்கு மேற்படினும் உத்தமம், 3—4ஆம் இராசியாதில் மத்திமம் 2—5—6—ஆம் இராசியாகில் அதமம், 8ஆம் இராசியாகிற் கூடாது இதன் பலன் வம்ச விருத்தி என்று பாம்பு பஞ்சாங்க விளக்கமே இதிலும் மாற்றம் இல்லாமல் உள்ளது.

ஸ்ரீனிவாசன் திருக்கணித பஞ்சாங்கம் சற்று கூடுதல் விவரத்தை அளிக்கின்றது. இராசிப் பொருத்தம் — வம்சவிருத்தி — மன ஒற்றுமை, ஸ்திர இராசிக்கு புருஷ இராசி 2வது இராசியாகில் மரணம்.

3வது துக்கம், 4வது ஏழ்மை, 5வது வைதவ்யம், 6வது புத்ர நாசம், 7வது உத்தமம், மாங்கல்யம் ஆயுள் விருத்தி, 8வது அதிக புத்ரலாபம், 9வது சௌபாக்யம், 10வது ஐஸ்வர்யம், 11வது சுகம், 12வது ஆயுள் விருத்தி, இவைகளில் கால விதானம் எனும் சாஸ்திரத்தில் 2, 5ஆம் இடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு உள்ளது.

ஷஷ்டாஷ்டமும் — பெண்ணின் இராசிக்கு புருஷ இராசி 6வது இராசியானால் அது சஷ்டாஷ்டகம் பொருந்தாது. புத்திரநாசம், இதற்கு ஒரு விதி விலக்கு. ஸ்திரி இராசி ஒற்றைப் படை இராசியாகி, ஆண் இராசி இரட்டைப் படையானால் பொருந்தும், இது சுப கடாஷ்டகம் என்றாகும்.

| பெண் இராசி | ஆண் இராசி |
|---|---|
| மேஷம் | கன்னி |
| மிதுனம் | விருச்சிகம் |
| சிம்மம் | மகரம் |
| துலாம் | மீனம் |
| தனுசு | ரிஷபம் |
| கும்பம் | கடகம் |

இவைகள் சுப சஷ்டாஷ்டமமாகும்.

மேலும், இராசியாதி பரஸ்பர நட்பு, சமக்கிரகங்களாக இருந்தாலும், ஆண், ஆண் இராசியாகவும் — பெண், பெண் இராசியாகவும் இருந்தாலும் சுப சஷ்டாஷ்மமே என்று "தேவ கேரளம்" எனும் மூலநூல் கூறுகின்றது என்ற அளவில் கூடுதல் விளக்கம் உள்ளது. ●


## அன்பு வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

உங்கள் ஆர்வத்திற்கு ஏற்ப, "குருவருள் ஜோதிடம்" 3,4 மற்றும் 5ஆம் ஆண்டு இதழ்கள் எங்களிடம் விற்பனைக்கு கிடைக்கும். மேலும் தேவைப்படுவோர் எங்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இனி வரும் இதழ்களும் தடைபடாமல் உங்கள் இல்லம் தேடி வர சந்தா தொகையை மட்டும் எங்களுக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

3ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.230/-
4ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-
5ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-

கூரியர் செலவு உட்பட (தமிழ்நாடு மட்டும்) மற்ற மாநிலங்களுக்கு கூரியர் செலவு மாறுபடும்

கீழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுக்கு தெரியப்படுத்தினால் உடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

R.RADHA - C. RAJU, Indian Bank (Chennai, Royapettah)
SB A/c. No. 426681768

ஆசிரியர், செல் : 97104 21880

# இலக்கினாதிபதி நின்ற ஸ்தான பலன்

ஓம்.சிவகுமார் , செல்: 92452 691700

ஜாதகத்திற்கு உயிர்நாடி இலக்கினம் என்ற தலைப்பில் இலக்கின வகைகளையும் இலக்கினத்து அதிபதியான கிரகம் 12 பாவங்களில் அமரும் பலனைப் பார்ப்போம். பொதுவாக உயிர்நாடியாக விளங்கும் இலக்கினமும், அதன் அதிபதியும் பலம் பெறும்போது தான், ஜாதகர் பலமுள்ளவர் ஆகிறார். மாறாக இலக்கினாதிபதி பலம் இழந்தால் பலவீனர் ஆகிறார்.

இலக்கினாதிபதி இலக்கினத்தில் ஆட்சி பெறும்போது, ஜாதகர் சந்தோஷ சுகங்களுடன், ஆயுள் வரை சிறப்பான வாழ்வைப் பெறுவார், நல்ல தொழில் வாய்ப்பும், ஸ்தல யாத்திரை, தெய்வ தரிசனம், ஆன்மிக யோகமும், கௌரவமான வாழ்க்கையும், சொந்த பந்துகளுடன் கூடியும் வாழ்வார்.

இலக்கினாதிபதி 2இல் அமர்ந்தால் — பேச்சால் மற்றவரை கவரும் தன்மை, வாக்கு வன்மை, கல்வி — கேள்வி — ஞானம் முதலியவற்றில் மேன்மையுடன் திகழ்வார். மனதில் சாந்தியும், குடும்ப விருத்தியுடன் இருப்பார். செல்வம் சேரும் நிலையும், செல்வாக்குக் கூடும் நிலையும் அடைந்து சக சௌகர்யங்கள் நிறைந்து இருப்பார்.

இலக்கினாதிபதி 3இல் அமர்ந்தால் — உடன்பிறந்த சகோதர, சகோதரிகளை ஆதரிக்கும் தன்மையும், அவர்களுடன் கூடி வாழும் நிலையையும் கொண்டவர். கலையார்வம் இருக்கும். சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்வார். இருப்பினும் மனதில் ஏதோ ஒரு சிறு குறை இருக்கும். இலக்கினாதிபதி 4இல் அமர்ந்தால் — நல்ல அழகான வீட்டை உடையவர். நல்ல குடும்பத்தை ஏற்பவர். சொந்தங்களை மதிக்கத் தெரிந்தவர். தாயாரின் மேல் கரிசனம் கொண்டவர். பட்டப்படிப்பு பெறும் தகுதியும், சுய சிந்தனையும் கொண்டவர். சுகபாக்கியம் பெற்று, நல்ல சொத்துகளுடன் வாழ்வார்.

இலக்கினாதிபதி 5இல் அமர்ந்திருந்தால் — ஆண் வாரிசுகளைக் பெறும் தகுதி பெறுவார். அந்த வாரிசுகளால் நன்மை அடைவர். பூர்வ புண்ணியப் பலம் பெறுவதால் மகான்களின் தரிசனம் பெறுபவர். நல்ல காரியங்களில், தெய்வக் காரியங்களில் மன நாட்டம் கொண்டவர்.

இலக்கினாதிபதி 6இல் அமர்ந்திருந்தால் — ருண, ரோக, சத்ரு — ஸ்தானம் எனப்படுவதால் ருணம் எனும் கடன் தொல்லையும், ரோகாமனும் வியாதியும், சத்ரு எனும் விரோதிகளின் தொல்லையும் அனுபவிப்பவர். பொது வாழ்வில் நிம்மதியற்ற வாழ்வை பெற்றவர்.

இலக்கினாதிபதி 7இல் அமர்ந்திருந்தால் — மனைவி அமையும் வகையில் யோகம் பெறுபவர். ஆனால், பெண்கள் வகையில் சில கெட்ட பெயர் எடுப்பவர். குடும்ப பொறுப்பை மனைவியிடம் கொடுத்துவிட்டு தன் போக்கில் வாழ்பவர். நண்பர்களின் ஆதரவைப் பெறுபவர்.

இலக்கினாதிபதி 8இல் அமர்ந்திருந்தால் — சமுதாயத்தோடு ஒன்றி வாழாமல் மறைந்து வாழ்பவர். குடும்பத்தைக் கஷ்டப்பட்டு நடத்தும் தன்மை கொண்டவர். பரம்பரைக் கௌரவம் பாதிக்கக் கூடியவர். உடலில் ஏதேனும் ஒரு குறையோ, அங்கஹீனமோ உடையவர்.

இலக்கினாதிபதி 9இல் அமர்ந்திருந்தால் மிகப்பெரிய 'யோகம்' என்றே சொல்லலாம். முன்னோர்களின் பெயரை உயர்த்தும் பண்பாளர். மறைந்தப் பித்ருக்களின் ஆசி பெற்றவர். தகப்பனாரின் அன்புக்கும், ஆசிக்கும், பாத்திரமானவர், சத்தியம், தர்மம், நேர்மை, தூய்மை, இவற்றின் வழிச் செல்லும் சிறந்த மாமனிதர். புகழான வாழ்க்கையும் வசதியான குடும்பத்துடன் வாழ்பவர்.

இலக்கினாபதிபதி 10இல் அமர்ந்திரந்தால் — தொழில் துறையில் அனுபவமும், நல்ல முன்னேற்றமும் அடைவர். குடும்பத்தைப் பொறுப்பாய் நடத்துபவராகவும், வேலையாட்களை மதிப்பவராகவும் இருப்பார். அரசு, அரசியல் துறை வல்லுனர்கள் போற்றப்படுவர். நல்லவர்கள் சகவாசமும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடும் கொண்டவர். வண்டி, வாகனங்களுடன் சொந்த வீட்டில் வாழக்கூடியவர்.

இலக்கினாதிபதி 11இல் அமர்ந்திருந்தால் — இது இலாபஸ்தானம் என்பதால், எடுக்கும் காரியங்களில் வெற்றி பெறுபவர். இலாபகரமாகத் தொழிலைச் செய்பவர். மூத்த சகோதரிகளால் ஆதாயம் பெறுபவர். அவர்கள் பெயரில் முதல் போட்டு இலாபம் அடைவர். நல்ல ஆரோக்கியமும், ஆயுளும் கொண்டவர்.

இலக்கினாதிபதி 12இல் அமர்ந்திருந்தால் வாழ்க்கையில் விரையங்களை அதிகம் பார்ப்பவர். பிறந்த எல்லையை விட்டு வெளியே வாழக்கூடியவர். சயன, போஜன சுகம் இல்லாமல் போகும். பட்டுத் தொழில் நடத்துவதால் பெரும் ஆதாயம் இருக்காது. அடிக்கடி சோம்பல் தலைதூக்கும்.

மேற்சொன்ன கருத்துக்கள் பொதுப்பலனே. கிரகங்களின் நட்பு, பகை, உச்சம் என்ற பலத்தின் அடிப்படையில் பலன்கள் மாறும். அதிலும் மேற்படிக் கிரகத்துக்குக் குருபார்வை (அ) சேர்க்கை இருப்பினும், சுபர் சேர்க்கை இருப்பினும் பலன்கள் மாறும்.

# 'ஜோதிடம்' - நோய்களைக் கண்டறியும் ஞானக்கண்ணாடி

கு.வ.தங்கராசனார் , செல்: 94428 94699

நோய்களைக் கண்டறிய நவீன மருத்துவத்துறை வளர்ந்து இருக்கிறது. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி, மற்றும் அலோபதி ஆகியத் துறைகள் இருக்கும் போது ஜோதிடத்தின் பயன் என்ன? எனக் கேட்கலாம்.

"வேதத்தின் கண்" ஜோதிடம் என்பது மனித உடலே வேதம் எனக் கொண்டால், அந்த மனித உடலில் சிரசு பிரதானமாகும் அந்த சிரசிலும், கண்கள் தான் மிக முக்கிமாகும். கண்களே உலகைக் கண்டு களிக்க ஆதாரமாகும். வேதத்தின் கண் தான் "வேதத்தின் கண்" என நாம் அறியவேண்டியது.

வேதம், தோன்றியது மனிதனுக்குத்தான் என்பதும் வெளிப்படையான உண்மையாகும். இதை சித்தர், முனிவர், ஞானி, யோகி, தவசி — பக்தர், எனப் பல்வேறு மனித உடல் தாங்கி வந்த அற்புத ஆதாரம் இருக்கிறது.

கண்களைக் கொண்டு உலகைக் காண்பது போல், வேதத்தின் கண்ணாகிய ஜோதிட சாஸ்திரத்தைக் கொண்டு தேகத்தின் தத்துவ விதிகளைத் தலை முதல், கால்வரை வெளிப்பாகங்களிலும், உள் உறுப்புகளிலும், காலத்தால், திசை, புத்தி, அந்தர மற்றும் கோள் சாரகணக்கின்படிக் காலத்தை அறிந்து உடல் பாகத்தின் நோய்த்தாக்கம் ஏற்படுவதை உறுதியாக முன் கூட்டியும் அறியும் ஞானக் கண்ணாடி தான் ஜோதிடம்.

உதாரண ஜாதகம்

கிட்னி சிறுநீரகம் பாதிக்கப்பட்ட ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | | ல / ராகு | |
| | இராசி 10/11.9.1983 சனி இரவு 12.05 | | செவ் |
| | | | சுக் சூரி |
| | கேது குரு | சந் சனி | புத (வ) (அ) |

| | | | |
|---|---|---|---|
| கேது | சுக் | | |
| சந் புத செவ் | அம்சம் சேலம், ஆண் | | |
| | | | |
| சனி | சூரி | குரு | ல / ராகு |

திசை, புத்தி, அந்தர மற்றும் கோள் சாரகணக்கின் படிக் காலத்தை அறிந்து உடல் பாகத்தின் நோய்த் தாக்கம் ஏற்படுவதை உறுதியாக முன் கூட்டியும் அறியும் ஞானக் கண்ணாடி தான் ஜோதிடம்.

இராகு திசை இருப்பு 08.04.28 நாள் நடப்பு திசை புத்தி, சனி திசை, சனி புத்தி, ஆரம்பம் நடப்பு வயது 26 ஜாதகத்தைக் கொண்டு வந்தவர் கேட்ட கேள்வி திருமணம் செய்யும் காலம் வந்துவிட்டதா? எப்போது திருமணம் நடக்கும்?

ஜாதகரின் திசை புத்திப்படித் திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு என்றும், கூறினோம்.

இரண்டாவது கேள்வி — ஜாதகர் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார். என்ன காரணம்? நோய் எப்போது குணமாகும்? என்ன நோய்? எனக் கேட்டார்.

ஜாதகத்தை ஆராய்ந்த போது, ரிஷப இலக்கினம், இலக்கினப்புள்ளி நீச்சம் பெற்று இராகுவுடன் கூடி நீச்சம் பெற்ற செவ்வாயின் சாரம் பெற்று உள்ளது. சந்திரன் நீச்சம் பெற்ற இராகுவின் சாரம் பெற்று உள்ளது. செவ்வாய் நீச்சம் பெற்று சந்திரன் மற்றும் சனியைப் பார்க்கிறது. சனி திசை சனி புத்தி நடப்பதால் சனியும் நீச்சம் பெற்ற இராகுவின் சாரம் பெற்று நீச்சம் பெற்ற செவ்வாயின் பார்வையை பெற்றும் இருக்கிறது.

சந்திரன் மற்றும் சனி நின்ற அதிபதியம், இராகு நிலை அதிபதியும் பகை பெற்று கேதுவின் சாரம், கேது நின்ற அதிபதி செவ்வாய் நீச்சம். குரு நின்ற அதிபதி செவ்வாய் நீச்சம். இவ்வாறு இருப்பதால் சனி பகவான் உச்சப் பாகையில் இருந்தும் இலக்கின புள்ளி சந்திரன்+சனி சேர்க்கை தரும்.

இலக்கினத்தின் 6ஆம் பாவமான படியால் நோய் ஸ்தானமும், திசை புத்தியும் 6இல் நின்று நீச்சம் பெற்ற இராகுவின் சாரம் பெற்ற படியால் சனியைக் காட்டிலும் இராகு பலம் வாய்ந்தவர் என்பதும் சனி திசை ரிஷபம், துலாம், சுக்கிரன் ஆகியவர்க்கு பலன் தர வேண்டும்.

எனவே சனி நின்ற சுவாதி நட்சத்திர அதிபதி இராகு நீச்சமானபடியால் சனியின் உச்ச பலன் வேலை செய்யாது. மேலும் சுவாதி நட்சத்திரம், உடல் கூறு உள் உறுப்புகளில் சுவாதிஸ்டானம் எனும் சிறுநீரகம், குடல் வால், அண்டவாதம் பெண்களுக்குக் கர்ப்பப்பை

ஆகியன பாதிப்படையும். இதையே கிட்னி பால்ட் இருக்கிறது. இதை சரி செய்த பின்பு திருமணம் செய்யலாம் எனவும் கூறினேன். இதுவே திருவாதிரை நட்சத்திர சாரம் பெற்றுத் திசை நடந்தால் இரைப்பை, நுரையீரல், பகுதிகள் பாதிக்கும் என்றும், சதயம் நட்சத்திரமானால் கெண்டை கால் வலியும் தசை நார்கள் கெட்டும், புற்று நோயும் ஏற்படும் என்ற தேக தத்துவ ஜோதிட விதிகளைக் கவனமாகப் பார்த்தால் நிச்சயம் தெரியும்.

சாதாரண தலைவலி, காய்ச்சல் வயிற்றுவலி தான் வருகிறது என்றும் சில சமயம் வாந்தி மயக்கம் வருவதாகவும் கூறினார். திருமண விஷயத்தில் கவனம் செலுத்தாமல் உடல் ஆரோக்கியம் பற்றி முழு கவனம் செலுத்தும்படியும், நல்ல மருத்துவமனையில் நல்ல மருத்துவரைக் கண்டு ஆலோசனைப் பெற வேண்டும் என்றும் கூறினேன்.

கோவை மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்த போது சிறுநீரகம் இரண்டும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், உடனே ஒரு சிறுநீரகம் அறுவை சிகிச்சை மூலம் மாற்ற வேண்டும் என்றும் இல்லையேல் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் மரணம் ஏற்படும் என்றும் கூறியதாகவும் பிறகு ஒரு மாதம் கழித்து எனக்கு தகவல் கொடுத்தனர். நோய்களைக் கண்டு அறியும் ஞானக்கண்ணாடி காலக்கண்ணாடி ஜோதிடமாகும்.

# கன்னிச் சனி

## செய்யப் போவது என்ன?



ஜோதிடர் 'ராஜரிஷி'
எல்.என்.விஜயசாரதி ஐயங்கார்
செல்: 93446 05966/ 99407 42319

நீதிமான் — ஆயுள் காரன் — அள்ளிக் கொடுப்பதில் வள்ளல் யார் எனில்....? அவரே சனிபகவான். சிம்ம இராசியில் இருந்து கன்னி இராசிக்கு இனி சஞ்சாரம் செய்ய இருக்கிறார். இக்கட்டுரை இராசி பலன் பற்றியது அல்ல. மாறாக உங்கள் ஜனன ஜாதகத்தில் கன்னி இராசியில் மட்டும் சில கிரகங்கள் அமைந்து இருக்கலாம். அக்கிரகங்களின் பாகை — கலையைச் சனிப் பகவான் கடக்கிறப் போது உண்டாகும் பலன்களை அறிவோம்.

சந்திரன் நீங்கலாக இதர எட்டு கிரகங்களை, நடப்பு கோச்சார சனி தீண்டுவதால் ஏற்படப் போகும் பலா — பலன்களை இனிக் காண்போம். கன்னியில் சூரியன் சம பலத்தில் அமர்கிறார். இந்த இராசியில் நட்பு, பகை, ஆட்சி, உச்சம் சூரியனுக்கு இல்லை. சூரிய பகவான் கன்னி இராசியில் இருக்கிறார் எனில், அதன் பலன்கைப் பார்ப்போம்.

சூரியன் நின்ற 5 பாகை கலைக்கு முன், பின்னாக சனி சஞ்சரிக்கும் காலம் ஏற்படும். அப்போது, உங்னள் உயர் அதிகாரிகளின் ஆணைப்படி நடந்து கொள்ளல் வேண்டும். அதிகப்படியான வேலையும், பணி மாற்றம் உண்டாகும். ஏற்கனவே பார்த்த உயர் வேலையில் இருந்து, மனம் இறுக்கமான பணி ஆற்றுகிற சூழல் மீண்டும் ஏற்படும். உங்களின் ஈகோ, முன்கோபம இவற்றைத் தவிர்க்கவில்லை எனில் வேலையை இழக்க நேரிடும்.

அரசு சம்பந்தமான தொல்லைகள் ஏற்படும். வருமானவரி சோதனை, நீதிமன்றத்தில் பாதகமான தீர்ப்பு, அபராதத் தொகை கட்டல், உரிமம் (சான்றிதழ்) கிடைக்கத் தாமதம், தடை, அரசு பண உதவிகள் உரிய காலத்தில் கிடைக்காமல் போவது போன்ற பலன்கள் ஏற்படும். அரசு விதிகளுக்குப் புறம்பான பணிகளில் ஈடுபடுகிற போதும், கையூட்டு (இலஞ்சம்) வாங்குகிற போதும், சிக்கி கொண்டு கைதாக வேண்டியநிலை ஏற்படும்.

செய்தொழிலின் வருமானம் குறையும். தனக்கு யாரோ செய்வினைகள் செய்து விட்டதாக மனம் குழம்பும், போலி மந்திரவாதிகள், பூசாரிகள் இவர்களிடம் பணத்தைப் பறிகொடுத்துப் பரிதவிக்கிற சூழ்நிலை உருவாகும். பெற்று வளர்த்த தந்தை உடனும், தந்தை ஸ்தானத்தில் உள்ள பெரியவர்கள் உடனும் பரிவுடன் பேசுங்கள், இல்லையேல் உறவுகளில் பாதிப்பு ஏற்படும்.

சூரியன் ஆத்மகாரகன் என்பதால் உடல்நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கவனக்குறைவினால் உடல் நலம் குறையலாம்.



அரசு சம்பந்தமான பத்திரங்களில் கையெழுத்து இடும் போதும் பிறருக்காக முன் ஜாமின் போடும் போதும் சிந்தித்து, சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படவும். இல்லையேல் மன அமைதி முறிந்து விடும்.

கன்னி இராசியில் செவ்வாய் அமர்ந்து இருக்கிற போது, சனி, செவ்வாய் உடன் இணைவது சிறப்பு இல்லை. திசா — புத்திகள் அச்சமயத்தில் வலிமை அற்று இருக்கும் போது, வாகன விபத்துக்கள் ஏற்படலாம். அவ்வாகன விபத்து மூலம் வாகன நட்டம், உடல்நல பாதிப்பு, பொருள் சேதம், வழக்கு சம்பந்தமான தொல்லைகள் போன்ற சிரமப்பலன்கள் ஏற்படும். நிதானம் தேவை.

வீடு, நிலம் விவசாயங்களில் திடீர் மாறுதல்கள் ஏற்படும். வீண் வம்புகள், வழக்குகள் தேடி வரும். கூடுமானவரை ஒதுங்கிப் போவது நல்லது. சமாதானமாகப் போவது அதைவிட நல்லது. சிலருக்கு அறுவை சிகிச்சை ஏற்படலாம். போதிய ஓய்வு சிறந்த மருத்துவ ஆலோசனைகளுடன் நடந்துக் கொண்டால், ஆரோக்கியத்திற்குப் பங்கம் வராது, துயர் தராது.

நெருப்பு, மின்சாரம், கொதிக்கின்ற எண்ணெய், வல்கனைசிங், இரசாயனம், எரிவாயு, இவற்றில் பணிபுரிபவர்கள் பக்குவமாக கவனமாகச் செயல்படவும். கவனக் குறைவினால் பாதிப்புகள் வரவும் வாய்ப்பு உண்டு. உடன்பிறப்பு முன்னிட்டு வேண்டாத செலவுகள் தேடி வரலாம். காவல் துறையினருடன் வீண் மோதல் வேண்டாம். பணிந்துப் போனால் நிம்மதி நிலை பெறலாம்.

கன்னி இராசியில் உள்ள புதன் உடன் சனி இணைகிற போது அதற்கு உரிய பலன்களைப் பார்ப்போம். புதன் பகவான் கல்விக்குக் காரகன், மாணவர்களின் கல்வி முன்னேற்றம் சிறிது பாதிப்பு அடையலாம். கல்வித் துறையில் அரசு புது விதிகளை உருவாக்கலாம். மனம், அறிவின் ஆற்றலில் குழப்பமான சூழ்நிலையை தவிர்க்கலாம். சிலருக்கு நரம்புத் தளர்ச்சி உண்டாகலாம்.

எழுத்தாளர்களுக்கு, புத்தக விற்பனையாளர்களுக்கும் போதிய வாய்ப்பும், வருமானமும் குறைவு படலாம். தாய்மாமன் உறவில் பாதிப்பும், அவர்களைப் புரிந்துக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகலாம். ஆராய்ச்சியாளர்கள் பணியில் தொய்வும், உரிய பாராட்டும் கிடைக்காமல் போகலாம். அதனால் மனதில் உற்சாகம் குறையலாம்.

இறுக்கமான சூழ்நிலைகள் விலக, தியானம், யோகப் பயிற்சி செய்யலாம். ஜோதிட விதிப்படி நடந்துக் கொள்ளுதல், உரிய பரிகாரம் செய்தல் மேன்மையைத் தரும். மனநோய் பாதிப்பு எனில், உரிய மருத்துவ ஆலோசனைகள் பெறுவதில் தவறு இல்லை. தற்கொலை எண்ணம், நம்பிக்கை இழத்தல், போன்றச் சிந்தனைகளைத் தூக்கி குப்பையில் எறிய வேண்டும்.

கணிணி, சி.ஏ.அக்கவுண்டண்ட் பிரிவுகளில் பணிபுரிவோர் கவனம் உடன் செயல்படவும். தொழில் அதிபர்கள் வரவு, செலவு கணக்குகளைத் தெளிவாக வைத்துக் கொள்ளவும். இல்லை எனில், தணிக்கையின்போது தண்டம் கட்ட நேரிடும். வங்கியில் பணிபுரிவோர் கவனம் உடன் செயல் படவும் . இல்லை எனில், பணியில் பிரச்சனைகள் ஏற்படும்.

கன்னி இராசியில் குரு நட்புடன் அமர்ந்து இருப்பார். சனிப்பகவான் குருவுடன் இணைகிற போது, மனம் நிம்மதியற்ற நிலை ஏற்படும். மேலும் கடுமையாக உழைக்க நேரிடும். குரு பலம் இழந்து இருந்தால் உழைப்பு தான் வீணாகும். வீடு திடீர் மாற்றம், வேலையில் எதிர்பாராத மாற்றம் ஏற்படும். கவலைகளை அதிகம் சுமந்தால் இதய நோய் தான் உண்டாகும்.

மற்றவர்களுடன் வீணாக ஏன் தகராறு செய்ய வேண்டும். விட்டுக் கொடுத்து, நளினமாகப் பேசி நினைக்கிற காரியத்தை சாதித்துக் கொள்ளலாமே குழந்தைகளின் உடல்நல பாதிப்பிற்கானப் பணம்

செலவாகத்தான் செய்யும். பிள்ளைகள், தன் மனம் போன போக்கில் நடந்து கொள்வார்கள். அச்சமயத்தில் கோபம் கொண்டால் குடும்பத்தில் புயல் தான் மிஞ்சும்.

கன்னி இராசியில் சுக்கிரன் நீசமாக இருப்பார். அதாவது சுக்கிரன் பலம் இழந்துப் பரிதாபமாகக் காட்சி அளிப்பார். சுக்கிரன் — சனி இணைகிறபோது தான் தேவை இல்லாத வில்லங்கம். விவகாரம் பெண்களால் வந்து சேரும். பெண்களிடம் மிக எச்சரிக்யைாகப் பழகவில்லை எனில், பழியும். பாவமும் உங்கள் வீட்டுக் கதவை தேடி வந்து தட்டும்.

மனைவி சொல்லே மந்திரம் என்று அனுசரித்துப் போகவும். தலையணை மந்திரத்தை கேட்பது போல் கேட்டு, சந்தர்ப்பம் சூழ்நிலைப் பார்த்து நடந்துக் கொள்ளவும். மனைவி வழியில் அவர்களின் உறவு வழியில் வீண் செலவுகள் வாசற்படியில் காத்துக் கிடக்கின்றன. கூடுமானவரை செலவுகள் செய்து, உங்களைப் பாதிக்காத வண்ணம் நடந்துக் கொள்ளவும்.

கன்னி இராசியில் சனி நட்புடன் இருப்பார். ஏற்கனவே அங்கு இருக்கும் சனியுடன், கோச்சார சனி இணைகிற போது, (30—31ஆம் வயது) உறவினர்களால் ஏமாற்றம். மாற்றம், தொழில் துறையில் மாற்றம் ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை தேடி வரும். இருக்கிற பதவியில், பதவி உயர்வு ஏற்படும். திருமணக் கால யோகம் கூடி வரும்.

செல்வ நிலை உயரும். சனி முதல் சுற்று எனில், முதல் தரமான யோகம் உண்டு. 2வது சுற்று எனில் (வயது 58) சில தீமைகளைத் தரும். பணி ஓய்வு காலத்தில் தான், பணத் தேவைகள் அதிகம் ஆகும். சிலருக்குத் தேர்தலில் தோல்வி பதவியில் அவமானம் ஏற்படல், இதனால் இவர்களைப் பணியின் இருந்து விலகுவார்கள்.

கன்னி இராசியில் இராகு நட்புடன் அமர்ந்து இருப்பார். இராகுவுடன், சனி இணைகிற போது அவ்வப்போது பணத்தட்டுப்பாடுகள் ஏற்படும் தொழில் அல்லது உத்யோகத்தில் ஏற்படும் தொல்லைகளால் மனதில் வீண் கவலைகளும், மன இறுக்கமும் ஏற்படும். அதனால் மனநோய் ஏற்படலாம். சிலருக்குத் தனிமை வாட்டலாம். ஆலயம் சென்றால் அமைதி பெறலாம்.

கன்னி இராசியில் கேது நட்புடன் இருப்பார். கேது — சனி இணைகிற போது, கல்வித் தேர்வில் தடைகள் உண்டாகும். கடன் பிரச்சினைகள் மற்றும் வேறு கவலைகளால் சிலர் வீட்டை விட்டு ஓடிப் போவார்கள். குலகௌரவமான, பாதிப்பான காரியம் செய்தல், அடியாட்களுடன் பலரை மிரட்டி சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடக் கூடாது. ஆன்மிக வழியே நல்வழி.

●

# பட்சிகளும் நட்சத்திரங்களும்




கோட்டையூர்
**என். சிவசுப்பிரமணியம்**
**செல்: 94431 37989 / 95005 96309**

**1. வ**ட்டமிடும் வல்லூறும் 2. சீறும் ஆந்தையும் 3. கரையும் காகமும் 4. கொக்கரிக்கும் கோழியும் 5. நடனமிடும் மயிலும் ஆக — ஐந்து பட்சிகளும் 27 நட்சத்திரங்களைப் பங்கு கொண்டு செயல்புரிகின்றன.

ஒருசில நூல்களில் திருவோணத்தை கோழிக்கு உரியது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் பல பட்சி நூல்களில் திருவோண நட்சத்திரம் மயில் பட்சி தான் என்று குறிப்பிடப்பட்டு உள்ளன.

இந்த நட்சத்திர பட்சி வரிசையில் ஒரு சில நூல்களுக்கும் — புராதன நூல்களுக்கும்



திருவோண நட்சத்திரத்தில் தான் சற்று மாற்றங்கள் உள்ளன. மற்றபடி எந்த மாறுதல்களும் இல்லை.

குறிப்பாக — அகஸ்தியர், காகபுசுண்டர், உரோமரிஷி — போன்ற முனிவர்கள் எல்லாம் திருவோணம் மயில் பட்சியை சேர்ந்ததாகத் தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அசுவனி முதல் மிருகசீரிஷம் வரை (5 — நட்சத்திரங்களும்) வல்லூறு பட்சிக்கு உரியது. இது பூமி தத்துவம் ஆகும். வானத்தில் உயர பறக்கும் வல்லூறு பட்சியானது கருடன் உடைய இனம் ஆகும்.

வானில் பறக்கிற போதும், மண்மேல் உள்ள உயிர் இனங்களைக் கூர்ந்து நோக்கும் சக்தி பெற்றது. ஆ என்ற எழுத்தோடு தொடர்பு உடையது. ஆதலால் வல்லூறு பட்சியை நம் ரிஷிகள் பூமி தத்துவத்தில் வடிவு அமைத்தார்கள்.

திருவாதிரை முதல் பூரம் வரை (6நட்சதிரங்களும்) ஆந்தை பட்சிக்கு உரியது. இது நீர் தத்துவம் ஆகும். இரவு நேரத்தில் அதிகமாக கண்விழித்து இருக்கும்.

நீர் தொடர்புடைய இடத்தில் அதிகமாக வாசம் செய்வதால், இ" என்ற எழுத்தோடு தொடர்பு உடைய ஆந்தை பட்சி ஆதலால், இதற்கு ரிஷிகள் நீர் தத்துவத்தில் ஆந்தையை வடிவமைத்து இருக்கிறார்கள்.

உத்திரம் முதல் விசாகம் வரை (5 நட்சத்திரங்களும்) காகம் பட்சிக்கு உரியது. இது நெருப்பு தத்துவம் ஆகும். "உ" என்ற எழுத்தின் வடிவம் என்னவோ, அதுவே காகத்தின் வடிவம் ஆகும். நெருப்பின் தத்துவத்தின் அடையாளமாக, ஆண்டவன் அருட் பெருஞ்ஜோதியாகப் பிரகாசிக்கிறார்.

எந்த காரியத்தையும் துவங்குவதற்கு முன் 'உ' சிவமயம் என்று தான் தொடங்குகிறோம். இதனால் நெருப்பின் தத்துவத்தை உள் அடக்கிய உருவம் தான் காகபட்சி ஆகும்.

ஆண்டவன் எல்லாருக்கும், எம்மதத்தினருக்கும், ஜோதி வடிவில் உள்ளதுபோல், காகம் தன் உணவைத் தான் மட்டும் உண்ணாது, தன் இனத்தையும் வரவழைத்து கரைந்து உண்ணும் ஒற்றுமையைக் குறிக்கும் தன்மை உடையது.

காகம், நம் முன்னோர்களையும் நினைவூட்டக் கூடியது. ஆதலால் தினந்தோறும், குறிப்பாக அமாவாசை நாளில் காகத்திற்கு உணவு இட்ட, பின் உண்கிறோம்.

காகம் உணவு, நீர் அருந்தி பறக்கிற போது, நம் முன்னோர்களின் ஆன்மாவும் சாந்தி அடைகிறது. அவர்களின் நல்ஆசி நமக்கு கிடைக்கிறது. காகம் பட்சி 5 பட்சிகளுக்கு நடுவில் அமைந்து உள்ளது.

அனுஷம் முதல் உத்திராடம் வரை (5 நட்சத்திரங்களும்) கோழி பட்சிக்கு உரியது. இது காற்று தத்துவம் ஆகும். இருள் விலகும் அதிகாலை விடியலில், மனிதர்களை உறக்கத்தில் இருந்து துயில் எழுப்பும் கோழி முருகனின் கொடியில் இடம் பெற்றதால், முருகபெருமான் சேவற் கொடியோன் என்று பெயர் பெற்றார்.

காற்று என்றாலே சித்தர்கள், ஞானிகள் ஏன் உலக மக்கள் அனைவருக்கும் உரியது சுவாசம் தான். அந்த சுவாசத்தில் பிறந்தது தான வாசி யோகம். மற்றும் பிரணவ மந்திரம், தியானங்கள் யாவும் இதன் அடிப்படையில் தான் இருக்கின்றன. காற்று தத்துவத்தோடு 'எ' என்ற எழுத்து தொடர்பு கொள்கிறது. ஒரு கோழியின் வடிவமும் இது போன்று இருக்கும்.

திருவோணம் முதல் ரேவதி வரை (6 நட்சத்திரங்களும்) மயில் பட்சிக்கு உரியது. இது ஆகாய தத்துவத்தை சேர்ந்தது. 'ஒ' என்ற எழுத்துக்கு உரியது. மயில் விரித்த தோகையைப் பார்த்தால் ஓங்கார வடிவம் உடையதாக இருக்கும். அதனால் தான் அவர் முருக பெருமானுக்கு வாகனமாக அமைந்தார்.

நம் எண்ணம், இறை சிந்தனை, வெளி இதுவே ஆரம்பமும் முடிவு இல்லாமல் இருக்கக்கூடியது ஆகாயம். சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்கு நேராக ஒரு சிறுகண்ணாடி அமைத்து ஆகாயத்தை காட்டுவது போன்று வடிவமைத்து இருக்கிறார்கள்.

இந்த 'ஒ' பட்சிக்கும் எழுத்துக்கும், வானத்திற்கும் தொடர்பு உள்ளது. 5வது பூதமாக இந்த மயில் பட்சி 6 நட்சத்திரங்களை உள் அடக்கி ஆகாய தத்துவமாக செயல்படுகிறது.

ஆகாயத்தில் மழை மேகங்கள் திரண்டு வருகின்ற போது, மழை வருவது தெரிந்து மயில் ஆடும், ஆகாயத்திற்கும், மயிலுக்கும் அதிக தொடர்பு உள்ளது. அதனால் இந்த பட்சியை ரிஷிகள் வடிவு அமைத்தார்கள்.

உலகில் எத்தனையோ பறவைகள் இருந்தாலும் பஞ்ச பட்சிக்கு, பஞ்ச பூதங்களோடு தொடர்புடைய எழுத்தும், அந்த பறவைகளின் அமைப்பும் அறிந்து அதற்கு தக்கபடி அத்தகைய பட்சிகளை ரிஷிகள் வடிவு அமைத்து உள்ளனர்.

ஐம்பெரும் பூதங்கள் தான் இந்த பஞ்ச பட்சிகள் ஆகும். ஐந்து பூதங்கள் ஆக இந்த உலகை ஆளுகின்றன. நம்மையும் பஞ்ச பட்சிகள் ஐந்து (ஊண், நடை, அரசு, துயில், சாவு) தொழில்கள் ஆக செயல்படுகின்றன. ஒரு ஜாமத்திற்கு 2 மணி 24 நிமிடம் ஆகும்.

### பட்சியின் சூட்சும பலன் அறிந்தவனே – தன் வாழ்வின் சூட்சும வெற்றிகளை அடைவான்

பகல் 5 ஜாமங்கள், இரவு 5 ஜாமங்கள் ஆக ஒரு நாளுக்கு 10 ஜாமங்கள் ஆகும். இதே மணி நிமிடக்

கணக்கில் ஐந்து பஞ்ச பூதங்களும் தன்னுடைய தொழிலை வளர்பிறையிலும், தேய்பிறையிலும் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொழில் கணக்கீடுகளில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

அவர் — அவர் நட்சத்திரப்படி பட்சியை அறிந்து, அரசு — ஊன் போன்ற காலங்களில் எந்த ஒரு காரியம், சுய முயற்சியும் செய்வது மிக மிக உத்தமம் ஆகும். நடை காலத்தில் காரியம், சுய முயற்சிகள் மத்திமப் பலனைத் தரும். துயில் — சாவு போன்ற காலத்தில் காரியம், சுய முயற்சி மிக மிக அதமப் பலனைத் தரும்.

இதன் விளக்கங்களை அட்டவணை மூலம் அறியவும். உள்ளே வளர்பிறை — தேய்பிறை இரண்டு காலங்களுக்கும், பகல் — இரவாக பஞ்சபூதங்களை, அந்த அந்த காலம் மற்றும் அவர்களது தொழில், அதன் கிழமை இவற்றை சரியாக குறிப்பிட்டு காட்டப்படும் உள்ளது.

குறிப்பிட்டு காட்டப்பட்டு உள்ள நேரங்களை நீங்கள் அறிந்து செயல்பட்டால், உங்கள் காரியம், சுய முயற்சி யாவும் நல்ல விதமாக முடியும். இந்த பஞ்சபட்சி ஆய்வில் அதிகார பட்சியில் வரக்கூடிய நாட்களில், தனியாக உங்களுக்கு அட்டவணைப் படுத்தி கிழமையுடன் இதன் நேரங்களை காட்டப் பட்டு உள்ளது.

அதற்கு உரிய காலங்களில் நம் புதிய முயற்சி, முதலீடுகள், திருமணம், சுப நிகழ்ச்சிகள், சொத்து வாங்குவது — விற்பது, வேலையில் அமர்வது, சுய தொழில் மற்றும் வியாபாரங்கள் தொடங்குவது, வெளி நாட்டு பயணம் இவை யாவும் நன்மையில் முடியும்.

மேலும் படிப்பு, பதவி, பணம் மற்றும் விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவது, வீடு கட்டுவது, தனது படைப்புகளை அரங்கேற்றம் செய்வது, அதிகாரங்களைப் பெறுவது, ஆள் பலம் கொண்டு காரியங்களை நிறைவேற்றுவது யாவும் சிறப்பாக, வெற்றிகரமாக முடியும்.

அதே சமயம், படுபட்சி வருகிற நாட்களில் மேலே குறிப்பிட்ட காரியங்களில் ( சில வேளைகளில் தோல்வியும்) தடைகள் ஏற்படும். அதனால் படுபட்சி நாளில் நம் முயற்சிகள், புதிய செயல்கள் இவற்றில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

இந்த நாளில் நாம் எச்சரிக்கையாக நடந்து, செயல்கள் அனைத்திலும் ஒதுங்கி, இறை வழிபாடு, மௌனம் மேற்கொள்வது, தியானத்தில் அமர்ந்து இருப்பதே சிறப்பானது ஆகும்.

அதிர்ஷ்ட பட்சியை அறிந்த, அதன்படி முன்கூட்டியே திட்டமிட்ட செயல்களை வடிவு அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது நம் முன்னேற்றத்தில் எண்ணிய காரியத்தில் வெற்றி பெறுவோம்.

நம் பட்சி வலிமை இழந்த நேரத்தில், நிர்பந்தமான சூழ்நிலையின் காரணமாக அல்லது காரியத்தில் செயல்பட வேண்டும் எனில் அப்போது என்ன செய்வது? பஞ்சபூதங்களை வணங்கி பஞ்சாட்சர மந்திரமாம் 'சிவயநம' என்று மனதுக்குள் 108. அல்லது 1008 முறை தியானிக்க வேண்டும், பலன் தரும். அனைவரும் இந்த மந்திரத்தை தியானிப்பது நலம் தரும்.

வைணவர்கள், 'ஓம் நமோ நாராயணா நம' என்னும் மந்திரத்தை தியானித்து விஷ்ணுவை வழிபட செயல்படும் காரியம் சித்தியாகும். அவர் மதகோட்பாட்டின்படி அந்த மத நூல்களில் சொன்ன வழிபாட்டு முறைப்படி வழிபட்டு வர வாழ்வில் வெற்றிக்கு வழிவகுக்கும்.

பொதுவாக இங்கே, சிவா — விஷ்ணு மந்திரங்கள் உடன், பஞ்சபூதங்களுக்கு உரிய அதிர்ஷ்ட தெய்வம் தரப்பட்டு உள்ளன. அதையும் சேர்த்து தான் உபாசனை செய்ய வேண்டும்.

மேலும் அருட்பெருஞ்சோதியை மனதில் தியானித்துக் கொள்ள வேண்டும். எந்த இனத்தவராக இருந்தாலும், இறைனை ஒளி என்ற ஜோதி வடிவில் தானே காண்கிறோம். உரு வழிபாடு தோன்றாத ஆதி காலத்தில் இறைவனை ஜோதி வடிவாகத் தானே வழிபட்டனர்.

அதே போல் பஞ்ச (மண், நீர், தீ, வளி, வான்) பூதத்திற்கு உள்ளும் இறைவன் — இறைவி இடம் பெற்று இருக்கிறார்கள். அவர் அவர்கள் தங்கள் முன்னோர்களை நினைத்து, இஷ்ட, குலதெய்வங்களை மனதில் வழிபட வேண்டும்.

மேலும் ஒரு காரியமாக செல்கின்ற போது குருமகான், மகரிஷிகள், சித்தர்கள், ஞானிகள் இவர்களையும் மனதில் நினைத்துச் செல்ல வேண்டும்.

நல்லதே நினைப்போம் — நல்லதே செய்வோம். நல்ல காரியம் ஒன்றுக்கு தான் பஞ்ச பட்சியை பயன்படுத்த வேண்டும். இதனை மனதில் கொண்டு, உங்கள் அதிர்ஷ்ட பட்சியை அறிந்து, அனுகூலமான நாள் — நேரத்தை தேர்வு செய்து அதன்படி நாளும் செயல்பட்டால் விடியும் பொழுது நல்லதாக அமையும்.

உங்க அதிர்ஷ்ட பட்சிகளை அறியும் நிலை, அதன் செயல்பாடுகள் எளிதாக விளங்க அதற்கான வளர்பிறை — தேய்பிறை அட்டவணை, அதிகார பட்சி படுபட்சியின் தனி காலங்கள், பஞ்சபட்சியின் நுணுக்கங்கள், அனுகூல மாதங்கள், மூலிகை எப்படி தேர்ந்தெடுக்கும் விதம், பொதுவான சுப நேரங்கள், நட்சத்திரம் தெரியாத நபர்களுக்குப் பெயர் எழுத்தைக் கொண்டு பட்சி பார்க்கும் அட்டவணையாவும் தரப்பட்டு உள்ளன.

**நாடி அறிந்தவன் நமனை அறிவான்**
**பட்சி அறிந்தவன் பரமனை அறிவான்**

# புராணங்கள் புலப்படுத்தும் ஜோதிட சூட்சும ஆதித்யமங்கள இரகசியம்




• ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்

P.D. ஜெகதீஸ்வரன்

செல்: 96596 90395


ஜோதிடத்தில் சூரியன்+செவ்வாய் சேர்க்கை தோஷம் தருகிறது என்றும் பெண்கள் ஜாதகத்தில் இந்த இணைவு இருப்பின் மாங்கல்ய பலத்தைக் குறைக்கும் என்றும் ஜோதிடச் சுருதிகள் குறிப்பிட்டுக் கூறுகிறது. இதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித அனுபவங்கள் ஏற்படுகிறது. அப்படி தோஷம் அடைந்தவர்கள் நிலை என்ன? அதற்கான தீர்வுகள் என்ன என்பதை உங்களிடம் பகிர்ந்துக் கொள்கிறேன். சூரியனுடன் செவ்வாய் இணைகின்ற போது தோஷத்தை தான் அதிகம் ஏற்படுத்துகின்றார். காரணம் என்னவெனில் புராணக் கதைகளின்படி சூரியனும் செவ்வாயும் பகை பெற்று விளங்குகின்றனர் அதன் விளைவால் தான் கிரக பரிபாலனம் ஏற்பட்ட பிறகும் பகை தொடர்கின்றது என்று சொல்லப்படுகிறது

தட்சன் யாகம் ஒன்று வளர்த்து தனக்கு பெருமை சேர்த்திட நினைத்தான் அந்த யாகம் நடத்துவதற்கு முன்பு மூவுலக தேவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தான் ஆனால் தனது முதல் மருமகன் தாட்சாயினி தேவியின் கணவனாகிய சிவபெருமானுக்கு அழைப்பு தரவில்லை .

யாகமும் துவங்கியது சிவபெருமானிடம் அவரது மனைவி தாட்சாயினி தேவி தனது தந்தை நடத்தும் யாகத்திற்கு செல்ல அனுமதி கேட்டார். சிவபெருமான் தன்னை மதியாமல் தட்சன் நடத்தும் யாகத்திற்கு செல்லக் கூடாது என்றும் அனுமதி வழங்கிட மறுத்தார்

கணவரது பேச்சையும் மீறி சென்றார் பார்வதி தேவியார். ஆனால் தட்சனோ தனது மகள் என்றும் பாராமல் நீ என் மகளும் அல்ல அந்த ஈசன் எனக்கு மருமகனும் அல்ல என ஏளனப்படுத்தி அனுப்பி விட்டார். கணவரது பேச்சையும் பொருட்படுத்தாமல் சென்ற தேவியார் தட்சனால் அவமானப் படுத்தப்பட்டு கணவரிடம் திரும்ப வந்தார்.

தன் பேச்சையும் கேளாமல் சென்று வந்த தேவியாரை சிவபெருமான் சபித்து விட்டு தட்சன் மேல் அவரது கோபம் திரும்பியது. பெண் என்றும் பாராமல் அவமானபடுத்திய தட்சனை தண்டிக்க தீர்மானித்த சிவபெருமான் தனது நெற்றிக் கண் மூலமாக அகோர வீரபத்திரரை உருவாக்கி தட்சன் நடத்தி வரும் யாகத்தை அழித்து விட்டு வா என்று அனுப்பினார்.

அகோர வீரபத்திரரும் தட்சன் யாகம் நடத்திய இடத்திற்கு சென்றார் அங்கே கண்ணில் பட்டவர்களை எல்லாம் அடித்து வீழ்த்தத் தொடங்கினார். அந்த கூட்டத்தில் சுக்கிர பகவானும் இருந்தார்.

சுக்கிரபகவானுக்கு ஏற்கனவே வாமன அவதாரம் எடுத்த மகா விஷ்ணுவால் ஒரு கண் இழந்தவாராய் இருந்தார். அங்கே சென்ற அகோர வீரபத்திரர் சுக்கிர பகவானை தாக்க முற்படும் போது சுக்கிரபகவான் தனது ஊனமுற்ற நிலையையும் எடுத்துக்கூறி பொதுவாக போர்க்களத்தில் ஊனமுற்றவர்களை தாக்குவது என்பது தவறு என்பதையும் எடுத்துக்கூறினார்.

மேலும் தட்சன் யாகத்திற்கு பிறகு சிவ பெருமான் தன்னிடம் உள்ள பொறுப்புகளையெல்லாம் நவக்கிரக பரிபாலனம் அமைத்து பிரித்து வழங்கப் போகின்றார் என்றும் அந்த பொறுப்புகளில் சேனாதிபதி பதவி காலியாக இருப்பதையும் எடுத்துக் கூறி என்னை தப்பிக்க விட்டு விட்டால் நான் உனது சார்பாக உன் திறமையையும், பராக்கிரமத்தையும் எடுத்துக் கூறி உனக்கு அந்த சேனாதிபதி பதவியை பெற்று தருவதாக சுக்கிர பகவான் அகோர வீரபத்திரரிடம் உறுதியளித்தார்.

அகோர வீரபத்திரரும் அவருடன் உடன் பாடு கொண்டு சுக்கிரபகவானை தப்பிக்க விட்டார். சுக்கிர பகவானும் தான் சொன்னது போல் அகோரவீரப்பத்திரருக்கு சேனாதிபதி பதவியும் வாங்கித் தந்தார் அதன்படியே நவக்கிரக பரிபாலனத்திலே சேனாதிபதி ஆதிக்கம் பெற்ற செவ்வாய் பகவான் ஆகோர வீர பத்திரர் அம்சமே ஆகும்.

அகோரவீரபத்திரரை அனுப்பி வைத்த சிவ பெருமான் சூரிய பகவானையும் அனுப்பிவைத்து அங்கே என்ன நடக்கின்றது என்று கவனித்து வருமாறு அனுப்பினார். தட்சன் யாக கூடத்தில் நடை பெற்ற ஒவ்வொரு நிகழ்சிகளையும் கண்காணித்த சூரிய பகவான் அகோரவீரபத்திரரும்,

சுக்கிரபகவானும் ஏற்படுத்திக் கொண்ட உடன் படிக்கையைக் கண்டு கோபம் அடைந்தார்

மேலும் நவக்கிரக பரிபாலனத்தில் அகோர வீரபத்திரருக்கு பதவி கிடைத்தால் சுக்கிரனையும் செவ்வாயையும் பழி தீர்க்க சபதம் மேற்கொண்டார்.

அகோரவீரபத்திரரின் அம்சமான செவ்வாய் பகவானும், சுக்கிரனும் அன்று முதல் சூரிய பகவானுக்கு பகைவராயினர்

ஒருவரது பிறப்பு ஜாதகத்தில் சுக்கிரனும், சூரியனும் சேர்ந்து காணப்பட்டால் திருமணம் தாமதப்படும் என்பது உண்மையாகும். சுக்கிரன் களத்திர காரகன் என்பதால் சூரியன் இந்த நிலையை ஏற்படுத்துகின்றார். மேலும் சூரியனுடன் செவ்வாய் சேரும் போது கடுமையான பதிப்புகள் ஏற்படும். சூரியனும், பாப கிரகம், செவ்வாயும் பாப கிரகம் என்பதால் பாதிப்புகள் அதிகம் ஏற்படுகின்றது

ஓர் ஆண் ஜாதகத்தில் இந்த சேர்க்கையால் ஜாதகருக்கு திருமணத் தடையும் அல்லது தாமத திருமணமோ அல்லது திருமணம் நடைபெற்றாலும் கணவன் இருவரும் அதிகம் சேர்ந்து வாழமுடியாத நிலையும் ஏற்படுகின்றது. சிலருக்கு இரண்டு திருமண வாழ்க்கை கூட அமைகின்றது சூரியன் செவ்வாய் சேர்க்கையால் சூரியன் இரத்த விருத்தி ஏற்படாமல் அதாவது தாம்பத்திய சுகம் கிடைக்க விடாமல் தடுக்கச் செய்வார் முக்கியமாக பெண் சாதகர்களுக்கு சந்ததி விருத்தி ஏற்படாமல் செய்ய கணவன் மனைவியை பிரித்து வைக்க பார்ப்பார்.

பெண்கள் ஜாதகத்தில் சூரியன் செவ்வாய் சேர்க்கை ஆகாது என்பதை ஜோதிட பாடல்கள் விளக்குகின்றன

**இடு செய் கதிர் கூடி எங்கே நின்றாலும்**
**இவளும் வாலிபந்தன்னில் அமங்கலையாவாள்**

ஏற்கனவே நாம் படித்தது போல் சூரியபகவான் செவ்வாயின் காரகத்துவமான இரத்த விருத்தியை தடுக்கச் செய்வார். அதாவது தாம்பத்திய வாழ்க்கை கிடைக்காமல் செய்திட கணவனை இழக்கச் செய்து விதவை தன்மையை ஏற்படுத்துவார். அல்லது கணவன் மனைவி பிரிந்து வாழும் நிலையும் ஏற்படுத்துவார். அல்லது கணவர் தூரதேசம் சென்று வாழ்க்கை நடத்துவார்.

**தோஷ நிவர்த்தி:** இப்படி சாஸ்திரங்கள் சான்றுரைக்கும் வகையில் இந்த அமைப்பை உடைய பெண்களின் ஜாதகங்கள் பலஜோதிடர்கள் நிராகரித்து விடுகிறார்கள். அதன் மூலம் ஜோதிடக் கலைக்கும் ஒருவிதக் கலங்கம் ஏற்பட்டு விடுகிறது. ஆனால் எனது அனுபவத்தில் அலசி ஆராய்ந்து பார்க்கும்போது இந்த சூ+செ இணைந்த பெண்களின் ஜாதகத்தில் பலன்கள் பின்வருமாறு நடக்கிறது.

சிலருக்கு திருமணத்தின் போது கட்டிய



மாங்கல்யம் கழுத்தில் இருக்க விடாமல் தடுக்கும் சிலருக்கு மாங்கல்யம் அடிக்கடி கழன்று விழுந்துக் கொண்டே இருக்கும் சிலரது மாங்கல்யம் கழன்று எங்கேயாவது விழுந்து விடும். சிலருக்கு திருடர்களால் பறிக்கப்படும், சிலருக்கு குடும்ப வறுமை சூழ்நிலை காரணமாக அடகு கடைக்கு அடிக்கடி செல்ல நேரிடும். சிலர் குடும்ப பிரச்சனைகள் நீங்கிட இறைவனுக்கு காணிக்கையாக உண்டியலில் செலுத்தி விடுவார்கள் இன்றைய நவீன காலத்தில் இந்த மாங்கல்ய தோஷம் உடைய பெண்கள் மாங்கல்யம் போடவே மாட்டார்கள் இப்படி தனது தோஷத்தை இந்த கிரக சேர்க்கை ஏற்படுத்தினாலும் பலன்கள் நாகரீக உலகில் தாலி அணிந்துக் கொள்வதே ஒருவிதமான கௌரவக் குறைச்சல் எனும் நிலையை ஏற்படுத்தி இருப்பதால் இந்த தோஷம் பாதிப்பதில்லை என்றே சொல்ல வேண்டி உள்ளது. இந்த தோஷம் மேற்படி சொன்ன ஏதாவது ஒரு நிலையில் அதன் தாக்கத்தைத் தீர்த்துக் கொள்கிறது எனலாம். அதே சமயம் சூரியனோ செவ்வாயோ யோக கிரகங்களாக வரும் போதும், குரு போன்ற சுப கிரகங்கள் பார்வை இந்த சூ+செ மீது படும்போதும் இந்த தோஷத்தின் கடுமை குறைகிறது. எது எப்படி ஆயினும் சூ+செ சேர்க்கை தொழிலிலும் இல்லறத்திலும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புகளைத் தராமலும் இருப்பதில்லை. அனுபவம், சுருதி, புத்தி, யுக்திகளோடு இதை ஆய்வு செய்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதற்கு பரிகாரமே கிடையாதா என்று பலர்

என்னிடம் கேட்கிறார்கள். பரிகாரமாக சூரியனுக்கு சிவனையும், செவ்வாய்க்கு முருகனையும் வழிபடச் சொல்கிறோம் ஆனால் பலன் தருவதில்லை. சூ+செவ் சேர்க்கைக்கு உரிய பரிகாரம் சோமாஸ்கந்தர் வழிபாடு ஒன்றுதான். அதைப் பற்றியும் சற்று பார்க்கலாம்.

சோமாஸ்கந்தர் என்பது சிவபெருமானின் 25 வடிவங்களில் ஒன்று. சிவனுக்கும் உமாதேவிக்கும் நடுவில் சிறு குழந்தையாக முருகன் அமர்ந்திருக்கும் திருக்கோலமே சோமாஸ்கந்தர் வடிவம் எனப்படும். திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில், காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில், குமரக்கோட்டம், காமாட்சியம்மன் கோயில், தென்காசி காசி விஸ்வநாதர் கோயில் உள்ளிட்ட பல தலங்களில் சோமாஸ்கந்த வடிவத்தை தரிசிக்கலாம். உலகிலேயே மிகப்பெரிய சோமாஸ்கந்த வடிவம் இலங்கையில், திருக்கேதீஸ்வரம் என்ற ஊரிலுள்ள சிவாலயத்தில் உள்ளது.

சூ+செ சேர்க்கை ஜாதகத்தில் எங்கு இருந்தாலும் மேற்கூறிய சோமாஸ்கந்தர் வழிபாடு செய்வதால் உடனடியான பலன்களைப் பெறுவதை அனுபவத்தில் காண முடியும். தொழிலில் சிரமப் படுவர்களும், திருமணத்தடை உடையவர்களும், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் இந்த சூ+செ சேர்க்கையால் பாதிப்பு உடையவர்கள் எனக் கண்டறிந்தால் இந்த சோமாஸ்கந்தர் வழிபாடு செய்யலாம். கை மேல் பலன் கிட்டும்.

**உதாரண ஜாதகம்:** இது ஒரு பெண்ணின் ஜாதகம். இந்த ஜாதகத்தில் 8இல் கேது நின்றும், சூ+செ சேர்க்கை பெற்று இலக்கினத்தில் நின்றும், 8ஆம் இட அதிபதி குரு 7இல் நின்றும், குடும்ப ஸ்தானத்தில் ரா+மாந்தி நின்றும் ஒருவித மாங்கல்ய தோஷத்தை தருவதைக் குறி காட்டுகிறது. இவளது கழுத்தில் ஒருவன் கட்டாயத்தாலி கட்டிவிட அதை இவளது தந்தை கத்தியால் அறுத்து எறிய மிகப்பரிய சம்பவம் நடந்து விட்ட பின்பு என்னை வந்து சந்தித்தார்கள். சரி நடந்தது சரிதான் கிரகங்களின் ஆய்வுகள் அதைத்தான் செய்யுமாறு இருக்கிறது ஆனாலும் இனி மறுமணம் நடக்கும் அதற்கு ஆதித்யமங்களாட்சி எனும் மூலிகையை முறையாக அணிந்துக் கொண்டு சோமாஸ்கந்தர் வழிபாட்டைத் தொடர்ந்து செய்யுமாறு சொன்னேன். மூலிகையை நான் கொடுப்பதில்லை என்பதால் அலைந்து திரிந்து ஒருவரிடம் அதை வாங்கி அதுதான் அந்த மூலிகையா என உறுதி செய்துக் கொண்டு பின்பு வழிபாட்டையும் செய்து வந்தார்கள். இப்போது மறுமணம் நடந்து ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி மலேசியாவில் வசித்து வருகிறார்கள். மிகச் சிறப்பாக வாழ்க்கை அமைந்து விட்டது எனலாம். எனவே தோஷம் இருக்கிறது என்று அச்சப்பட்டுக் கொண்டே இருக்காமல் உரிய வழி தேடினால் நிச்சயம் நிவர்த்தியும் கிட்டும் என்பது திண்ணம். மூலிகை ஜீவ நாடியில் வந்ததாகும். நான் எந்த மூலிகையையும் தருவதோ, விற்பனை செய்வதோ கிடையாது. தற்சமயம் நேரில் ஆலோசனையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுபம்.

| | | | |
|---|---|---|---|
| | புத | ல / சூரி செவ் | ராகு மா |
| சந் | சதயம் 3.6.1983 6.00 am ராசி | | சுக் |
| | தீர்காம்சம் -078.10 அக்ஷாம்சம் +11.40 | | |
| கேது | குரு | சனி | |

தசா இருப்பு = ராகு
15 வருடம், 1 மாதம், 19 தேதி

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

## ஆகஸ்டு 2015 கடன் தீர்க்க உகந்த நாள், நேரம்

**5.8.2015 – 11.43 AM to 12.35 AM (ஆடி 20 புதன் இரவு 11.43 முதல் 12.35 வரை)**

**23.8.2015 – 12.15 PM to 1.05 PM (ஆவணி 16 புதன் இரவு 9.00 முதல் 9.50 வரை)**

**கடன் தீர்க்க:** வாங்கிய கடனை தீர்க்க முடியாமல் சிரமப்படுபவர்கள் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் கடனில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுத்தால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக அடைபட்டு, கடன் விரைவில் தீர்ந்து விடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது பணம் கைக்கு வந்துவிடும்.

**கடன் வசூலிக்க:** கொடுத்தக் கடனை வசூலிக்க முடியாமல் சிரமப்படுபவர்கள் சம்மந்தப்பட்டவரிடம் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் ஒரு தொகையை எப்படியாவது வாங்கினால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக வசூலாகி கடன் தொகை விரைவில் முழுவதுமாக வசூலாகிவிடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது அவருக்கு பணம் வந்து உங்களுக்கு கொடுத்து விடுவார்.

### கடன் கொடுக்க, கடன் வாங்கக் கூடாத நாட்கள்

அஷ்டமி, நவமி, கரி நாள், மரணயோகம், தனியநாள் பிரபாலிரிஷ்ட யோகம் உள்ள நாட்களிலும் பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி. நட்சத்திர நாட்களிலும், சந்திராஷ்டம நாட்களிலும், கடன் கொடுக்கல் வாங்கல் கூடாது. கொடுக்கல், வாங்கலில் சிரமம் ஏற்படும்.

பி.இராமசாமி



# 13 கைரேகைக் கலை
# காலத்தால் அழியாத நிலை
## விரல்களின் நிலைகள்



ஜோதிட ரத்னா
பி.ராஜராஜன் M.Com., M.A., (Astro)
cell: 94436 02265

**குருவிரல் கோணலாக அமைந்து இருந்தால்**



1. அலட்சியமாக அதிகம் தென்படும்.

2. நண்பர்களை பகைத்துக் கொள்வார்கள்

3. எவரையும் மதிக்க மாட்டார்கள்

4. நல்ல சந்தர்ப்பங்களைப பயன்படுத்திக் கொள்ள தவறிவிடுவார்கள்.

5. முன்கோபம் அதிகமாகக் காணப்படும்.

**கட்டை விரலுக்கும் குருவிரலுக்கும் இடையே இடைவெளி 4. அதிகம்**



1. நற்குணம் பெற்று இருப்பார்கள்

2. உயர்ந்த, இலட்சியங்களையும் கொண்டு இருப்பார்கள்

3. விசால மனம் படைத்தவர்கள்.

4. அன்பாக பேசி பழகுவார்கள்.

5. நிறை நண்பர்கள் இருப்பார்கள்

6. எவராது சிரமப்பட்டால் வலியச் சென்று உதவுவார்கள்

7. சுதந்திரமாக செயல்படுவார்கள்.

**கட்டை விரலுக்கும் குரு விரலுக்கும் நடுவே குறைவான இடைவெளி**

1. இவர் சமுதாயக் கட்டுப்பாடுகளை மதித்து நடப்பார்கள்

2. சுய நலம் சற்று அதிகமாகக் காணப்படும். தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதிலேயே கண்ணாக இருப்பார்கள்.

**குருவிரல் சனி விரல் அதிக இடைவெளி**

1. தங்கள் கருத்துக்களை சரியானவை என்று வாதாடுவார்கள்.

2. மற்றவர்களடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.


3. தனது கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முயற்சி செய்வார்கள்.

**குருவிரல் சனிவிரல் குறைவான இடைவெளி**

1. தனது கருத்து சரியானவை என்று வாதாடமாட்டார்கள்

2. மற்றவர் கருத்து சரியானவையாக இருக்கும் என்றால் ஏற்றுக் கொள்வார்கள்.

**குருவிரல் முடிச்சுக்களும் பலன்கள்**



1. குருவிரலில் முடிச்சு ஒன்று தென்பட்டால் எச்செயலையும் ஆழ்ந்த கவனத்தோடு செய்வார்கள்.

2. இவ்விரலில் ஏதேனும் வளைவு இருந்தால் அவரின் புகழுக்கு ஆபத்து நேரும் படியான செயல்களில் ஈடுபடுவார்கள்.

3. இவ்விரலின் நீளம் அதிகமாக காணப்பட்டால் (சனி விரலை விட) எப்போதும் அதிகார வெறி பிடித்து விளங்குவார்கள்.

4. இவ்விரல் குறைவான அளவான நீளத்தில் காணப்பட்டால் தாழ்வு மனப்பான்மையால் அல்லல் படுவார்கள்.

5. இவ்விரல் மிகவும் கடிந்திருந்தால் அசாதாரணமான மன உறுதியைக் கொடுக்கும்.

6. இவ்விரலுக்கும் சனி விரலுக்கும் இடையே இடைவெளி இருந்தால் மிகவும் சுதந்திரமாக செயல்படுவார்கள்.

7. குருவிரல் பின்பக்கம் வளையாமல் விரைப்பாக இருந்தால் கொள்கையில், இலட்சிய வெறி உடையவர்கள். கண்டிப்பு, கட்டுப்பாடு உடையவர்களாகவும், தலைமை அதிகாரிகளாகவும் திகழ்வார்கள். பொருள் சேர்க்கை ஆர்வம் மிக்கவர்கள்.

## II சனி விரல்

நம்முடைய கையில் ஐந்து விரல்கள் அமைந்திருக்கின்றன. அவற்றை நாம்



1. பெருவிரல்
2. ஆள்காட்டிவிரல்
3. நடுவிரல்
4. மோதிர விரல்
5. சுண்டுவிரல் என்று

அழைக்கிறோம். ரேகை சாஸ்த்திரத்தின்படி பெருவிரலைத் தவிர மற்ற நான்கு விரல்களையும் கீழ்கண்டவாறு குறிப்பிடபடுகிறது.

1. குருவிரல்
2. சனி விரல்
3. சூரிய விரல்
4. புதன் விரல்

**சனி விரல்:** நடுவிரல், சனி மேட்டிற்கு மேலே அமைந்திருப்பதால் அதனை சனிவிரல் என்று அழைக்கப்படுகிறது.

**சனிவிரல் வேறு பெயர்கள்:** குருவிரலுக்கு அடுத்துள்ள விரலை சனி விரல் என அழைக்கப்படுகிறது. சனி விரல் புதன் விரலுக்கும் குரு விரலுக்கு நடுவில் அமைந்து இருப்பதாலும், அனைத்து விரலுக்கு நடுவில் அமைந்து இருப்பதால் இதன் நடுவிரல் என அழைக்கப்படுகிறது. இதனை அணிவிரல் என்றும் அழைக்கப்படுவது உண்டு.

**சனி விரல் நீளம்:** சனி விரல் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை

1. நீளமான சனிவிரல்
2. மிக நீளமான சனிவிரல்
3. குட்டையான சனிவிரல்

நீளமான சனி விரல்: சனி விரலின் நீளம், சூரிய குருவிரலின் நீளத்தை விட ஒரு அல்லது முக்கால் அங்குலாஸ்த்தி வரை நீளம் அதிகமாக தென்பட்டால் நீளமான சனி விரல் என்று அழைக்கப்படுகிறது.

**மிக நீளமான சனி விரல்:** சனி விரலின் அளவு (அ) நீளம் மிகவும் நீளமாக ஒரு அல்லது ஒரு அங்குலாஸ்த்திக்கு மேல் நீளமாக தென்பட்டால் இதனை மிக நீளமான சனிவிரல் எனப்படும்.

**குட்டையான சனி விரல்:** சிலரின் கைகளில் குரு, சனி, சூரிய விரலின் நுனிகள் சற்று சமமாக தென்படும் இதனையே குட்டையான சனிவிரல் என்று அழைக்கப்படும்.

### நீளமான சனி விரல் தன்மைகள்

1. விவேகம்
2. முன் ஜாக்கிரதை
3. முன்யோசனை
4. தனிமை மீது ஆசை

### அதிக நீளமான சனி விரல் தன்மை

1. ஆரோக்கிய மற்ற
2. நோய்பிடித்த

### குட்டையான விரல்

1.அற்பமான

### உருகுலைந்த விரல்

1. ஆராக்கியமற்ற மனநிலை
2. உடல் நலம் கருதுதல்
3. நன்றி இல்லாதவர்
4. சந்தர்ப்பவாதிகள்

### சனிவிரலின் பொதுவான பலன்கள்

| | நல்ல தன்மை | கெட்ட தன்மை |
|---|---|---|
| 1 | நிதானமான | மூடநம்பிக்கை |
| 2 | ஆத்திரப்படாத | துக்கம் |
| 3 | சுதந்திர உணர்வு | விசனம் |
| 4 | அதிகாரம் | துர்மரணம் |
| 5 | அதிகாரி | இரகசியம் |
| 6 | விவேகம் | புறம் கூறுதல் |
| 7 | சூட்சம புத்தி | துரோகம் |
| 8 | சகித்துக் கொள்ளும் தன்மை | பொருமை |
| 9 | ஆராய்ச்சி | கீழ்படியாமை |
| 10 | முறை | போலி பாத்தியம் |
| 11 | உத்திரவு | துன்பம் |
| 12 | பிறப்பில் அக்கறை | தகுதியின்மை |
| 13 | இரகசிய கலை | உணர்ச்சியின்மை |
| 14 | மனசாட்சி | மனகுளிர்ச்சி |
| 15 | பொருளாதாரம் | ஆண் வெறுப்பு |
| 16 | தனிமை | பெண் வெறுப்பு |
| 17 | ஆண் வெறுப்பு | |
| 18 | பெண் வெறுப்பு | |

தொடரும்...



உ

ஓம்

எல்லாம் வல்ல இறைவனடி போற்றி, அன்னை ஆதிபராசக்தி திருவடிகள் போற்றி

ஆதிமுதல் 18 சித்தர்கள் திருவடிகள் போற்றி, குருநாதர் சுப்பிரமணியம் சுவாமிகள் திருவடிகள் போற்றி



# ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும்

## மகா மாந்திரீக, மந்திர,எந்திர, தந்திர, தாந்திரீக, ஆன்மீக சூட்சம ரகசிய பிரயோக பயிற்சி

தொட்டதெல்லாம் துலங்கும் ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையத்தின் தொழிற்முறை கல்வியின் முதுநிலை மாந்திரீக பயிற்சி வகுப்பின் இம்மாத பயிற்சியானது, **சகலவிதமான துன்பங்களை போக்கி நடைமுறை வாழ்வில் உள்ள பிரச்சனைகளை தீர்த்து நியாயமன கோரிக்கைகள் நிறைவேற நல்லாசி புரியக்கூடிய நம் அருகில் உள்ள கிராம தேவதைகளின் இதுவரை மறைக்கப்பட்ட அதி இரகசிய மாந்திரீக முறைகளும், மகா சக்தி வாய்ந்த அனுபவ மாந்திரீக பிரயோக சூட்சும இரகசியங்களும்.**

இப்பிரயோகமாகப்பட்டது ஜோதிடர்கள், குறிசொல்பவர்கள், இயல்பான மக்கள், பூசாரிகள், மாந்திரீகத்தை தொழிலாக செய்ய நினைப்பவரும் அவசியம் கற்றுவைத்துக் கொள்ள வேண்டிய மிக அரிய இரகசிய மாந்திரீக பிரயோகங்கள் ஆகும். ஏனென்றால் இப்பிரயோக முறைகள் 48-நாள் பூஜை முறையோ அல்லது மந்திரத்தை சித்தி செய்து பயன்படுத்துவதோ தேவையில்லை. தங்களை நாடி வரும் மக்களின் பிரச்சனைக்கு ஏற்ப அதற்குரிய கிராம தேவதைக்கு, அத்தேவதைக்குண்டான பூஜை முறையை மட்டும் செய்தாலே போதும் பலன் கிடைத்து நன்மை பெறுவார். ஏனென்றால் இந்த கிராம தேவதா மாந்திரீக கலையானது குருவழி இரகசிய சக்தி வாய்ந்த யாதகல்ப மாந்திரீக முறையாகும். ஆகையால் இதன் மூலம் தாங்களும் எளிய முறையில் பயன் பெற்று தங்களை நாடி வருபவர்களையும் பயனடைய செய்யலாம். **மேலும் மந்திரத்தை சித்தி செய்து பிரயோகம் செய்யக் கூடிய இரண்டு பிரயோக ஏவல் தேவதா மாந்திரீக முறைகளும் பயிற்சியில் கற்றுத் தரப்படும் நன்மைக்காக மட்டும்.**

**1.** .தொழில் விருத்தி உண்டாக. **2.** திருமணத் தடை விலகி திருமணமாக. **3.** பொருளாதார ரீதியான பிரச்சனைகள் விரைவில் தீர செல்லியம்மன் தேவதா பிரயோக மாந்திரீக முறை. **4.** வீட்டில் எப்பேற்பட்ட பேய் பிசாசு, பில்லி சூனியம் விலக. **5.** ஏவல் துஷ்ட சக்திகள் விலக. **6.** நமக்கு செய்வினை செய்த எதிரிக்கே செய்வினை திரும்ப. **7.** சண்டை சச்சரவுகள் விலக. **8.** எதிரிகாளால் ஏற்படும் தொல்லைகள் விலக. **9.** எதிரியையும் எதிரியின் செயல்களையும் அடக்க கிராம தேவதா பத்ரகாளி மாந்திரீக பிரயோக முறை. **10.** மேலும் காத்தாயி தேவதா பிரயோக மாந்திரீக முறை. **11.** அங்காளம்மன் தேவதா பிரயோக மாந்திரீக பிரயோக முறை. **12.** அழகம்மை தேவதா பிரயோக மாந்திரீக முறை. **13.** மேலும் அதிகமாக தொல்லை கொடுக்கும் எதிரிகளை நன்மைக்காக இருந்த இடமே தெரியாமல் ஆக்கக் கூடிய முப்பிடாதி தேவதா பிரயோக மாந்திரீக முறை. **14.** மற்றும் மாரியம்மன் தேவதா பிரயோக மாந்திரீக முறை. **15.** மேலும் தொட்டது துலங்க. **16.** காரிய சித்தி உண்டாக. **17.** போட்டி, பந்தயம், வழக்கு இவற்றில் வெற்றி கிடைக்க. **18.** எதிரி அடங்க. **19.** எதிரி நாவடங்க. **20.** நமக்கே சாதகமான நன்மைகளை தரக்கூடிய பேச்சியம்மன் தேவதா பிரயோக மாந்திரீக முறை. **21.** மற்றும் அய்யனார் மந்திர சித்தியும், மாந்திரீக பிரயோக முறையும். **22.** நாள்பட்ட பிரச்சனைகள் தீர. **23.** குடும்ப ஒற்றுமை உண்டாக. **24.** எண்ணிய நன்மைகள் யாவும் நடைபெற. **25.** நியாயமான கோரிக்கைகள் நிறைவேற அய்யனார் மாந்திரீக பிரயோக முறை. **26.** அதிகமாக தொல்லை கொடுக்கும் சத்ருவை அடக்க அய்யனார் பிரயோக சத்ருநாச வைப்பு முறை நன்மைக்காக மட்டும். **27.** மேலும் கருப்பசாமி மந்திர சித்தியும் மாந்திரீகப பிரயோக முறைகளும். **28.** பேய் பிசாசு விலக. **29.** குலதெய்வ வசியம் ஏற்பட. **30.** செய்வினை பாதிப்பு விலக கருப்பசாமி தேவதா பிரயோக மாந்திரீக முறை. **31.** எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் விலக. **32.** எதிரி அடங்க. **33.** சத்ரு, சத்ருவின் செயல், சத்ருவின் இடம் இவைகளை நன்மைக்காக ஒடுக்க கருப்பசாமி தேவதா பிரயோக சத்ருநாச வைப்பு முறை நன்மைக்காக மட்டும். **34.** குலதெய்வ கட்டு விலக, குலதெய்வத்தின் அருள் கிடைக்க, எண்ணிய நன்மைகள் உண்டாக, காரியத்தடை விலகி சகல நன்மைகளும் உண்டாக கருப்பசாமி தேவதா பிரயோக மாந்திரீக முறை. **35.** மேலும் எண்ணிலடங்கா பல அரிய மாந்திரீக இரகசியங்களை அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எந்தவித ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாக கற்றுத்தருகிறார் தேவதா பிரயோக மாந்திரீக கலையில் கைதேர்ந்த ஆசானான மாந்திரீக ரத்தின சிந்தாமணி திரு. சித்தர் அடியார் சுவாமிகள்.

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் பொருட்கள் :-**

**1.** ரூபாய். **3000/-** மதிப்புள்ள மிக சக்தி வாய்ந்த அரிய மூலிகைகளைக் கொண்டு அஞ்சனம் அரைத்து உருயேற்றப்பட்ட காரிய சித்தியும், லெட்சுமி கடாட்சத்தையும், தேவதா ஆகர்ஷனத்தையும் தரக்கூடிய மூலிகை அஞ்சன மை இலவசம். **2.** மதிய உணவு, இருவேளைத் தேனீர், பயிற்சி கையேடு முதல் நாள் இரவு தங்கும் இடவசதி உட்பட இவையனைத்தும் இலவசம்.

**பயிற்சி அளிப்பவர் மற்றும் தலைமை பொறுப்பாளர் :** 102 நகார, மகார, மந்திர பீஜாட்சரம் மற்றும் வாலை மனோன்மணி உபாசகர் மாந்திரீக ரத்தின சிந்தாமணி மாந்திரீக ஆசான். **சித்தர் அடியார் சுவாமிகள்.**

பயிற்சி நாள் : **16-08-2015 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9-15 மணிமுதல் மாலை 5-30 மணிவரை**

இடம்: **நாகலட்சுமி கல்யாண மகால்** (ராம் ஆட்டோ பெட்ரோல் பங்க் அருகிலுள்ள சந்து)

கண்ணா பால்பண்ணை தெரு, பழனி ரோடு, திண்டுக்கல்.

அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் குறைந்த சேவைக் கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயிற்சி சேவைக் கட்டணம் ரூ. 1500/- மட்டும்.**

நிகழ்ச்சி ஏற்பாடு : **I.C.V. பாஸ்கரன்,** (ஜோதிட, மாந்திரீக, தாந்திரீக நுண்ணியல், நுட்பவியல் வல்லுநர்.)

**முன்பதிவிற்கு : 94898 68978, 99445 51378**

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | மணி | நிமிடம் | ◈ | நட்சத்திரம் | மணி | நிமிடம் | ◈ | நாமயோகம் | மணி | நிமிடம் | ◈ | கரணம் | மணி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | சனி | பிர | 1 | 09 | ப | திஓ | 7 | 40 | ப | ஆயு | 11 | 00 | ப | பால | 2 |
| 17 | 2 | ஞா | துதி | 9 | 56 | ப | அவி | 5 | 18 | அ | சௌ | 7 | 19 | ப | கர | 9 |
| 18 | 3 | தி | திரு | 6 | 44 | ப | சத | 2 | 54 | அ | சோ | 3 | 37 | அ | பத் | 6 |
| 19 | 4 | செ | சது | 3 | 41 | அ | பூதி<br>உதி | 12<br>10 | 38<br>37 | அ<br>இ | அதி<br>சுக | 12<br>8 | 01<br>38 | அ<br>இ | பால | 3 |
| 20 | 5 | பு | பஞ்<br>சஷ் | 12<br>10 | 54<br>27 | அ<br>இ | ரே | 8 | 56 | இ | திரு | 5 | 31 | ப | தை | 12 |
| 21 | 6 | வி | சப் | 8 | 25 | இ | அசு | 7 | 39 | இ | சூல | 2 | 43 | ப | பத் | 9 |
| 22 | 7 | வெ | அஷ் | 6 | 49 | இ | பர | 6 | 49 | இ | கண் | 12 | 16 | ப | பால | 7 |
| 23 | 8 | சனி | நவ | 5 | 40 | ப | கிரு* | 6 | 25 | இ | விரு | 10 | 12 | ப | தை | 6 |
| 24 | 9 | ஞா | தச | 4 | 59 | ப | ரோ | 6 | 29 | இ | துரு | 8 | 29 | ப | வணி | 5 |
| 25 | 10 | தி | ஏகா | 4 | 46 | ப | மிரு | 7 | 00 | இ | வியா | 7 | 09 | ப | பவ | 4 |
| 26 | 11 | செ | துவா | 5 | 00 | ப | திரை | 7 | 58 | இ | ஹர் | 6 | 11 | ப | கௌ | 4 |
| 27 | 12 | பு | திர | 5 | 42 | ப | புன | 9 | 22 | இ | வஜ் | 5 | 34 | அ | கர | 5 |
| 28 | 13 | வி | சசி | 6 | 50 | இ | பூச | 11 | 12 | இ | சித் | 5 | 18 | அ | பத் | 6 |
| 29 | 14 | வெ | அமா● | 8 | 24 | இ | – | – | – | – | விய | 5 | 23 | அ | சது | 7 |
| 30 | 15 | சனி | பிர | 10 | 23 | இ | ஆயி | 1 | 27 | அ | வரி | 5 | 47 | அ | கிம் | 9 |
| 31 | 16 | ஞா | – | – | – | – | மக | 4 | 05 | அ | பரீ | 6 | 29 | ப | பால | 11 |
| 32 | 17 | தி | துதி | 12 | 42 | அ | பூர | 7 | 02 | ப | சிவ | 7 | 25 | ப | கௌ | 12 |
| 1 | 18 | செ | திரு | 3 | 15 | அ | உத் | 10 | 10 | ப | சித் | 8 | 30 | ப | கர | 3 |
| 2 | 19 | பு | சது | 5 | 54 | அ | அஸ் | 1 | 21 | ப | சாத் | 9 | 38 | ப | பத் | 5 |
| 3 | 20 | வி | பஞ் | 8 | 27 | ப | சித் | 4 | 23 | ப | சுப | 10 | 41 | ப | பால | 8 |
| 4 | 21 | வெ | சஷ் | 10 | 41 | ப | சுவா | 7 | 04 | இ | சுப் | 11 | 28 | ப | தை | 10 |
| 5 | 22 | சனி | சப் | 12 | 25 | ப | விசா | 9 | 11 | இ | பிரா | 11 | 51 | ப | வணி | 12 |
| 6 | 23 | ஞா | அஷ் | 1 | 27 | ப | அனு | 10 | 35 | இ | ஐந் | 11 | 42 | ப | பத் | 1 |
| 7 | 24 | தி | நவ | 1 | 42 | ப | கே | 11 | 11 | இ | வை | 10 | 57 | ப | பால | 1 |
| 8 | 25 | செ | தச | 1 | 06 | ப | மூல | 10 | 58 | இ | விஷ் | 9 | 31 | ப | தை | 1 |
| 9 | 26 | பு | ஏகா | 11 | 41 | ப | பூரா | 9 | 59 | இ | பிரீ | 7 | 26 | ப | வணி | 12 |
| 10 | 27 | வி | துவா | 9 | 33 | ப | உத் | 8 | 19 | இ | ஆயு | 4 | 45 | அ | பால | 9 |
| 11 | 28 | வெ | திர | 6 | 48 | ப | திஓ | 6 | 07 | இ | சௌ<br>சோ | 1<br>9 | 32<br>54 | அ<br>இ | தை | 6 |
| 12 | 29 | சனி | சசி | 3 | 36 | அ | அவி | 3 | 32 | ப | அதி | 5 | 59 | ப | வணி | 3 |
| 13 | 30 | ஞா | பௌ○<br>பிர | 12<br>8 | 06<br>28 | அ<br>இ | சத | 12 | 44 | ப | சக | 1 | 54 | ப | பவ | 12<br>கௌ |
| 14 | 31 | தி | துதி | 4 | 51 | ப | பூதி | 9 | 55 | ப | திரு | 9 | 48 | ப | தை | 6 |

◈ அ = நள்ளிரவு மணி 12.01 முதல் அதிகாலை மணி 6.00 வரை; ப = காலை மணி 6.01 முதல் மாலை மணி 6.00 வரை; இ = இரவு மணி 6.00 முதல் நள்ளிரவு மணி 12.00 வரை என பொருள்படும். திதி, நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவை மேலே குறித்துள்ள நேரம் வரை இருக்கும்.

| நிமிடம் | ◈ | கரணம் | மணி | நிமிடம் | ◈ | நேத்திரம் | ஜீவன் | அமிர்தாதி யோகம் | இலக்கின இருப்பு மணி | இலக்கின இருப்பு நிமி | சிரார்த்த திதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 43 | அ | கௌ | 1<br>தை | 09<br>11 | ப<br>33 | 2<br>இ | 1 | சி/அ | 1 | 06 | துவி |
| 56 | ப | வணி | 8 | 19 | இ | 2 | 1 | சி | 1 | 02 | திரு |
| 44 | ப | பவ | 5 | 11 | ப | 2 | 1 | ம/சி | 0 | 58 | சது |
| 41 | அ | கௌ | 2 | 15 | ப | 2 | 1 | அ/சி | 0 | 54 | பஞ் |
| 54 | அ | கர | 11<br>வணி | 38<br>10 | ப<br>27 | 2<br>இ | 0 | ம | 0 | 49 | சஷ் |
| 23 | ப | பவ | 8 | 28 | இ | 2 | 1/2 | அ/சி | 0 | 45 | சப் |
| 33 | ப | கௌ | 6 | 49 | இ | 1 | 1/2 | சி | 0 | 41 | அஷ் |
| 11 | ப | கர | 5 | 40 | ப | 1 | 1/2 | சி/அ | 0 | 38 | நவ |
| 16 | அ | பத் | 4 | 59 | ப | 1 | 1/2 | சி | 0 | 34 | தச |
| 49 | அ | பால | 4 | 46 | ப | 1 | 1/2 | சி | 0 | 30 | ஏகா |
| 50 | அ | தை | 5 | 00 | ப | 0 | 1/2 | ம/சி | 0 | 26 | துவா |
| 18 | அ | வணி | 5 | 42 | ப | 0 | 1/2 | சி | 0 | 21 | திர |
| 12 | ப | சகு | 6 | 50 | இ | 0 | 0 | சி | 0 | 17 | சசி |
| 34 | ப | நா | 8 | 24 | இ | 0 | 0 | ம | 0 | 13 | அமா● |
| 20 | ப | பவ | 10 | 23 | இ | 0 | 0 | அ/சி | 0 | 09 | பிர |
| 30 | ப | - | - | - | - | 0 | 1/2 | சி | 0 | 05 | துவி |
| 42 | அ | தை | 1 | 57 | ப | 0 | 1/2 | சி | 0 | 01 | - |
| 15 | அ | வணி | 4 | 34 | ப | 0 | 1/2 | அ/சி | 2 | 00 | சது |
| 54 | அ | பவ | 7 | 12 | இ | 0 | 1/2 | ம/சி | 1 | 56 | பஞ் |
| 27 | ப | கௌ | 9 | 37 | இ | 1 | 1/2 | சி/அ | 1 | 52 | சஷ் |
| 41 | ப | கர | 11 | 38 | இ | 1 | 1/2 | சி | 1 | 48 | சப் |
| 25 | ப | - | - | - | - | 1 | 1/2 | சி | 1 | 44 | அஷ் |
| 02 | அ | பவ | 1 | 27 | ப | 1 | 1/2 | ம | 1 | 40 | நவ |
| 41 | அ | கௌ | 1 | 42 | ப | 2 | 1/2 | சி | 1 | 36 | தச |
| 30 | அ | கர | 1 | 06 | ப | 2 | 0 | அ/சி | 1 | 32 | ஏகா |
| 29 | அ | பத் | 11<br>பவ | 41<br>10 | ப<br>42 | 2<br>இ | 1 | அ | 1 | 28 | துவா |
| 33 | ப | கௌ | 8 | 15 | இ | 2 | 1 | சி | 1 | 24 | திர |
| 48 | ப | கர | 5 | 15 | ப | 2 | 1 | ம/சி | 1 | 20 | சசி |
| 36 | அ | பத் | 1 | 53 | ப | 2 | 1 | சி/அ | 1 | 16 | பௌ○ |
| 06<br>8 | அ<br>28 | பால<br>இ | 10 | 17 | ப | 2 | 1 | சி | 1 | 12 | பிர |
| 38 | ப | கர | 4 | 51 | ப | 2 | 1 | ம/சி | 1 | 08 | துவி |

## ஆகஸ்ட் மாத விரத தினங்கள்

3 கி. சதுர்த்தி
5 கி. சஷ்டி
8. கிருத்திகை
10 கி. ஏகாதசி
11 கி. பிரதோஷம்
12 மாத சிவராத்திரி
14 அமாவாசை
16 சந்திர தரிசனம்
18 சு. சதுர்த்தி
20 சு. சஷ்டி
26 சு. ஏகாதசி
27 சு. பிரதோஷம்
28 சிரவண விரதம்
29 பௌர்ணமி

## ஆகஸ்ட் மாத சுப முகூர்த்த தினங்கள்

20 வியாழன் சு.பட்சம் சஷ்டி சித்திரை
21 வெள்ளி சு.பட்சம் சஷ்டி சுவாதி
27 வியாழன் சு,பட்சம் துவாதசி உத்திராடம்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | 4 சிம் புத<br>13 கட சுக்<br>17 கட சூரி<br>23 கன் புத | | சூரி<br>செவ்<br>பு |
| சந் | | | குரு<br>சு |
| | சனி | | ரா |

கணித்தவர்: பஞ்சாங்க கணிதர், ஜோதிடர் இரா.அருள்வேல் Ph.D - செல்: 98428 41497

# 12ஆம் பாவம் பறைசாற்றும்

# தொழில் நிலை

**A. மோகன கிருஷ்ணன்**
**செல் : 99421 67467**

ஜாதகத்தில் 12ஆம் இடத்தைக் கொண்டு தூக்கம், படுக்கை அறை சுகம், வெளிநாடு வாழ்விடம், நடை வியாபாரம், பிறந்த ஊரிலிருந்து வெளி வாழ்விடத்தில் வசித்தல், கள்ளக்காதல், இவை அனைத்தும் அனைவரும் அறிந்ததே. அதைப்பற்றி பார்க்கபோவதில்லை. ஒவ்வொரு பாவத்திற்கும் அதன் 12ஆம் பாவம் பலம் பெறும்போது முந்தைய பாவம் செயல் இழந்துபோகும். உதாரணமாக இலக்கினத்தை விட 12ஆம் அதிபதி அதிக பலம் பெற்றால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. 7ஆம் இடத்தை விட 6ஆம் இடம் அதிக பலம் பெற்றால் திருமணம் என்பதே கேள்விக்குறி ஆகிவிடும். (அ) திருமண வாழ்வு கசப்பு ஆகிவிடும்.

ஒரு ஜாதகத்தில் 6ஆம் இடம் என்பது ஜாதகர் வேறு ஒருவரிடம் வேலை பார்ப்பதை குறிக்கும். அதற்கு 12ஆம் இடமான 5ஆம் அதிபதி அதிக பலம் பெற்றால் என்னவாகும். ஜாதகரின் வேலை வாய்ப்பு தொழில்பற்று அறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

10ஆம் இடம் தொழில் அதற்கு 12ஆம் பாவமான 9ஆம் இடம் அதிக பலம் பெற்றால்?

பொதுவாக ஜாதகத்தில் 5ஆம் அதிபதி, 6ஆம் அதிபதி சேர்க்கை, பார்வை, பரிவர்த்தனை ஜாதகரை வேலைக்கே போகவிடாமல் தடுக்கும். திறமைக்கு ஏற்ற வேலை கிடைக்காது. எந்த வேலையும் நிரந்தரமாக அமையாது. 5ஆம் அதிபதி அதிக பலம் பெற்றால் நிச்சயமாக பணி நீக்கம் செய்யப்படுதல், அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுதல், தேவையில்லாத பிரச்சனைகளை வேலையில் உண்டு பண்ணும்.

கன்னியா இலக்கினத்திற்கு 5,6ஆம் அதிபதியாக சனி வருவதால் சனி அமைந்திருக்கும் இடத்தை பொறுத்து வேலை வாய்ப்பு அமையும். ரிஷப இலக்கினத்திற்கு 9,10ஆம் அதிபதியாக சனி வருவதால் சனியின் பலத்தைப் பொறுத்து தொழில் அமையும், சிம்ம இலக்கினத்திற்கு 7,6ஆம் அதிபதியாக சனி வருவதால் திருமண வாழ்வு, திருமணம் நடக்கும் பொழுது எல்லாம் சனியின் கையிலேயே நிகழும்.

தயவு செய்து பாவகம் இல்லாமல் எந்த ஒரு ஜோதிடரிடமும் பலன் பார்க்காதீர்கள். இராசியில் அமைந்த கிரகம் பாவகத்தில் மாறி அமைந்தால் பலன்கள் நிச்சயமாக மாறுபடும்.

பாலினம் : ஆண்
பிறந்த வருடம் : 6.8.1978
நேரம் : 10.00Pm
இடம் : சேலம்

| | | | |
|---|---|---|---|
| ல / கேது | | | |
| | இராசி | | குரு சூரி |
| | | | சந் சனி புத(வ) |
| | | | சுக் ராகு செவ் |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | சனி புத |
| சுக் ராகு | அம்சம் | | குரு |
| சூரி | | | கேது |
| ல / | | | சந் |

| | | | |
|---|---|---|---|
| ல / கேது | | | குரு |
| | பாவகம் | | சூரி |
| | | | சந் சனி புத |
| | | | சுக் ராகு செவ் |

இந்த ஜாதகத்தில் இலக்கினாதிபதி பாவகத்தில் கேந்திர பலம் பெற்று 10ஆம் இடத்தை பார்க்கிறது. மிகவும் சுறுசுறுப்பு ஆனவர். அதனால் பயன் என்ன? 5அம் அதிபதி, 6ஆம் அதிபதி பரிவர்த்தனை பெற்று இதுவரை 20 வருடமாக எந்த வேலையும் நிரந்தரம் இல்லாமல் இருக்கிறார். பல வேலைகள் செய்தாயிற்று எங்கு சென்றாலும் அவமானப்பட்டுதான் திரும்புகிறார். 5ஆம் அதிபதி நீசம் பெற்றாலும், 5ஆம் இடத்தில் நீசம் பெற்ற கிரஹம் இருந்தாலும் தேவையில்லாமல் அவமானம் ஏற்பட்டே தீரும் என்பது விதி இங்கு

5ஆம் அதிபதி நீசம் பெற்ற சுக்கிரன் சாரம். பிறகு எப்படி முன்னுக்கு வருவார். எவ்வளவு திறமை இருந்தும் முன்னுக்கு வரமுடியாமல் தவிக்கிறார்.

பிறந்த வருடம் : 16.8.1959
நேரம் : 3.30Am
ஊர் : திருச்சி

| | | | |
|---|---|---|---|
| கேது | | | ல |
| | இராசி | | சூரி புத (வ) |
| | | | செவ் சுக் (வ) |
| சந் சனி (வ) | | குரு | ராகு |

| | | | |
|---|---|---|---|
| சூரி | ல ராகு | | குரு சனி |
| | அம்சம் | | |
| | | | |
| | சந் செவ் புத | சுக் கேது | |

பாவக மாறுதல் இல்லை

மிதுன இலக்கினம் 5,6ஆம் அதிபதி 3இல் சேர்க்கை செவ், சுக், இரண்டும் சுக் சாரம், சந்திரனுக்கு 5,6ஆம் அதிபதியாகவும் வருவது பெறும் சோகம். குரு 5இல் பாவதிபதி குரு 5இல் இருந்து 5ஆம் இடத்தை கெடுக்கிறார் பொதுவாக செவ், சுக் சேர்க்கை மிதமிஞ்சிய காம உணர்ச்சியை தரும். இவர் ஓர் அரசாங்க அதிகாரி.

தற்பொழுது பணி நீக்கம் செய்யப்பட்டு வீட்டில் இருக்கிறார். சிம்மத்தில் அமர்ந்த 6ஆம் அதிபதி செவ்வாய் 6ஆம் இடத்தை பார்க்க அரசாங்க உத்யோகம் கிடைத்தது ஆனால் இடம் கொடுத்த சூரியன் 12இல். சுக்கிரன் சுய சாரம் பெற்று 5ஆம் இடத்தை மேலும் பலப்படுத்துகிறார். பொதுவாக இராகு, கேது எந்த வீட்டில் உள்ளதோ அந்த வீட்டு கிரஹத்தின் பார்வை பெறும். கேது 10இல் அமர்ந்து 9ஆம் பார்வையாக 6ஆம் இடத்தை பார்க்க வேலையில் வம்புகள் வழக்குகள். கேது வம்புகள் வழக்குகளுக்கு உரிய கிரஹம். இராகு ஒரு பிரிவினை கிரஹம் என்பதை நினைவில் கொள்க. மீண்டும். இழந்த வேலை கிடைக்குமா ஜாதகரின் கேள்வி?



நடப்பது குரு திசை சந்திரன் புத்தி, சந்திரன் சுக் சாரம், அடுத்து வரும் செவ்வாயும் சுக் சாரம் பணியில் உள்ள பிரச்சனை தீர வாய்பில்லை. நடப்பதோ பாவாதிபதி திசை. குரு தன் சுய சாரம் வேறு. கிடைக்கின்ற வேலையை செய்வது உத்தமம். சொந்த தொழில் சரிபட்டு வராது. 9ஆம் அதிபதி சனி 3ஆம் பார்வையாக 9ஆம் இடத்தை பார்த்து பலப்படுத்துகிறது. 10ஆம் இடம் பலம் இல்லை

பிறந்த வருடம் : 12/6/1977
நேரம் : 6.16 AM
இடம் : திருச்சி

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் சுக் செவ் | சூரி புத குரு | ல |
| | இராசி | | சனி |
| | | | |
| | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| புத கேது | | சந் | |
| | அம்சம் | | செவ் குரு சுக் |
| | | | |
| சனி | | ல | சூரி ராகு |

பாவகத்தில் இலக்கினத்திற்கு சூரியன் வருகிறது, குரு வருகிறது இலக்கினம் பலம் இல்லை. 5,6ஆம் அதிபதி சுக், செவ் சேர்க்கை. 5ஆம் அதிபதி 5ஆம் இடத்தை பார்க்கிறது. 6ஆம் அதிபதி 6ஆம் இடத்தை பார்த்து பலப்படுத்துகின்றன. இந்த ஜாதகர் 1997ஆம் ஆண்டு கல்லூரி படிப்பை முடித்தவர் எந்த வேலைக்கும் செல்லாமல் 17 வருடமாக சும்மாவாக சுற்றித் திரிந்தவர். 10ஆம் அதிபதி இலக்கினம் ஏற பல சுய தொழில்கள், ஆனால் பாவத்தில் 9ஆம் அதிபதி 9ஆம் இடத்தை பார்த்து பலப்படுத்த எந்த தொழிலும் நிரந்தரமும் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| | கேது சந் சுக் செவ் | புத | ல சூரி குரு |
| | பாவகம் | | |
| | | | சனி |
| | | ராகு | |

இவரது தந்தை ஜாதகரின் வேலை வாய்பை பற்றிக் கேட்டார்.

6ஆம் அதிபதி 11இல் ஆட்சி பெற்று 6ஆம் இடத்தை பார்ப்பது, சூரியன் செவ்வாய் சாரம் பெற்று இலக்கின கேந்திரம் பெறுவது இவருக்கு அரசாங்க உத்யோகம் நிச்சயமாக கிடைக்கும். தவறாமல் அரசாங்க எழுத்து தேர்வை எழுதச் சொல்லுங்கள் என்று கூறினேன். 2 மாதத்திற்கு முன்புதான் அரசாங்க உத்யோகம் கிடைத்தது. ஆனால் செவ், சுக் கேது சாரம், கேதுவும் பாவகத்தில் 11ஆம் இடத்திற்கு வருவது சிறப்பில்லை. வேலையில் வம்புகள் வழக்குகள் வரும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இலக்கினாதிபதி புதன் 12இல் மறைவது. சிறப்பில்லை. எதிர்த்து போராட முடியாது.

எந்த பாவத்திற்கும் அதன் 12ஆம் அதிபதி பலம் பெற்றால் சிறப்பில்லை. ஒரு கிரஹம் உச்சம் பெற்றால் அதன் மூலதிரிகோண வீடு பாதிக்கப்படும் என்பதை நினைவில் கொள்க.

5,6ஆம் அதிபதி சேர்க்கை, பார்வை,

9,10ஆம் அதிபதி சேர்க்கை பார்வை

பரிவர்த்தனை சிறப்பில்லை. கிரஹங்களின் பலத்தை பொறுத்து பலன்கள் மாறுபடும்.

சிந்திக்கவும் செயல்படவும்.

# ஏழாம் பாவம் உணர்த்திடும் மனைவியின் மகத்துவம்
# தாழ்வு நிலையை தரம் பிரித்திடும் வாழ்க்கைத் தத்துவம்



**தனுசு கணேசன்**
Cell: 94423 07032

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஏதுமில்லை பெண்மையின் மகத்துவத்தை ஒப்புமையற்ற சொற்றொடராக நமது முன்னோர்கள் சொல்லிச் சென்றார்கள் என்றால் எத்தனை அர்த்த புஷ்டியான வார்த்தை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இல்லாள் என்றால் மனைவி, அகம் என்றால் வீடு, கட்டுக் கோப்பான குடும்ப வாழ்க்கையை மனைவி இல்லத்தில் நடத்தி வருவாளேயானால் ஒரு நல்ல கணவனுக்கு அதைவிட சிறந்த கொடுப்பினை வேறு ஒன்று இருக்க முடியாது என்பதை அறுதியிட்டுச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நல்ல மனைவி, பூரணத்துவம் பெற்ற மணவாழ்க்கை எல்லோருக்கும் அமைந்திருக்கிறதா என்றால் இக்கலியுகத்தில் பெரும்பாலும் இல்லை என்பதே வெளிப்படையாய் தெரிகிறது. முந்தைய காலங்களில் பிள்ளைகளுக்கு தாய் தந்தையரிடம் மரியாதையுடன் பயம் கலந்த பக்தி இருந்தது. மூத்தோர் என்ற பண்பில் அவர்கள் சொல்படி கேட்டார்கள். எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி பெற்றோரின் கட்டளைக்கு கீழ்படிந்து நடந்தார்கள். பருவ வயதில் பெற்றோர் பார்த்து பேசி முடித்த பெண்ணை தான் பார்க்காமலே திருமணம் செய்துக்கொண்டார்கள். பெற்றோரும் மணம் கொண்ட இல்லறத்தில் பல பிள்ளைகளைப் பெற்றாலும் வாழ்க்கையை பிரியமுடன் சுவைத்தார்கள். குடும்பத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து திருப்தியான மனநிறைவுடன் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்

பொறுமையின் சிகரம் பெண் என்பதாலேயே உலகம் உய்ய வாரிசை தோற்றுவிக்கும் தாய்மை அடையும் பெரும் பேற்றினை ஆண்டவன் பெண்ணிடம் ஒப்படைத்தான். சிருஷ்டி கர்த்தாவே தன்னுடைய வேலையை பெண்ணுக்கே கொடுத்தான் என்றால் இதைவிட பெண்மையின் உயர்வுக்கு வேறு சான்று தேவையா? ஆண் என்பவன் ஒட்டுமொத்த குடும்பத்தின் சுமைதாங்கி பொருளீட்ட வேண்டிய கட்டாயத்தில் பல இடங்களுக்குச் சென்று பலவிதமான இடங்களுக்குச் சென்று பலவிதமான தொழில்கள் செய்து சம்பாதித்து மனைவி மக்கள் என குடும்ப பாரத்தை வாழ்நாள் முழுக்க சுமக்கக் கடமைப்பட்டவன். ஆனால் மனவை என்பவள் குடும்பத்தில் பலவிதமான உறவுகளை பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளவள். கணவனோ புறவாழ்க்கையின் நெருக்கடியால் மன அழுத்தத்தின் காரணமாக அகவாழ்க்கையில் விட்டு கொடுத்தல் என்ற பண்பை முழுமையாக பெற முடியாத நிலையில் தடுமாறுகிறான்.

பல குடும்பங்கள் ஒற்றுமையின்றி தான் என்ற அகந்தையால் ஆணுக்கு பெண் எந்த வகையிலும் சளைத்தவளல்ல என்றும், முற்போக்கு சிந்தனை என்ற பெயரில் பெண்கள் பொருளாதாரத்தில் பெரிய அளவில் முன்னேறியிருந்தாலும், பிறறை மதிக்காத தன்மை முன்கோபம், ஒழுக்கமின்மை, பிடிவாத குணம், பேராசை, நினைத்ததை சாதித்தல் போன்ற இழி குணங்களால் குடும்ப சூழலால் சிதைக்கப்பட்டு குடும்பத்தில் நிம்மதி என்பதை முற்றிலும் தொலைத்துவிட்டு நடைப்பிணமாய் கோர்ட் கேஸ் என்று அலைவதை சமுதாயத்தில் காண்கிறோம். இப்படி இருவேறு மாறுபட்ட நிலைகளைப் பெற்ற வாழ்க்கை முறையில் ஒரு விசித்திரமான, வித்தியாசமான கிரக அமைப்பைப் பெற்ற கணவன், மனைவி ஜாதகங்கள் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாள்: 12.06.1978 நட்சத்திரம் பூரம், நேரம்: இரவு 8.22 மணி

| சுக் | தசை | இருப்பு |
|---|---|---|
| 18. வ | 11. ம | 7 நா |

| | | | |
|---|---|---|---|
| கேது | | சூரி | புத குரு |
| | இராசி கணவன் | | சுக் |
| | | | சந் செவ் சனி |
| ல | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| குரு ராகு | சனி | செவ் | |
| | அம்சம் | | சுக் |
| | | | சந் |
| | புத | ல | சூரி கேது |

நாள்: 14.02.1976 நட்சத்திரம் பூசம், நேரம்: இரவு 7.25 மணி

| சனி | தசை | இருப்பு |
|---|---|---|
| 0 வ | 2 மா | 2 நா |

| | | | |
|---|---|---|---|
| குரு | கேது | செவ் | |
| சூரி | இராசி மனைவி | | சந் சனி (வ) |
| புத | | | ல |
| சுக் | | ராகு | |


| | | | |
|---|---|---|---|
| புத குரு | ராகு | | |
| | அம்சம் | | சனி (வ) |
| | | | செவ் |
| சுக் | சந் | சூரி கேது | ல |

இந்த கணவன், மனைவி இருவரும் காதலித்து கலப்புத் திருமணம் செய்துக் கொண்டவர்கள் இருவரும் அரசு உத்யோகத்தில் கை நிறைய சம்பாதித்து வசதி வாய்ப்புடன் வாழ்பவர்கள் புற வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் பெற்று வாழ்பவர்கள். ஆனால் அகவாழ்க்கைக்கு இன்றியமையாத உணர்வு ரீதியான அன்பு என்ற அமிர்தத்தை பருகமுடியாத பயனற்ற, பிடிப்பற்ற வாழ்க்கையில் தத்தளிக்கிறார்கள். கண்ணும் கண்ணும் நோக்கியே முதலில் காதலில் வீழ்கிறார்கள். ஆனால், சொல்வதென்னவோ காதலுக்கு கண்ணில்லை என்று, பின்னர் பேசிப் பழகி ஒருவருக்கொருவர் அடிமையாகி திருமணத்தில் இணைகிறார்கள்.

இருவரும் இணையும் அன்று தான் கிரகங்கள் தாங்கள் செயலை துவங்குகிறார்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட குணநலன்களை தெரிந்தே இணைகிறார்கள். இணைந்த பின்னர் இருவருக்குண்டான ஊழ்வினைக் கலப்பினால் முரண்பாடான புதிரான குணநலன்களுடன் கூடிய வாழ்வு ஏற்பட்டுவிடுகிறது. மறைந்திருந்த விதி தன் சுயரூபத்தை காட்டி வாழ்வை துவம்சம் செய்கிறது. அப்போது அலைக்கழிக்கப்பட்டு நிம்மதி என்ற விலை மதிப்பற்ற வெகுமதி விடைபெறுகிறது. அபபோது தான் மனிதனுக்கு தன்னால் உருவாக்கப்பட்ட பிரம்மாண்டமான வசதி வாய்ப்புகள் அனைத்தும் சூன்யமாய் கண்ணுக்குத் தெரிகிறது. ஆயிரங்கோடி இன்பங்களையும் நிம்மதி என்கிற அஸ்திரவாரத்தின் மேல் நின்றே அனுபவிக்க முடியும் என்பதை அறிந்துக் கொள்ளாமலே தேனில் விழுந்த ஈயாய் தத்தளிக்கிறார்கள். இப்படிப்பட்ட காதல் தம்பதியின் ஜாதகத்தின் கிரக நிலையை சற்று ஆராய்வோம்.

முதலில் ஒரு ஜாதகரின் வாழ்க்கை பாதிக்கப்பட வேண்டிய அமைப்பு சுய ஜாதகத்தில் இருந்தால் விதி தன் செயலை அமுல்படுத்த அல்லது அரங்கேற்ற முதல், இடை, கடை என்று எந்தப் பருவத்திலும் தசாபுத்தியை ஒத்து நிகழ்த்திக் காட்டும். அது மன ரீதியான மற்றும் உடல் ரீதியான நோய், விபத்து, மரணத்தை உருவாக்கும். அல்லது சண்டை சச்சரவுகள், பிரிவுகளை ஏற்படுத்தி தன் செயலை நிறைவேற்றும் என்பது பொதுவிதி இருவரது ஜாதகத்தை பொறுத்தவரை சரியான திருமண பொருத்தம் பார்த்து பொருந்தினாலும் கூட இப்படி வகையாக பொருந்தாது என்றவாறு தானே பொருந்திய ஜாதகங்கள். திருமணமாகி 4 வருடங்களாகிறது. குழந்தை இல்லை. ஆணைவிட பெண் இரண்டு வயது மூத்தவர் மேலும் இருவருக்கும் அமைந்த விசித்திர கிரக அமைப்புகளால் அதீத அன்பு என்ற அளவுக்கு மிஞ்சிய அமிர்தம் திகட்டிவிட மனதில் இனம் புரியாத ஏதோ ஒன்று பிடிப்பற்ற தன்மை, வெறுப்பு, சந்தேக குணம் போன்ற வகைகளால் மனம் அலைக்கழக்கப்படுகிறது.

முதலில் காதல் வயப்பட்ட கிரக அமைப்பை ஆராய்ந்தால் ஆணின் இலக்கினாதிபதி குரு ஆட்சிபெற்ற புதனுடன் 7ஆம் இடத்தில் சங்கமித்த நிலை களத்திரகாரகன் சுக்கிரன் வசியத்தில் வீழ்த்தும் சந்திரனின் இல்லத்தில் வசமாய் அமர்ந்த வர்க்கோத்தம் அமைப்பு, பூராடம், சாரத்தில் இலக்கினமும் அமைந்து பூரம் சாரத்தில் சந்திரனும் வர்க்கோத்தமம் அமைப்பு, பூராடம், சாரத்தில் இலக்கினமும் அமைந்து பூரம் சாரத்தில் சந்திரனும் வர்க்கோத்தமம் பெற்று சுக்கிரனின் வலையில் சுகமாய் சிக்கிக் கொண்ட சுந்தர புருஷர் இவர் என்றால் அது மிகையல்ல. இதுமட்டுமா சந்திரனுக்கு 7க்குடையவர் சனி, சந்திரன், செவ்வாயுடன் சல்லாபித்தது.



அடுத்து பெண்ணின் ஜாதகத்தில் இலக்கினாதிபதி சூரியனே 7ஆம் இடத்தில் அமர்ந்த இன்பநிலை, 7க்குடையவேரா ஜென்ம இராசியில் வக்கிரம் அடைந்து வர்க்கோத்தமம் ஆனநிலை, புத்தி ஸ்தானத்தில் காமக்காரகன் சுக்கிரன் வர்க்கோத்தம அமைப்பு, இலக்கினத்திற்கு 7க்குடையவரே இராசிக்கும் 7க்குடையராகி புணர்பூசம் 4ஆம் கால் வாங்கிய சிறப்பு, சனி, சந்திரனை ஆட்சிபெற்ற குரு பார்வையிட்டு காதலுக்கு பச்சைக் கொடி காட்டி திருமணத்தில் இணைந்து விட்டார்கள். குரு இந்த இராசிக்கு 9க்குடையவர் என்பதை மறந்துவிடக்கூடாத இந்த அமைப்புகள் மட்டும் நீண்ட நெடிய வாழ்க்கைக்கு வித்திடுமா? என்றால் குடும்ப அமைப்பை குறிப்பாய் பார்க்க வேண்டும். ஆண் ஜாதகத்தில் 2ஆம் இடம் அதிபதி சனி ஜென்ம விரோதிகளான சந்திரன், செவ்வாயுடன் சிக்கிக் கொண்டதுடன் குடும்ப ஸ்தானத்திற்கு 8இல் மறைந்ததும், 8க்குடையவர் சந்திரன் வர்க்கோத்தமம் ஆகியது

மிகப் பெரிய சறுக்கல் ஆகும். சனிகேதுவின் கால் வாங்கி அம்சத்தில் நீச்சம் பெற்றது மனப் போராட்டத்திற்கு இதை விட பெரிய சான்று தேவையில்லை என எண்ணுகிறேன்.

பெண் ஜாதகத்தில் குடும்ப ஸ்தானத்தின் அதிபதி புதன் இலக்கினத்திற்கு 6ஆம் இடத்தில் மறைந்து விரையாதிபதி சந்திரன் மற்றும் சனியின் பார்வை மனக்குழப்பத்தின் உச்சத்திற்கே கொண்டு செல்லும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதற்கு வலுசேர்ப்பது போல் இலக்கினாதிபதி சூரியன் சாரம் பெற்ற புதன் அம்சத்தில் நீச்சம் பெற்று ஆட்சிபெற்ற குருவுடன் கூடி உன்னை விடமாட்டேன் என்று சொல்வதை போல் அல்லவா இருக்கிறது. மனதை ஆளும் சந்திரன் பூசம் கால்வாங்கி அம்சத்தில் நீச்சம் பெற்று அமைந்தது. கணவர் மீது கொண்ட தீராக் காதலே மனப் போராட்டத்திற்கு மையமாகிவிட்டது. ஆக இருவருக்கும் குடும்ப ஸ்தான அமைப்பு பலமா? பலவீனமா? என பிரித்துப் பார்க்க முடியாமல் பின்னிப் பிணைந்து நுட்பமாக அமைந்துவிட்டதாலும் இருவரும் தாங்களே தேடிக்கொண்ட வாழ்க்கை என்பதால் பிரிவு என்பது ஏற்றுக் கொள்ளப்படாமல் மனசாட்சி புறந்தள்ளும் என்பது சர்வ நிச்சயம் இருவருக்கிடையே பிரிவு என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும் என்பது உறுதி ஆக இருவருக்கும் 7ஆம் இடம், 7க்குடையவர் பெரிதாக கெட்டுவிடவில்லை. ஆனால், குடும்ப ஸ்தானம் பாதிப்படைகிறது என்ற நிலையில் தான் பிரச்சினைகள் முளைக்கின்றன என்பது நமது ஆய்வின் முடிவு.



மேலும் சில முரண்பட்ட அமைப்புகளாக கணவன், மனைவி இருவருக்கிடையே மனம் என்ற ஒன்றில் மட்டும் இனம் புரியாத தடுமாற்றம் பற்றுதலற்ற தன்மை, விரக்தி, சந்தேககுணம், பிடிவாதம், சுயகௌரவம் போன்ற மனம் புத்தி சார்ந்த காரணிகளால் இருவருக்கிடையே அன்யோன்யம் கெட்டு விட்டது. கண்கூடு. இதற்கு வலுச்சேர்க்க மனைவியின் இலக்கினாதிபதி சூரியன் கணவர் ஜாதகத்தில் 6இல் மறைவு, கணவரின் இலக்கினாதிபதி குரு மனைவியின் ஜாதகத்தில் 8ஆம் இடத்தில் மறைந்து வர்க்கோத்தமம் ஆன துரதிஷ்டம் நிலையற்ற மன நிலையை நித்தமும் தரும் சனி, சந்திரன் இணைவு இருவருக்குமே அமைந்த விசித்திரம். இப்படி முரண்பட்ட அமைப்புகளால் எல்லாம் இருந்தும் இல்லறம் என்னும் நல்லறம் நடத்த முடியாமல் தத்தளிக்கிறார்கள். தற்போது நடந்துவரும் கணவருக்குரிய செவ்வாய் திசை மனைவிக்கு பாதகாதிபதி என்பதும் மனைவிக்கு நடக்கும் சுக்கிரதசை கணவரின் 6க்குடையவர் தசை என்பதால் எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போலாகிவிட்டது. எனவே பலவீனமே பலமாகி கர்மவினையில் பயன்களை இருவரும் இணைந்து அனுபவிக்க வேண்டும் என்று விதியின் கைகள் இவர்களை வாழ்வில் இணைய வைத்ததோ என்றே எண்ணத் தோன்றுகிறது. கணவரின் ஜாதகத்தில் ஒரு பெண்ணால் இவரது வாழ்வு, சுகம் கெடவேண்டுமென்பது விதி. மனைவியாகவே வந்தவளே அவள் தான் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக ஆட்சிப்பெற்ற புதன் பாதகாதிபதி என்பதும் அவரே கர்மாதிபதி என்பதும் குறிப்பிடதக்கது. எனவே அதன்பலனை அனுபவிக்கப் பிறந்த இலக்கினாதிபதி குரு, இராகு சாரம் பெற்று அம்சத்திலும், இராகுவுடன் இணைந்தது மட்டுமல்லாமல் இலக்கினத்திற்கு 10இல் இராகு அமர்ந்து முன்னோர் பாவபலனை கர்மபலனாய் அனுபவிக்க வைக்கிறது எனலாம். எனவே இவர்களது மனப்போராட்டத்திற்கு மாற்று மருந்தாக பாலைவனத்தில் ஒரு ரோஜாவாய் இருவர் மனதையும் இணைக்கும் பாலமாய் குழந்தைச் செல்வம் உதிக்க பிராப்திப்போம். கணவன், மனைவி ஜாதகங்கள் இரண்டிலும் முரண்பட்ட அமைப்புகள் தவிர நன்றாக அமைந்த கிரக அமைப்புகள் யாவும் தற்போது வாழும் வாழ்க்கையின் நற்பலன்களுக்கு சான்றாய் அமைந்திருக்கிறது என்பதை வாசகர்கள் உணர வேண்டும். கட்டுரையின் ஆரம்பத்தில் நான் சொல்லிய கருத்துக்கள் சிலருக்கு பிற்போக்கு சிந்தனையாய் தோன்றினாலும்,

**மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக்கனியும்**
**முன்னர் கசக்கும் பின்னர் இனிக்கும்**

என்ற முதுமொழயை அடியொற்றி காலமாற்றத்திற்கேற்ப அத்தியாவசியத்திற்கு சில விஷயங்களில் புதுமையை கடைப்பிடித்தாலும், முன்னோர் சொல்லிச் சென்ற பழமையை விடாது கடைப்பிடிப்பவர்கள் வாழ்வில் ஒருநாளும் தோற்றுப் போவதில்லை. தோற்று போனதுமில்லை என்பதை பழக்க வழக்கங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், ஆசாரங்கள், அனுஷ்டானங்களை தவறாமல் கடைபிடிப்பவர்கள் நன்கு உணர்வார்கள். என்பது நிச்சயம். எனவே வாழ்வு என்பது எத்தனையோ பரிமாணங்களைக் கொண்டது. இதில் துயரத்தின் எல்லைவரை சென்றவர்கள் உண்டு என்பதும் சோகத்தின் சுவடே தெரியாமல் வாழ்ந்தவர்கள் என்கிற இரு நிலைகளுமே அவரவர் பெற்ற விதிப்பயனின் விளைவுகளேயன்றி வேறு என்னவாக இருக்க முடியும். எனவே வாழ்வில் இதுவும் கடந்து போகும் என்ற தத்துவத்தை புரிந்துக் கொண்டு துன்பத்தைக் கண்டு துவண்டு விடாமல் எதிர்த்து நின்றால் வாழ்ந்து காட்டலாம் என்பது சாத்தியமே.

# தானத்திலே சிறந்தது அன்னதானம் – அதுவே கர்ம வினைகளைக் களைந்திடும் ஜீவ தானம்



முற்பிறப்பின் கர்ம வினைகளை தீர்ப்பதற்கே இப்புவியில் ஒவ்வொரு மனிதனும் பிறவி எடுக்கிறான். அப்படி பிறவி எடுத்தவனின் கர்ம வினைகளை களைந்திடும் மூல வழி அன்னதானம் செய்வது ஒன்றே தான். ஏழ்பிறப்பு தீவினைகள் நீங்கி ஏற்றம் காண, ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, அர்தாஷ்டம சனி பாதிப்பில் இருந்து விடுபட, புத்திர பாக்கியத் தடை, தடைப்பட்ட மணவாழ்க்கை நீங்க, தொழில் வழி பிரச்சனைகள் தீர, பித்ரு தோஷம் நீங்கவும், தீராத நோய்கள் தீரவும் அன்னதானம் அளிப்பதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒருவருக்காவது அன்னதானம் அளிக்க வேண்டும் என்பது சாஸ்த்திர நியதி.

ஒவ்வொருவருடைய பிறந்த நாளின் போதும், திருமண நாளின் போதும், பெரியவர்கள் மறைந்த நாளிலும், சித்தர்களின் ஜென்ம தினத்திலும், குருவின் பிறந்த நாளிலும் அன்னதானம் செய்து வந்தால் எத்தகைய பிரச்சனைகளும் நீங்கி ஏற்றம் காணலாம். பரிகாரங்கள் செய்து தங்களது எல்லாப் பிரச்சனைகளைப் போக்கிக் கொள்ள நினைப்பவர்களுக்கு அன்னதானம் செய்வது ஒன்றே கர்மாவைக் களைந்திடும் சரியான அருமருந்தாகும்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (திருக்குறள்)

உண்ணாமல் நோன்பு இருப்பது மட்டும் தவமாகாது. அப்படி செய்வதால் மட்டும் ஆண்டவனின் அருளை அடைந்து விட முடியாது. உண்ண உணவின்றி வாடும் ஏழையின் பசியை நீக்குவதே அதைவிட மேலான தவமாகிறது. அதுவே ஆண்டவன் குடியிருக்கும் ஆலயமாகிறது.

இத்தகைய அரியதொரு பணியில் ஈடுபட, கடந்த 10 ஆண்டுகளாக ஆன்மிகப் பணியில் அயராது அரும் தெய்வப்பணி ஆற்றிடும் திருவருள் சக்தி தன் வாசகர்கள், பாவங்கள் நீங்கி வளமோடு எல்லா நலமும் பெறும் பொருட்டு, அன்னதானம் அளிக்கும் திட்டத்தில் தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. எமது வாசகர்கள், தனியாக அன்னதானம் செய்ய இயலாதவர்கள், மனம் இருந்தும் மார்க்கம் இல்லாதவர்கள் இந்தக் கூட்டுத் திட்டத்தில் பங்கேற்று தன் பாவங்களைப் போக்கும் பரிகாரம் தேடலாம்.

திருநள்ளாறு, திருவண்ணாமலை, காசி, இராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்கள், வயதான முதியோர் காப்பகங்கள், ஆதரவற்ற அனாதைகள், உடல் ஊனமுற்றோர், கோவில் திருவிழாக்காலங்களில் கலந்துக் கொள்ளும் அடியார்கள் போன்றோர்களுக்கு அன்னதானம் அளித்திட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த அறக்கட்டளையின் பதிவு செய்யப் பட்டுள்ள 19 விதமான பரோபகார உதவிகளில் குறிப்பிட்ட சில உதவிகள் :-

- ஏழ்மையில் இருப்பவர்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் படிக்கும் பள்ளிக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவுதல்
- ஏழ்மை குழந்தைகளுக்கு துணிமணிகள், புத்தகங்கள், மருத்துவ உதவி போன்றவைகள் அளித்தல்
- உடல் ஊனமுற்ற உள்ளங்களுக்கு உதவுதல்
- பரோபகார நிறுவனங்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் இருப்போருக்கு மண வாழ்க்கைக்கு மகிமை சேர்த்தல்
- ஆதரவற்ற வயதான முதியோர்களின் வாழ்வாதார நிலைக்கு உதவுதல் போன்ற பல பரோபகார மனித நேய உதவிகள்.

ஆன்மிகத் தொண்டு செய்வதுடன், பாவங்கள் போக்கும் பரிகாரமாக ஏழ்மையில் இருக்கும் ஜீவன்களுக்கு உதவிடும் தாய்மை குணத்தோடு, தன்னலம் பாராது உங்கள் முன் வலம் வருகிறது 'திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்'. நீங்களும் இதில் பங்கு பெற்று இந்த மண்ணில் பிறந்த கர்மாவை தீர்ப்பதற்கு வழி வகுத்துக் கொள்ளலாம். பிறவி இல்லாப் பெருவாழ்வு அடைவதற்கும் இது அடிகோலும். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்ற நிலையில், என்றும் பேர் சொல்லும் பெரும் பயனை பெற்றிட வழி வகுக்கும். வருங்கால நம் சந்ததி களும் நம்மை என்றும் வாழ்த்தும். முடிந்த அளவு உதவி செய்து ஏழ்மையில் வாடும் ஜீவன்களுக்கு ஒரு வேளை உணவையாவது அளித்தோம் என்ற ஆத்ம திருப்தியில் ஆண்டவன் அருளுக்கும் பாத்திரமாகலாம்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (திருக்குறள்)

ஏழைகளின் பசித்துன்பத்தை நீக்கும் தானமே என்றும் மேன்மையை அடைகிறது. அதுவே, சேர்த்த செல்வத்தைச் சிறப்புடன் சேமித்து, அழிவுக்கு ஆட்படாமல் பாதுகாத்து வைக்கும் அரியதொரு பொக்கிஷமாகிறது. வருங்கால நம் சந்ததிக்கும் வளமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது. ஏழ் பிறப்புக்கும் ஏற்றத்தைக் கொடுக்கும் கற்பக விருட்சமாகிறது.

- **பிரதி பலன் பாராது தானம் செய்வதே பிரதானம்.**
- **இறைக்கின்ற கிணறே சுரக்கும் – என்றும்!**
  **கொடுக்கின்ற மனமே வாழ்க்கையில் சிறக்கும்!**

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST" என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க DD/CHEQUE/M.O. மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு உங்களது தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்களுடன், பெயர், பிறந்த நாள், திருமண நாள், இராசி, நட்சத்திரம் ஆகியவைகளைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். புனிதமான அன்னதான சேவையில் உங்களையும் ஈடுபடுத்தி எங்களுடன் ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

DD/Cheque/M.O. அனுப்ப வேண்டிய முகவரி : **திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்**

## THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST,

(REGD. PUBLIC CHARITABLE TRUST- **No. 32/2012** ) 18/67, P.V. Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014.

**Phone : 044 - 2811 6770, Cell : 0-97109 21880 Email : tsannadhanam@gmail.com**

பணமாக அளிக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

Mrs. **R. RADHA** - S.B.A/c. : 426681768 - INDIAN BANK (Chennai - Royapettah).

அன்னதானம் செய்வோம் – கர்ம வினைகளைப் போக்குவோம்.


**Mrs. R. RADHA, Founder & Managing Trustee**

A/c Details: Thiruvarul Sakthi Annadhana Charitable Trust, A/c No.12820100107660
Federal Bank, Royapettah Branch, Chennai- 600 014. IFSC: FDRL0001282

மேலும் தொடர்புக்கு
**Cell: 72999 21880**

**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன**


# வாஸ்து குறைபாடுகளை போக்கும் வழி முறைகள்





**கே.எஸ்.எம்.ஜெய்வேலு**
M.A., D.A., M.A., M.Ed., M.A., (ஜோதிடம்)
*செல் : 94428 75683*

*முன்னுரை:* The fox has a hole to live. Lions have cave to live. But Man has no place to live in *என ரஸ்கின் என்பவர் குள்ளநரி வாழ ஒரு இடம் உண்டு. சிங்கம் வாழ குகை உண்டு. ஆனால் மனிதன் வாழ இயற்கை ஒர் இடத்தை தரவில்லை என வருந்துகிறார். ஆம் கண்மூடி கண் திறக்கும் நேரத்தில் 300 குழந்தைகளை பிறக்கும் இந்திய நாட்டில் மனிதன் வாழ இடம் இல்லை. நல்ல வாஸ்துபடி வாழ நிலம் இல்லை. எனவே சதுரமான, வட்டமான முக்கோண வடிவ இடத்தை நகரங்களில் வாங்கி துன்பப்படுகிறான். பல விதமான குறைபாடு உடைய வீடுகளை கட்டுகிறான். அறியாமையின் காரணமாக கட்டிய வீட்டை வாங்கி கஷ்டப்படுகிறான். எனவே எத்தகைய இடத்தை வாங்கலாம். தவறான வீட்டை △வாங்கிய பிறகு அதை எப்படி வாஸ்து முறைபடி சரி செய்யலாம் என முருகப் பெருமான் மலரடி தொழுது இக்கட்டுரையை எழுதுகிறேன்.*

*வீட்டிற்கு முன்பு மரம், மின்சார கம்பம் இருப்பது அதற்கு வீட்டின் நுழைவாயில் முன்பு ஒரு அடிக்கு ஒரு பிரமீடு வைக்கலாம். எவ்வளவு பெரிய நுழைவாயில் என்றாலும் 5 பிரமீடுகளுக்கு மேல் வைக்க இயலாது.*




*உயரமான கட்டிடம் வீட்டின் முன்பு பெரிய கட்டிடம் உயரமான கட்டிடம் இருந்தால் வீட்டு வாசலிலுள்ள முழு நிலத்திற்கு ஒரு அடிக்கு 1 பிரமீடு பூமியில் கீழ்க்கண்டவாறு புதைக்கலாம்.*





*இவ்வாறு செய்யும்பொழுது முன் கட்டிடத்தில் இருந்து வரும் வீட்டின் காந்த சக்தி தடுக்கப்படுகிறது.*

**பல்வேறு நிலை அமைப்புகள்**

*தற்காலத்தில் சதுரம், செவ்வகம் வீட்டு மனைகள் கிடைக்காததால் சிலர் கீழ்கண்ட அமைப்புள்ள வீட்டுமனைகளை வாங்குகிறார்கள். அதை எவ்வாறு வீடுகட்ட பயன்படுத்தலாம் என பார்க்கலாம்.*





*இது அக்னி மூலை வளர்ந்த வீட்டுமனை இதை பிரமீடு உதவியால் (அ) ஒரு அடி செங்கல் சுவற்றால் கீழ்கண்டபடி சதுரமாக்கலாம்.*





*கோடிட்ட பகுதியில் ஒரு அடிக்கு ஒரு பிரமீடு வீதம் வைத்து இதை சதுரமாக்கி வீடு கட்டலாம் (அ) ஒரு அடி செங்கல் வைத்து சதுரமாக்கி வீடு கட்டலாம்.*

**ஈசானம் வளர்ச்சி**




*இதையும் மேற்கண்டபடி கோடிட்ட பகுதியில் ஒரு அடிக்கு ஒரு பிரமிடு மூலம் பூமியில் புதைத்து (அ) செங்கல் சுவர் வைத்து சதுரமாக்கி வீடு கட்டலாம்.*




*வாயு மூலை வளர்ச்சி இதையும் கீழ்க்ணட படி பிரமீடு (அ) செங்கல் மூலம் சதுரமாக்கலாம்.*


*தென் மேற்கு (அ) கன்னிமூலை அதிகமான பகுதியை கீழ்கண்டவாறு பிரமீடு (அ) சுவற்றின் மூலம் பிரிக்கலாம்.*




இருபக்கம் விரிவான மனைகளை பிரமீடு மூலம் (அ) சுவர் மூலம் கீழ்கண்டவாறு சதுரமாக்கலாம்.




**முக்கோண வடிவ மனை**



இதை மேற்கண்டவாறு சதுரமாக்கி வீடு கட்டலாம். கிணறுகள் இவை வடக்கு மற்றும் கிழக்கு பகுதி தவிர மற்ற பகுதிகளில் இருந்தால் மிக கெட்ட பலன்களை தரும். அவைகளை போக்க கிணற்றை சுற்றி பிரமீடு ஒரு அடிக்கு ஒரு பிரமீடு வீதம் பூமிக்குள் வைத்து கிணற்றினால் வரும் தாக்கத்தை போக்கலாம்.


ஈசானம் மேடு: இவ்வாறு இருக்கும்பொழுது பணவரவு குறையும். குழந்தைகள் பாதிக்கும். எனவே இதை போக்க அங்குள்ள மண்ணை எடுத்துவிட்டு பள்ளமாக்கலாம். அங்கு மூலைக்கு லி வடிவ பிரமீடை பூமியில் கீழ்கண்டவாறு புதைக்கலாம்.




(அ) ஒரு அடிக்கு ஒரு பிரமீடு வீதம் வைக்கலாம். அல்லது அப்பகுதியை மேடாக்கலாம். மேடாக்க இயலாவிடில் மேற்கண்டபடி பிரமீடு வைத்து அதை சரி செய்யலாம்.




தெரு அடிப்படையில் (அ) வாயில் அடிப்படையில் வடமேற்கு பகுதியில் மட்டும் வாசல் வைக்கும் நிலையில்லை வீடு காலி இடம் இருந்தால் அதை கீழ்கண்டவாறு மாற்றலாம்.





இதற்கு வீட்டின் உள்ளே வடக்கு கிழக்கு பகுதியில் காலி இடம் விட்டு ஈசானத்தில் வாயில் கீழ்கண்டவாறு வைக்கலாம்.





இதேபோல தெற்கு பகுதியில் இந்த அமைப்பு இருந்தால் அங்கு கீழ்கண்டவாறு அதை சரி செய்யலாம்.




படத்தில் உள்ளபடி காலி இடம் விட்டு மனையின் உச்சத்தில் வாயில் வைக்கலாம்.




மனையில் காலி இடத்தை மேற்கண்டபடி இடம் விட்டு உச்சத்தில் வீட்டு வாயிலை வைக்கலாம். ●

## ஜோதிட முத்துக்கள்

**6இல் சனி:** ஞான காரகனாகிய கேது 12ஆம் இடத்தில் இருந்தால் மறு பிறவி இல்லை. இதுவே கடைசி பிறவியாகும். இதனால் பிற்காலத்தில் ஒரு கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் பாக்கியமும் அடிக்கடி தீர்த்த யாத்திரை சென்று வரும் பாக்கியமும் ஏற்படும் மேலும் விட்டகுறை தொட்ட குறையாக முன் ஜென்மங்களில் விடுபட்ட ஒரு சில நல்ல கெட்ட பலன்களையும் இந்த ஜென்மத்தில் அனுபவித்து முடிக்க வேண்டும்.

✶ இலக்கினத்திற்கு 7க்குரியவன் உச்சம் பெற்று 7ஆம் இடத்தில் சுக்கிரன் இருந்தாலும் அல்லது அந்த 7ஆம் இடத்தை சுக்கிரன் பார்த்தாலும் அந்த ஜாதகருக்கு பல தாரங்கள் ஏற்படுகின்றன.

✶ இலக்கினத்திற்கு 4ஆம் இடத்தில் ஏதாவது பாவக்கிரகங்கள் இருந்து, 7ஆம் அதிபதியோடும் ஏதாவது பாவக்கிரகங்கள் சம்மந்தப்பட்டு இருந்தால் அந்த ஜாதகரின் நடத்தை சந்தேகத்திற்குரியதாகும். மேலும் 2,7,10க்குரியவர்கள் ஒன்று சேர்ந்து, 7ஆம் அதிபதி நீச்சம் பெற்றோ அல்லது பாவக்கிரகங்களுடன் சம்மந்தப்பட்டாலோ நடத்தை சந்தேகத்திற்குரியதாகும். 7க்குரியவன் 8இல் இருந்து சுபக்கிரகங்களின் பார்வை இல்லை என்றாலும், செவ்வாய் வீட்டில் சுக்கிரனும் சுக்கிரன் வீட்டில் செவ்வாய் இருந்தாலும் (செவ்வாய் - சுக்கிரன் பரிவர்த்தனை) 7க்குரியவன் சனி அல்லது செவ்வாய் வீட்டில் இருந்தாலும் நடத்தை சந்தேகத்திற்குரியதாகும்.

✶ பெண் ஜாதகம் இலக்கினம் ரிஷபமாகி, புத்திர ஸ்தானமான 5ஆம் இடத்தில் சூரியன் புதன் இராகு சுக்கிரன் கூடியிருந்தால், புத்திர பாக்கியம் தாமதமாகும் முதல் குழந்தை கருவிலேயே அழிந்து விடும்.

✶ இலக்கினம் மீனமாகி, 10ஆம் இடத்தில் சுக்கிரன் சூரியன் புதன் மூவரும் கூடியிருந்தால் அந்த ஜாதகருக்கு பெண் பார்த்து பேசி முடித்து திருமண முகூர்த்தநாளும் குறித்தபின், திருமண ஏற்பாடுகள் செய்தபின் திருமணம் நின்று போகும் அதன் பின் வேறு பெண் பார்த்து திருமணம் நடைபெறும்.

✶ பொதுவாக சனியுடன் குரு சேர்ந்த ஜாதகங்களுக்கும் சனியை குரு பார்த்த ஜாதகங்களுக்கும் ஆரம்ப கால வாழ்க்கை சுகப்படுவதில்லை. திருமணத்திற்கு பின் தான் யோக கால கட்டம் ஆரம்பமாகிறது. இந்த நேரத்தில் சனி திசையும் ஏற்பட்டால் விசேஷமாகும். தகுதிக்கு தக்கப்படி சனி அள்ளிக் கொடுப்பான்.

பி.இராமசாமி



# மணக்கோலம் மறைத்திடும் கிரக நிலைகள்




ஜோதிட ஆய்வாளர்
புலவர் **வி.இளங்கோவன்**
**செல்: 94433 10477**


சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன், ஓர் அம்மையார், தன் மகனுக்குத் திருமணம் செய்ய வேண்டி, என்னிடம் மகனின் சாதகத்தைக் கொடுத்தார். அபபோது அந்த பையனுக்கு வயது 28

ஜாதகத்தைப் பார்த்ததும் ஐயோ பாவம் என்ற எண்ணம் தான் எனது மனத்தில் எழுந்தது. சிறிது நேரம் கழித்து, இந்த ஜாதகன் மனம் வைத்தால்தான் திருமணம் ஆகும். அனால் அவ்வளவு சுலபமாக மனம் வைக்கமாட்டான். அப்படியே மனம் வைத்தாலும் இப்போது திருமணம் ஆகாது 38 வயதுக்குமேல் தான் ஆகும். அப்போ மனம் வைக்கவில்லை எனில் திருமணமே ஆகாது என்ற முடிவுக்கு வந்துவிடலாம் என்றேன்.

இதைக் கேட்டவுடன் அந்த அம்மாளின் முகம் சோர்ந்தபோய் விட்டது. 38 வயதுக்குமேல் யாருங்க பெண் கொடுப்பாங்க? என்றார். ஏன் அந்தப் பையனே ஒரு பெண்ணை விரும்பலாம். அல்லவா? என்றேன், என் மகன் அப்படிப்பட்டவன் இல்லை என்றார். எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களே பெண் பார்த்தாலும் சரி, அவனே பார்த்துக் கொண்டாலும், இந்த ஜாதகன் மனம் வைக்க வேண்டுமே என்றேன். அந்த அம்மாள் விரக்தியில் வருத்தப்பட்டுக் கொண்டே சென்று விட்டார். விநோதமான அந்த ஜாதகத்தைத்தான் இப்போது பார்க்கப் போகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் செவ் | | ல | |
| புத | இராசி ஆண் | | ராகு |
| | | | |
| கேது | சந் | | குரு சனி |

| | | | |
|---|---|---|---|
| | சனி | புத குரு கேது | |
| ல சந் | அம்சம் | | |
| | | | |
| | செவ் ராகு | சூரி | சுக் |

பிறந்த தேதி : 27.3.1981
கேட்டை நட்சத்திரம்
புதன் தசை இருப்பு : 5—7—13

மேலோட்டமாகப் பார்க்கும்போது ஜாதகத்தில் எந்தத் தோஷமும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதுதான் எல்லோருடைய கருத்தாக இருக்கும். ஆனால் நன்றாக ஆராய்ந்து பார்த்தோமானால் மிகவும் பலமுள்ள தோஷ அமைப்புகளைக் காணலாம். அவைகளாவன

1. இலக்கினாதிபதி அஸ்தங்கம்
2. இலக்கினத்திற்கு இராகு பார்வை
3. 5இல் சனி நின்று குடும்ப ஸ்தானத்தையும், களத்திரஸ்தானத்தையும் பார்ப்பது.
4. இடப இலக்கினப் பாவியான சந்திரன்

7இல் நீசம் பெற்று நிற்பது

5. 7ஆம் அதிபதி செவ்வாய் 11இல் அஸ்தங்கம் பெற்றது.

6. 7,12க்குரிய செவ்வாயும் இலக்கினாதிபதி சுக்கிரனும் கூடி அஸ்தங்கம் பெற்றது.

7. 7ஆம் பாவத்தைக் கேது, செவ்வாய், சனி பார்ப்பது

8. 11இல் நிற்கும் சுகாதிபதி சூரியன் அம்சத்தில் நீசம் பெற்றது.

இப்படி இலக்கினாதிபதி, சுகாதிபதி, 7ஆம் அதிபதி, 12ஆம் அதிபதி, களத்திரகாரகன் சுக்கிரன் ஆகியோர் பலமிழந்த நிலையில் திருமண பாக்கியமே இல்லை என்று கூட கூறலாம். அதற்குப் பக்க பலமாக சனிக்கும் சந்திரனுக்கும் 7ஆம் இடத்தொடர்பு உள்ள நிலையில் கேள்விக்குறியாகத் திருமணம் உள்ளதையும் சொல்லித் தான் ஆக வேண்டும்.

திருமண பாக்கியத்தைத் தரும் குடும்பாதிபதியும், பாக்கியாதிபதியும், எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்தால், அவை எல்லாவற்றையும் விட மிக மோசமான நிலையில் உள்ளன. குடும்பாதிபதியும் பஞ்ச மாதிபதியுமான புதன் அட்டமாதிபதி குருசாரம் பெற்று 10இல் படுத்து விட்டது. பாக்கியாதிபதி சனியோ, இலக்கினப் பாவியான சந்திர சாரம் பெற்றுவிட்டது. எனவே இவர்களாலும் பலனேதும் இல்லை. இப்போது தொகுத்துப் பார்த்தோமேயானால்

இலக்கினாதிபதி அஸ்தங்கம்.

குடும்பாதிபதி அட்டமாதிபதி சாரத்தில்

வீரிய ஸ்தானாதிபதி சந்திரன் நீசத்தில்

சுகாதிபதி சூரியன் அம்சத்தில் நீசம்

பஞ்சமாதிபதி புதன் அட்டமாதிபதி சாரத்தில்

களத்திர பாவாதிபதி சயன சுகாதிபதி செவ்வாய் அஸ்தங்கம்

பாக்கியாதிபதி சனி, பாவியான சந்திரசாரத்தில்,

இப்படி திருமணம் தொடர்பான அனைத்து பாவங்களும் பாவாதிபதிகளும் கெட்டால் எப்படித் திருமணம் ஆகும்? அதற்கேற்றார் போல தாளம் போடும் தசா புத்திகளையும் பார்க்கலாம்.

27.1.1981இல் பிறந்தகாலத்தில்

| | |
|---|---|
| புதன் தசை இருப்பு: | 5—7—13 |
| கேது தசை | 7—0—0 |
| அஸ்தங்கமான இலக்கினாதிபதி சுக்கிர தசை | 20—0—0 |
| | 31—7—13ஆக |

இதுவரை திருமணமாக வாய்ப்பே இல்லை

| | |
|---|---|
| அடுத்து , சூரிய தசை சூரிய புத்தி | 0—3—18 |
| நீச்சசந்திர புத்தி | 0—6—0 |
| அஸ்தங்கமான செவ்வாய் புத்தி | 0—4—6 |
| இலக்கினப் பகை பாவத்தில் மந்தன் சனிசாரம் பெற்ற இராகு புத்தி | 0—10—24 |
| அட்டமாதிபதி குரு புத்தி | 0—9—18 |
| சந்திரசாரம் பெற்ற சனி புத்தி | 0—11—12 |
| அட்டமாதிபதி சாரம் பெற்ற புதன் புத்தி | 0—10—6 |
| சந்திர சாரம் பெற்ற கேது புத்தி | 0—4—6 |
| நீசம் பெற்ற சுக்கிர புத்தி | 1—0—0 |
| | 6—0—0 |

ஆக 32—7—13+6—0—0 = 38—7—13 வயது வரை திருமணம் ஆக வாய்ப்பே இல்லை அடுத்து வரும் சந்திர தசையில் தான் திருமணம் ஆக வாய்ப்பு, நிச்ச சந்திரன் குடும்பாதிபதி புதன்சாரம் பெற்று நிற்பதால் சுய புத்தியில் திருமணம் செய்யலாம். அதாவது வயது 38—7—13லிருந்து 39—5—13க்குள் நடந்தால்தான். இதையும் விட்டால் திருமண பாக்கியம் அறவே இல்லை என்ற முடிவுக்கு வந்துதான் ஆக வேண்டும்.

வயது 35 நடந்துக்கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் கடந்த 8 ஆண்டுகளில் 4 முறை குரு பலம் இருந்தும் திருமணம் ஆக வில்லை எனும்போது, தசா புத்திகளும் கிரகங்களும் தான் திருமணத்தை தருமே தவிர குருபலம். இருந்தால் தான் திருமணம் ஆகும். என்ற வாதத்திற்கு இந்த ஜாதகம் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது எனலாம். ●

### ஜோதிட முத்துக்கள்

**6இல் சனி:** பொதுவாகவே கடக இலக்கின ஜாதகர்களுக்கும் 2இல் சனி உள்ள ஜாதகர்களுக்கும் ஆரம்ப கால வாழ்க்கை அதாவது 33வது வயது வரை வாழ்க்கை சுகப்படுவதில்லை, மேற்படி வயதுக்கு மேல் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு ஒரு நல்ல ஸ்திரியை அடையும் பாக்கியமுண்டாகிறது.

✶ 10க்குடையவனுடன் சூரியன் சேர்ந்தாலும் செவ்வாயுடன் சூரியன் சேர்ந்தாலும் உத்தியோகம் சுகப்படுவதில்லை. உத்தியோகத்தில் இருந்தாலும் ஒன்றுதானே விலக வேண்டும் அல்லது விலக்கப்படுவர் இவர்களுக்கு சுய தொழில்தான் சிறப்பைத் தரும்.

✶ கடக திலக்கினத்திற்கு 5-10க்குடையவன் செவ்வாய், இந்த செவ்வாய் கடகத்தில் நீச்சம் பெற்றாலும், பிற்காலத்தில் நல்ல பேரும் புகழும் ஏற்படும். 5க்குடையவர் பாபி சுபரானாலும் மிஞ்சி பலன் தருவார் என்பது ஜோதிட விதி இந்த நிலையை கவியரசு கண்ணதாசன், கிருபானந்த வாரியார் ராமலிங்க சுவாமிகள். விசுவாமித்திரன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமேன் ஆகியோர்களின் ஜாதகத்திலிருந்து நாம் நன்கு தெரிந்துக் கொள்ளலாம்.

பி.இராமசாமி

# அறிந்துக் கொள்ள வேண்டிய அரிய ஜோதிட முத்துக்கள்

12



**ஈ.வெ.சு. பிள்ளை**
**செல்: 099958 30338**

### தூண்டில் புழுக்கள்–5

'SELF -- KNOWLEDGE IS THE BEGINNING OF SELF - IMPROVEMENT.'

ஜாதகத்தில்

| இலக்கினம் | |
|---|---|
| மேஷம்/மிதுனம் | செவ்வாய், புதன் |
| ரிஷபம் | சுக்கிரன் |
| கடகம் | சந்திரன், வியாழன் |
| சிம்மம் | சூரியன், சனி |
| கன்னி/மகரம் | புதன், சனி |
| துலாம்/தனுசு | வியாழன், சுக்கிரன் |
| விருச்சிகம் | செவ்வாய் |
| கும்பம் | சந்திரன், சனி |
| மீனம் | சூரியன், வியாழன் |

ஒவ்வொரு இலக்கினத்திற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கிரக சேர்க்கையுடன் இராகு அல்லது கேதுவும் சேர்ந்து எங்கிருந்தாலும் ஜாதகர்/ஜாதகி உடல் நல மற்றும், மிகுந்த துன்பங்களால் மனமுடைந்தும் நோயாளிகளாகவே இருப்பர் எனலாம். உதாரணம் — 1

| | | | |
|---|---|---|---|
| | | கேது | மா |
| | சிவகாமி 21.11.1955 | | |
| சந் | | | ல/ குரு |
| | சூரி சனி ராகு சுக் | செவ் புத | |

4இல் சூரி சனி ராகு

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ல/ |
| செவ் புத கேது சூரி | ஸ்ரீ காந்த் 28.2.1979 | | குரு |
| சுக் | | | சனி ராகு |
| | | | |

9இல் செவ், புத கேது

### தூண்டில் புழுக்கள்–6

'IF YOU ASK ENOUGH PEOPLE, YOU CAN USUALLY FIND SOMEONE WHOLL ADVISE YOU TO DO WHAT YOU WERE GOING TO DO ANYWAY.'

பொதுவாகவே ஜாதகத்தில்

இலக்கினம்

ரிஷபம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் செவ்வாய் இருந்தாலும்

மகரம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் வியாழன் இருந்தாலும்

மேஷம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சுக்கிர, புத சேர்க்கை இருந்தாலும்

மீனம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சுக்கிர, புத சேர்க்கை இருந்தாலும்

மிதுனம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் வியாழனிருந்து சூரிய சேர்க்கை/பார்வை

கடகம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சனியிருந்து புத சேர்க்கை/பார்வை

சிம்மம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சனியிருந்து சுக்கிர சேர்க்கை/பார்வை

கன்னி — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் வியாழனிருந்து செவ்வாய் சேர்க்கை/பார்வை

துலாம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் செவ்வாயிருந்து வியாழ சேர்க்கை/பார்வை

விருச்சிகம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சுக்கிரனிருந்து சனி சேர்க்கை/பார்வை

தனுசு — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் புதனிருந்து சனி சேர்க்கை/பார்வை

கும்பம் — சந்திரன் நின்ற இராசிக்கு 3இல் சூரியனிருந்து செவ்வாய்/பார்வை

இருந்தால், சம்பந்தப்பட்ட ஜாதகர்/ஜாதகிக்கு நிரந்தரமாகப் பிறருடன் தொடர்பு இருந்து வரக் கூடுமென்பதால், திருமணப் பொருத்தத்தில் இது குறித்துக் கவனித்து அறிந்து பின்பு முடிவெடுப்பதே நல்லது. (உதாரண ஜாதகங்கள் தவிர்க்கப்படுகின்றன.)

### தூண்டில் புழுக்கள்–7

'IN OUR PLAY WE REVEAL WHAT KIND OF PEOPLE WE ARE.'

ஜாதகத்தில்

இலக்கினத்திற்கு 4 — 10 ஆகிய இடங்களிலொன்றில் சந்திரனிருந்து, செவ்வாய் சேர்க்கை/பார்வை (1,4,9,10இல் செவ்) பெற்றிருந்தால், ஜாதகர்/ஜாதகி தங்களுடைய தாயாரின் செயல்பாடுகள் காரணமாக அவப்பெயரெடுக்க நேரிடக்கூடும். இத்தகையோர் தாயாருடன் பெரும்பாலும் அனுசரித்து இருக்கக் கூடியவர்களாக இரார்.

விருச்சிக இலக்கின ஜாதகத்தில்

இலக்கினத்திற்கு 7இல் சனி இருந்தால், ஜாதகர்/ஜாதகியை எவ்வகையிலேனும் ஏமாற்றங்களுக்காளாக்கிவிடும். இத்தகையோர் வாழ்நாள் முழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களாகவே இருப்பர் உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சனி | குரு வ |
| சூரி கேது | பி.எஸ் எடியூரப்பா | 27.2.1943 | |
| செவ் புத | | | ராகு |
| | ல சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | | சனி | குரு சந் |
| கேது | நடிகை ஆஷா பரேக | 2.10.1942 | |
| | | | ராகு |
| | ல | புத | சூரி சுக் |

## தூண்டில் புழுக்கள்—8

'ALL HUMAN WISDOM IS SUMMED UP IN TWO WORDS - WAIT AND HOPE.'

மீன இலக்கின ஜாதகத்தில்

1. 8ஆம் இடத்தில் சந்திர சுக்கிர சேர்க்கை இருந்தாலும், அல்லது

2. 2ஆம் இடத்தில் சூரியனிருக்க, 8இல் சந்திரனும் இருந்தாலும்,

ஸ்திரீ சாபம் மற்றும் தோஷத்தால் புத்திரநாச மேற்படும்.

சிம்மம் மற்றும் விருச்சிக இலக்கின ஜாதகத்தில்

1. சிம்ம இலக்கினம் 6இல் வியாழனிருந்து, சனி சேர்க்கை/பார்வை

2. விருச்சிக இலக்கினம் 6இல் வியாழனிருந்து செவ்வாய்/சனி சேர்க்கை/பார்வை

புத்திர தோஷமாம் குறைப்பிரசவம் போன்று ஏற்படக்கூடும்.

பொதுவாகவே ஜாதகத்தில்

இலக்கினத்திற்கு 7இல் செவ்வாய், சனி சேர்க்கை இருந்தால் அற்பாயுள் மற்றும் துர்மரணம் என்பதைக் குறிப்பிடுவதாகும் என்பர்.

பொதுவாகவே ஜாதகத்தில்

சந்திரன் இராகு

சந்திரன் சுக்கிரன்

செவ்வாய், சனி

சுக்கிரன், சனி

சனி இராகு

சனி மாந்தி

இத்தகைய கிரக சேர்க்கை, இராசி மற்றும் அம்சத்தில் இருந்தால், ஜாதகர்/ஜாதகியின் குடும்ப மரபு அழிந்து விடுமெனலாம். மற்றபடி இத்தகையோரின் வாழ்வில் எவ்வளவுதான் உயர்வோ/தாழ்வோ இருந்தாலும் குல மரபு அழிவு என்பது உறுதியே.

## தூண்டில் புழுக்கள்—9

'HUMAN NEEDS: SOME FOOD, SOME SUN, SOME WORK, SOME FUN, SOMEONE.'

ஜாதகத்தில்

எந்தவோர் இலக்கினமாக இருந்தாலும் —

செவ்வாய் நின்ற இராசிக்கு 1 4 7 8இல் சுக்கிரன், ராகு சேர்ந்தோ/தனித்தனியேயோ

இராகு நின்ற இராசிக்கு 1 5 7 9இல் செவ்வாய், சுக்கிரன் சேர்ந்தோ/தனித்தனியேயோ

சுக்கிரன் நின்ற இராசிக்கு 1, 7இல் செவ்வாய், இராகு சேர்ந்தோ/தனித்தனியேயோ

சம்பந்தப்பட்ட ஜாதகர்/ஜாதகி உறுதியாக பிறருடைய வாழ்க்கைத் துணையுடன் கூடா/துர்தொடர்புகள் வைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவே இருப்பர். உதாரணம் (பெயர்கள் தவிர்க்கப்படுகின்றன)

| | | | |
|---|---|---|---|
| | செவ் சுக் | சூரி புத | வ |
| கேது | ஆண் | 5.6.1979 | குரு |
| | | | சனி ராகு |
| ல மா | | | சந் |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| | பெண் | 12.11.1983 | |
| சந் | | | |
| ல | குரு புத கேது | சூரி சனி | செவ் சுக் |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| | ஆண் | 7.8.1946 | சூரி சனி புத |
| | | | |
| | சந் கேது | | ல குரு செவ் சுக் |

| | | | |
|---|---|---|---|
| சூரி செவ் சுக் | | | |
| ல புத | பெண் | 1.4.1981 | ராகு |
| சந் கேது | | | |
| | | மா | குரு சனி |

ஆகவே இத்தகைய கிரக அமைப்பு விபரம் திருமணப் பொருத்தத்தில் கவனமாகப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியது முக்கியமாகும்.

இல்லாவிடில் பின் விளைவுகளால் பல்வேறு பிரச்சினைகளுக்களாக நேரிடக் கூடும்.

### தூண்டில் புழுக்கள்–10

'THE MOST DIFFICULT SECRET FOR A MAN TO KEEP IS THE OPINION HE HAS OF HIMSELF.'

ஜாதகத்தில்

கும்ப இலக்கினம் 2—5—8—12 ஆகிய இடங்களிலொன்றில் சனி இருந்தால், ஜாதகர்/ஜாதகியின் வாழ்வில் குடும்ப சுகம் பாதிக்கப்பட்ட தொன்றாகவே இருக்கும். வாழ்க்கைத் துணையின் குண நலன்கள் காரணமாகப் பல்வேறு பிரச்சினைகளை வாழ்வில் எதிர்கொள்ள நேரிட்டு விடக் கூடியவர்களாக இருப்பர்.

2. ஜாதகத்தில்

இலக்கினம்

மேஷம்/கடகம்/கன்னி — 6ஆம் இடத்தில் வியாழனிருந்தால், ஜாதகர்/ஜாதகியின் வாழ்வே போராட்டங்கள் நிறைந்ததாக அமைந்துவிடும்.

3. ஜாதகத்தில்

இலக்கினம்

| | |
|---|---|
| மேஷம் 3—6—9—12இல் | செவ்வாய் |
| கடகம் 3—6—9—12இல் | சனி |
| துலாம் 3—6—9—12இல் | சுக்கிரன் |
| மகரம் 3—6—9—12இல் | சூரியன் |
| ரிஷபம் 2—5—8—11இல் | வியாழன் |
| சிம்மம் 2—5—8—11இல் | வியாழன் |
| விருச்சிகம் 2—5—8—11இல் | புதன் |
| கும்பம் 2—5—8—11இல் | புதன் |
| மிதுனம் 1—4—7—10இல் | சனி |
| கன்னி 1—4—7—10இல் | செவ்வாய் |
| தனுசு 1—4—7—10இல் | சந்திரன் |
| மீனம் 1—4—7—10இல் | சுக்கிரன் |

இருந்தால், ஜாதகர்/ஜாதகியர் பிரயாணங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்துக் கொள்ள வேண்டியது முக்கியமாகும். இல்லையெனில் கண்டங்களாக நேரிடக் கூடும்.

### தூண்டில் புழுக்கள்–11

'THE IMPORTANT TWING IS HOW MUCH WE DO WITH WHAT WE KNOW.'

பொதுவாகவே ஜாதகத்தில்

இலக்கினத்திற்கு 5ல் மாந்தி இருந்தால், ஜாதகர்/ஜாதகி பிறரை மதியாதவர்களாகவும், புத்திரபாக்கிய விஷயத்தில் பாதிப்புள்ளவர்களுமாகவே இருப்பர் எனலாம்.

2. ஜாதகத்தில்

இலக்கினம்

மேஷம் 1—4—5—7—10—11இல் சூரியன்

ரிஷபம்/கும்பம் 1—4—5—7—10—11இல் புதன்

மிதுனம்/மகரம் 1—4—5—7—10—11இல் சுக்கிரன்

கடகம்/தனுசு 3—4—6—7—10இல் செவ்வாய்

சிம்மம்/விருச்சிகம் 2—4—5—6—7—9இல் வியாழன்

தனுசு/துலாம் 1—4—7—8—11இல் சனி

மீனம் 1—4—5—7—10—11இல் சந்திரன்

2. இலக்கினம்

மேஷம்/விருச்சிகம் 1—4—5—7—10—11இல் சுக்கிரன்

ரிஷபம்/துலாம் 3—4—6—7—10இல் செவ்வாய்

மிதுனம்/கன்னி 2—4—5—6—7—9இல் வியாழன்

கடகம்/சிம்மம் 1—4—7—8—11இல் சனி

தனுசு/மீனம் 1—4—5—7—10—11இல் புதன்

மகரம் 1—4—5—7—10—11இல் சந்திரன்

கும்பம் 1—4—5—7—10—11இல் சூரியன்

இருந்தால், 1. ஜாதகர்/ஜாதகி தங்கள் சுய செயல்பாடுகள் காரணமாகத் திருமணமான பின் வாழ்க்கையில் விரக்தியடைய நேரிடக் கூடியவர்களாக இருப்பர்.

2. ஜாதகர்/ஜாதகி தங்கள் வாழ்க்கைத் துணையின் செயல்பாடுகள் காரணமாகத் திருமணமானபின் வாழ்க்கையில் விரக்தியடைய நேரிடக் கூடியவர்களாக இருப்பர்.

தொடரும்...

**ஜோதிட முத்துக்கள்**

**6இல் சனி:** ஜெனன காலத்தில் 6ஆம் இடத்தில் சனி பலம் பெற்று இருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால், பிற்காலத்தில் நிறைய சொத்து சுகங்கள் ஏற்படும் மேலும் நிறைய பொன் பொருள் சேர்க்கையும் ஏற்படும், ஆனால் ஆரம்ப கால வாழ்க்கையில் கடும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டும், மனிதன் வாழ்வதற்காகத் தான் பிறக்கிறான். சாவதற்கல்ல எனவே வருவது வரட்டும் என்று வாழ்க்கையை எதிர்கொண்டால் வாழ்க்கை வெகு சிறப்பாக அமையும்.

✶ பொதுவாக சனியை குரு பார்த்த ஜாதகங்கள் எல்லாம் ஆரம்ப கால வாழ்க்கை சுகப்படுவதில்லை. சுமார் 33 வயதுக்குமேல் படிப்படியாக நல்ல முன்னேற்ற பலன்கள் நடைபெறும் அதே சமயம் சனியை குரு பார்த்த ஜாதகங்கள் வீண் போனதில்லை. சொந்த முயற்சியிலதான் சம்பாதிக்க முடியும்.

✶ உத்தியோகத்திற்குரிய செவ்வாய் சூரியனுடன் சேர்ந்து இருந்தால் உத்தியோகம் சுசுப்படாது சொந்த தொழில்தான் அமையும். அரசாங்க உதவி யோகமும் சரி. தனியார் துறை உத்தியோகமானாலும் சரி சுகப்படுவதில்லை. சொந்த தொழில் மூலமாகத்தான் மேன்மையான வாழ்க்கை அமைகிறது.

பி.இராமசாமி




இப்போது விற்பனையில்

# அப்ஸரா நாவல்

## மழை மேக மயில்கள்

நாவலாசிரியர்- **மேகலா சித்ரவேல்**

### பதிப்பாசிரியரின் பரிந்துரை

**திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம் குழுமத்தின்** "அப்ஸரா நாவல்" இதழின் படைப்பான "**மழை மேக மயில்கள்**" நாவலைப் படைத்தவர் திருமதி மேகலா சித்ரவேல் சிறந்த எழுத்தாளர். பல பட்டங்களையும், பரிசுகளையும் பெற்றவர், மேடை பேச்சாளர், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என வகை வகையான வளமைகள் பல பெற்றவர். வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பங்குப் பெற்று தொய்வில்லா பாராட்டை தொடர் நிலையில் பெற்றவர்.

"**மழை மேக மயில்கள்**" நாவல், காதலர்கள் இரு வீட்டாரின் எதிர்ப்பில் மணம் புரிந்து, பெண் ஒன்று, ஆண் ஒன்று பெற்றெடுத்தும், இருவருக்குள் ஒற்றுமையின்றி பந்தபாசமின்றி, பகட்டான வாழ்வுக்கு இருவரும் மோதிக் கொள்வதற்கு இடையில் மாட்டிக் கொண்ட குழந்தைகளின் போராட்ட வாழ்க்கையை புலப்ப டுத்துவது தான் கதையின் மூலக்கரு. அன்புக்கும் பாசத்திற்கும் ஆட்பட முடியாமல் குழந்தைகள் அல்லல்பட்டு, ஆற்றொனா துயரத்தோடு கைதிகள் போல் வாழ்க்கையைக் கடத்தி, இளம் வயதிலேயே பெற்றோர்களின் அன்பெனும் அரவணைப்பும் இன்றி சூழ்நிலை, சூழ்ச்சி வலையை அறுத்தெறிந்து விடுதலைப் பெற்ற குழந்தைகள் "**மழை மேக மயில்கள்**" தோகை விரித்து பூத்துக் குலுங்கும் பூக்கள் போல் புதுப்பொலிவு பெற்று புது உலகில் புகுகின்றன. இது கதையின் சிறு வெள்ளோட்டம், வாழ்க்கையைப் புரிய வைத்திடும் தேரோட்டம். மற்றவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாதே இது போன்ற போராட்டம்.

இந்த நாவலைப் படித்த வாசகர்கள் எண்ணக் கருத்துக்களை வண்ணமயமாக்கி செல் **93828 66720** என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு திருமதி.மேகலா சித்ரவேல் அவர்களுடன், போராட்ட வாழ்க்கையை சீராட்டாமல், தேரோட்டமான வாழ்க்கைக்கு பாராட்டாக உங்கள் கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளலாம். வாழ்க்கையை வளப்படுத்த மழை மேக மயில்கள் போல் மணம் வீச உங்கள் உள்ளுணர்வின் வெளிப்பாடே அவரை ஊக்கப்படுத்தும், உற்சாகப்படுத்தும். உங்கள் எண்ணங்களே அவருக்கு வண்ண மயில்களாகும். நலன்கள் யாவும் நல்கிடும் நட்பு வட்டம். அதை உருவாக்கி வைத்திட வேண்டும் "அப்ஸரா நாவல்" வாசகர்கள் வட்டம். வாழ்த்துக்கள். மீண்டும் சந்திப்போம்.



உங்கள் அன்புச் சகோதரி

**இராதா இராஜு** ஆசிரியர்




அடுத்த நாவல்

**உங்கள் அருகில் உள்ள கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குங்கள்**

**மேலும் விவரங்களுக்கு: அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் 18/67, பி.வி. கோயில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை 600 014. Ph: 044-2811 6770 / Cell: 72999 21880**

# திசா புக்தி பலன்கள்

## பூமிகாரகன், கிரக சேனாதிபதி செவ்வாய் 7



தெய்வத்திரு
**பி. இராமசாமி**

பூமி சுற்றுவதால் காலங்கள் மாறுகிறது. காட்சிகளும் மாறுகிறது. கற்பனையும் மாறுகிறது. எனவே கடந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம் இவைகளில் கடந்த காலம் என்பது கனவு. நிகழ்காலம் என்பது நிஜம். எதிர்காலம் என்பது கற்பனை. இதில் எதிர் காலத்தைப் பற்றி மற்ற உயிரினங்கள் கவலைப்படுவதில்லை ஆனால் மனித இனத்திற்கு இது அவசியம் தேவைப்படுகிறது. ஏனென்றால் ஏற்றமான எதிர்காலத்தின் கற்பனையில் கடந்த கால கசப்பான நினைவுகளோடு, நிகழ்காலமாகிய நிஜமான காலத்தை மனிதன் கடத்துகிறான். கடத்திக் கொண்டே எதிர்கால கற்பனையில், இயந்திரமாய் இயங்கியபடியே வாழ்கிறான். இறைவன் படைப்பில் இதர ஜீவராசிகள் இரைதேடுவதும் இனவிருத்தி செய்வதுமாகத்தான் அவைகளின் வாழ்க்கை முறையாக உள்ளது. ஆனால் மனிதன் மட்டும் விருப்பு, வெறுப்பு என்ற குணங்களோடு, இயற்கைக்கு மாறான முறையில், இயற்கையை எதிர்த்து எப்படி எல்லாமோ சுக போகங்களை அடைய வேண்டுமென்று விரும்புகிறான். தனது விருப்பம் நிறைவேறுமா என்பதை அறிந்துக் கொள்ளவும். எதிர்காலத்தைப் பற்றி தெரிந்துக் கொள்ளவும். ஜோதிடத்தின் தயவையும் அறிய முற்படுகிறான். கிரகங்களின் துணை கொண்டு தான் நடந்த, நடக்கிற, நடக்கப் போகிற மூன்றுகாலமான முக்கால நிகழ்ச்சிகளையும் மனிதன் தனது நுண் அறிவினால் தெரிந்துக் கொள்ள முடிகிறது.



எல்லா கிரகங்களையும் விட செவ்வாய்க்கு அதிகமான ஆதிபத்தியங்கள் உள்ளன. அரசியல், கோர்ட் விவகாரங்கள், பூமி சம்மந்தமான சிக்கல்கள், சகோதர பாவம், அரசாங்க உத்தியோகம், உடலுக்கும், உயிருக்கும் உறுதுணையாகிய இரத்தம், மேலும் போலீஸ், அல்லது இராணுவத்தில் பணிபுரிவோர், இப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு எல்லாம் செவ்வாயைக் கொண்டு தான் ஓரளவு பதில் சொல்ல முடிகிறது. முதலாளி — தொழிலாளி இவர்களுக்கிடையே, பிரச்சனையை உண்டாக்குவதும் செவ்வாய்தான். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கும் கூட செவ்வாய்தான் காரணம். செவ்வாயுடன் சூரியன் சம்மந்தப்படும் காலங்களில் தான், உத்தியோகத்தில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. தனி மனிதர்களின் வாழ்க்கையிலும் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன். சகோதரகாரகத்துவம் பெற்றவனும் செவ்வாயான படியால், சகோதரர்களுக்குள்ளும் வீண் மனஸ்தாபங்களும், பாகப்பிரிவினைகளும் ஏற்படுகின்றன. பூமிகாரகமும், செவ்வாய்க்கு உள்ளதால் நிலம் சம்மந்தமான வீண் தகராறுகளும் கூட ஏற்பட்டுவிடுகின்றன. செவ்வாயுடன் சனி ஒன்று சேரும் காலங்களிலும் மேற்கண்ட அதே கதிதான். செவ்வாயுடன் குரு அல்லது சந்திரன், இந்த இரண்டு கிரகங்கள் மட்டும் ஒன்று சேரலாம். குரு மங்கள யோகம் என்றும், குரு சந்திர யோகம் என்றும் கூறப்படும். செவ்வாயுடன் குருவும் ஒன்று கூடி இருந்தால் வீடு, மனை, பூமி, விவசாயம் போன்ற விஷயங்கள் நல்ல விதத்தில் அமைகிறது. செவ்வாயும் சந்திரனும் ஒன்று கூடி இருந்தால் சந்திர மங்கள யோகம் என்று கூறப்படுகிறது. இதனால் வரும் மனைவி நல்ல குடும்பத்திலிருந்தும், நல்ல சொத்து உள்ளவளாகவும் இருப்பாள். தீர்க்கமான ஆயுள் விருத்தியும் உண்டு. செவ்வாயுடன் புதனாவது, சுக்கிரனாவது ஒன்று கூடி இருந்தால், படிப்பு இடையில் தடைபட்டு விவாகமான பின்னரும் கல்வி தொடங்குகிறது. செவ்வாயுடன் இராகு சேர்ந்து இருந்தால் உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படுகிறது. வருமானத்தில் பெரும்பகுதி

மருந்திற்கே செலவு ஆவதால் தோட்டத்தில் பாதி கிணறு என்ற நிலை ஏற்படுகிறது. செவ்வாயுடன் கேது கூடி இருந்தால் கடவுள் பக்தி நிறைய உண்டு. உலகம் மாய்யை. உலகம் நிலை பெறாதது என்ற தத்துவ ஞானம் ஏற்படுகிறது. இல்லறத்தில் இருந்துக் கொண்டே சிலர், இல்லற ஈடுபாடு இல்லாமல் துறவியைப் போல் வாழ்கின்றனர். முன்னுரையை இத்துடன் முடித்துக் கொண்டு இனி செவ்வாய் திசையில் புத்தி பலன்களைப் பார்ப்போம்.

### செவ்வாய் மகா தெசை மொத்தம் 7 வருடங்கள்

செவ்வாய் தெசையில் சந்திரன் போதகன் — புதன் வேதகன். சூரியன் பாசகன் — சனி காரகன் என்பது சாஸ்திர சம்பிரதாயம் சந்திரன், புதன், சூரியன், சனி ஆகிய கிரகங்களுக்கு ஏற்பட்டுள்ள ஸ்தான பலம், ஆதிபத்திய பலம் ஆகியவை முக்கியமான விஷயமாகும். நல்ல ஸ்தானங்களில் அமைந்த செவ்வாய் திசையில் பூமி சேர்க்கை, தனலாபம், சத்துருக்களை வெல்லும் சக்தி ஆகியவை ஏற்படும். ஜனன காலத்தில் செவ்வாய் பலம் பெற வில்லையென்றால் ஸ்திரமான சொத்துக்களுக்கு நஷ்டம், பொருள் விரையம், சாதாரண எதிரியைக் கூட வெல்லமுடியாத நிலை சோதனையாக அமையும்: ஜென்ம இலக்கினத்திற்கு 3,6,6,10,11ஆம் இடங்களில் செவ்வாய் இருக்கவேண்டும் அல்லது ஆட்சி உச்சம் பெற்று இருக்க வேண்டும் இப்படியாக உள்ள செவ்வாயை குரு பார்த்து இருந்தால் செவ்வாய் தெசையானது யோக திசையாக அமையும். இப்படியாக அமையப் பெற்று ஜாதகங்கள் ஒரு நாளும் வீண் போனதில்லை.

### 1. செவ்வாய் தெசையில் செவ்வாய் புத்தி 0–4–27 நாட்கள்

பொதுவாக எந்தவொரு தெசையிலும் சுயபுத்தி சுகப்படுவதில்லை. இந்தக் காலங்களில் நண்பர்கள் உறவினர்களிடம், விரோதம், கலகம் ஏற்படும் உஷ்ண சம்மந்தமான நோய்கள் அல்லது வண்டி வாகனங்களால் விபத்து, காயம்படுதல், சகோதரர்களிடம் வம்பு வழக்கு. சிவில் கிரிமினல் போன்ற வழக்குகளும் ஏற்படும். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலமாகும். செவ்வாய்க்கு சனி, சூரியன் சம்மந்தம் ஏற்பட்டிருந்தால் அதிகார வர்க்கத்தின் தொந்தரவுகளும், எதிரிகளின் தொல்லைகளும், தொடர்ந்து ஏற்படும்.

### 2. செவ்வாய் தெசையில் இராகு புத்தி – 1–0–18– நாட்கள்.

ஜனன காலத்தில் இராகு இலக்கினத்திற்கு 3,6,11ஆம் இடங்களில் இருந்தாலும தசாநாதன் செவ்வாய்க்கு 4,7,10ஆம் இடங்களில் இருந்தாலும் இராகு புத்திகாலம் முழுவதும் நல்ல பலன்களே நடைபெறும் இப்படியெல்லாம் இல்லாமல் இருந்தால் விஷபயமும், பல விதமான கெட்ட கனவுகளும், காரணமில்லாத குழப்பங்களும்,


முழுவதும் விந்தையான நினைத்ததை நிறைவேற்றும்

அற்புத சித்த மோதிரம் இலவசம்



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்திருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரைஉச்சரிக்கின்றீரோஅவர்எத்தனைகல்நெஞ்சம்படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசே யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

N. SUBRAMANI THANTRIC

VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.

PH : 04171 - 229015, CELL : 98653 71667

ADVT

அச்சமும், ஸ்திர சொத்துக்கள் கைவிட்டு போதலும், மேக சம்மந்தமான நோய்களும், குடும்பத்திலிருந்து பிரிந்து தனியாக வாழக்கூடிய நிலையும் பல வகைகளில் தனவிரையம், பொருள்கள் விரையம் முதலியன ஏற்படும்.

### 3. செவ்வாய் தெசையில் குரு புத்தி 0–11–6 நாட்கள்

புத்திநாதனாகிய குரு கேந்திரம் அல்லது திரிகோணம் அல்லது இலக்கினத்திற்கு 3,11ஆம் இடங்களில் இருந்தால், மிக சிறப்பான நல்ல பலன்களே நடைபெறும். பூமி இலாபம் என்று சொல்லக்கூடிய ஏராளமான நிலபுலன்கள் சேர்க்கையும், பல வழிகளில் வருமானமும், தொழில் உத்தியோகம் போன்ற வகைகளில் நல்ல ஆதாயமும், குடும்ப சுக மேன்மையும், பொருளாதார பெருக்கமும் ஏற்படும். இப்படியெல்லாம் இல்லாவிட்டால் பலன்கள் நேர்மாறாக அமையும். தொழில், உத்தியோகத்தில் எதிர்ப்பும், குடும்பத்தில் நிம்மதியற்ற நிலையும் ஏற்படும்.

### 4. செவ்வாய் தெசையில் சனி புத்தி – 1 – 1 – 9 நாட்கள்

பொதுவாக செவ்வாய் தெசையில் சனி புத்தியும், சனி தெசையில் செவ்வாய் புத்தியும் சுகப்படாது என்று கூறப்படுகிறது. ஆனால் இதே சனி, திசாநாதன் செவ்வாய்க்கு 4—7—10ஆம் இடங்களில் இருந்தால் நல்ல பலன்களே நடைபெறும் என்றாலும் கூட கெடு பலன்கள் குறைவாக இருக்கும் என்பதுதான் இதன் பொருளாகும். செவ்வாயும் சனியும் 6, 8ஆகவோ அல்லது 2, 12ஆகவோ இல்லாமல் இருந்து, குரு பார்த்து இருந்தால், செய்யும் தொழிலில் மேன்மையும் உத்தியோகத்தில் நிம்மதியான சூழ்நிலையும் ஏற்படும் குரு பார்வை இல்லை என்றால் சோதனைக்கு பஞ்சமில்லை. நிம்மதியைத் தேடி அலைய வேண்டும்.

### 5. செவ்வாய் திசையில் புதன் புத்தி – 0–11–27 நாட்கள்

ஜெனன காலத்தில் புதன் ஆட்சி உச்சம் பெற்று இருந்தாலும் அல்லது இலக்கினத்திலிருந்து 11ஆம் இடத்தில் இருந்தாலும் அல்லது வேறு எங்கு இருந்தாலும் குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும் எதிர்பாராத தன இலாபமும் நல்ல வாக்கு சாதுர்யமும், உத்தியோகம், தொழில் வகையின் மேன்மையும், வியக்கத்தக்க முறையில் முன்னேற்றமான வாழ்க்கையும் அமைகிறது. இப்படியில்லாமல் புதன் இருந்தால் விஷ ஜந்துக்களால் பயமும், கைப்பொருள் நஷ்டம், கடன் ஏற்படுதல் முதலிய பலன்கள் ஏற்படும்.

### 6. செவ்வாய் தெசையில் கேது புத்தி – 0–4–27 நாட்கள்

புத்தி நாதனாகிய கேது இலக்கினத்திற்கு 3,6,11 ஆம் இடத்தில் இருந்தாலும், அல்லது குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும், வியாபாரத்திலிருந்து உத்தியோகம், தொழில் வகையில் மேன்மையும், அரசாங்கத்தின் ஆதரவு முதலியன ஏற்படும். இப்படியெல்லாம் இல்லாமல், சனி சூரியன் சம்மந்தம் ஏற்பட்டு இருந்தால், மறைமுகமான புதிய எதிரிகளின் தொந்தரவும், மனக்கவலையும், தூக்கம் கெடுதலும், நன்மதிப்புக்கு பங்கம் ஏற்படுதலும், குடும்பத்தில் ஒற்றுமை இல்லாமையும், வீண் செலவு, வம்பு, வழக்குகளும் ஏற்படுதலுமுண்டாம்.

### 7. செவ்வாய் தெசையில் சுக்கிரன் புத்தி – 1–2–0 நாட்கள்

புத்திநாதனாகிய சுக்கிரன் இலக்கினத்திற்கு 3,6,11 ஆம் இடங்களில் இருந்தாலும் திசாநாதனாகிய செவ்வாய்க்கு 4,7,10ஆம் இடங்களில் இருந்தாலும் நல்ல பலன்களே நடைபெறும். வீடு நிலம் போன்ற ஸ்திர சொத்துக்கள் சேருதலும், வெளிநாடு செல்லுதலும், தொழில், உத்தியோகம், வியாபாரம் போன்ற வகையில் மேன்மையும், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுதலும், தன இலாபம் முதலியன ஏற்படும். இப்படி இல்லாமல் சுக்கிரன் 8,12இல் மறைந்திருந்தாலும், வீண் விரையங்கள், எல்லா வகையிலும் தொல்லைகளும் ஏற்படும்.

### 8. செவ்வாய் தெசையில் சந்திரன், புத்தி – 0–7–0 நாட்கள்

புத்திநாதனாகிய சந்திரன், திசா நாதனாகிய செவ்வாய்க்கு 4,7,10ஆம் இடங்களில் இருந்தாலும், இலக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் இருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும், பொன் பொருள் சேர்க்கையும், வீடு, மனை, பூமி சேர்க்கையும், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தும், மனைவி வகையில் ஆதாயமும், கடல் கடந்த பிராயணமும், திருமணம் தடைபட்டு வந்த ஆண், பெண்களுக்கு விவாக சுபமுகூர்த்தம் ஏற்படுதலும் உண்டாம். இப்படி எல்லாம் இல்லாமல் சந்திரன், பகை, நீச்சம் 6,8,12இல் இருந்தாலும் சுகமில்லை.

### 9. செவ்வாய் தெசையில் சூரியன் புத்தி – 0–4–6 நாட்கள்

புத்திநாதனாகிய சூரியன் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், திசாநாதன் செவ்வாய்க்கு 4,7,10ஆம் இடங்களில் இருந்தாலும், அல்லது ஜெனன காலத்தில் 3,6,11ஆம் இடங்களில் இருந்தாலும், குரு பார்வை பெற்று இருந்தாலும், தெய்வ தரிசனம். பெரியோர்களின் ஆசிர்வாதம், கவுரவம், புகழ் ஆகியவைகளுக்கு பங்கம் இல்லாத நிலையும் உண்டாம். சூரியனுக்கு சனி சம்மந்தம் இல்லாமல் இருந்தால், உத்தியோகம், தொழில் வகையில் உயர்வான நிலையும், வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியும், மேலான சுகசவுகரியங்களும் ஏற்படும்.

இதுவரை சொல்லப்பட்ட பலன்கள் யாவும், பொதுவான பலன்களேயாகும். திசாநாதன் செவ்வாய்க்கு சுபர் சம்மந்தம் ஏற்பட்டு, 3,6,9,10,11 இல் இருந்தால் நல்ல பலன்களே நடைபெறும். இதில் செவ்வாய் 10ஆம் இடத்தில் இருந்தால் மிக மிக மேலான பலன்களே ஏற்படும் என்று உறுதியாக கூறலாம்.

தொடரும்...

# இரு மனமும் ஒரு மனதாக்கிடும் அபூர்வ அரிய திருமணப் பொருத்தங்கள்! 21

ராசி அதிபதி பொருத்தம் கிடைத்தால், புத்திரர்கள் மேன்மையான வாழ்க்கை. வெற்றிகரம். சம்பந்திகள் நட்புறவைக் குறிக்கும். ராசிப் பொருத்தம் வம்ச விருத்தியைக் கொடுக்கிறது. அதாவது ஆணும் பெண்ணும் கலந்த புத்திரப் பாக்கியத்திற்கு உத்திரவாதம். அதன் அதிபதிகள் நட்பானால், சமமானால், தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் மேன்மையாக, ஆயுள் தீர்க்கத்துடன், வெற்றிகரமாக தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள் என்பது புலனாகிறது. அது மட்டுமன்றி சம்பந்திகளும் ஒட்டி உறவாடுவர்.




ஜோதிடத் தென்றல்
**எஸ். அன்பழகன்** B.Sc.,D.A. M.A.,
அலை பேசி: 94431 09267


எடுத்துக்காட்டாகப் பெண் கார்த்திகை நட்சத்திரம் 1-ம் பாதம் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பெண் வயிறு ரஜ்ஜு பிரிவில், மேஷ ராசியின் கீழ் வருகிறார். மேஷ, விருச்சிக ராசி அதிபதி செவ்வாய் பஹவான். ஐவர் அணி (குஜாதி) என்றழைக்கப்படும், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனிக்கு இரண்டு ராசிகளுக்கு (வீடுகள் அல்லது இல்லம்) அதிபதிகள். சந்திரனுக்கும், சூரியனுக்கும் தலா ஒரு ராசி. ஆக மொத்தம் 12 ராசி. 12 மாதங்கள் 12 ராசி. ராகு, கேது பஹவானுக்கு எந்த ராசி உரிமையும் கிடையாது. எந்த இலாக்காவும் இல்லாத அமைச்சர்கள் (Minister without portfolio). ராசி சார்ட்டில்தான் அவருக்கு அதிபதி பதவி இல்லையே தவிர பொதுவாக ராகு யோகக்காரகன், பிதாமஹன் (தந்தை வழிப்பாட்டனார், பாட்டி) கேது ஞானக்காரகன் மற்றும் மாதாமஹி (தாய் வழிப்பாட்டனார் பாட்டி)

அட்டவணை-1

ராசி அதிபதி நட்பு, சமம், பகை சார்ட

| ராசி | அதிபதி | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|---|
| மேஷம், விருச்சிகம் | செவ்வாய் | சூரியன், சந்திரன், குரு | சுக்கிரன், சனி | |
| ரிஷபம், துலாம் | சுக்கிரன் | புதன், சனி | செவ்வாய், குரு | சூரியன், சந்திரன் |
| மிதுனம், கன்னி | புதன் | சூரியன், சுக்கிரன் | செவ்வாய், குரு, சனி | சந்திரன் |
| கடகம் | சந்திரன் | சூரியன், புதன் | செவ்வாய், குரு, சுக்கிரன், சனி | -- |
| சிம்மம் | சூரியன் | சந்திரன், செவ்வாய், குரு | புதன் | சுக்கிரன், சனி |
| தனுசு, மீனம் | குரு | சூரியன், சந்திரன், செவ்வாய் | சனி | புதன், சுக்கிரன் |
| மகரம், கும்பம் | சனி | புதன், சுக்கிரன் | குரு | சூரியன், சந்திரன் செவ்வாய், |

சூத்திரம்: (Formula)

1. பெண் ஜென்ம ராசி அதிபதி ஆண் ஜென்ம ராசி அதிபதி ஒருவரேயானால் உத்தமம்
2. பெண் ஜென்ம ராசி அதிபதி நட்பு ஆண் ஜென்ம ராசி அதிபதி நட்பு உத்தமம்
3. பெண் ஜென்ம ராசி அதிபதி நட்பு ஆண் ஜென்ம ராசி அதிபதி சமம் உத்தமம்
4. பெண் ஜென்ம ராசி அதிபதி சமம் ஆண் ஜென்ம ராசி அதிபதி சமம் உத்தமம்
5. பெண் ஜென்ம ராசி அதிபதி பகை ஆண் ஜென்ம ராசி அதிபதி பகை பொருத்தமில்லை
6. பெண் ஜென்ம ராசி அதிபதி பகை ஆண் ஜென்ம ராசி அதிபதி சமம் பொருத்தமில்லை

இந்த சூத்திரத்தைப் புரிந்துகொள்ள சிரமமாக உள்ளதால், சுலபமாக தெரிந்து கொள்ள கீழே உள்ள அட்டவணை, பெண் ஜென்ம ராசி அதிபதிக்கும், ஆண் ஜென்ம ராசி அதிபதிக்கும் பொருத்தம் உண்டா இல்லையா என்பதை தெளிவாக்குகிறது.

அட்டவணை-2

## பெண், ஆண் ஜென்ம ராசி அதிபதி பொருத்த சார்ட

| பெண் ஜென்ம ராசி | பெண் ஜென்ம ராசி அதிபதி | ஆண் ஜென்ம ராசி அதிபதி பொருத்தம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி |
| | | செவ்வாய் | சுக்ரன் | புதன் | சந்ரன் | சூரியன் | புதன் |
| மேஷம் | செவ்வாய் | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| ரிஷபம் | சுக்ரன் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| மிதுனம் | புதன் | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு |
| கடகம் | சந்ரன் | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| சிம்மம் | சூரியன் | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| கன்னி | புதன் | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு |
| துலாம் | சுக்ரன் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| விருச்சிகம் | செவ்வாய் | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| தனுசு | குரு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| மகரம் | சனி | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| கும்பம் | சனி | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| மீனம் | குரு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |

அட்டவணை-3: **பெண், ஆண் ஜென்ம ராசி அதிபதி பொருத்த சார்ட்**

| பெண் ராசி | பெண் ராசி அதிபதி | ஆண் ராசி அதிபதி பொருத்தம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
| | | சுக்ரன் | செவ்வாய் | குரு | சனி | சனி | குரு |
| மேஷம் | செவ்வாய் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| ரிஷபம் | சுக்ரன் | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| மிதுனம் | புதன் | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| கடகம் | சந்ரன் | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| சிம்மம் | சூரியன் | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| கன்னி | புதன் | உண்டு | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| துலாம் | சுக்ரன் | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | இல்லை |
| விருச்சிகம் | செவ்வாய் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | உண்டு |
| தனுசு | குரு | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| மகரம் | சனி | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| கும்பம் | சனி | உண்டு | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| மீனம் | குரு | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |

கார்த்திகை நட்சத்திரம் 1-ம் பாதம், மேஷ ராசி பெண்ணிற்கு மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், தனுசு, மீனம் ஆகிய 8 ராசி அதிபதிகள் பொருத்தமுண்டு. மிதுனம், கன்னி, மகரம், கும்பம் ராசியதிபதி பொருத்தம் இல்லை. மேலே உள்ள அட்டவணை மூலம் எளிதில் பொருத்தம் பார்த்துக் கொள்ளலாம். சரியா? சமம்-சமம், நட்பு-நட்பு, நட்பு-சமம், சமம்-நட்பு, பகை-பகை, நட்பு-பகை, சமம்-பகை ∴பார்முலா ரொம்ப குழப்பமாக இருக்கிறது என்கிறவர்களுக்காக கேக் வெட்டித் துண்டாக பிளேட்டில் உள்ளது. அப்படியே லபக் செய்து விடவேண்டியதுதானே? இன்னும் என்ன குழப்பம்?

சில நூல்கள் ராசி அதிபதி பார்முலாவை சரியாகப் பின் பற்றாமல் தாறுமாறாக ராசி அதிபதிப் பொருத்தங்களை தம் நூல்களில் வாரி வழங்கியுள்ளனர். வாழ்க வள்ளல்

பெருமான்கள். ஆனால் இந்தப் பொருத்தத்தை நம்பி கழுத்தை நீட்டின பெண் "ஆப்பசைத்தத் குரங்காக" அல்லவா தவிக்கிறாா்.

பல திருமணப் பொருத்த நூல்களில் மேஷ ராசி அதிபதி செவ்வாயும் மகர மற்றும் கும்ப ராசி அதிபதி சனியும் நட்பு-நட்பு, நட்பு-சமம் போல ராசியதிபதிப் பொருத்தம் உண்டு என்று உத்ராடம் 2,3,4 பாதங்களுக்கும், திருவோணம் மற்றும் சதயத்திற்கு போட்டிருக்கிறார்கள். இது பிழை. செவ்வாய்க்கு சனி சமம்தான் ஆனால் சனிக்கு செவ்வாய் பகை. எனவே ராசியதி பொருத்த சோதனையில் தேறவில்லை.

செவ்வாயையும் சனியையும் மிகப் பெரிய வில்லன்களாக அந்தக் காலத்து பி.எஸ். வீரப்பா, எந்த காலத்தும் சிறந்த வில்லன் எம்.என். நம்பியார் போல் சித்தரித்துப் பலன்கள் சொல்கிறார்கள். பிறகு எப்படி மேஷ ராசியதிபதி செவ்வாயும், மகர கும்ப ராசியதிபதி சனியும் நட்பானார்கள். அடிப்படை ஜோதிடக் கொள்கைளுக்குப் புறம்பாக எழுதப், பேசக் கூடாது.

செவ்வாய்க்கு புதன் ஜென்மப் பகை. யாரும் இவங்க நண்பர்கள் என ஒப்பந்தம் ஏதாவது உண்டா? அப்புறம் எங்கே அய்யா இருக்கிறது சுபம் மேஷத்திற்கும் கன்னிக்கும். குருவுக்கு சுக்கிரனைக் கண்டாலே மனிதர், வெட்டுவேன், குத்துவேன் என்கிற ரகம். அப்புறம் எப்படி துலாத்திற்கு மீனம் சுபமாகும். தனுசுப் பெண்களுக்கு ரிஷப ஆண்கள் எப்படிப் பொருந்துவார்கள்? குரு, சுக்கிரன் கோஷ்டி பூசலால் ராசி மண்டலமே குரு அய்யா தலைமையில் ஒரு அணியும், சுக்கிர அம்மா தலைமையில இன்னொரு அணியுமாப் பிரிந்து கிடக்கின்றன. மகனார் சனிக்கு, தந்தையார் சூரியன் என்றால் பொல்லாத கோபம். எவ்வாறு சிம்மத்திற்கு மகரமாக வருகிற ஆறாவது ராசியும், மகரத்திற்கு எட்டாவதாக வரும் சிம்ம ராசி ஜோடிகள் இணைந்தால் ஒற்றுமை வரும். சனிக்கு சந்திரன் ஆகவே ஆகாது. பிறகு எங்கேயிருந்து கும்ப ராசிக்குக் கடகம் சுப சஷ்டாகம் ஆகும். ஜோதிடத்தின் ஆணிவேர்கள், அஸ்திவாரம் போன்றவைகள் இந்தக் கிரக நட்பு-பகை என்கிற தகவல். ஜோதிட அடிப்படை விதிகளுக்கு வேட்டு வைக்கும் விஷயங்களுக்கு யாரும் ஆதரவு தரக் கூடாது. இதில் விட்டுக் கொடுத்து போவதற்கோ, கண்ணை மூடிக்கொள்வற்கோ, வளைந்து கொடுப்பதற்கோ, நெளிவு சுழிவிற்கோ வாய்ப்பே இல்லை.

மிக முக்கியமான ரஜ்ஜு, யோனி பொருத்தங்களுடன், ராசிப் பொருத்தம் கிடைக்காத போது, சில நட்சத்திரங்களுக்கு ராசி அதிபதி பொருத்தம் கிடைத்துவிடும். இவ்வகை ஆண் நட்சத்திரங் களுக்கு, சூப்பர் ஸ்டார் அந்தஸ்து.

எடுத்துக் கொண்ட உதாரண ஜாதகங்களுக்கு அடுத்தப் பொருத்தமான ராசி அதிபதி பொருத்தம் பார்க்கலாம்.

எடுத்துக்காட்டு ஜாதகங்கள்:

| விவரம் | பெண் ஜாதகர் | ஆண் ஜாதகர் |
|---|---|---|
| பிறந்த தேதி | 01-04-1956 | 11.∴12-6-1954 |
| ஜென்ம நட்சத்திரம் | மூலம்-1 | சித்திரை-4 |
| ஜென்ம லக்னம் | விருச்சிகம் | கும்பம் |
| ஜென்ம ராசி | தனுசு | துலாம் |

## திருமணப் பொருத்த அட்டவணை

| திருமணப் பொருத்தம் | பெண் நட்சத்திரம் மூலம் | ஆண் நட்சத்திரம் சித்திரை-1ம் பாதம் | விவரம் | பொருத்தம் |
|---|---|---|---|---|
| 1. ரஜ்ஜு | பாதம் | தலை | ரஜ்ஜு சார்ட்டைப் பார்க்க. ரஜ்ஜு ஒன்றானால் பகை சேரக் கூடாது. இங்கு ரஜ்ஜு வெவ்வேறானதால் சேரலாம் | உண்டு |
| 2. யோனி | பெண் நாய் | ஆண் புலி | யோனி சார்ட்படி நாய்க்குப் புலி பகையில்லை. யோனிப் பொருத்தம் நோ ப்ராப்ளம் | உண்டு |
| 3. ராசிப் பொருத்தம் | பெண் மூலம் நான்கு பாதங்களும் தனுசு ராசியில் உள்ளன. பார்க்க: சார்ட் 3.யு | ஆண் சித்திரை 4-ம் பாதம் பார்க்க: சார்ட் 3.1 துலா ராசியில் உள்ளது. உடைந்த நட்சத்திரங்களாயின் ஜென்ம ராசி மாறும் | சார்ட் 3.2 பார்க்க. பெண் தனுசு ராசிக்கு 11-வதாக துலா ராசி. ஆணிற்கு 3-வது ராசி தனுசு. 11-3 தொடர்பு கிடைக்கிறது 11-லாப ஸ்தானம் 3-வீர்ய ஸ்தானம | உண்டு |
| 4. தினப் பொருத்தம் | மூலத்திலிருந்து சித்திரை 3,4 பாதம் 23வது நட்சத்திரம் | பார்க்க சார்ட் 4.1 கொடிய கூட்டணி. 23-வது நட்சத்திரம் இந்த எண்ணிக்கையில் வராததால் சேரலாம். ஆனால் தினப் பொருத்தம் கிடையாது. | 1, 3, 5, 7 மீதி வந்தால் பொருந்தாது. ஆனால் நேரடியாக 7, 12, 17, 22-வது நட்சத்திரமே மிகக் கொடிய கூட்டணி. 23-வது நட்சத்திரம் இந்த எண்ணிக்கையில் வராததால் சேரலாம். ஆனால் தினப் பொருத்தம் கிடையாது | இல்லை |
| 5. ராசி அதிபதி பொருத்தம் | தனுசு ராசி அதிபதி குரு | ஜென்மப் பகை | ஜென்மப் பகை | இல்லை |

**தொடரும்...**

காலத்தின் கோலத்தைக் கோடிட்டு காட்டிடும்

# கோட்டைச் சக்கரம்

7



● ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
செல்: 96596 90395

கோட்டைச் சக்கரத்தில் ஸ்தம்ப பாகத்தில் சுப கிரகங்கள் நிற்க வேண்டும் என்றும் பாவகிரங்கள் பயா பாகத்தில் நிற்க வேண்டும் என்றும் ஜோதிட விதி இருப்பதைப் பார்த்தோம். அதே சமயத்தில் ஆத்ம காரகன் சூரியனை வைத்து அதனுடன் மற்ற கிரகங்கள் சேர்ந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின் என்னென்ன பலன்கள் ஏற்படும் என்பதை இங்கு பார்ப்போம். அதற்கு முன் அரிச்சுவடியான நட்பு பகை விவரங்களைத் தெரிந்துக் கொள்ளலாம்

**சூரியனுக்கு:** சந்திரன், செவ்வாய், குரு இம்மூன்றும் நட்புக் கிரகங்கள். சுக்கிரன், சனி, இராகு, கேது இந்த நான்கும் பகைக் கிரகங்கள் புதன் மட்டும் சமக் கிரகம்

**சந்திரனுக்கு:** சூரியனும் புதனும் நட்புக் கிரகங்கள் இராகுவும், கேதுவும் பகைக் கிரகங்கள் செவ்வாய், குரு, சுக்கிரன், சனி இந்நான்கும் சமக் கிரகங்கள்

**செவ்வாய்க்கு:** சூரியன், சந்திரன், குரு இம் மூன்றும் நட்புக் கிரகங்கள். புதன், இராகு, கேது இம்மூன்றும் பகைக் கிரகங்கள் சுக்கிரனும், சனியும் சம்க் கிரகங்கள்

**புதனுக்கு:** சூரியனும் சுக்கிரனும் நட்புக் கிரகங்கள் சந்திரன் மட்டுமே பகைக் கிரகம் செவ்வாய், குரு, சனி, இராகு, கேது இவ்வைந்தும் சமக் கிரகங்கள்


**குருவுக்கு:** சூரியன், சந்திரன், செவ்வாய் இம் மூன்றும் நட்புக் கிரகங்கள்.புதனும், சுக்கிரனும் பகைக் கிரகங்கள் சனி, இராகு, கேது இம்மூன்றும் சமக் கிரகங்கள்

**சுக்கிரனுக்கு:** புதன், சனி, இராகு, கேது இந்த நான்கும் நட்புக் கிரகங்கள் சூரியனும், சந்திரனும் பகைக்கிரகங்கள் செவ்வாயும், குருவும் சமக் கிரகங்கள்

**சனிக்கு:** புதன், சுக்கிரன், இராகு, கேது இந்நான்கும் நட்புக் கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய் இம்மூன்றும் பகைக் கிரகங்கள் குரு மட்டும் சமக் கிரகம்

இராகுவுக்கும், கேதுவுக்கும்:சுக்கிரனும், சனியும் நட்புக் கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய் இம்மூன்றும் பகைக் கிரகங்கள் புதனும், குருவும் சமக் கிரகங்கள்

இந்த கிரகங்கள் சேர்க்கையில் ஒரு கிரகம் தன்னுடைய நட்பு அல்லது சமக்கிரகத்துடன் சேர்வது நன்மை பயக்கும் அதுவே பகைக் கிரகத்துடன் சேரும்பொழுது நன்மை பயக்காது. அதே சமயத்தில் சூரியனுடன் சந்திரன் சேரும் போது அமாவாஸையாகவும், இராகு, கேது சேரும் போது கிரஹணமாகவும், மற்ற கிரகங்கள் சேரும்போது அஸ்தமனமாகவும் ஆகி விடுவதால் சூரியன் இலக்கின சுபராக கோட்டைச்சாமியாகி இந்த ஸ்தம்ப பாகத்தில் சுப கிரகங்களின் சேர்க்கை பெற்று இருப்பின் அந்த ஜாதகர் சிவலோகத்தில் சிவனிடமிருந்து வந்தவர் என்கிறது கோட்டைச் சக்கரம். பாவ கிரக்ங்கள் சூழ சூரியன் நிற்கும் போது அவர் சிவலோகத்தில் இருந்து வந்த்தை மறந்து விட்டு சாதாரண வாழ்க்கையே வாழ்வார் என்றும் கர்ம வினைகள் தீரும் வரை கஷ்டப்பட்டு பின்பு உண்மை நிலையை உணர்வார் என்றும் சொல்லப்படுகிறது. அந்த வகையில் சூரியன் சுபனாகி சுப கிரகங்கள் கூடி ஸ்தம்ப பாகத்தில்



உலகம் முழுவதும் உலா வர இருக்கின்றன
விரைவில்
எதிர்பாருங்கள்
eBOOK
ஜோதிடம்
சக்தி
அப்ஸரா நாவல்
பணம் புழக்கத்துக்கு நல்ல பாதை வகுத்திடும் சூட்சும இரகசியங்கள்
http:www.apsaraepublications.com

இருக்கலாம் என்ற ஒரு விதி விலக்கும் நமக்குப் புலனாகிறது எனலாம்.

> ஸ்தம்ப பாகம்
> சூ+சந்திரன் சேர வாய்ப்பு இல்லை

ஸ்தம்ப பாகத்தில் சூ+சந்திரன் சேர வாய்ப்பு இல்லை காரணம் இந்த கோட்டைச் சக்கர விதிப்படி சந்திரன் பயாபாகத்தில் மட்டுமே இருக்க முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**சூரியன் சந்திரன்:** கோட்டைச் சக்கரத்தில் ஸ்தம்ப பாகத்தில் சூ+சந்திரன் சேர வாய்ப்பு இல்லை என்பதால் ஜனன ஜாதகத்தில் சூரியனும் சந்திரனும் சேர்ந்து காணப்பட்டால், அந்த ஜாதகருக்கு ஸ்திரமான புத்தி இருக்காது. சதா மனம் அலைபாய்ந்துக் கொண்டே இருக்கும். அவப்பெயருக்கு ஆளாக நேரிடுவதுடன் அரசாங்க தண்டனைக்கும் ஆளாகக் கூடும். கணவன் மனைவி இடையில் பணியின் காரணமாகவோ அல்லது கருத்து வேறுபாட்டின் காரணமாகவோ தற்காலிகமான பிரிவு ஏற்படும் என்ற பொதுவான பலன்களைச் சொல்கிறது ஜோதிடம். இதில் விதி விலக்குகளும் உண்டு. இருந்தாலும் இந்த சேர்க்கை ஜாதகத்தில் உள்ளவர்கள் அமாவாசை தோறும் சிவனடியார்களுக்கு ஏதேனும் தானம் கொடுத்து வந்தால் வாழ்க்கையில் பல நல்ல மாற்றங்கள் ஏற்படுவதை அனுபவத்தில் பார்க்கிறேன்.

> ஸ்தம்ப பாகம்
> சூ+செவ்

**சூரியன் செவ்வாய் இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** உடல் உஷ்ணம் அதிகம் ஏற்படுகிறது என்பதை விட ஆத்ம தாகம் ஏற்படுகிறது என்றே சொல்ல வேண்டி உள்ளது. நேரம் தவறாமையைக் கண்டிப்புடன் கடைப்பிடிப்பார்கள். ஆண்மைக்கு உரிய கம்பீரம் இவர்களிடம் கூடுதலாகவே காணப்படும். காவல்துறை, ராணுவம் போன்ற சீருடை சார்ந்த பணியாகவே இவர்களுக்கு அமையும். அதிக சகோதரர்களும் அவர்களால் ஆதாயமும் உண்டு. இந்த சேர்க்கையானது ஒரு பெண்ணின் ஜாதகத்தில் காணப்பட்டால், அந்தப் பெண்ணுக்கு தலைமைப் பண்பு நிறைந்திருக்கும். அதே சமயத்தில் மாங்கல்ய தோசமும் ஏற்படுகிறது. இவ்விரு கிரகங்களும் பாவிகளாக வருவது திண்டாடும் வாழ்க்கையத் தந்து விடுகிறது. சுப கிரகங்களாக வரும்போது சுபிட்சம் ஏற்படுகிறது எனலாம். பாவ நிலையில் இந்த கிரக சேர்க்கை உள்ளவர்கள் சோமாஸ்கந்தர் வழிபாடு செய்து வருவது மிக மிக நல்லது.

> ஸ்தம்ப பாகம்
> சூ+புதன்

**சூரியன் புதன் இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** ஸ்தம்ப பாகத்தில் சூரியன் புதனின் சேர்க்கையானது ஜாதகரை ஏதேனும் ஒரு துறையில் நிபுணத்துவம் பெறவைக்கும். அரசாங்க வகையில் ஆதாயம் உண்டு. படிக்கவேண்டிய வயதில் படிக்காமல் தாமதமாகவே படிப்பை முடிப்பர். ஏட்டுப் படிப்பைக் காட்டிலும் பிறவற்றில் சாதனைகளைப் படைக்கும் நிலை வருவதால் தகுதியைவிட உயர்ந்த இடத்தில் வேலைக்குப் போவர். இவருடைய பணி பெரும்பாலும் அரசாங்கப் பணியாகவே அமையும். தாய்மாமன் உறவுமுறை சுமுகமாகவும் ஆதாயம் தருவதாகவும் இருக்கும். வாக்குத்திறமை பெற்றிருப்பர். ஜோதிடர்களுக்கு இந்த சேர்க்கை மிக மிக நல்லது.

> ஸ்தம்ப பாகம்
> சூ+குரு

**சூரியன்குரு இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின் —** ஸ்தம்ப பாகத்தில் சூரியன், குரு சேர்க்கை பெற்ற ஜாதகருக்கு பொதுவாக ஆன்மதாகம் அதிகமாகி சிவன் மீது அதீத ஈர்ப்பு ஏற்படுகிறது. நல்ல குடும்பத்தில் இருந்து வாழ்க்கைத் துணை அமையும். கோயில் திருப்பணிகளிலும் சமூகநலப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்வர். நிதி அமைச்சகம், வங்கிகள், நிதிநிறுவனங்களில் வேலை அமையும். அத்தகைய பணியும்கூட தலைமையிடத்தில் இருக்கும். ஒருசிலர் பேராசிரியராகவும் பணிபுரிவர். இயல்பிலேயே ஆன்மிக நாட்டம் கொண்டிருக்கும் இவர்களில் சிலர் ஆன்மிக குருவாகவும் பிரகாசிப்பர். ஆனால் மற்ற பாவகிரகங்களுடன் இந்த சூரியன் இணைந்து இருக்க்க் கூடாது.

> ஸ்தம்ப பாகம்
> சூ+சுக்ரன்

**சூரியன் சுக்கிரன் இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** ஸ்தம்ப பாகத்தில் சூரியன் சுக்கிரன் சேர்க்கையானது ஜாதகருக்கு எதிர்பாராத பொருள்வரவைத் தரும். இவர்களுக்கு எதிலும் நஷ்டம் என்பதே ஏற்படாது. வசதியான குடும்பத்தில் இருந்து வாழ்க்கைத் துணை அமையும். அந்நியப் பொருள்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் அதிகம் இருக்கும். விலை உயர்ந்த சொகுசு வாகன பிராப்தி இவர்களுக்கு உண்டு. பொதுவாக இவர்களின் ஆன்மா லௌகீக சுகங்களை

அனுபவிக்கத் துடிக்கும். இந்த அமைப்பை உடையவர்கள் அடிக்கடி பட்டாடை அணிவது, நறுமணத்திரவியங்கள் பயன்படுத்துவதும் இவைகளைப் பெண்களுக்குத் தானம் செய்வதும் பல நலன்களை ஏற்படுத்தும் எனலாம்.

| |
|---|
| **ஸ்தம்ப பாகம்**<br>சூ+சனி |

**சூரியன் சனி இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** ஸ்தம்ப பாகத்தில் இந்தச் சேர்க்கையானது தந்தை மகன் உறவில் விரிசலை ஏற்படுத்துவதுடன், கோர்ட், கேஸ் என்றும் அலைக்கழிக்கும். அவ்வப்போது மன அமைதி பறிபோகும். இரும்புக் கழிவுகளை வாங்கி விற்றும் ஜீவனம் நடத்துவர். கடினமான உழைப்பாளிகளான இவர்கள் அரசாங்கத்துடன் இணக்கமாக நடந்துக்கொள்வர். சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் பணம் சம்பாதிக்கவும், அதில் ஒரு பகுதியை ஆன்மிகப் பணிகளுக்குச் செலவழிக்கவும் தயங்கமாட்டார்கள். எதையுமே புதியதாக வாங்குவது இவர்களுக்குப் பிடிக்காது. மற்றவர்கள் பயன்படுத்திய கார், பைக் போன்றவைகளையே வாங்குவர். காரணம் சனி என்பவர் பழமை விரும்பி என்பதால் இத்தகைய பலன்களைத் தருகிறார் எனலாம். சிவனடியார்களுக்கு மகேஸ்வர பூஜை செய்தால் உடனடி கஷ்டங்கள் நீங்குவதை அனுபவத்தில் பார்த்து வருகிறேன்.

| |
|---|
| **ஸ்தம்ப பாகம்**<br>சூ+ராகு |

**சூரியன் இராகு இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** ஸ்தம்ப பாகத்தில் சூரியன் இராகு சேர்க்கை அமையப் பெற்ற ஜாதகர்கள் சட்டத் துறையில் நிபுணத்துவம் பெற்றிருப்பர். எதிலும் மாற்றுச் சிந்தனையும், புரட்சிகரமான எண்ணங்களும் கொண்டிருப்பர். பிறருடைய சொத்துக்கள் எல்லாம் இவர்களுக்கு எதிர்பாராமல் வந்து சேரும். சில சமயங்களின் கடவுளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யக் கூடும். இவர்கள் அந்தணர்களுக்கு ஏதேனும் தானம் அடிக்கடி அளிப்பது நல்லது.

| |
|---|
| **ஸ்தம்ப பாகம்**<br>சூ+கேது |

**சூரியன் கேது இணைந்து ஸ்தம்ப பாகத்தில் இருப்பின்:—** ஸ்தம்ப பாகத்தில் இந்த அமைப்பு ஆன்மிகவாதியாக உருவாகும் அதே சமயம் பல்வேறு சோதனைகளைக் கொடுக்கும் எனலாம். ஆன்மிகம் தொடர்புடைய மரங்களைக் கோயில்களுக்குக் கொடுத்து அதைப் பிரதிஷ்டை செய்வதால் இவர்களது கர்ம வினைகள் விரைவில் நீங்கும். சித்தர்கள் ஜீவ சமாதி வழிபாடு இதற்கு தீர்வு தருகிறது என்பது அனுபவம்.

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!


தொடரும்...



அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

# அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால் குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.


Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

# குடியை நிறுத்த!

## குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று
**ரூ.5/**


**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**

# கிரகங்களின் ஷட் பலம் நிர்ணயம்





ஜோதிட ரத்னா
**எஸ்.தனபாலன்** MA.,D.Co.OPDA
**செல்: 95003 93813**
**86954 58950**

கிரகங்களுக்கு, ஸ்தான பலம், திருஷ்டி பலம், திக் பலம், சேஷ்டா பலம், கால பலம், நைஸர்க்ய பலம், என ஆறு வகையான பலன்களை ஜோதிட சாஸ்திரம் வகுத்துள்ளது. இதுவே, "ஷட் பலம்" எனப்படும். இதனை நாம் விரிவாகக் காண்போம்.

**ஸ்தான பலம்:** ஸ்தானம் என்றால் இருப்பிடம், கிரகங்கள், ஆட்சி, உச்ச, நட்பு மற்றும் மூலத்திரிகோண இராசிகளிலோ, வர்க்கோத்தமம் பெற்றாலோ, நீச வீட்டிலிருந்து உச்ச வீட்டிற்கு செல்லும் வழியிலிருந்தாலோ, கேந்திர திரிகோணத்தில் இருந்தாலோ அவை ஸ்தான பலமுடையனவாகும்.

**திருஷ்டி பலம்:** கிரகங்கள் பாபக்கிரகங்களின் பார்வையின்றி சுபக்கிரகங்களின் பார்வை பெற்றிருந்தால், அவை திருஷ்டி பலம் உடையதாகும். சுபம் என்பதை இலக்கினரீதியாக கணக்கிட்டால்தான் பலன்கள் தெளிவாக இருக்கும்.

**திக் பலம்:** திக் என்றால் திசை என்று பொருள்படும். இலக்கினம் முதலான 12 வீடுகளில் கிரகங்கள் அமரும் நிலையைக் கொண்டு திக் பலம் பெறுகின்றன.

1. புதன் — குரு இலக்கினத்தில் அமரும்போது திக் பலம் அடைகின்றன.

2. சந்திரன் — சுக்கிரன் இலக்கினத்திலிருந்து 4வது வீட்டில் அமரும்போது திக் பலம் அடைகின்றன.

3. சனி 7வது வீட்டில் திக் பலம் பெறுகிறது.

4. சூரியன் — செவ்வாய் 10வது வீட்டில் திக் பலம் அடைகின்றன.

**சேஷ்டா பலம்:** சேஷ்டா பலம் என்பது, கிரகங்களின் பயண அடிப்படையில் நிர்ணயிப்பதாகும்.

சூரியன் — சந்திரன் உத்தராயண காலத்திலும், ஏனைய கிரகங்கள் வக்ரம் பெறும் காலங்களிலும், கிரக யுத்தத்தில் வெற்றி பெறும் போதும், சந்திரனுடன் கூடும் போதும், சுபமான கிரகங்களுடன் சேரும் போதும் சேஷ்டா பலத்தை அடைகின்றன.

**கால பலம்:** பகல் — இரவென, இரு காலங்களில் கிரகங்களில் வலிமையை ஆய்வு செய்வது காலபலமாகும்.

சூரியன், குரு, சுக்கிரன் — பகலில் காலபலாம் பெறுகிறார்கள்.

சந்திரன், செவ்வாய், சனி — இரவில் கால பலம் பெறுகிறார்கள்.

புதன் —பகல், இரவு இரண்டு வேளைகளிலும் கால பலத்தைப் பெறுகிறார்கள்.

**நைசர்க்ய பலம்:** இயல்பாக, கிரகங்களின் வலிமை ஒன்றை விட மற்றொன்று அதிகமாக இருக்கும். அதனை, ஆய்வு செய்வது நைஸர்க்ய பலம் ஆகும். சனி — செவ்வாய் — புதன் — குரு — சுக்கிரன் — சந்திரன் — சூரியன் — இராகு — கேது என்ற வரிசையில் கிரகங்கள் ஒன்றைவிட மற்றொன்று கூடுதலாக நைசர்க்ய பலம் பெறுகிறார்கள். இவர்கள் ஒரே இராசியில் கூடும்போது நைஸர்க்ய பலம் அடிப்படையில் வலிமை பெறுகின்றனர். இதில், மிகவும் வலிமை குறைந்தவர் சனி. அதிக வலிமையுடைவர் கேது.

மேற்கண்ட ஆறுவித ஷட் பல நிர்ணயத்தை பலம் பெற்ற கிரகங்கள் இலக்கின ரீதியாக சுபர் எனில் சுப பலன்களையும், பாபர் எனில் பாப பலன்களையும் தரும்.



# புரட்சிப் போராளியின் ஜாதகம் உணர்த்திட்ட சரித்தரச் சான்று

**1**




**எஸ்.ஞானசந்திரன்**

செல்: 94434 57536


## புரட்சிப் போராளி சேகுவேரா

**பெயர்: எர்னஸ்டோ சே குவேரா**

*பிறந்தது : 03—05 அதிகாலை, 14/05/1928*

*ரொஸாரியோ, ஆர்ஜென்டைனா.*

**இராசி**

| | | | |
|---|---|---|---|
| ல / செவ் | குரு சுக் | சூரி புத ராகு | |
| சந் | இராசி | | |
| | | | செவ் |
| | சனி (வ) கேது | | |

**அம்சம்**

| | | | |
|---|---|---|---|
| சந் | புத குரு | | ராகு |
| சனி | அம்சம் | | |
| சூரி | | | செவ் |
| கேது | ல / | | சுக் |

*இராகு திசை இருப்பு — 02 வரு— 05 மாத —24 நாள்*

முதலாளித்துவம், வர்க்கபேதம், சர்வாதிகாரம், போன்ற இன்னோரன்ன, மேலாதிக்கச் சிந்தனாவாதிகளான ஏகாதிபத்தியவாதிகளால் அடக்கியும், ஒடுக்கியும், உரிமைகளற்றது நசுக்கியும் வைக்கப்பட்டதோடு, நாட்டு வளமும், உழைப்பும் சுரண்டப்பட்டு கீழான நிலையில் உழன்ற கோடிக்கணக்கான ஏழை மற்றும் தொழலாளி, பாட்டாளி மக்களின் தார்மீகக் கோபமும், ஆவேசமும் ஆக்ரோஷத்துடன் உருவெடுத்துச் சீறி வெளிப்பட்டது போன்று, சே குவேரா ஆர்ஜென்டைனாவின் ரொஸாரியோ என்கிற சிறு நகரத்தில் 14.05.1928 அன்று பிறந்தவர் சே குவேராவின் தந்தை டான் எர்னஸ்டோ ஆவார். இவரது முன்னோர்கள் ஐரோப்பிய நாடான ஸ்பெயினிலிருந்து ஆர்ஜென்டைனாவுக்கு வந்து குடியேறியவர்கள் ஆவர். சேவின் தந்தை புவனர்ஸ் எயர்ஸ் நகரத்தில் உள்ள தேசியப் பல்கலைக்கழகத்தில் கட்டிடத் துறையில் பட்டம் பெற்றவர். ஆர்ஜென்டைனாவின் தலைநகர் புவனக்கம் எயர்எம் ஆகும்

சேவின் தாயாரான சிலியாவும் ஸ்பானிய வம்சா வழியைச் சேர்ந்தவரே. சிலியா ஒரு துணிச்சல்காரப் பெண்மணி ஆவார். அடக்குமுறைச் சட்டங்கள், ஆக்கிரமிப்புச் சட்டங்களை எதிர்ப்பவர். தனக்குச் சரி எனப்பட்டதை துணிச்சலுடன் செய்யக்கூடியவர். அப்போதிருந்த மகளிர் வாகனம் ஓட்டுவதற்கான தடை, வங்கிகளில் கணக்கு பெண்கள் ஆரம்பிக்கத் தடை, நீண்ட முடியை வெட்டிக் கொள்ளத் தடை என்பன போன்ற பல தடைகளை முதன்முதலாக அஞ் சாமையுடன் மீறிய பெண் இவர். இவற்றின் விளைவுகளை எதிர்த்துப் பல நீதிமன்றங்களில் வாதாடி வென்ற சாதனைக்குரியவர்.

சேவுக்கு தாயாரின் இந்தப் போராட்ட குணமே மரபு ரீதியாக வந்திருக்கலாம் என்று கருதலாம்.

1927இல் மணமுடித்துக் கொண்ட டான்சிலியா தம்பதிக்கு சே குவேரா 1928இல் பிறந்தார். 3 வயதாக இருக்கும்போது சேவுக்கு ஆஸ்மா

நோயின் அறிகுறிகள் தோன்றத் தொடங்கின. ஆஸ்த்மா நோய்க்கான கிரக சேர்க்கைகள் எவை?

தொண்டைப் பகுதியைக் குறிப்பிடும் 3ஆம் பாவமும், காலபுருஷ 4ஆன மிதுன இராசியும், சுவாசப்பையைக் குறிப்பிடும் 4ஆம் பாவமும், காலபுருஷ 4ஆன கடக இராசியும், 3 மற்றும் 7க்குடையவர்களும், புதனும், சந்திரனும் சனி, இராகு மற்றும் செவ்வாய், கேது போன்ற தீய கிரகங்களால் பாதிப்புற்றால் — ஆஸ்த்மா என அழைக்கப்படும் மூச்சிரைப்பு நோய் ஏற்படலாம் என்பது ஜோதிடவிதி ஆகும்.

## சேவின் ஜாதகத்தை ஆராய்வோம்.

3ஆம் பாவம் 6க்குடைய சூரியனால் கெடடு, இராகுவாலும் பாதிப்புற்று, சனி மற்றும் கேதுவின் பார்வையைப் பெறுகிறது. 3க்குடைய சுக்கிரன் சூரியன் மற்றும் இராகுவின் இராசிநாதனாகிப் பாதிக்கப்பட்டிருப்பதோடு, சனி, கேதுவின், இராசிநாதனை செவ்வாய்க்கும், சூரியன் இராகுவுக்குமிடையே அகப்பட்டு பாவகாத்தாரி யோகம் பெற்றும் கெடுகிறான்.

காலபுருஷ 3க்குடைய புதன் சூரியனுடனும், இராகுவுடனும் கூடிக்கெடுவதுடன், சனி மற்றும் கேதுவின் பார்வைகளாலும் கெடுகிறது.

4ஆம் பாவம் சனி மற்றும் கேதுவின் இராசிநாதனை செவ்வாயின் பார்வையால் கெட்டுள்ளது.

காலபுருஷ 4க்குடைய சந்திரன் 10இல் கேதுவைப் பெற்றும், இராகுவுடன் சார பரிவர்த்தனை பெற்றும் கடுமையான பாதிப்பை அடைந்துள்ளதையும் நாம் காணமுடியும்.

4க்குடைய புதன் பாதிப்புப் பெறுவதை முன்னறே கண்டோம்.

காலபுருஷ 3ஆம் இராசியான மிதுனம் செவ்வாயின் பார்வையினால் கெட்டிருக்க, காலபுருஷ 4ஆம் பாவமான கடகம் சனியின் தீய செல்வாக்கைக் கொண்டுவரும் கேதுவின் 9ஆம் பார்வையினால் பாதிக்கப்பட்டுள்ளன. தவிர பின் இராசியில் செவ்வாயின் பார்வை முன் இராசியில் சனியின் பார்வை விழுவதால் உண்டாகும் பாவகாத்தாரி யோக விளைவு காரணமாகவும் பாதிப்பைப் பெற்றுள்ளது.

நாம் முன்னர் எடுத்துரைத்த கிரக சேர்க்கை இவரின் ஜாதகத்தில் காணப்படுகிறது அல்லவா? இதனாலேயே, இவருக்கு மிகச் சிறு வயதிலேயே ஆஸ்துமா நோய் ஏற்பட்டுள்ளது. இந்நோய் ஏற்பட்ட காலம் செவ்வாய் திசை இராகுப் புத்தி செவ்வாய் உடல்நலத்தைக் குறிப்பிடும் 4ஆம் பாவத்தைக் கெடுக்க, இராகு 4க்குடைய புதனைக் கெடுக்கிறது. இதன் காரணமாகவே, இக்காலம் உடல்நலம் குன்றியது எனலாம்.

வளரும் பருவத்திலேயே சே அக்காலம் பிரபலமாக இருந்த எழுத்தாளர்களின் படைப்புகளைப் படித்து வந்தார். அவரது வீட்டிலேயே ஒரு சிறு நூலகம் இருந்தது. வரலாறு, தத்துவம், உளவியல், மருத்துவம், சம்பந்தப்பட்ட பல நூல்களும், "மார்க்ஸ்" "ஏங்கெல்ஸ்" "லெனின்" ஆகியோரது படைப்புகளும் "டூமாஸ், "விக்டர் ஹியூகோ "சல்காரி" "ஜாக் லண்டன்" போன்றோரின் நூல்களும் வீட்டின் நூலகத்திலேயே இருந்தன. "டால்ஸ்டாய்" "அனடோலி பிரான்ஸ்" "கார்க்கி" போன்றோரின் நூல்களை சே சொந்தமாக தானே வாங்கிப் படித்தார். மேலும், அந்தக் காலத்தில் வெளிவந்த லத்தீன் அமெரிக்கச் சமூக நாவல்களையும் சே வாங்கிப் படித்தார்.

பெரிய பண்ணைகளிலும், பிரம்மாண்டமான தோட்டங்கள், வயல்களிலும் அடிமைகளாய் இருந்த தொழிலாளர்களும், அமெரிக்காவின் பூர்வகுடிகளான இந்தியர்களும் (செவ்விந்தியர்) ஏகாதிபத்திய வெறியர்களாலும், முதலாளித்துவ பண்ணையார்களாலும் பட்ட துன்பங்கள், துயரங்களையும், சுரண்டல்களையும் சித்தரிக்கும் பல நாவல்களை சே படித்துத் தெரிந்துக் கொண்டார். போராட்ட குணமும் அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் மீதான பச்சாத்தாபமும் சேவிடம் அதிகரிக்க இந்நூல்களே காரணமாயின.

இவை தவிர, புரட்சிச் சிந்தனை கொண்ட கவிஞர்களின் படைப்புகளையும் சே படிக்கத் தவறவில்லை. "பௌடிலெய்ரே" "வெர்லைன்" "கார்ஸியா" "பாப்லோ நெருடா" "வியன்ஃபிலிம்" போன்ற கவிஞர்களின் படைப்புக்களை வாங்கிப் படித்து கவிதைகளின் மீதான ஆர்வத்தையும் சே வளர்த்துக் கொண்டார்.

இவ்வாறாக சேவின் இயல்பான சிந்தனைகளும் அவர் படித்த நூல்களுமே அவரை ஒரு புரட்சியாளனான புடம் போட்டு வளர்த்தன. ஆஸ்துமா நோயால் சே அவதியுற்ற போதிலும் விளையாட்டுகளை அவர் மறந்து விடவில்லை. கால்பந்து விளையாட்டு அவருக்கு மிகவும் பிடித்தமானது.

எத்தகைய வீரிய விதை என்ற போதிலும், அது விழுந்த இடம் கற்பாறையாகவோ, கடின நிலமாகவோ இருந்தால் அவ்விதையால் முளைத்தெழும்ப முடியுமா? ஏற்ற நிலமே விதை முளைப்பதற்குரிய தேவை ஆகிறது! புரட்சிகர சிந்தனைகளைக் கொண்ட நூல்களை ஏராளமானோர் படித்தாலும், சே யைப் போன்றவர்களே அக்கருத்துக்களை முழுமையாக உள்வாங்கி, செயலாற்றும் திறனைப் பெற்றுள்ளனர். இத்தகைய புரட்சிகர எண்ணங்களை சே கொண்டவர் என்பதை அவரது ஜாதகம் காட்டுகிறதா? என அடுத்த இதழில் காண்போம்

**தொடரும்...**

# ஜாதக கணிதம்



## 3

S.R.அருள்வேல் (Ph.D) ஜோதிடம்
செல்: 98428 41497

ஜோதிட அன்பர்களுக்கு வணக்கம். கடந்த இரு மாதங்களாக ஜாதகம் கணிக்கும் முறையை தெரிந்துக் கொண்டோம். இம்மாதம் முதல், ஜாதகத்திற்கு பலன் கூறும் முறையை தெரிந்துக் கொள்வோம். இதுவரை பலன் கூறும் முறையை தெரிந்து கொள்வதற்காக பற்பல நூல்களை படித்திருப்பீர்கள். ஆனால் 'காலமும், பணமும் வீணானதே' மிச்சம்.... பலன் சொல்லும் முறையை தெரிந்துக் கொள்ள இயலவில்லையே... எனும் ஆதங்கமே மிஞ்சி இருக்கும். ஆனால் இப்போது நான் கூற இருக்கும் முறை அதிஅற்புதமானது. ஏறத்தாழ 30 வருட ஜோதிட அனுபவத்தில் கிடைத்த நற்பயன் என்றால் மிகையல்ல. ஜோதிடக்கலையின் மூல நூல்களே கருத்தோடு கற்று அவை சார்ந்த சிந்தனையோடு இருந்ததால் கிடைத்த தவபயன். நீங்கள் கற்று, உணர்ந்து தெளிவு பெறுங்கள். முதலில் மேஷ இலக்கின ஜாதகத்தை எடுத்துக் கொள்வோம்.

*1ஆம் வீட்டில் சூரியன், வளர்பிறை சந்திரன், தேய்பிறை சந்திரன், குரு, இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம். நற்பலன் தருவர்.*

*2ஆம் வீட்டில் சூரியன், புதன், அல்லது சனி இருக்கலாம். பார்க்கலாம்.*

*3 ஆம் வீட்டில் புதன், சுக்கிரன், சனி, இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*4ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய், இருக்கலாம். ஜாதகத்தில் சந்திரன், தேய்பிறை, சந்திரனாக இருந்தால் மட்டும் 4ஆம் வீட்டில் இராகு, கேது இருக்கலாம் பார்க்கலாம்.*



*5ஆம் வீட்டில் வளர்பிறை சந்திரன், குரு, இருக்கலாம். பார்க்கலாம்.*

*6ஆம் வீட்டில் சனி இருக்கலாம். ஜாதகத்தில் சூரியன், புதன் சேர்ந்திருந்தால் மட்டும் 6ஆம் வீட்டில் இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*7 ஆம் வீட்டில் சூரியன், புதன், சனி இருக்கலாம். பார்க்கலாம்.*

*8ஆம் வீட்டில் (விருச்சிகம்) சூரியன், தேய்பிறை சந்திரன், இராகு, கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*9ஆம் வீட்டில் (தனுசு) வளர்பிறை சந்திரன், குரு, இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*10ஆம் வீட்டில் (மகரம்) சூரியன், புதன், இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*11ஆம் வீட்டில் (கும்பம்) சூரியன், புதன், சுக்கிரன், இராகு அல்லது கேது இருக்கலாம். பார்க்கலாம்.*

*12ஆம் வீட்டில் (மீனம்) சூரியன், தேய்பிறை சந்திரன், செவ்வாய் இருக்கலாம். பார்க்கலாம்.*

மேற்கண்ட வீடுகளில் அமர வேண்டிய கிரகங்கள் பார்க்க வேண்டிய கிரகங்கள் தவிர பிற கிரகங்கள் அமர்ந்தாலும் பார்த்தாலும் அவ்வீட்டை கெடுப்பார். ஜோதிடம் எவ்வளவு எனிதென பாருங்கள். அடுத்த மாதம் ரிஷப இலக்கின ஜாதகத்திற்கு 12 வீடுகளில் அமர வேண்டிய கிரகங்கள் பற்றி காண்போம்.

மேற்படி மேஷ இலக்கின ஜாதகத்திற்கு தசை புத்தி பலன், கோச்சார பலன், திருமண பொருத்தம் ஜாமக்கோள் ஆருடம், ஜோதிட சூட்சுமங்கள் மட்டும் அல்லாமல் 12 இலக்கின ஜாதகருக்குமே பலன் சொல்லும் முறையை விளக்கும் எனது 'ஸ்ரீ ராஜ ஜோதிடம்' நூலை வாங்கி படிக்கவும். விலை.ரூ.500/— புத்தகம் வெளிகடைகளில் கிடைக்காது. புத்தகத்தை வாங்கி படித்த பின் திருப்தி இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

தொடரும்...

# பொன்னான விற்பனைக்கு பொற்பதம் தந்திட்ட எமது வாசகர்களுக்கு மனமார்ந்த நன்றி

இப்போது விற்பனையில்

# திருவருள் சக்தி




## ஆகஸ்ட் 2015

### இந்த இதழில்...

- ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் அஷ்டலக்ஷ்மி விரதம் வேண்டுதலை வாரி வழங்கிடும் வரலக்ஷ்மி விரதம்
- காலத்தை வென்று காரிய சித்தி புரிய அருள்புரியும் காலபைரவர் வழிபாடு
- சூரிய வழிபாடு கொடுத்திடும் ருது தோஷ நிவர்த்தி
- திருநங்கை வாசமே திருமகள் வாசம்
- குலம் காக்கும் ஸ்ரீ குருபகவான்
- பணம் புழக்கத்துக்கு நல்ல பாதை வகுத்திடும் சூட்சும இரகசியங்கள்
- கந்தர் சஷ்டி கவசம் அரங்கேறிய சென்னிமலை
- பழமொழிகள் உணர்த்திடும் வாழ்வின் வழிமுறைகள்
- சொந்த வீடு, வியாபாரம் அமைய வழிபட வேண்டிய வாஸ்து ஸ்தலங்கள்
- ஜோதிடவியலில் பாலாரிஷ்டம்

ஆன்மிகச் சுவடுடன் அறிவார்ந்த முழுமையான ஜோதிட மாத இதழ்...

## தவறாமல் படித்து தரமான வாழ்வு பெறுங்கள்